
ஓம்

SAIVANEETHI

# சைவநீதி



**லிங்கேஸ்வரர்**

காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாம்
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம் - சேக்கிழார்

University of Jaffna
230
CAI
87279(AR; MAIN)

...ந்து மாமன்றம்
Canada Hindu Maamantram

சித்திரைப் புதுவருட மலர்
1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க சைவநீதி! வளர்க இந்து மாமன்றம்!

# நல்லூர் குமரன்

## சாறி பலஸ்



இந்தியாவில் உள்ள அனைத்துத்
தரமான பட்டுப் புடவைகளுக்கும்
நாடவேண்டிய நம்பிக்கையான
ஸ்தாபனம்

சிறந்த தரம், குறைந்த விலைகளுக்கு
உத்தரவாதம் வழங்கப்படும்.

கூறைச் சேலைகள், பட்டு வேட்டிகள்,
மங்கையர் மனம் கவரும் நவநாகரிகப்
புடவைகள் அனைத்தையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

**நல்லூர் குமரன்**

**சாறி பலஸ்**

**2387 EGLINTON AVE. EAST, SUIT #6**

**(1st Floor) Eglinton & Kennedy**

**SCARBOROUGH, ONT. M1K 2M5**

**TEL: (416) 285-6797**

**FAX: (416) 281-9561**

**Branch:**

**1429 GERRARD STREET EAST. TORONTO**

**TEL: (416) 469-9800**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24/4/98
20001



## முகப்பு அட்டைப் படம்

# அருள் மிகு ஸ்படிக லிங்கேஸ்வரர் ஆவர்.

230 CAI AR

## சன்மார்க்க இறைவன் கோவில் _ குவை (Hawaii)

கீழைத் தேசத்திற்கும் மேலைத் தேசத்திற்கும் மையமாக விளங்கும் ஹாவாய் தீவுகளிலொன்றான குவை எனுந் தீவில் புனித வைலுவ நதிக்கரையில் சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளால் நிறுவப்பெறுகின்ற இறைவன் கோயிலில் பிரதிஷ்டை செய்வதற்கென அவரால் 1987இல் அற்புதமாகப் பெறப்பெற்ற ஸ்படிகலிங்கத்தை முகப்பு அட்டையில் காண்கிறீர்கள். இந்த லிங்கம் ஆறுகோணங்களை உடைய அற்புதமான உலகின் மிகப்பெரிய **ஸ்படிக லிங்கம் ஆகும்.**

இந்த லிங்கம் 39 அங்குல உயரமும் 700 இறாத்தல் நிறையுங் கொண்டதாகும். இப்போது இந்த ஸ்படிகலிங்கேஸ்வரர் சன்மார்க்க சரணாலயத்திற்கு அருகேயுள்ள குவை ஆதீன சிவநடராஜர் கோயிலில், இறைவன் கோயில் கும்பாபிடேகத்திற்காகக் காத்திருக்கின்றார்.

கும்பாபிடேகம் வெகுவிரைவில் நடைபெறத் துரித முயற்சிகள் நடைபெறுகின்றன. லிங்கங்களில் 'ஸ்படிகலிங்கம்' மிகவும் சக்தி வாய்ந்த லிங்கமாகும்.

ARCHIVES
UNIVERSITY OF JAFFNA LIBRARY SRI LANKA

# The World's Largest Perfect Crystal

On August 16, 1987, one of the world largest, most perfectly formed, single-pointed quartz crystals was brought to the Garden Island of Kauai from Arkansas. The 39 inch tall, 700-pound ice-colored crystal, will be enshrined in the white-granite Iraivan Temple (architect's drawing above), currently being carved in India to be exported to Kauai, where it will rest overlooking the Wailua River and the San Marga meditation gardens. Iraivan Temple means simply the Temple of God. As the focal point of worship and meditation, the six-sided crystal (known is Sanskrit as Swayambhu Sphatika) will be adored as a Sivalinga, mark of God, within this traditional South Indian Hindu shrine. In India the Crystal Sivalinga is considered to be the most sacred and unique of all Lingas because of its integrated substance and natural self-manifestation, for it is not carved or crafted by human hands. During a visit to Kauai, the temple's Indian architect, Thiru V. Ganapati Sthapati, said, 'If all of the crystal Lingas in India were put together into one, they would still not equal the power of this one. Iraivan will be America's first traditional all-stone temple to be entirely carved by hand in India. Its Cholastyle design incorporates divine architectural knowledge to channel and focus spiritual blessings from inner worlds through the Crystal Sivalinga. The primary purpose and gift of this temple is moksha, liberation through the experience of the divine within all. The shakti focused through the Crystal Sivalinga grants a sublime peace of mind, expands consciousness and stimulates the sahasrara or crown chakra where each one ultimately encounter unity in God.

University of Jaffna
187279
Library
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
187279 187279

ஓம்
சிவாயநம

"பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம்
பிறவா நாளே! – திருநாவுக்கரசர்

# சைவநீதி - புதுவருட மலர் - சித்திரை 1997

வணக்கம்! வருக!! இதுவே நுழைவாயில். சென்று பொருள் கொணர்க.

# பொருளடக்கம்

தெய்வம்: 1 குரல்: 5


| பகுதி | இல. | பொருள் | தருநர் | பக்கம் |
|---|---|---|---|---|
| I | 1. | வழிபாடு (பஞ்சபுராணம்) | மன்றத் தொகுப்பு | 1–2 |
| | 2. | ஆசிரியரின் குரலைக் கேளுங்கள் | | 3–5 |
| | 3. | நால்வர் காட்டிய வழியும் – தேவர் காட்டிய நெறியும் | சிவஸ்ரீ. ப. கிருஷ்ணராஜக் குருக்கள் | 6–7 |
| II | 4. | சிவஞான தரிசனம் பகுதி 1–10ஆம் திருமுறை | தவத்திரு. சிவநந்தி அடிகளார் தலைவர். சைவ உலகப் பேரவை – இலண்டன் | 8–10 |
| | 5. | சிவயோக சுவாமிகள் காட்டிய வழி | சிவ. மு. ஆறுமுகம் இலண்டன் சிவ தொண்டன் நிலையம் | 11–15 |
| | 6. | புலம் பெயர்ந்த நாட்டில் சைவமும் தமிழும் | சிவ. சுப்பிரமணியம் ஆறுமுகம் | 16–18 |
| III | 7. | சிவயோக சுவாமிகள் சரணம் (கவிதை) | கவிஞர். செ. நாகேந்திரன் U.K | 19–20 |
| | 8. | CAN SCIENCE GIVE HAPPINESS | BY SIVA ARUMUGAM B.A | 21–22 |
| | 9. | சிவராத்திரியும் பிரதோஷ மகத்துவமும் | சங்கரப்பிரியா | 23–24 |
| | 10. | அணுத்தரும் தன்மையில் ஐயோன் | சித்தாந்தரத்தினம் மு. கணேசலிங்கம் | 25–26 |
| | 11. | SAIVA EXISTENTIAL PHELESOPY AND FAMILY LIFE | BY DR. K. LOGANATHAN, MALAYSIA | 27–30 |
| | 12. | அரிச்சுவடி அமைப்பில் ஆன்ம ஞான வைப்பு | கலாநிதி. அமரர். க. செ. நடராசா | 31–33 |
| IV | 13. | PANCHAKSHARAM NaMaSiVaJa | BY KUMAR PUNITHAVEL | 34–36 |
| | 14. | சிவ. யோகநாதன் சுவாமிகள் | சிவத்திரு. பி. எஸ். பற்குணராசா – பிரான்ஸ் | 37 |
| | 15. | சூடிக்கொடுத்த சுடர்க் கொடி | திருமதி வசந்தா நடராஜன் B.A | 38–39 |
| | 16. | சித்தர்வழிச் சிறிது தூரம் | திருமதி. சிவ. சிவகுமார் | 40–42 |
| V | 17. | மாணவர் பகுதி | மன்றப் பாடசாலை மாணவர்கள் | 43–46 |
| | 18. | திருநள்ளாறு வரலாற்றுச் சிறப்பு | திருமதி. சரசலக்குமி கார்த்திகேசு | 47–48 |
| | 19. | பகவத்கீதை | சிவஸ்ரீ . சுவாமிநாத சோமேஸ்வரன் குருக்கள் | 49 |
| | 20. | இல்லத்தில் இறைவனைக் காணலாம் | சாமி – அப்பாத்துரை | 50–51 |
| | 21. | தடைகள் நீங்கித் தன்னுயர்வு பெறுவோம் | திருமதி. வள்ளிநாயகி இராமலிங்கம் | 52–54 |
| | 22. | தமிழிசை | திருமதி. இராஜேஸ்வரி கணேசலிங்கம் | 55 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பகுதி | இல. பொருள் | தருநர் | பக்கம் |
|---|---|---|---|
| VI | 23. உள்ளத்தில் ஒன்ற விடு – கவிதை | பண்டிதர். புலவர் வீ. வ. நம்பி | 56–62 |
| | 24. ஐயப்பன் | சாவை இ. சுப்பிரமணியம் | 63–66 |
| | 25. கலாபீடம் | இந்துமாமன்றம் | 67–72 |
| | 26. சமயம் அவசியமா? | சித்தாந்த வித்தகர் முரு. பழ. இரத்தினம் செட்டியார்– தமிழ்நாடு | 73–76 |
| | 27. **THIRUGNANASAMPANTHAR** | **ANNASOUNDARY** | 77–88 |
| VII | 28. நலந்தரும் நாட்டு வைத்தியம் | "வெதமாத்தயா" | 79 |
| | 29. 12 இலக்கினங்களிலும் பிறந்த ஒவ்வொருவர் பலன் – பொது | தொகுப்பு – நம்பி | 80–82 |
| | 30. வாசகர் அகழ்வும் ஆய்வும் | வாசகர்கள் | 83–86 |
| | 31. கடிதம் – அறிவித்தல் | | 87–88 |
| | 32. நன்றிக்கலசம் | மலர்க்குழு | 89 |


*"அகரவுயிர் போலறி வாகி எங்கும்*
*நிகரில் இறைநிற்கும் நிறைந்து"* – *சிவ–சித்தி*

# ஈழத்திரு நாட்டில்
# சிவம் வளர - சைவம் வளர - தமிழ் வளர வாழ்ந்த
# முப்பெருந்துறவிகளுக்கு வணக்கம்



யோக சுவாமிகள்



ஆறுமுகநாவலர்



விபுலானந்த அடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்

## தேவாரம் (திருத்தாண்டகம்) - திருவலிவலம்

திருச்சிற்றம்பலம்

நல்லான்காண் நான்மறைக ளாயினான்காண் நம்பன்காண்
நணுகாதார் புரமூன் றெய்த
வில்லான்காண் விண்ணவர்க்கு மேலானான்காண்
மெல்லியலாள் பாகன்காண் வேத வேள்விச்
சொல்லான்காண் சுடர்மூன்று மாயினான்காண்
தொண்டாகிப் பணிவார்க்குத் தொல்வான்ஈய
வல்லான்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே.

## திருவாசகம்

பிறிவு அறியா அன்பர் அருள் பெய் கழல்தாள் இணைக்கீழ்
மறிவு அறியாச் செல்வம் வந்து பெற்றார் உன்னை வந்திப்பது ஓர்
நெறி அறியேன், நின்னையே அறியேன் நின்னையே அறியும்
அறிவு அறியேன், உடையாய்! அடியேன் உன் அடைக்கலமே.

## திருவிசைப்பா பண்:- பஞ்சமம்

அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே
அன்பொடு தன்னைஅஞ் செழுத்தின்
பொற்பதத் துள்வைத் துள்ளம்அள் ளூறும்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாம் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

## திருப்பல்லாண்டு பண்:- பஞ்சமம்

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி யெங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று விம்மிமிகு திருவாரூரில்
மழவிடையாற்கு வழிவழி யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி! கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## திருப்புகழ்

நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே
வேல்கொண்டு வேலைப்பண் டெறிவோனே
வீரங்கொள் சூரர்க்குங் குலகாலா
நாலந்த வேதத்தின் பொருளோனே
நானென்று மார்தட்டும் பெருமாளே.

## திருமந்திரம்

தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வாரில்லை
சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்
இறப்பிலி யாவர்க்கு மின்ப மருளுந்
துறப்பிலி தன்னைத் தொழுமின் றொழுதால்
மறப்பிலி மாயா விருத்தமு மாமே.

அப்பனை நந்தியை யாரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை யூழி முதல்வனை
எப்பரி சாயினு மேத்துமி னேத்தினால்
அப்பரி சீசனருள்பெற லாமே.

**கந்தரலங்காரம்**

ஒளியில் விளைந்த வுயர்ஞான பூதரத் துச்சியின்மே
லளியில் விளைந்ததொ ரானந்தத் தேனை யநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப் பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வாமுக மாறுடைத் தேசிகனே.

**கந்தரனுபூதி**

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னவுபதே சிகனே.

**அபிராமியம்மை துதி**

காரள பந்தியும் பந்தியினன் அலங்கலும்
கரிய புருவச் சிலைகளும்
கர்ணகுண் டலமுமதி முகமண்டலம் நுதற்
கத்தூரிப் பொட்டு மிட்டுக்
கூரணிந் திடுவிழியும் அமுதமொழியுஞ் சிறிய
கொவ்வையின் கனிய தரமும்
குழிமனைய நாசியும் முத்தநிகர் தந்தமும்
கோடுசோ டான களமும்
வாரணிந் திறுமாந்த வனமுலையும் மேகலையும்
மணிநூ புரப்பா தமும்
வந்தெனது முன்னின்று மந்தகா சமுமாக
வல்வினையை மாற்று வாயே
ஆரமணி வானி லுறை தாரகைகள் போலநிறை
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

**கருமாரியம்மன் துதி**

புவனம் முழுதும் ஆளுகின்ற புவனேஸ்வரி
புரம் எரித்தோன் புறம்இருக்கும் பரமேஸ்வரி
நவநவ மாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே ஸர்வேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமை சிறியேனை நீ ஆதரி - கற்பூரநாயகியே

**சகலகலாவல்லி மாலை**

வெண்டா மரைக்கன் றிநின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது
கொலோ சகமேழுமளித்
துண்டா னுறங்க வொழித் தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா இந்து மாமன்றம் (சர்க்கரைப் பொங்கல் கலைவிழா நிகழ்ச்சிகள் - தை 1997-)



நுழைவாயில் காட்சி



பிரதம விருந்தினர் Ms. Alexandra Y. Semcniuk உடன்
மன்ற ஸ்தாபகரும், முன்னைநாள் தலைவரும், "சைவநீதி" ஆசிரியருமான
வீ. வ. நல்லதம்பி மங்கள தீபம் ஏற்றுதல்



மன்றத்தின் தற்போதைய தலைவர்
திரு. த. ஸ்ரீபதி தலைமை உரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் ஒலியும் ஒளியும்.........

**வேத நாயகனே ! விண்ணவர் தலைவா !!**

வீழ்வது நாமாக இருந்தாலும்
வாழ்வது தமிழாக இருக்கட்டும்
தாழ்வது நாமாக இருந்தாலும்
தழைப்பது சைவமாக இருக்கட்டும்

அனைத்துலகச் சைவத்தமிழன்பர்களே!

சைவநீதி வாசகர்களே! உங்களுக்கு, கனடா இந்துமாமன்றத்தின் சார்பில் சைவநீதி தனது புதுவருட வாழ்த்தையும் வணக்கத்தையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றது.

சைவநெறியை வளர்க்கவும் தமிழ் மொழியை வளர்க்கவும் நமது பண்டைய கலை-கலாச்சாரத்தைப் போற்றிப் பாதுகாக்கவும் அமைக்கப் பெற்றதே கனடா இந்துமாமன்றம். தெய்வத்தின் திருவருளும் உங்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்பும் எங்களின் நோக்கத்தை நிறைவு செய்து எதிர்காலச் சமுதாயத்திற்கு நற்பயனை அளிக்கும் என மனமார நம்புகின்றோம்.

எல்லோருக்கும் ஒரு சாட்சியுண்டு. அதுவே மனச்சாட்சி. நாமேன் பிறந்தோம்; நாம் என்ன செய்கிறோம். நாம் நடந்து கொள்வது சரிதானா? அது மனச்சாட்சிக்கு ஏற்றதாக உள்ளதா? என்பதைப் பகுத்தறியத் தக்க ஒவ்வொரு மனிதனும் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளான். சீவிக்க வழியில்லாவிடினும் சமயத்தையும் தமிழையும் நாம் கைவிடவில்லை. அதிகம் படிக்காவிட்டாலும் நாளாந்த வாழ்க்கையில் நாம் மொழியையும் சமயத்தையும் பாதுகாத்து வந்தோம். **"ஏடுநக்கியும் நாடு நக்கியும்"** அறிவை வளர்த்த முன்னோடிகளின் மக்கள் யாம் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். நமக்கு இவற்றைக் கற்கக்கூடிய காலநேர வாய்ப்புகளும் நிம்மதியான சீவியமும் அங்கு இருந்தது. நூலை நுழைந்து கற்காவிடினும் கற்றோர் வாயிலாகச் செவிவழியாகக் கேட்டும் பார்த்தும் கற்கும் வாய்ப்பு இருந்தது. வழிவழியாகக் கலாச்சாரம் நம்மில் ஒட்டிக் கொண்டது. அறிவறிந்த மக்களாக வாழ்ந்து வந்தோம்.

**"எட்டினது சண்டை ஏறடி கப்பலில்"** என்று, ஒரு இனக்கலவரம் வந்தது. வீரத்தமிழினம் கோழைத்தனமாகி மேலைநாடுகளில் தஞ்சம் புகும் நிலை ஏற்பட்டுவிட்டது. இங்கு வந்துவிட்டோம். வாழத்தான் வேண்டும். எப்படி வாழ வேண்டும்? என்பது தான் கேள்வி. எப்படியும் வாழலாம் என்ற விடையை விட்டுவிட்டு இப்படித்தான் வாழ வேண்டும் என்ற ஏகமுடிவை நாம் எடுக்க வேண்டும். எப்படி? நாம் தமிழர், நமது நாகரிகம் பல்லாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட பழமை வாய்ந்தது மாத்திரமல்ல, பல்லின மக்களாலும் போற்றப்பட்டது. நமது கலை கலாச்சாரங்களை, இயல் இசை நாடகக்கலைகளை, சமய தத்துவங்களை மேலை நாட்டினரும் போற்றிப் பாராட்டியுள்ளனரென்பதைச் சரித்திரம் சான்று பகருகின்றது. இன்று விஞ்ஞானங் கண்டுபிடித்த பலப்பல விடயங்களை எங்கள் சமயமெய்ஞ்ஞானம் எப்பவோ கூறிவிட்டது, அல்லாமலும் விஞ்ஞானத்தால் இன்னும் காணமுடியாத பல உண்மைகளை எங்கள் மெய்ஞ்ஞானம் புலப்படுத்தி வருகின்றது. நாம் யார்? நம்மை நாமே குறைத்து மதிப்பிடுவதா? கடல் கடந்து வந்தோம்; மடை திரண்டு வந்தோம்; அன்று கப்பலோட்டிய தமிழன் இன்று விமானம் ஓட்டுகிறான். நாம் பலதுறை விற்பன்னர்கள் என்பதை உலகமே அறிந்து கொண்டது. இன்று தமிழன் உலகெங்கும் பரந்து காணப்படுகிறான். அழகாகச் சொன்னால்,

**"தமிழன் இல்லாத நாடில்லை**
**தமிழனுக் கென்றொரு நாடில்லை"** வழி பிறக்க வாழ்ந்து காட்டுவோம். **"சட்டி சுட்டதடா - கைவிட்டதடா"** என்ற நிலைக்கு உண்மையான தமிழன் உறுதியான சைவன் ஆளாகமாட்டான் என்பது நம்பிக்கை. **"அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்"** என்பது தமிழில் முதுமொழி. நகரும் என்று அந்த மொழி கூறியதேயொழிய உடையும் என்று சொல்லவில்லை. அதேபோல உண்மையான சைவனை மதமாற்றம் என்னும் ஆயுதத்தால் உடைக்க முடியாது. உண்மையான தமிழனை அவனின் கலை-கலாச்சாரத்திலிருந்து மாற்ற முடியாது. ஆசைக் கதைகளால் சிலரை ஏமாற்றினாலும் அது நிலைத்து நிற்காது. **"பழைய குருடி கதவைத் திறவடி"** என்ற நிலைக்கு மீளவந்தே சேருவார்கள். அவ்வளவுக்கு சமயம் தமிழ் நமது வாழவில் இறுகப் பிணைக்கப்பட்டது. இது தெய்வசித்தமன்றி வேறில்லை.

எப்படி வாழ்கிறார்கள்! எப்படி வாழ வேண்டும் என்பதைச் சிறிது சிந்திப்போம். இங்கு அரசமொழி ஆங்கிலம், அது உலகப் பொதுமொழி. அதனைத் துறைபோகக் கற்காவிட்டாலும் வாழ்க்கைத் தொழிலுக்காகக் கற்க வேண்டும். ஆனால் தன் அன்னை மொழியைக் கற்காத, அன்னை மொழியில் பேசாத எந்த இனமும் இங்கில்லை. நேற்று இரவு இந்துமாமன்றத்தின் செயலர் என்னைச் சந்தித்தார். அவர் கூறியதாவது: "நன்கு பழகிய ஒரு ஈரானிய நண்பர் என்னைச் சந்தித்தார். அவருடன் பத்து வயது நிரம்பிய அவரது மகனும் கூட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றார். அந்தப் பையனுடன் நான் ஆங்கிலத்தில் சில கேள்விகள் கேட்கப் பையன் பதில் சொல்லவேயில்லை. மகன் பேசமாட்டாரா எனத் தந்தையைக் கேட்கப் பையன் உடனே சொன்னான் எனது தாத்தா பாடசாலையில் ஆங்கிலத்தைப் படி ஆங்கிலத்தில் அங்கு பேசு. ஆனால் வெளியில் வந்தால் உனது மொழியிலே பேசு என்று சொன்னார். எனவே, எனக்கு ஆங்கிலந் தெரியும். தெரிந்தாலும் நான் பாடசாலையை விட்டு வெளியில் வந்தால் எனது மொழியிலேயே பேசுவேன். இதைச் சொல்வதற்காக நான் இப்பொழுது ஆங்கிலத்தில் பேசினேன்" என்றானாம். அந்த மாணவனின் பதில் உங்களுக்குத் தைரியத்தைத் தரும் என நினைக்கிறேன். உங்கள் பிள்ளைகளுடன் தமிழில் பேசுங்கள். அவர்களையும் தமிழிலே பேச வையுங்கள். சமயத்திலும் நீங்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து வீட்டில் தொழுங்கள். கோயிலுக்குப் போகும்பொழுது கூட்டிப் போங்கள். உங்களைப் பின்பற்றிப் பிள்ளைகள் தாமாகவே நடந்து கொள்வார்கள். இப்படி நாம் நடந்து கொண்டால் நமது மொழியும் சமயமும் தளர்வடையாது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். எனது பிள்ளைக்குத் தமிழ் வராது. தேவாரந் தெரியாது என்று சொல்வதில் கூடச் சில பெற்றோர் பெருமைப்படுகிறார்கள் போலத் தெரிகிறது. அன்னை மொழி-சமயம் வளர வேண்டுமானால் கலை-கலாச்சாரம் நிலைக்க வேண்டுமானால் பெற்றோரின் பெரும்பங்களிப்பு, மிக அவசியமாகும். தாய் நாட்டு வாழ்க்கையில் தனிப்பங்கு வகித்த நாம் இங்கும் நமது கடமையில் குறைவுபடக் கூடாது. சிலர் இங்கு வந்ததும் சில மாற்றங்களை அடையலாம். அப்படிப்பட்டவர்கள் அங்கும் பூரண மனிதர்களாக இருந்திருக்க முடியாது. அங்கு குதிரையை ஓடவிட்டுத் தகுதி பெற்றவர்கள் இங்கும் வந்து நரியில் சவாரி செய்கிறார்கள். அங்கு கற்றும் துறை காணாதவர்கள் இங்கு வந்தும் தம்பட்டங் கட்டுகிறார்கள். ஒரு சிலரின் போக்கு **'நாய் வாலை நீட்ட முடியாது'** என்பது போலத்தான். ஆனால் நல்ல பண்புகள் கொண்டு நற்பழக்க வழக்கங்களில் வாழ்ந்த நம்மனோர் யாவரும் நமது பிற்சந்தியினர் நல்ல முறையில் வாழ நம்மாலான முயற்சியைச் செய்ய வேண்டும். பன்னெடுங்காலமாக வளர்ந்து வந்த சைவ சமயமும் தமிழ் மொழியும் நமது காலத்திலேயே குறுகிப் போக விடமுடியுமா? அங்கு சங்கம் வளர்த்தோம். சபை வளர்த்தோம். தமிழ் வளர்த்தோம், சமயம் வளர்த்தோம் நல்ல வரம்பு கட்டி வாழ்ந்தோம். இங்கும் ஏன் அப்படி வாழ முடியாது. பட்டம் பதவிகளுக்காகச் சங்கம் அமைக்காது பணிகளைக் கட்டிய வரம்புக்குள் நின்று செய்யுங்கள். அப்பொழுது, தான் வரம்புக்குள் நீர் தங்கிநின்று நல்ல விளைச்சலைத் தரும். நூறு பேர் சேர்ந்து கட்டிய நல்ல வரம்பைப் பத்துப்பேர் கூடி மாற்றுதல் கூடாது. நூறுபேரை ஆயிரமாக்கத் தெண்டிப்பதுவே பணி பரவுவதற்கு வழியாக அமையும். நீ நல்லதைச் செய்தால் நன்மை உன்னை நாடிவரும். பலரும் உன் சேவையை விரும்புவர். பதவி உன்னையே தேடிவரும். பலரும் பாராட்டுவர். பத்திரிகை உலகும் புகழ்கூறும். நாம் நல்லவழியில் போய்க் கொண்டிருந்தால் நமக்குக் கல்லும் முள்ளுங் குத்தாது. வழிதவறிப் போனால் அவை குத்தவே செய்யும். **"நன்றே செய்க அதுவும் இன்றே செய்க"** என நல்லோர் கூறுவர். நாம் நமது மனச்சாட்சி பொய்க்காது நல்லதைச் செய்து வந்தால் நமக்குப் பகை என்று ஒன்று இருக்கமாட்டாது. மக்களுள் தேவராகி விடுவோம்.

**'உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்தி லெல்லாம் உளன்"**

எனவே, நல்லதை நினைந்து நல்லதைச் செய்யுங்கள். நாம் வாழலாம் நாடும் வாழும். இனம் வாழும், மொழி வாழும் சமயம் வாழும். நமக்கு இணை நாமே யாவோம். **"ஊரோடின் ஒத்து ஓடு ஒருவன் ஓடில் கேட்டு ஓடு"** பழந்தமிழனின் பழமொழி - வளர்மொழி இது. இதனை நாம் நமது வாழ்விலுங் கைக் கொள்ளவேண்டும். இந்த நாட்டில் பல்வேறு சங்கங்கள் பணி செய்கின்றன. இவை செய்யும் பணிகள் சிறக்க எல்லா மன்றுகளும் பொதுத்திட்டத்தில் இணைந்து செயற்படின் பயன் பெரிதாக அமையும். பக்குவம் பெரிதாக வரும். அப்படியே உலகனைத்துமுள்ள தமிழ்-சமய நிறுவனங்களும், ஒரு ஒழுங்கான திட்டத்தை அமைத்து பரவலாக்கினால் சந்தேகமறும். சமரச சன்மார்க்கம் நிலைநிறுத்தப்படலாம். முதலில் நான், பின் நாம் அதன் பின் நாடு அப்பால் உலகம் என்ற அடிப்படையில் வாழ முற்படின் எல்லாம் நம்மை வந்தடையும். பணி செய்வதற்குத்தான் பதவிகளே ஒழியத் தற்பெருமைக்காகப் பதவி இருத்தல் கூடாது. **'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே'** அது தானாக வந்து சேரும். உன்னால் முடிந்தவரை ஊருக்காக உழை.

உட்கார்ந்திருந்து ஊர் செய்யட்டும் என்றெண்ணாதே பணிசெய்ய வாய்ப்பு வசதியில்லையெனில் மற்றவருக்கு வழிவிட்டு விலகியிருந்து ஆசீர்வதிப்பதே நன்று. தானும் செய்யாது மற்றவருக்கும் இடம் கொடுக்காத மனோநிலை இருக்கக்கூடாது. செய்தால் நான் தான் செய்ய வேண்டும். மற்றவரால் நடக்கக்கூடாது என்ற எண்ணமும் ஒருவருக்கு உரிய கடமையில் மற்றவர் ஆலோசனை கூறலாமே ஒழியத் தலையிடலும் கூடாது. சொந்த இலாபங் கருதக்கூடாது. இன்னோரன்ன மனப்பான்மையுடன் பொதுப்பணி மன்றங்கள் இயங்கினால் தான், நாம் எதிர்பார்த்த பலன்கள் யாவும் இனிதே சமுதாயத்தை வந்தடையும். எவனொருவன் சுயநன்மை, பேர், புகழ், பாராட்டிற்காகப் பொதுப்பணியில் சமூகப்பணியில் நுழைகிறானோ அவன் சமுதாய மனிதன் ஆகமாட்டான். தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப் பிழையாக நினைத்தல் கூடாது. நாம் நீண்டநாள் வாழ்பவர்களல்ல. இருக்கும் வரை நல்லனவே செய்வோம். நம் மொழியையும் சைவத்தையும் வளர்த்துப் போற்றி எதிர்கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் வாழக் கடமை செய்வோம். இதுவே நாம் பிறந்த நோக்கமாகும். நமது எண்ணம் செயல் யாவும் நல்லதானால்தான் நாமும் நல்லவர்களாவோம். -நாடும் நன்மை பெறும். **உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்** என்றார் பாரதியார். இந்த உண்மையொளிதான் சமுதாயத்தில் செல்வாக்கைத் தரும். சைவமக்களில் மிகச் சிலர் கிறிஸ்தவ மதத்திற் சேர்ந்து கொள்வதாக அறிகிறோம். அறிவாளிகள் ஏமார மாட்டார்கள். மற்றவரையும் ஏமாற்றமாட்டார்கள். அற்ப சலுகைகளுக்கு ஏமாறுபவர் உண்மை உணராதவர்களே. பொதுவாக எந்த மன்றங்களும் அங்கத்தவர் தொகையை உயர்த்த வேண்டும். தமிழ்-சமய மன்றங்களின் கடமைகள் விரிவுபடுத்தப்பட வேண்டும். சேவை ஒன்றாகவும் பலவாகவும் விரிவடைய வேண்டும். இவையாவும் மொழி, சமய உணர்வு காட்டும் ஒரு நோக்கமுடையதாயிருத்தல் வேண்டும். தனக்கென வாழாப் பிறர்க்குரியவனாகச் சேவையாற்ற முயல வேண்டும். அப்படி நடந்தால்தான் வாழ்வின் பயனை எய்தலாம்- பேசலாம் -எழுதலாம். ஆனால் பயன்பட வாழ்வதில் வாழ்ந்து காட்டுவதிற்றான் நலமுண்டு.

'நமது கலாச்சாரம் மாறிவருவதாகக் கவலைப்படுகிறார்கள். பெண்குலத்தார் ஆகிய நாம் காதில் தோடு, கழுத்தில் சங்கிலி, கைகளில் வளையல்கள் அணியமாட்டோம். அவற்றை ஆண்களே அணியட்டும் என்றும் சொல்கிறார்களாம். இலங்கைச் சரித்திரத்திலே துட்டகைமுனு தகப்பனுக்குப் பெண்கள் அணியும் நகைகளை அணியும்படி அனுப்பியதாக வரலாறு உண்டு. ஏன் அனுப்பினான் என்று இங்குள்ள சிற்சிலருக்கு விளங்கவில்லைப் போலும் என்றும் பேசப்படுகிறது. இதுவெல்லாம் 'முசுப்பாத்தி' யாகச் சில இளம்மட்டங்கள் சிலநாட்களுக்குச் செய்யும் விளையாட்டு. இதனால் கலாச்சாரங் கருகிப் போச்சு என்று சொல்ல முடியாது. உணர்ச்சி திருத்தங்களைக் கொண்டு வரும். இவையெல்லாம் பழக்க தோஷங்கள். விரைவில் வழிக்கு வந்துவிடுவார்கள். பெற்றோர் - பெரியோரால் பயன் உண்டாகும். சில ஆண்கள் சீதனம் வாங்க மாட்டோம் என்று சொல்கிறார்களாமே. இதைக் கேட்ட பெண்கள் ஆண்களைப் பாராட்டவல்லவோ வேண்டும். பிழைகள் விடுவது மனிதனில் சகஜம். திருந்திக் கொண்டால் நன்மைதானே.

பெற்றோர்கள் பிள்ளைகளின் மீது தகுந்த கண்காணிப்பை மேற்கொண்டு சமய ஒழுக்கங்களைக் கற்கச் செய்தால்- வளர்ப்பு நல்ல முறையில் அமைய வாழ்ந்து காட்டினால் தவறுகள் ஏற்பட இடம் வராது.

**"வழுத்தினாள் தும்மினேனாக அழித்தழுதாள்**
**யாருள்ளித் தும்மினீர் என்று"** இது திருவள்ளுவரின் கூற்று. யான் தும்மினேனாக. அவள் நூறாண்டு என (நூறு என) வாழ்த்தினாள், உடனேயே அதைக் கைவிட்டு, யார் நினைத்ததால் தும்மினீர் என்று கேட்டு அழுதாள் என்பது இதன் கருத்துரை.

இதுவரை நான்கூறியது யாரிலுங் குறைகண்டு அல்ல! தமிழனின் மொழி, சமய கலாச்சாரங்கள் பண்டுபோல் நிலைக்க வேண்டுமென்று விரும்பி எழுதினேன். குறைபட்டோர் தொப்பியைப் போடலாம். இயல்பாகவே பொது அமைப்புகளுக்கு மதிப்புக் கொடுப்பவன் நான். ஆயினும் சமுதாய அமைப்பில் சார்ந்த அனைவரும் **தங்கங்கள் தான் அவர்கள் புடம் போட்ட தங்கங்களாக** மாற வேண்டும். ஒவ்வொருவரும் மனச்சாட்சியைத் தட்டிக் கேட்டுச் சரி-பிழை உணருவீர்களாக.

இறுதியாக, நமது மொழி, சமய நெறி பரவ இலண்டனை மையமாகக் கொண்டு இயங்கிப் பணி பலவாற்றும் சைவ உலகப் பேரவை கனடாவில் தனது ஏழாவது மாநாட்டை 1998இல் நடாத்த விரும்பியுள்ளது. எனவே, கனடாவிலுள்ள அத்தனை தமிழ்-சைவஸ்தாபனங்கள் ஒன்றுபட்டு மிகுந்த ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி நற்பயனடையும் வண்ணம் பணிவோடு வேண்டுகின்றோம்.

வாழ்க! சைவநீதி வளர்க! இன்பத் தமிழ்.

கனடா இந்து மாமன்ற மலர்க்குழு சார்பில்
வீ.வ. நம்பி
மலராசிரியர்

---

**சைவநீதி மலருக்கான ஆக்கங்களைத் தருபவர்களே!**

ஆதரவாளர்களே! தங்கள் தன்னலமற்ற சிறந்த பங்களிப்பினால் "சைவநீதி" க்குப் பேரும் புகழும் உலகெங்குமிருந்து கிடைத்துள்ளது. யாவும் உங்களுக்குரியதே. சைவநீதியின் அடுத்த இதழ் (குரல்) 29-10-1997 தீபாவலி தினத்தன்று வெளிவர இருக்கின்றது. சைவசமயம் சம்பந்தமான தங்கள் ஆக்கங்களை 15-09-1997ற்கு முன் அனுப்பிவைப்பீர்களாக. தரமறிந்து பிரசுரிக்கப்பெறும்.

ஆசிரியர் - "சைவநீதி" நன்றி - வணக்கம்
கனடா இந்து மாமன்றம்
10-04-97

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் யாவும்

Are you concerned about saving Money your Insurance Cost, Mortgages and Taxes or to have a better return on your investments

Quality Coverage
Personal Service
Low Low Premiums
Monthly Payments Plan

# AUTO HOME LIFE
# COMMERCIAL

Representing over 50 Life Insurance and 15 General Insurance Companies

**TEL: (416) 750-9450**
**FAX: (416) 750-9509**

உங்கள் இன்சூரன்ஸ் தேவைகள் எதுவானாலும் குறைந்த செலவில் கூடிய பாதுகாப்புப் பெறத் தொடர்பு கொள்ளுங்கள்

# RAJAH (Roger) BALENDRA

**Insurance Broker**

## Hughes & Associates Insurance Broker Inc.

**2390 Eglinton Ave. East, Suite 205**
**Near Kennedy Subway**
**Scarborough, Ont. MIK 2P5**

வாழிய ! "சைவநீதி" வாழ்க ! நற்றமிழர்.

# INSURANCE
# MUTUAL FUNDS
# RRSP

# EASAN KRISHNA

# SUNLIFE

**245 FAIRVIEW MALL DRIVE**
**WILLOWADALE, ONTARIO M2J 4T1**
**TEL: (416) 493 - 9560**
**FAX: (416) 493 - 9399**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நால்வர் காட்டிய வழியும் ☞

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

திருச்சிற்றம்பலம்



கோளறு பதிகம் பண்: பியந்தைக்காந்தாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிநதென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

திருநாவுக்கரசு சுவாமிகள்



திருத்தலம்: திருநாகைக்காரோணம் (நாகபட்டினம்) பண்: திருநேரிசை 4ம் திருமுறை

நிறைபுனல் அணிந்த சென்னி நீணிலா அரவஞ் சூடி
மறையொலி பாடி யாடல் மயானத்து மகிழ்ந்த மைந்தன்
கறைமலி கடல்சூழ் நாகைக் காரோணங் கோயில் கொண்ட
இறைவனை நாளும் ஏத்த இடும்பைபோய் இன்ப மாமே.

திருத்தலம்: திருக்கோளிலி பண்: திருக்குறுந்தொகை (5ம் திருமுறை)

முத்தி னைமுத லாகிய மூர்த்தியை
வித்தி னைவிளை வாய விகிர்தனைக்
கொத்த லர்பொழில் சூழ்தரு கோளிலி
அத்த னைத்தொழ நீங்கும்நம் அல்லலே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள். ஏழாந்திருமுறை



திருத்தலம்: கோயில் (சிதம்பரம்) பண்: குறிஞ்சி

மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே மனனேநீ வாழும் நாளும்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கில் இடும்போது தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடு கரதலத்தில் தமருகமும் எரிஅகலுங் கரிய பாம்பும்
பிடித்தாடிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே.

திருத்தலம்: திருக்கேதீச்சரம் பண்: நட்டபாடை

கரியகறைக் கண்டனல்ல கண்மேல்ஒரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயும் மாதோட்டநன் னகருள்
பரியதிரை எறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான் திருக் கேதீச்சரத் தானே

மாணிக்கவாசக சுவாமிகள்



திருவாசகம் திருப்புலம்பல் சிவானந்த முதிர்வு எட்டாந்திருமுறை.

பூம் கமலத்து அயனொடு மால் அறியாத நெறியானே
கோங்கு-அலர்சேர் குவி முலையாள் கூறா வெண்-நீறு ஆடீ
ஓங்கு எயில் சூழ் திருவாரூர் உடையானே அடியேன் நின்
பூம்-கழல்கள் அவை அல்லாது எவை யாதும் புகழேனே!

வாழாப்பத்து - வீடுபேற்றின் வழி

வல்லை வாள் அரக்கர் புரம் எரித்தானே! மற்று நான் பற்று இலேன் கண்டாய்!
தில்லை வாழ் கூத்தா! சிவபுரத்து அரசே! திருப்பெருந்துறை உறைசிவனே!
எல்லைமூ உலகும் உருவி அன்று இருவர் காணும்நாள் ஆதிஈறு இன்மை
வல்லையாய் வளர்ந்தாய்! வாழ்கிலேன் கண்டாய் வருக என்று அருள்புரியாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவர் காட்டிய நெறியும்

சிவஸ்ரீ. பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள்

## இல்வாழ்க்கை - 5ஆம் அதிகாரம்

41. இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை
(க-ரை) இல்லறத்தின் கண்ணே வாழ்பவனாகச் சொல்லப்படுகின்றவன் அறத்தின் இயல்பை உடைய மூவருக்கும் நல்வழியில் நிலையான துணையாவான்.

42. துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை
துறந்தவர்களுக்கும் வறியவர்களுக்கும் இறந்தவர்களுக்கும் இல்லறத்தை மேற்கொண்டு வாழ்கின்றவன் துணையாவான்.

43. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை
தென்புலத்தார் (பிதுர்), தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐவகையிடத் தாரிடமும் அறவொழுக்கம் தவறாமல் போற்றுதல் சிறந்த கடமையாகும்.

44. பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்
பொருளைச் சேர்க்கும்பொழுது பழிக்கு அஞ்சிச் சேர்த்துச் செலவு செய்து பகுத்து உண்பதை மேற்கொண்டால், அவ்வாழ்க்கையின் ஒழுங்கு எப்போதுங் குறையாது.

45. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.
இல்வாழ்வு அன்பும், அறனும் உடையதாக விளங்குமாயின், அந்த வாழ்வின் பண்பும் பயனும் அதுவே ஆகும்.

46. அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவது எவன்.
ஒருவன் அறவழியில் இல்வாழ்க்கையை ஆற்றி வாழ்வானானால், அத்தகையவன் வேறு நெறிதனில் சென்று பெறத்தக்கது என்ன?

47. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.
அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ்கின்றவன், வாழ முயலுகின்ற பல திறத்தாரிலும் மேம்பட்டு விளங்குகின்றவன் ஆவான்.

48. ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து
மற்றவரையும் அறவழியில் ஒழுகச் செய்து தானும் அறநெறி தவறாத இல்வாழ்க்கை, தவம் செய்பவரைவிட மிக்க வல்லமை கொண்ட வாழ்க்கை ஆகும்.

49. அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இன்றாயின் நன்று
அறன் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே ஆகும். அதுவும் மற்றவன் பழிக்கும் குற்றம் இல்லாமல் விளங்கின் மேலும் நன்மையாகும்.

50. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.
உலகத்தில் வாழ வேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவன் வானுலகத்தில் உள்ள தெய்வமாக வைத்து மதிக்கப்படுவான்.

தொடரும் அடுத்த இதழில்.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவத் திருமுறைகள் விளக்கும்:-

# சிவஞான தரிசனம்:

(பகுதி 1: திருமந்திரசாரம், 10ஆம் திருமுறை)

**தவத்திரு. சிவநந்தி அடிகளார்**
**(தலைவர், உலக சைவப் பேரவை. இலண்டன்)**

தெய்வப் பேரின்பம் என்பது உள்ளத்தின் உணர்வில், தானே கண்டு அனுபவிக்க வேண்டிய ஓர் அனுபவம். இந்த அனுபவப் பொருளைப் பற்றி இப்படி அப்படி என்று பேசுகிற வெறும் இலக்கண ஆராய்ச்சியினால் பயனில்லை. அது உள்ளம் தோய்ந்து அனுபவிக்க வேண்டிய ஆனந்தம். இந்த ஆனந்த அனுபவத்தைப் பெறுவதற்கு ஏற்பட்டுள்ள வழிகளும் வாழ்க்கை முறைகளுமே சமயங்கள். இவற்றைப் பற்றிக் கூறுகிறார் மாமுனிவர் திருமூலர்.

"அறிவுக்கு அப்பாற்பட்டவன் இறைவன்' என்று அனுபவ மூலமாக அறிகிற அறிவுதான் பேரறிவு ஆகும். அறிவதற்கு முயன்று முயன்று, அறியாமை என்ற உணர்வுக்கு வந்து சேர்கிற யோக முயற்சியே? ஞானத்தில் எல்லாம் சிறந்த தவ ஞானம்! இந்தப் பேருண்மையை வெளிப்படையாகச் சொல்லாமல் அவையடக்கமாகச் சொல்லி உணர்த்துகிறார்.

### வேரறியாமை

'அறிதல்' என்ற பிரக்ஞை மாறி, இறைவனுடைய பேரின்பத்திலே ஐந்து புலன்களும் ஒன்றி நின்று, எல்லாம் மறந்து நிற்கிற 'அறியாமை' நிலை என்பது, கிடைத்தற்கரிய ஆனந்தம்! அந்த ஆனந்த நிலையே தவங்களுக்கெல்லாம் இலட்சியம். ஆசாரியர்கள் சீடர்களுக்கு உபதேசம் செய்வதெல்லாம் இந்த ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவே!

இறைவனுடைய ஆனந்தத்தில் தோயத் தோய, அந்த ஆனந்தம் எல்லையற்றுப் பரந்து செல்வதை உணர முடியும். நீண்டகாலம் தவமிருந்து அந்தப் பேரானந்தத்திலே தோய்ந்து தோய்ந்து அழுந்தி, அதன் எல்லையற்ற தன்மையை உள்ளவாறு உணர்ந்து, அந்த உணர்வு நிலையிலே பேசுகிறார் திருமூலர். 'வேரறியாமை விளம்புகிறேன்' என்று.

### சைவசித்தாந்தம்: பதி, பசு, பாசம்: முப்பொருள் உண்மை.

அறிவு மயமாக நிற்கின்ற பதியாகிய இறைவன் கருணையால் நிரம்பியவன. ஆன்மாக்கள் மும்மலத்துள் அழுந்திக் கிடக்கின்றனவே என்று திருவருள் கொண்டு, ஞானம் வழங்கிக் கடைத்தேற்றுகிறான்! இத்தகைய அருள் இல்லாது போனால் ஆன்மாவுக்குப் பாசத்திலிருந்து விடுதலை கிடையாது ஞானம் சித்திக்காது.

ஆன்மாக்களின் பக்குவ நிலைக்கு ஏற்ப இறைவனே இரங்கி வந்து ஞானம் அருளினாலன்றி, உயிருக்கு இருளிலிருந்து உய்யும் வழி இல்லை.

### உபதேசம்: மூன்று வகை

மக்கள் நல்வழியினின்று தவறாமல் செல்வதற்காகப் பல அறவுரைகளை அமுதத் தமிழிலே குழைத்து ஊட்டுகிறார் திருமூலர். இந்த அறவுரைகள் மூன்று வகைப்படும்.

பாவம் செய்யாதீர்கள் என்று சொல்வது மனித தருமத்துக்கு அடிப்படையான உபதேசம். பாவங் களைச் செய்யாமல் இருப்பதோடு, புண்ணியச் செயல்களைப் புரியுங்கள் என்பது இரண்டாவது, இந்த இரண்டும் கலந்ததே வாழ்க்கையின் ஒழுக்க நெறி. இனி, இந்த இரண்டோடு மூன்றாவது உபதேசம் என்னவென்றால், இறைவனுடைய பேரின்பத்தை இந்த உடம்போடு இருக்கும்போதே பெற்று அனுபவிக்க வேண்டும் என்பது!

திருமூலருடைய உபதேசத்தின் இந்த மூன்று பாகுபாடுகளும் திருமந்திர நூல் முழுவதும் பரந்து விளங்கக் காண்கிறோம்.

வாழ்க்கையின் நிலையாமையை மறந்து விஷய சுகங்களிலே ஈடுபட்டுக் காலத்தை வீணாக்குகிற பேதை மக்களுக்குக் கண்ணைத் திறந்து காட்டுகிறார் தவயோகி.

**அடப்பண்ணி வைத்தார்,**
**அடிசிலை உண்டார்,**
**மடக்கொடி யாரொடு**
**மந்தணம் கொண்டார்,**
**இடப்பக்க மேஇறை**
**நொந்ததே என்றார்,**
**கிடக்கப் படுத்தார்,**
**கிடந்தொழிந் தாரே!**

மனிதனுடைய ஆடம்பர வாழ்க்கை எப்படி முடிகிறது என்பதை உள்ளத்தில் தைக்கும்படி பாடுகிறார் திருமூலர்.

வாழ்வு நிலையற்றது. எனவே, இப்பொழுது, இக்கணமே இறைவனிடத்தில் உள்ளத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்துங்கள் என்பதை உணர்த்துவதற்காக, "யாக்கை நிலையாமை"யைப் பலவிதத்திலும் எடுத்துக் கூறுகிறார்.

## ஐம்புலன் அடக்கம்

பசுக்கள் அதே பசுக்களே. அடங்காத நிலையில் அவை ஆன்மாவுக்குக் கேடு தரும் விதத்தில் வெறியோடு விஷய இச்சைகளிலே திரிகின்றன. இதே பசுக்களுக்குக் காவல் ஏற்பட்டு விட்டால், இந்தப் பசுக்களே ஞானப்பாலைச் சொரிகின்றன.

**மேய்ப்பாரும் உண்டாய்**
**வெறியும் அடங்கினால்**
**பார்ப்பான் பசுஐந்தும்**
**பாலாச் சொரியுமே!**

புலன்களாகிய பசுக்களை அடக்கி ஆள வேண்டும். அப்படி அடக்கினால் அதே புலன்கள் பேரின்பம் தரும்.

## அகத் தியானம்

**முகத்தில் கண்கொண்டு**
**காண்கின்ற மூடர்காள்**
**அகத்தில் கண்கொண்டு**
**காண்பதே ஆனந்தம்**
**மகட்குத் தாய்தன்**
**மணாளனோ டாடிய**
**சுகத்தைச் சொல்லென்றால்**
**சொல்லுமா றெங்ஙனே**

இந்தச் சரீரத்தைக் கொண்டு தெய்வப் பேரின்பத்தை அடைகிற ஒரேவழி ஞானநோக்கோடு உள்முகமாக ஆன்ம உணர்விலே தியானம் லயித்து யோகத்திலே அமர்வதுதான். இந்த ஆன்ம யோகத்தின் சுகத்தைப் பூரணமாக அனுபவித்த திருமூலர், அதை எப்படி வெளியிட்டுச் சொல்வேன் என்று பரவசத்தோடு ஓர் உபமானம் காட்டுகிறார்.

இனி, இந்தச் சுகத்தை எப்படி வெளியிட்டுச் சொல்வது! தானே அனுபவித்துப் பார்க்க வேண்டிய ஓர் அநுபூதி அல்லவா அது!

ஒரு பெண்ணானவள், கணவனோடு அனுபவித்த இன்பத்தை, திருமணப் பருவத்தை அணுகி நிற்கும் சிறுமிக்கு எடுத்துச் சொல்வது அசாத்தியம். அதுபோல இந்தக் கடவுளின்பத்தையும் அந்தந்தப் பக்குவ நிலையில் அவரவர் ஞானமுதிர்விலே தாமாக சுவானுபவமாக அனுபவிக்க வேண்டும்.

## வழிபாடு இரண்டு விதம்

'பூவும் தண்ணீரும்' என்றால் நித்திய வழிபாட்டுக்கு உரிய பொருள்களைச் சொல்ல வந்த மொழிகள். தினந்தோறும் மூர்த்தியை வழிபடுவதற்கு மிக எளிய சாதனங்கள் எங்கும் கிடைக்கின்றன. அப்படியிருந்தும் மக்கள் இந்த எளிய பூஜை மார்க்கத்தை உணராமல் தெய்வ அருளிலிருந்து நழுவிப் போகிறார்கள் என்பது முனிவரின் அனுதாபம்.

**புண்ணியம் செய்வார்க்குப்**
**பூவுண்டு நீருண்டு**
**அண்ணல் அதுகண்டு**
**அருள்புரியா நிற்கும்**

மூர்த்தியை வைத்து வழிபடுகிற முறை இது. இனி இன்னொரு வழிபாட்டைச் சொல்லுகிறார். மூர்த்தி வழிபாட்டுக்குக் குறைந்ததல்ல அந்த வழிபாடு.

கோயிலிலே மூர்த்திக்கு ஏதேனும் நிவேதனம் இட்டால், அது அப்படியே அடியார்களுக்குப் போய்ச் சேராது. ஆனால்,

**நடமாடக் கோயில்**
**நம்பர்க்கொன்று ஈயில்**
**படமாடக் கோயில்**
**பகவற்கது ஆமே.**

சற்பாத்திரம் பார்த்து ஏதேனும் சமர்ப்பித்தால், அவர்களுக்குப் பயன்படுவதோடு, அது அப்படியே பகவானுக்கும் போய்ச் சேருகிறது.

**எப்பரி சாயினும்**
**ஏத்துமின் ஏத்தினால்**
**அப்பரிசு ஈசன்**
**அருள்பெற லாமே?**

எந்த விதத்திலாவது ஒருவிதம், எந்த முறையிலாவது ஒரு முறையில் துதியுங்கள்! அப்படித் துதித்தால் வேறு விதமான துதிக்கு அவசியமில்லாமல் அவனுடைய அருளைப் பெறலாம்! எந்த நிலையில் அவனை வைத்து வணங்கினாலும் அந்த நிலையில் நின்று அவன் அருள்வான், 'சந்தேகமில்லை' என்ற உறுதியைத் தருகிறது ஈற்றிலுள்ள 'ஏ' காரம்.

வழிபடுவதற்குரிய உருவம் எது, மார்க்கம் எது என்றெல்லாம் தேடித்தேடி ஆராய்ந்து அந்த ஆராய்ச்சியிலே காலத்தைக் கழித்து விடுவது பேதைமை.

## அன்பே சிவம்

அன்புதான் கனிந்து கனிந்து பூரணம் பெற்றுச் சிவமாகிறது என்பதை மக்கள் அறிவதில்லையே என்று வருந்துகிறார். அறிகிலார். அறியமாட்டாமல் அலைகிறார்களே என்பது முனிவரது துயரம்.

அன்பும் சிவமும் வெவ்வேறு என்று எண்ணாமல், அன்பு என்ற பண்பு தான் சிவமாக முதிர்கிறது என்பதை அறிந்து விட்டால், பிறகு

**அன்பே சிவமாய்**
**அமர்ந்திருந் தாரே**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அன்பிலே சிவத்தைக் கண்டு அந்தப் பேரின்பத்திலே பதிந்து நிற்பார்கள். அன்புதான் சிவமாகிறது என்பதை அறிந்துவிட்டால் அந்த அன்பு வெள்ளத்திலேயே இதயம் திளைத்து, சிவானந்தப் பேறு பெறுவார்கள்.

அன்பினால் உருகி உள்ளம் குழைந்தால் அல்லாமல், என் அப்பனை அடைய முடியாது! இதயம் உருகாமல் உடலை வருத்தி எத்தனை தவங்கள் இருந்தும் பயனில்லை. அன்பு ஒன்றுதான் அவனை அடையும் மார்க்கம்

## பற்றற்ற இடத்தில் பரமானந்தம்

ஆசையே துன்பமாக மாறுகிறது. இதை விட்டொழிக்க வேண்டும். கடவுளிடத்திலும் 'எல்லாம் அவன் செயல்' என்று ஒப்படைத்து விடாமல், அங்கும் ஆசையின் வசத்தில் அழுந்தி அது வேண்டும் இது வேண்டும் என்று கேட்பதும் தவறு என்கிறார் முனிவர். ஆசையை ஒவ்வொன்றாக விடும்போது ஆனந்தம் படிப்படியாக உண்டாவதைப் பாட்டின் கடைசி இரண்டு வரிகளிலும் உள்ள சொல்லடுக்குகள் உணர்த்து கின்றன. இவ்வாறே வள்ளுவரும்

**யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்.**

என்று அடுக்குத் தொடர் வைத்துச் சொல்லுகிறார்.

## சித்தத்தினுள்ளே சிவலிங்கம்

நம் சித்தத்துக்குள்ளே தான் நமக்குரிய நற்கதி இருக்கிறது. அந்தச் சித்தத்தை நன்றாக நிலை பெறும்படி நிறுத்தித் தியானித்தால், உய்யும் மார்க்கம் அதுவே. நம் சித்தத்தைச் சலனமின்றி நிறுத்தி னோமானல் அதுவே நற்கதிக்கு வழி.

நற்கதி என்பது எங்கோ வெளியே சென்று தேடிப்பிடிக்க வேண்டிய ஒரு தனியுலகம் இல்லை. அது நம் சித்தத்துக்குள்ளேயேயுள்ளது. அதாவது மனம் ஆசைகளிலும் அதர்மங்களிலும் செல்லாமல் தெய்வ சிந்தனையில் நிலை நின்றால், நற்கதி பெறுவதற்கு அது வழியாகும்.

**ஒன்றே குலமும்**
**ஒருவனே தேவனும்**
**நன்றே நினைமின்**
**நமனில்லை நாணுமே**
**சென்றே புகுங்கதி**
**இல்லைநும் சித்தத்து**
**நின்றே நிலைபெற**
**நீர்நினைந்து உய்மினே**

ஆராய்ச்சிகளை விட்டொழித்து, தெய்வ சிந்தனையிலே மனம் ஒன்றியவாறு சலனமற்று இருந்தால், அந்தச் சித்தத்துக்குள்ளே பூரணமாக வந்து அமர்ந்து கொள்கிறான் எம்பெருமான்! எனவே, நாம் செய்ய வேண்டியது என்ன? உள்ளமானது ஆசாபாசங்களில் அலையாமல், திரையற்ற தண்ணீர் போலத் தெளிய வேண்டும் என்பது முனிவரின் உபதேசம்.

## 'நான்' எனும் தன் முனைப்பு நீங்கல்

இறைவனுடைய பேரின்பத்தை நாடி அந்த முயற்சியில் ஈடுபட்டால், படிப்படியாக 'நான்' என்னும் நினைப்பு நீங்கி, எல்லாம் அவனே என்ற தெளிவு உண்டாகிறது. இந்த உணர்வு வலுவடையும்போது, உடம்பு என்ற தசை உணர்சசியும், தனிப்பட்ட உயிர் என்ற அகங்கார உணர்ச்சியும், நினைப்பு மறப்பு என்ற மன உணர்ச்சியும், அனைத்தும் அகன்று தெய்வ ஆனந்த நிலையிலே எல்லாம் ஒன்றுபட்டு விடுகின்றன. இதுவே அநுபூதி நிலை என்பது.

**நான்பெற்ற இன்பம்**
**பெறுகஇவ் வையகம்**
**வான்பற்றி நின்ற**
**மறைப்பொருள் சொல்லிடின்**
**ஊன்பற்றி நின்ற**
**உணர்வுறு மந்திரம்**
**தான்பற்றப் பற்றத்**
**தலைப்படும் தானே!**

"இந்தப் பேரின்பத்தை நானே பெற்றேன். அதை உலகமும் பெற்றுக் கடைத்தேற வேண்டும்" என்கிறார் திருமூலர்.

**ஓம் நமசிவாய. அன்பே சிவம்.**

தொடரும்....

**சான்றோர் சொல்லமுதம்**

**நாம் இன்பத்தில் மகிழ்ச்சியடைவது போல, துன்பத்திலும் இன்பத்தைக் காண முயல வேண்டும்.**

**எமது ஆணவத்தையும், நாவையுமடக்கி, வாழ்க்கைத் தத்துவங்களை அறியவேண்டும்**

**நன்மையே செய், நல்லவனாக நட. ஆனால் உன்னிலும் பார்க்க நல்லவன் இருக்கிறான் என்பதை மறந்து விடாதே.**

ஜீவகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவமும் தமிழும் எங்கள்
கண்ணெனக் கருதிக் காப்போம்

# ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா

**திருமணம் மற்றும் இந்துமத கிரியைகள் சேவை**

## சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஸ்ணராஜ குருக்கள்

இந்து மதகுரு, திருமணப்பதிவதிகாரி – கனடா

(905) 501 0011     (905) 501 0011



முத்து மணவறை, தலைநகை, தலைப்பாகை, மண்டப அலங்காரம், கல்யாண பூஜைக்குரிய பொருள்கள், கல்யாண மண்டபம் (மரீனா), திருமணம், பதிவுத் திருமணம், புண்ணியா வாசனம், கடைத்திறப்பு விழா, வீடு குடிபுகுதல், சிரார்த்தம், பூப்புப்புனித நீராட்டு விழா

**நவீன முறையிலான மின் அலங்காரம், மண்டப சோடனை அலங்காரம், அழகான தரமான முறையில் அமைக்கப்பட்ட முத்து மணவறை, நவீன வடிவமைப்பிலான கதிரை, மேசைகளுடன் மண்டபத்திலேயே சிறந்த உருசி மிக்க சைவ உணவு அனைத்தும் ஒரே இடத்தில் அமையப்பெற்ற நான்கு அடுக்கு மாடி**

**வாகனம் நிறுத்தும் வசதிகள் உண்டு**

# (905) 501 - 0011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவயோக சுவாமிகள் காட்டிய வழி

சிவப்பேரன்பர் திரு. மு. ஆறுமுகம், சிவதொண்டன் நிலையம், இலண்டன்

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை யோகசுவாமிகளை இலங்கையில் பிறந்து வளர்ந்து தற்போது நடுத்தர வயது எய்தினவர்களிலோ அல்லது மூத்தோர்களிலோ அறியாதவர்கள் இல்லை என்று சொல்லலாம். பல்லாண்டு காலமாக மக்களின் பேரன்பிற்கும் வணக்கத்திற்கும் உரியவராகவும், பிறவிக்கடலில் இருந்து மனிதர் கரையேறுவதற்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காகவும் நடமாடும் தெய்வமாகவும் இருந்து, 1964ம் ஆண்டு மகாசமாதி அடைந்தார்.

பலவகைப்பட்டோர், பட்டம் பதவியில் உள்ளவர்களும் பாமரரும் பல சாதி சமயத்தினரும், கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும் கூட, இம்முனிவரைத் தரிசித்து ஆறுதல் தேடினர். வைத்தியர் ஒருவர் ஒவ்வொரு நோயாளிக்கு ஏற்ப மருந்து கொடுக்குமாப் போல் பக்தர்களுக்குப் போதனைகளையும் ஆசிகளையும் வழங்கி வந்தார். மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய சிவபுராணம் பக்தர்களுடன் பாராயணம் செய்வர். பாராயணம் இறுதியில் பக்தர்கள் தங்கள் பிரச்சினைகளுக்கு தம்தம் மனதிலே விடை கண்டு சுவாமிகளை வணங்கிச் செல்வர். ஒரு பிரபல இஸ்லாமிய நீதி அரசர் தான் நீதிமன்றம் செல்லுமுன் தனது தீர்ப்புகள் சரியாக இருப்பதற்குப் பிரார்த்தனையாக சுவாமிகளை வணங்கி அவரது ஆசிகளைப் பெற்றுச் செல்வது அந்தக் காலத்தில் பலரும் அறிந்த விஷயம்.

காவி அணியாது உருத்திராக்கமும் தரியாது வெள்ளைத் தாடி முடியுடன் முழங்காலுடன் மடித்துக் கட்டிய வேட்டியுடன் இம்முனிவர் மெல்ல மெல்லவாக நல்ல சூடான தார் ரோட்டில் நடந்து செல்வது ஓர் அற்புதக் காட்சி. பலர் தங்கள் மோட்டார் வாகனங் களை நிறுத்தி சுவாமிகளை வேண்டிய இடத்திற்குக் கொண்டு போய் விடுவதற்குக் கேட்டாலும் போக மாட்டார். சிலரைத் தானாகவே நிறுத்தி அவர்கள் வாகனத்தில் ஏறிச் செல்வார். இவர்கள் தாங்கள் பெற்ற அதிர்ஷ்டத்தைப் பெரும் பேறாக எண்ணி வணங்குவர். சில பக்தர்கள் வீட்டில் சில நேரம் தங்குவர். கஸ்தூரியார் வீதியில் உள்ள பிரபல முத்துக்குமாரசுவாமி வைத்தியர் இல்லமும் சுவாமி தங்கும் இடங்களில் ஒன்று. வைத்தியர் நோயாளி களுக்கு மருந்துகள் சரக்கு வகைகள் எழுதிக் கொடுக்கும் போது தனது கையால் வாங்கிக் கொடுப்பார். இவர்கள் வருத்தங்கள் குணப்பட்டது பற்றிச் சொல்லத் தேவையில்லை.

ஆஸ்பத்திரிகளிலிருந்து கைவிடப்பட்ட தீராத நோய் களுக்குட்பட்ட பக்தர்கள் பலர் சுவாமிகள் கையால் மருந்து வாங்கிப் பயன் அடைந்து பரவசப்பட்டிருக் கிறார்கள். உலக வாழ்க்கையில் துன்பங்களுக்கும் இன்னல்களுக்கும் உட்பட்ட பல பக்தர்களும் சுவாமிகளின் ஆசிகளினால் நிவாரணம் அடைந்திருக் கின்றார்கள். இந்த விஷயங்களை அறிந்திராத இளைஞர்களுக்காக அறியத் தருகிறேன்.

## நற்சிந்தனைப் பாடல்கள்

இந்த மாமுனிவர் சீவன் முத்தராக வாழ்ந்து மனித குலம் உய்யும் பொருட்டு நற்சிந்தனை என்னும் தெய்வீகப் பாடல்களை எங்களுக்குப் பரம்பரைச் சொத்தாகத் தந்திருக்கின்றார். இப்பாடல்கள், சாதாரண புலவர்கள் வித்துவான்கள் பலதரம் எழுதித் திருத்தி அச்சில் வந்தவை போலல்ல. சுவாமிகள் தியானத்தில் இருந்தபடியே பாடும்போது பக்தர்கள் கேட்டிருந்து எழுதியவையே பெரும்பாலான பாடல்கள். ஆகவே தான் இவை தெய்வீகப் பாடல்கள், சக்தி வாய்ந்தவை. பாராயணம் பண்ணப் பண்ண பாவங்கள் விட்டோடும்.

இப்பாடல்கள் இனிய தமிழில் உள்ளன. சாதாரண மக்களுக்கு இலகுவில் விளங்கக் கூடியவை. அழகான தமிழ். இனிமையான சங்கீத ராகங்கள், நாளாந்தம் சாதாரண மனிதர் பேசும் தமிழில் பொதிக் கப்பட்ட ஞானக்களஞ்சியம், அருளமுதம், படிக்கப் படிக்கத் தெவிட்டாத தெள்ளமுது. இந்த அரும்பெரும் பொக்கிஷத்திற்கு நாங்கள் ஆளாய் உள்ளதை நினைத்து நாம் பெருமைப்பட வேண்டியதே! பயன் அடைய வேண்டியதே!!

நற்சிந்தனைப் புத்தகத்தில் முதலில் இருப்பது சுவாமிகளின் கையால் எழுதப்பட்ட வாசகத்தின் புகைப்படம் **(Photo Copy)**

நீ உடம்பன்று. மனமன்று. புத்தியன்று சித்தமன்று. நீ ஆத்மா. ஆத்மா ஒரு நாளும் அழியாது. இது மகான்களுடைய அனுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது மனதில் பதியக் கடவது. ஆனால், நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதாவது தரும நெறியிற் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறமும் உள்ளவர். இப்படிக்கு
அவனே நானே

நற்சிந்தனைப் பாடல்களில் சுவாமிகள் அறிவுறுத்துவது சீவன் சிவன். சிவன் சீவன். உள்ளமே கோயில். உயிரே விளக்கு. உயிரே சிவலிங்கம். தெய்வத்திற்குத் தெய்வம் சிந்தையில் தானிருக்க வையகத்தில் அலையாதே.

*அங்குமிங்கும் எங்கும் அந்த ஆண்டவன்*
*அங்கும் இங்கும் அலையாதே தானிருக்க*
*ஆடம்பரமெல்லாம் அடியோடு நீக்கிவிட்டு*
*கேடறியாத் திருவடியைக் கிட்ட நீ கண்டிடு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேண் பொலியுந் திருவடியே சித்தத்தில் எப்போது முண்டு. வேதாந்தம் பேசி வீண்காலம் போக்காதே. தத்துவப் பேயோடு தான் தழுவிக் கொள்ளாமல் சித்த பரிபூரணத்தில் சுகித்து நீ வாழ்ந்திடுவாய். ஆன்மாவை அறிந்து விட்டால் உனக்கு வேறொன்றும் தேவை யில்லை. ஆன்மாவை அறிவதற்கு
அவனே நான்

*அவனே நானென்று சொல்லித் தியானஞ் செய்வாய் தினமும்*
*அதையெல்லாம் ஒழியும் ஈசனருள் பொழியும்*

*அஞ்சாதே அஞ்சாதே பஞ்சாய்ப் பறக்கும் பாவம்*
*பஞ்சாட்சரத்தை நெஞ்சில் துஞ்சாமலே செபீ*

*கொஞ்சம் கொஞ்சமாய் மனத்தை கூடுமட்டு மடக்கு*
*குருநாதன் திருவடியைக் கும்பிட்டு நீ தொடங்கு*

ஒருவன் எப்படிப் பாவனை செய்கிறானோ அவன் அப்படி ஆகிறான். நானே அவனே என்று (சீவன் என்று ஆன்மா என்று) தியானஞ் செய்தால் கடவுள் தன்மை வந்து விடுகிறது. ஓம் சிவாய நமவென்று உறுதியுடன் செபித்தால் நாம் சிவமே ஆவோம். இது சுவாமிகளின் வாக்கு. (அகம்பிரம்மாஸ்மி - நானே பரமன், தத்துவவமசி அது நீயாவாய்) ஆன்மாவின் உண்மைச் சொரூபத்தை மறைந்திருக்கும் அஞ்ஞானத் திரை ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்கள் ஞானத்தீயினால் செயலிழந்திட ஆன்மா பிரகாசிக்கத் தொடங்கும்.

இம்மலங்களின் திரையானது பல தடிப்பில் உள்ளது. சிலருக்குப் புளி போன்ற பொருள்களால் போக்கக்கூடிய செழும்பு போல் தடிப்பு, சிலரின் தடிப்பு உளியினால் செதுக்கி அகற்றக் கூடியது. சிலரின் தடிப்பு வெடிமருந்து வைத்துக் கிளப்பும் கற்பாறை போன்றது என்று சில ஞானிகள் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

அஞ்ஞான இருளைப் போக்கப் பஞ்சாட்சரத்தை நெஞ் சிலே அஞ்சாமலே செபி என்பது எங்கள் மாமுனிவரின் உபதேசம்.

*சிவசிவ என்னச் சிவகதியாகும்*
*அஞ்செழுத்தாலே அரனடி காணலாம்*
*அஞ்செழுத்தாலே அனைத்தும் உதித்தன*
*அஞ்செழுத்தாலே அனைத்தும் நிலைத்தன*
*அஞ்செழுத் ததிசியம் ஆரறிவாரே!*
என்று நற்சிந்தனையில் சுவாமிகள் பாடுகிறார்.

இது தொடங்கி அஞ்செழுத்தின் மகிமை பற்றி பின்வரும் தேவாரங்களின் அடிகளை அன்பர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

*வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது*
*நாதன் நாமம் நமச்சிவாயவே*
***-சம்பந்தர் தேவாரம்-***

*கொல்ல நமன் தமர் கொண்டு போமிடத்து*
*அல்லல் கெடுப்பன அஞ்செழுத்துமே*
***--சம்பந்தர் தேவாரம்-***

*கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்*
*நற்றுணை யாவது நமச்சிவாயவே*
***-அப்பர் தேவாரம்-***

*பண்ணிய உலகினிற் பயின்ற பாவத்தை*
*நண்ணி நின்று அறுப்பது நமச்சிவாயவே*
***-அப்பர் தேவாரம்--***

**உலகை வெறுக்காதே**

கடவுளைக் காண்பதற்கு காவியுடுத்தும் தாழ்சடை வைத்தும் காய்கனி துய்த்தும் காயமொறுத்தும் காட்டுக்குப் போக வேண்டாம். கடும் விரதமிருந்து உடம்பை வருத்த வேண்டாம். யாத்திரைகள் செய்து தீர்த்தங்கள் ஆடத் தேவையில்லை. உலகை வெறுக்காதே. (**No need to renounce the world)**

*வாடாமல் வழி படென்றான் எங்கள் குருநாதன்*
*வையகத்தில் வாழென்றான் எங்கள் குருநாதன்*
*இகலோகமத பரலோகம் இங்கேதான் கண்டு*
*கொள்வாய் தம்பி*

வையகத்தில் வாழ்ந்து கொண்டு சாதாரண உலக வாழ்க்கையில் இருந்தபடியே உன் கடமையைச் செய்து கொண்டு தியான மூலம் கடவுளைக் காண், தானான தானேயெல்லாம் தனக்குதவி யாருமில்லை. ஆகையால் மோனநிலைதனிலே மூழ்கி இருந்து அகம்பிரம்மாஸ்மி என்னும் அரிய திருமந்திரத்தை அகத்திலே செபித்து அண்ட சராசரமெல்லாம் அகத்திலே கண்டு கடைத்தேறு என்பது எங்கள் குருபரன் போதனை. இந்தச் சந்தர்ப்பத்தில் அப்பர் சுவாமிகள்

**உடம்பெனும் மனை அகத்துள் உள்ளமே தகளியாக**
**மடம்படும் உணர் நெய்யட்டி உயிர் எனும் திரிமயக்கி**
**இடம்படும் ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்**

**கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே**

"சித்தமிசை நித்தம் திகழொளியைக் கண்டுருகி முத்த னென வாழ முயல்" முயன்றாலே போதும் என்கிறார்.

சாதி, சமயம் என்னும் சங்கடத்துக் குள்ளாகாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமத்தில் கையை வைத்துக் கடமையைப் பயமின்றி ஆக்கு.

கருமத்தைப் பற்றாதே. பலனைக் கருதாதே.

உடல், பொருள், ஆவி உன் அடைக்கலம் என்றே திடமுடன் ஒப்புக் கொடுத்து இறைவனைக் காண்.

**போதனா நெறிகள்**

சாதாரண உலக வாழ்க்கையில் நடந்து கொள்வதற்கு சுவாமிகளின் சிவ வாசகங்களைத் தருகிறேன். இவை நற்சிந்தனைப் புத்தகத்தில் உரை நடைப்பகுதியில் இருந்து எடுக்கப்பட்டன.

**அஞ்சாதே கெஞ்சாதே ஓடி ஒழிக்காதே.**

**உறுதியுடன் சிங்கம் கானகத்தில் திரிவது போல் உலக கானகத்தில் திரி**

**வெளிமாதிரி ஒன்றும் செய்யாதே. உனக்குள் நீ பெலத்துக் கொள்.**

**ஒன்றுக்கும் பயப்படாதே. உற்சாகத்தோடு முன்னேறிச் செல்**

**வெற்றி உன் சொந்தம்**

**விதியை மதியால் வென்றிடலாம்.**

**எதைப் பாவனை செய்கிறாயோ அது நீ ஆவாய்.**

**ஆசையை ஒழி. அதுவே பூசை.**

**தரும நெறியில் பிசகாதே.**

எக்கருமத்தைச் செய்யும் பொழுதும் ஊக்கத்தோடும் சிரத்தையோடும் மனமகிழ்ச்சியோடும் செய்து பழகுதல் வேண்டும். அப்படிச் செய்து பழகி வந்தால் மன உறுதி உண்டாகும். அஃதாவது மனம் ஏகாக்கிர சித்தத்தைப் பொருந்தும். பொருந்தவே ஆன்ம சக்தி அதிகரிக்கும். நினைத்த காரியம் நினைத்த மாத்திரத்திலே உண்டாகும். பாடுபட அஞ்சினவனுக்கு ஒரு பிரயோசனமும் உண்டாகாது. பாடின்றிப் பட்டம் கிடையாதென்பது உலக வழக்கு.

(பச்சைத் தண்ணீரிலே பலகாரம் சுடமுடியாது என்பதை சாதாரண பேச்சு வழக்கில் கேட்டிருக்கிறோம்)

யாதும் நமது ஊர். யாவரும் நமது கேளிர். நன்மை தீமை நாம் தருவன. பிறராலன்று.
(இது புலம்பெயர்ந்து பிறநாடுகளில் வாழும் மக்களுக்கு நல்ல புத்திமதி)

எல்லா இடத்திலும் எல்லாரிடத்திலும் ஈசனைக் காண். கடவுளைக் கும்பிடுவதே வாழ்வில் இலக்காக வைத்துக் கொள்.
ஈற்றில் எல்லாம் அவனாகவே காணப்படும்.

**இளமையில் ஆத்மீக வாழ்க்கை**

சுவாமிகள் 1872 ஆம் ஆண்டு வைகாசி மாதம் அவிட்ட நட்சத்திரத்தில் மாவிட்டபுரத்தில் அம்பலவாணருக்கும் சின்னாச்சி அம்மையாருக்கும் புத்திரனாகப் பிறந்து, கொழும்புத்துறையில் வசித்த சிறிய தகப்பனார் கிறிஸ்தவரான சின்னையா ஜோசப் என்பவருடன் வளர்ந்து வந்தார். யோகநாதன் என்ற பெயருடன் சம்பத்திரிசியார் (**St. Patricks College**) கல்லூரியில் ஆங்கிலம் படித்து இரணைமடுவில் உள்ள நீர்ப்பாசன இலாகாவில் களஞ்சியப் பொறுப்பாளராக (**Store keeper**) உத்தியோகம் பார்த்தார். இளம் வயதிலேயே கடவுள் வழிபாடு, தியானம் போன்ற ஆத்மீக வாழ்வில் ஈடுபட்டிருந்தார். கிறிஸ்தவ சூழலில் இருந்தபடியினால் இவரை யோன்சுவாமி என்றும் பின்னர் யோகசுவாமி என்றும் அழைக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. இவர் உத்தியோகத்தில் நேர்மையும் திறமையும் உள்ளவராக ஆங்கிலேய மேலதிகாரிகளினால் பெரிய மதிப்புப் பெற்றவராக இருந்தார். சில காலத்தின் பின் உத்தியோகத்தை விட்டெறிந்து, முழுமையாக ஆத்மீக வாழ்விலே ஈடுபட்டார்.

**குருவைத் தேடல்**

குருவருள் இன்றித் திருவருள் இல்லை. குருவைத் தேடி அலைந்து நல்லூர் தேரடியில் பலர் பித்தனென்றும், சிலர் சித்தன் என்றும் சொல்லும் செல்லப்பா சுவாமியை வந்தடைந்தார். செல்லப்பா சுவாமிகள், யோகநாதரை பல சோதனைக்குள்ளாக் கியே சீடனாக ஏற்றார். "அன்னை ஒத்த அன்புடையான் அன்பிலாதவன் போல் துன்புறுத்தி நிற்பான்" என்று சொல்லுகிறார்.

பலர் பைத்தியக்காரன் என்று பரிகாசஞ் செய்யும் செல்லப்பனை, யோகநாதன், "நல்ல மருந்தொரு குரு மருந்தை, ஞானதேசிகனை, நல்லூரில் கண்டேனே. சொல்லச் சொல்ல சுவைக்கும் செல்லப்பன் திருநாமம். ஒப்பு உவமை இல்லாத அப்பனே செல்லப்பன். சற்குரு ஆக வந்து சந்தேகம் தீர்த்தாண்டான். நல்லூர்த் தேரடியில் நாங்கண்ட சிவயோகம் சொல்ல முடியாத சுகத்தினைக் காட்டியது" என்று நற்சிந்தனைப் பாட்டுக்களில் பாடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சற்குரு தீட்சை**

ஒருநாள் நல்லூர்க் கந்தன் திருமுன்றில் "யாரடா நீ" என்று அதட்டினான். அன்றே யான் பெற்றேனருள் அருள் ஒளிக்குள்ளே புகுந்து சென்றேன் யான். மலைத்து நின்ற என்னை உற்று நோக்கி, பயம் தீரும் வண்ணம் "ஒரு பொல்லாப்பும் இல்லை" என்று ஓதினான். "அப்படியே உள்ளது காண் ஆரறிவார்" என்றான். ஒப்பில்லா மாதவத்தோன். தன்னொப்பர் இல்லாத் தலைவன் திருவருளால் என்னொப்பாரின்றி யிருந்தேன் என்று உருக்கமாகவும் அழகாகவும் தான் சற்குருவின் தீட்சை பெற்றது பற்றி நற்சிந்தனையில் ஆசானைக் கண்டேன் என்னும் தலைப்பில் பாடுகிறார். ஆசான் அருளால் ஆசானாயினார்.

**சீடன் சுப்பிரமுனியா**

யோகசுவாமிகள் குருவைத்தேடி அலைந்து செல்லப்பாச் சுவாமியை அடைந்தது போல், 1947ம் ஆண்டில் 20 வயதுள்ள ஆத்மீகத்தில் ஈடுபட்ட ஓர் அமெரிக்க இளைஞன் சற்குருவைத் தேடி சான்பிரான்சிஸ் கோவிலிருந்து கப்பல் மார்க்கமாக பம்பாய் வந்து இந்தியா முழுவதும் தேடி அலைந்து கடைசியாக யாழப்பாணத்தில் சிவயோக சுவாமிகளை வந்தடைந்தார். சுவாமிகள் இவருக்கு ஓம் நமசிவாய என்னும் மூல மந்திரம் உபதேசித்து சுப்பிரமுனியா என்னும் நாமம் சூட்டினார். சிலகாலம் சென்றபின் 1949ம் ஆண்டு வைகாசி விசாகம் பூரணை தினத்தன்று சந்நியாச தீட்சை கொடுத்து சுப்பிரமுனியா என்னும் தீட்சா நாமத்தோடு கடையிற் சுவாமி (1860), செல்லப்பாச் சுவாமி (1840-1915), யோகசுவாமி (1872-1964) குருபரம்பரையில் சேர்த்தார்.

மேற்கு நாடுகளில் போய் சனாதன தர்மத்தைப் போதிக்கும்படி முதுகில் ஓங்கி அடித்துப் பணித்தார். இந்த அருள் பணிப்பை சிரமேற் கொண்டு குருதேவர் என்று பலரால் அன்பாக அழைக்கப்படும் சிவாய சுப்பிரமுனியர் பசிபிக் மகா சமுத்திரத்தில் இருக்கும் ஹாவாய் **(Hawaii)** என்னும் தீவில் சிவன் கோயில் அமைத்து இந்து தர்மத்தையும் சைவ வழிபாட்டையும் வளர்த்தும் பரப்பியும் வருகிறார். **Sanatana Dharma in Sanmarga Temple** இவர் தனது பிரசங்கங் களிலும் பிரசுரங்களிலும் தன்னுடைய சற்குருயோக சுவாமிகள் பெரும் சித்தர் என்றும் கடவுளை அறிந்தவர் என்றும் அவர் கூறிய வாக்கியங்களுக்கும் போதனைகளுக்கும் விளக்கங்கள் கொடுத்து வருகிறார். இவர் நடத்தும் **Hinduism Today** என்னும் ஆங்கிலச் சஞ்சிகை பல்வேறு உலக நாடுகளுக்கும் சென்று இந்து சமயத்தையும் இந்து கலாசாரத்தையும் பரப்பி வருகிறது.

சிவாய சுப்பிரமுனியா தனது தியான தரிசனத்தில் சிவபெருமான் தான்தோன்றிச் சிவலிங்கத்துடன் காட்சி அளித்த இடத்திலேயே இச்சிவதலத்தை ஸ்தாபித் திருக்கிறார். இத்தலம் 51 ஏக்கர் விஸ்தீரணம் உள்ளது. இது பல உலக நாடுகளின் யாத்திரிகர் களின் புகழ் பெற்ற தலமாகி உள்ளது. **(Ref. Know Thyself. Himalayan academy Publication).** இவ் ஆலயம் சன்மார்க்க இறைவன் கோவில் என்று அழைக்கப்படுகிறது. சுப்பிரமுனிய சுவாமிகளின் அக்காட்சியில் ஹாவயின் புனித வலுவை நதிக்கரையில் தோன்றப் பெற்ற சிவலிங்கம் 1987ம் ஆண்டு ஆவணி மாதம் கண்டெடுக்கப்பட்டது. இது அற்புதமான உலகின் மிகப் பெரிய ஸ்படிக சிவலிங்கமாகும். (39 அங்குல உயரம், 700 இறாத்தல்) . சன்மார்க்க இறைவன் கோயிலுக்கான சிற்பவேலைகள் தற்பேது இந்தியாவில் பெங்களூரில் நடைபெற்று வருகின்றன. திருப்பணி வேலைகள் பூர்த்தியானதும் இவ் அற்புத லிங்கம் இக்கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

சன்மார்க்க இறைவன் கோவில் உலகெங்கும் பரந்து வாழ் இந்துக்களுக்கு பெருமை கொடுக்கும் புண்ணியதலமாக விளங்கும். இக்கோவில் கட்டட நிதிக்கு உலகில் பல நாடுகளிலிருந்து அமெரிக்கா, கனடா, இந்தியா, அவுஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், ஃபிஜி தீவுகள், சைவ அன்பர்கள் பணம் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஆதீனத்தில் பல நாடுகளையும் பல இனங்களையும் சேர்ந்த துறவிகள் தமது தமது வாழ்க்கையை முற்றாக சிவபணிக்கென அர்ப்பணித்து சுப்பிரமுனிய சுவாமிகள் குருதேவரின் வழி நடத்தலின் கீழ் சிவதொண்டு புரிந்து வருகிறார். குறிப்பு: இவ்வாலயத்தின் விலாசம்.

**Kauai Aadheenm. 107 Kaholalele Road, Kapaa, Hawai, 96746, U.S.A**
**Phone: 808-822-3012, Fax: (808) 822-4351**

**சிவத்தொண்டன் சபை**

எங்கள் குருபரன் விட்டுச் சென்ற அரும்பெரும் பொக்கிஷமாகிய நற்சிந்தனைப் பாடல்களைத் தொகுத்துப் புத்தக வடிவில் வழங்கிய யாழ்ப்பாணம் சிவதொண்டன் சபையாருக்கு சைவ உலகம் பெரும் கடமைப்பட்டிருக்கின்றது. உலகத்திலுள்ள பல மொழியினரும் பயன் அடையும் பொருட்டு ஆங்கில மொழி பெயர்ப்பு 1974ம் ஆண்டு இச்சபையினால் அருமையான முன்னுரையுடன் வெளியிடப்பட்டது. மொழி பெயர்ப்பும் முன்னுரையும் பெரும்பாலானவை இலங்கையின் முதல் மகாதேசாதிபதி சோல்பரி பிரபுவின் மகன் ராம்ஸ்போதம் **(Ramsbotham)** அவர்களினால் ஆக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. ராம்ஸ்போதம் அவர்கள் சுவாமிகளின் சீடனாக யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்திலும் செங்கலடியிலும் தொண்டாற்றி வந்திருக்கின்றார். சாந்த சுவாமி என்னும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமம் இவருக்குச் சுவாமிகளால் சூட்டப்பட்டது.

இலங்கை மகாதேசாதிபதியின் மகனான ராம்ஸ்போதம் எம்.ஏ. பட்டதாரி. பெரும் செல்வத்துக்கு உரியவர். வேட்டி உடுத்தி வெறும் காலுடன் யாழ்ப்பாண வீதிகளில் சந்நியாசியாகத் திரிந்ததாக அக்காலத்து லண்டன் ஆங்கிலப் பத்தரிகைககள் நகைத்தன.

சாந்த சுவாமி ராம்ஸ்போதம் பிரபு என்ற முறையில் பிரித்தானிய பாராளுமன்ற பிரபுக்கள் சபையில் அங்கம் வகிக்கும் உரிமையைவிட்டு தனிமையான ஆத்மீக வாழ்க்கையில் தனது சற்குருவின் போதனைக்கமைய இங்கிலாந்தில் வாழ்ந்து வருகிறார். தமிழில் உள்ள சில சமய நூல்களின் மொழி பெயர்ப்பிலும் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டிருப்பதாக அறியவருகிறது.

**மகா வாக்கியங்கள்**

சுவாமிகள் பின்வரும் வாக்கியங்களை அதிகமாகச் சொல்லுவதாக அறிகிறோம். இவை சுவாமிகளின் மகாவாக்கியங்கள் எனப் பெயர் பெற்றுள்ளன.

**ஒரு பொல்லாப்பும் இல்லை.**

**நாம் அறியோம்.**

**எப்பவோ முடிந்த காரியம்.**

**முழுதும் உண்மை.**

இந்த வாக்கியங்களின் தத்துவங்களையும் கருத்துக்களையும் நீங்களே அறிய முயலுங்கள்.

சுவாமிகளின் போதனைகள் சிறப்பாக தற்பொழுது புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள், ஆடம்பரமற்ற நன்நெறி வாழ்க்கை **(Unostentatious ethical life)** வாழ்வதற்கு வழிகாட்டியாக இருக்கும் என்பது அடியேனது கருத்து.

அடியேன் இந்தக் கட்டுரை முயற்சியைச் சுவாமிகளின் திருவடித் தொண்டாகவே கருதுகிறேன். சுவாமிகளின் திவ்விய தரிசனத்தையும் ஆசிகளையும் காத்திராப் பிரகாரமாக 1962ம் ஆண்டில் அடியேன் பெற்றதை இங்கே கூற விரும்புகிறேன். உலகத்தைத் திருத்தாதே. உன்னையே திருத்திக் கொள் என்பது சுவாமிகளின் போதனை. அதற்கு ஏற்ப இந்தக் கட்டுரையை ஒருவரையும் திருத்தும் முயற்சியில் அடியேன் எழுதலில்லை. சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களில் உள்ள சில போதனைகளை அடியேனது சிற்றறிவுக்கு எட்டியவாறு உங்கள் கவனத்துக்கு முன்வைப்பது கடமை என்று கருதுகிறேன்

# The Way of Sivayoga Swami

Abstract: In this article Mr. M. Arumugam, of Sivattondan Nilayam of London, a devout follower of Sivayoga Swami of Sri Lanka outlines the essences of his life and his teachings. Sivayoga Swami is one of the great Saivite mystics of 20th century. Sri Lanka with followers all over the world. Without adorning saffron robes, the Rudraksa and such other symbols of Saivite Asceticism. and wearing only a simple white dhoti he was simplicity itself, always easily accessible to all those who sought his advice. Swamigal was born in 1872 and grew up in a Christian atmosphere with his uncle who was a Christian atmosphere with his uncle who was Christian. As he grew up and the spiritual thirst became intense he became a desciple of Cellappa Swamigal. Yogaswamigal has also the distinction of having initiated into Saivism a young American who was also in a spiritual quest in the year 1947. This young man was baptised as Suppira Muniya and now is spreading Saivism in the West by establishing an adheenam in the Kuai Island of Hawaii and publishing 'Hinduism Today"

The chief teachings of Yogaswami are contained in a book called NrCintanai. He emphasized the fact that the individual is not the body or the antakaranam of cittam and so forth but rather a spirit that remains indestructible. The path of Dharma should always be followed as the creatures function in the Sannithi of SIVA. He also appears to have emphasized the pavanai 'I am Siva" as a means of cleansing oneself of the impurities and thereby attain Sivahood. Along with Pavanai the recitation of Pancatsara was also emphasized. The 'Sivohampavanai" is the meaning of the Upanisadic Mahavakkiya 'Aham Brahman Asmi'. This technology of projective indentification with SIVA enables one to attain SIVAHOOD in selfhood. Such an intense dhyana secures the Grace of SIVA, the flow of which makes a man god-like in being.

Thanks Saiva Ulakam.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஐயப்பா

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# சங்கர் அன் கம்பனி

இறக்குமதியாளர்கள் – மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

**Compact Disc**
ஓடியோ, வீடியோப்
பிரதிகள்



பக்திப் பாடல்கள்
திரைப்படப் பாடல்கள்
பழைய பாடல்கள்
புதிய பாடல்கள்
தேவார – திருவாசக
– தோத்திரப் பாடல்கள்

சமயபாடப் புத்தகங்கள்
சமய நூல்கள்
பாலர் பாடப் புத்தகங்கள்
கலை – கலாச்சாரப் பொருட்கள்
ஆடம்பர – அலங்காரப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
சுவாமிப் படங்கள் – சிலைகள்
அனைத்து வைபவங்களுக்குந்
தேவையான பொருள்கள்
பூஜைத் திரவியங்கள்
சமயாசாரப் பொருள்கள்

கரம் போட்
சுவர்மணிக்கூடுகள்
சமையல் பாத்திரங்கள்
சில்வர் – பித்தளைப்பொருள்கள்
குத்து விளக்குகள் – பூச்சாடிகள்

அத்தியாவசிய உணவுப் பொருள்கள்
மரக்கறிவகைகள் – பதனிடப் பெற்ற
உணவுவகைகள் **(FROZEN FOOD)**
முருங்கையிலை, வல்லாரை,
வெங்காயப்பூ மற்றும் அனைத்துக்
காய்கறிகளும் பெற்றுக் கொள்ளலாம்

மாவிலை, அறுகம்புல்
வேப்பிலை, துளசி
வில்வமிலை, வாழை இலை
முடித்தேங்காய், திருநீறு
சந்தனம், குங்குமம்
கப்பல் வாழைப்பழம் வாரா வாரம்
கிடைக்கும்.

# SANKAR AND CO.

**2425 EGLINTON AVE. EAST, UNIT6**
**SCARBOROUGH, ONTARIO. M1K 5G8**
**TEL: 759-5100, 759 - 4916, FAX: 759-4916**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்ற உபதலைவர் திரு. கனக மனோகரன் வரவேற்புரை



மன்ற உபதலைவர் சிவஸ்ரீ ப. கிருஷ்ணராஜக் குருக்கள் ஆசியுரை



பிரதம விருந்தினர் Ms. Alexandra Y. Semcniuk
கௌரவ விருந்தினர் Ms. Sheila Ewing



பரிசில் வழங்குதல் மன்றக்காப்பாளர் டாக்டர் அ. சண்முகவடிவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம் பெயர்ந்த நாட்டில் சைவமுந் தமிழும்.

சிவஅன்பர். சுப்பிரமணியம் ஆறுமுகம், ஸ்காபுரோ

இந்த உலகின் ஆரம்பகாலந் தொட்டே மனித வர்க்கம் பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டு, இயங்கு வதற்கு அடிப்படைக் காரணிகளாக அவரவர் பின்பற்றும் சமயம் மொழி, கலை, கலாச்சாரம் என்பனவே இருந்து வந்தன.

இந்து மதக் கொள்கையினாலும் கோட்பாடு களினாலும் உருவாக்கப்பட்ட ஏற்றத்தாழ்வு அற்ற, எந்தவித வேற்றுமைக்கும் இடம் அளிக்காத இந்துக் குடும்பமே பாரத தேசத்தின் பிரதிநிதித்துவமாக அமைந்திருந்தது. இங்கு வேறுவிதமான வியாக்கி யானங்களுக்கோ, அன்றி வேறுபாடுகளுக்கோ இடமற்ற, நிச்சயிக்கப்பட்ட ஒரு வாழ்க்கை முறையே இந்துமக்கள் மத்தியில் காணக்கூடியதாக இருந்தது.

காலப்போக்கில் பிறநாட்டவரினால் மேற்கொள்ளப் பட்ட படையெடுப்புக்களும் மதச்சார்புள்ள ஆட்சி முறையும் எமது மொழியையும், சமயத்தையும் கலை, கலாச்சாரம் என்பவற்றையும் பாதிக்க ஏதுவாக அமைந்தன. இலங்கையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆங்கிலேயர் தமது மதத்தையும் மொழியையும் திணிக்க முற்பட்டனர், திணித்தனர். தமிழரின் மத்தியில் பிரித்தாளும் யுக்தியாக கிறிஸ்த்தவ மதத்தைப் புகுத்தினார்கள். நூற்றுக்கணக்கான இந்து ஆலயங்களையும் புனித ஸ்தலங்களையும் நிர்மூலமாக்கினர். மேற்படிப்புக்கும் உத்தியோகத் திற்கும் மதமாற்றம் என்னும் கொடிய ஆயுதத்தைப் பயன்படுத்தினர். இந்த வலையில் சிக்கிய இந்துக்கள் விரும்பியோ விரும்பாமலோ மதம் மாறினர். அன்று தொட்டு மதமாற்றம் வாழையடி வாழையாக வளர்ந்த வண்ணம் இருக்கின்றது.

புலம்பெயர்ந்து வந்த எம்மை இன்று மீண்டும் இம்மதமாற்றம் என்னும் கொடிய தொற்றுநோய் பீடித்துள்ளது. நாம் தமிழராய்ப் பிறந்தது எம் முற்பிறப்பின் பூர்வபுண்ணிய பலன். அதனிலும் ஓர் இந்துவாகப் பிறந்தது பெருமை தான்.

YOU HAVE EARNED THIS HUMAN BODY
BY ACCUMULATED MERIT OF MANY LIVES
INFERIOR BEINGS AND IT IS INDEED VERY
FOOLISH TO FRETTER AWAY THIS
PRECIOUS OPPORTUNITY IN ACTIVITIES
THAT ARE NATURAL ONLY TO THOSE INFERIOR
BEINGS

என்கிறார் பகவான். "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகி" இளைத்து விட்டேன். இதோ! "மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்" உண்மைப் பொருளே! உனது தங்கத் திருவடிகளை இன்று கண்டேன்; பயனாய்ப் பேரின்ப நிலை பெற்றேன் என்கிறார் மணிவாசகப் பெருமான். எம்மதமும் எமக்குச் சம்மதம் என்ற ஓர் அரிய தத்துவக் கோட்பாட்டைத் தாரக மந்திரமாகக் கொண்டது எங்கள் இந்துமதம். மற்ற மதங்கள் கடவுளை மனிதரின் தூதுவராகக் காண்கின்றன. ஆனால், இந்துக்கள் கடவுளையே மனிதராகக் காண்கிறார்கள்.

THE HINDUS HAD HOPED FOR MATERIAL BLESSINGS IN THIS LIFE AND HEAVEN AFTER DEATH BUT NOW IT APPEARS THAT MAN IS CONTINGENT UPON THE VIRTUE OR SIN ACQUIRED BY ONES DEEDS IN THE PREVIOUS BIRTH, THE UNIVERSE SO CONCEIVED IS STRICTLY JUST & IMPARTIAL AND THE INDIVIDUAL IS SOLELY RESPONSIBLE FOR HIS OR HER DESTINY OF FATE, THROUGH ETHICAL CHOICES WHICH DETERMINE IT. THE WEAL OR WOE OF DEEDS DONE IN PREVIOUS LIFE IS UNCHANGEABLE AS THEY ARE INESCAPABLE.

ஓர் இந்து தனக்குச் சாதகமான கிருபை இந்த வாழ்க்கையில் கிடைக்கும் எனவும் மரணத்தின் பின் சொர்க்கம் கிட்டும் எனவும் நம்பிக்கையுள்ளவனாக இருக்கிறான். அவரவர்களின் கர்மாவுக்கேற்றபடி நீதி வழங்கப்படுகின்றது. இந்த அண்டத்தின் அமைப்பு அதற்கேற்பத்தான் வேற்றுமை இன்றி நடை பெறுகின்றது. ஒவ்வொரு மனிதனும் தன், முன் வினைக்குத் தானே காரணகர்த்தாவாக அமைகின்றான். முற்பிறப்பில் நாம் பண்ணிய பாவ புண்ணியம் மாற்றப்பட முடியாது வியாபித்து நிற்கிறது. அதன் பிடியில் இருந்து மீளமுடியாது.

மதமாற்றத்தால் ஒருவனின் தலைவிதியை மாற்றி அமைக்கலாம் என்று மட்டும் எண்ணாதீர்கள். சுதந்திரம் உங்கள் பிறப்புரிமை. நீங்கள் மதம் மாறுங்கள். ஆனால், மற்றவரை மதம் மாறுங்கள் என வற்புறுத்தாதீர்கள். தீவட்டியைப் பிடித்தவண்ணம் கிணற்றில் விழுபவனைத் தடுக்க முடியாது. அது அவன் தலைவிதி.

இங்கே மதம் மாறுவது ஒரு மேலைத்தேய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிகமாய் விட்டது. நாகரிக வளர்ச்சியின் எல்லைக்கோடு தான் இந்த மதமாற்றம் போலும். எதற்காக மதம் மாறுகின்றீர்கள்? எத்தனை கோடி புண்ணியம் செய்துதான் இந்த மானிடப் பிறவியை எடுத்தோம். பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் என்கிறோம். நம்தாயை நாம் மறப்பதில்லை. நம் மண்ணை நாம் நேசிக்காது விடுவதுமில்லை. பின் எதற்காக இந்த மனமாற்றம், தடுமாற்றம் அதன் விளைவு மதமாற்றம். உன்னையே நீ அறிவாய்.

கூலிபெற்று மாற்றான் வீட்டுக் கதவைத்தட்டி மதம் மாறிய மதத்தைப் பெருக்க வேண்டி எதற்காக எத்தனிக்கின்றீர்கள்? நான் மதம் மாறிவிட்டேன், அது சரியோ தவறோ என்னுடன் இன்னும் சிலரைச் சேர்த்துக் கொண்டு உங்கள் தப்புக்கு ஞாயம் கற்பிக்க முனைகிறீர்களா? மனப்பக்குவம் இல்லாதவன் நினைத்தபடி யெல்லாம் நடக்கிறான்.

எங்கள் இந்துமதத்தைப் பெருக்க வேண்டிய அவசியம் எமக்கு ஏற்படவில்லை. ஏற்படவும் மாட்டாது. பல்லாயிரம் ஆண்டுகாலமாக வளர்ந்து நிற்கும் ஒரு இமயமலையைச் சில செம்மறி ஆட்டுக்குட்டிகள் சாய்த்து விட முயன்றால் அவற்றின் கொம்பொடிந்து விடுமேதவிர மலை மலையாகவே நிற்கும். உயிருள்ள மதம் இந்துமதம் அத்துடன் அதுதான் சிந்துவெளி நாகரிகத்தின் பிறப்பிடம் கூட (Cradle of Civilization)

YOU CAN BE BORN AS A HINDU
BUT NOT TRANSFORMRED AS A HINDU

நீ ஒரு இந்துவாகப் பிறக்கலாம். ஆனால் உருவம், தன்மையுள்ள இந்துவாக மாற்றப்பட முடியாது.

இங்கே இந்துக்களை மதம் மாற்ற எண்ணும் மதம் மாறிய இந்துக்களே! உங்களால் ஒரு இஸ்லாமிய மதத்தினரையோ இன்றி வேற்று மதத்தினரையோ மதம் மாற்ற முடியுமா? எம்மதமும் எமக்குச் சம்மதம் என்ற கோட்பாட்டில் வாழும் சாத்வீக மதமாகிய எம்பெரு மதத்தை மாற்ற முற்படாதீர்கள். வேண்டாம் இந்த விஷப்பரீட்சை. மாறாக அன்பு என்னும் விதையைப் பாலைவன இதயங்களில் தூவுங்கள். பின்பு அப்பாலை வனங்கள் அன்பின் அரவணைப்பில் சோலை யாகிவிடும். மலர்ந்து வாசம் கொடுக்கும். அங்கு அன்பு நதிகள் பெருகி ஓடும். அங்கு ஒவ்வொரு பறவையும் ஒவ்வொரு குழந்தையும் அன்பின் சங்கீதத்தைப் பாடும். மனிதனுக்குத் தொண்டு செய்வதன் மூலமே தனக்குள்ளிருக்கும் கடவுளை மனிதன் கண்டு கொள்கின்றான். எனவே மதம் மாறாதீர்கள். மற்றவர்களை மதம் மாற்ற எண்ணாதீர்கள். நன்மை செய்யா விடினும் எங்கள் இந்து மதத்திற்குத் தீங்கு செய்யாதீர்கள்.

"சாதாரண மனிதன் தன் அறியாமையால் தன்மதமே பெரியதென்று எண்ணி ஆரவாரம் செய்கிறான். உண்மை ஞானம் உதித்துவிட்டால், பிறமதங்களை அரவணைக்கிறான்" என்கிறார் பரமஹம்சர். இந்துமதம் அதன் பரந்த கரங்களால் அத்தனை மதங்களையும் அணைத்துக் கொண்டே வளர்ந்திருக்கின்றது.

இனி எங்கள் தமிழ் மொழியின் மேன்மையையும் அதன் இனிமையையும் சிறிது நோக்குவோம். இச்சைக்கினிய மது, எங்கள் இருவிழிக்குத் தேன்நிலவு. அதுவே எங்கள் தமிழ் அமுது. தெள்ளற்ற தமிழ் அமுதின் சுவை கண்டார் இங்கமரர் சிறப்புக் கண்டார்.

**பொழுதெல்லாம் எமது தமிழ்மொழி**
**கொள்ளை கொண்டு போகவோ- நாங்கள் சாகவோ**
**என்றும் அழுதுகொண்டிருப்போமோ**
**இதயத்துள் எங்கள் தமிழின் இனிமையை**
**மீட்பமோ எங்கள் ஜீவன் ஓயுமோ நெஞ்சம் வேகுமோ**
இது மகாகவி பாரதியின் உள்ளக்குமுறல்.

மாடுகட்டிப் போர் அடித்தால் மாழாது செந்நெல் என்று ஆனைகட்டிப் போர் அடிக்கும் அழகான தென் மதுரை. இங்கே தமிழ் வளர்ந்தது. தேன்வந்து அமுதின் தெளிவின் ஒளிவந்து மதுரையில் சங்கம் வளர்த்த தமிழ், இன்று உலக அரங்கில் மங்கும் ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. மூன்று குலத்தமிழ் மன்னர் மூண்ட நல் அன்பொடு பேணி வளர்த்த தீந்தமிழ், புலம் பெயர்ந்த நாடுகளில் வியாபித்து நின்றபோதும் அதன் மலர்ச்சி ஒரு கேள்விக் குறியாகிவிட்டது.

**"நற்றமிழ் தெரிந்த நறுந் தொகை தன்னாற்**
**குற்றம் களைவோர் குறைவிலாதவரே"**

என்கிறார் தமிழ் மூதாட்டி. சுட்ட பழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா என ஒளவைப்பிராட்டியுடன் விளையாடிய எம்முருகப் பெருமான் தன்னைச் சொற்றொடரால் தீந்தமிழில் பாடும்படி பணித்தார். அந்தப் பெருமை தமிழ் மொழிக்குத்தான். தீந்தமிழின் தீஞ்சுவையே தேசுமிக்காய் திக்கெலாம் உனைத் தேடித் திரிகின்றோம். தமிழ் மொழிக்குத்தான் எத்தனை இனிமை. இத்தீஞ்சுவைக்கு அமுதம் என ஒருபெயர் மது என மறுபெயர். மதுவை உட்கொண்டால் மயக்கும், மதுவைப் பருகினால் இனிக்கும். இவ்விரண்டு செயற்பாடும் தமிழ் மொழியின் இனிமையிலே அடங்கிவிட்டது. இன்னிசைத் தமிழ் எங்கள் உயிராக மதிக்கப்படுகின்றது. மனிதனுக்கு உயிர் மேன்மையுடையதுதான். அதனினும் மேலாகத் தமிழ் மொழி மேன்மை பெறுகின்றது. தமிழின் இனிமையையும் பெருமையையும் கவிஞர்கள் மட்டும் பாடவில்லை. நாயன்மார்களும் மறந்து விடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூலைநோயின் வெப்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத நாவுக்கரசர்

"சலம்பூவொடு தூபமறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்"- என

இறைவனை நோக்கிப் பாடினார்.

"பண்ணிடைத்தமிழ் ஒப்பாய்
பழத்தினிற்சுவை ஒப்பாய்"
என்றார் சுந்தரர்.

நாளும் இன்னிசையால்த் தமிழ் பரப்பினார் ஞானசம்பந்தப் பெருமான். தமிழில் இறைவன் மகிமையும் இறைவனால் தமிழின் பெருமையும் சக்தியும் சிவனும் போல் இணைந்து வளம் பெறுகின்றன.

சைவத்தையும் தமிழையும் வளர்த்தோர் நாவலர் பெருமான்.

'நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்
சொல்லுதமிழ் எங்கே சுருதி எங்கே - எல்லவரும்
ஏத்து புராண இதிகாசமெங்கே
ஆத்தன் உரை எங்கே அறை"

மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர் திருமொழியும் தேனினும் இனிய திருவாசகமும் தமிழுக்கு அமுதாகக் கலந்து மிளிர்கின்றன.

"கொங்கு தேர் வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழி இயநட்பின்
மயிலியற் செறியெயிற்றரிவை கூந்தலின்
நறியவுமுளவோ நீயறியும் பூவே".

இது பாண்டி மன்னனின் ஐயப்பாடு. மன்னன் தன் மனைவியின் கூந்தலில் இருந்து வீசும் நறுமணம் இயற்கையில் கூந்தலில் உண்டோ இன்றி, பூக்கள் வாசனைத்திரவியம் பூசுவதால் ஏற்பட்டதோ என ஐயுறுகிறான். தனது சந்தேகத்தைத் தீர்க்கும் பொருட்டுப் புலவர் பெருமக்களை அரண்மனைக்கு அழைத்துத் தன் ஐயப்பாட்டைத் தீர்த்து வைக்கும்படி வேண்டி நின்றான். அப்படித் தீர்த்து வைப்பவர்க்கு ஆயிரம் பொற்காசு பரிசாக அளிப்பதாகவும் அறிவித்து விட்டான். தருமி என்ற ஓர் ஏழைப்புலவன் மூலம் சிவபெருமான் அனுப்பிய பாட்டின் விளக்க ஓலையைக் குற்றம் என வாதிட்டார் தலைமைப்புலவர் நக்கீரர். தன்பாட்டில் குற்றம் கண்டவருடன் வாதிட எம்பெருமான் மாறுவேடத்தில் பாண்டியனின் அரண்மனையில் தோன்றினார். வந்திருப்பவர் “ஆலவாய் அண்ணல்” என்று தெரிந்தும் கூடப் பாட்டில் பொருட்குற்றம் சொற்குற்றம் இருப்பதாக வாதிட்டார் நக்கீரர். தமிழ் அன்னைக்குக் குந்தகம் விளையக் கூடாது என்ற நிலைப்பாட்டை நிலை நிறுத்தினார். “நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே” என வாதிட்டார் நக்கீரர். பெருமானும் நக்கீரரின் தமிழ்ப்பற்றை மெய்ச்சிக் காட்சி கொடுத்தருளினார். நாம் தமிழுடன் விளையாடி அதன் பெருமையை நிலைநாட்டவே வந்தோம் என்றார். எங்கள் தமிழ் மொழிக்கு அதைவிட வேறு சான்றும் வேண்டுமா?. அகஸ்தியனார் கட்டிக்காத்த பைந்தமிழ் வள்ளுவனும், இளங்கோவும், கம்பனும் பாரதியும் பேணி வளர்த்த நற்றமிழ் இன்று புலம்பெயர்ந்தோர் மத்தியில் கேள்விக்குறி தாங்கி நிற்கிறது. நாம் தமிழர் நாடுவிட்டு நாடு வந்து ஈனர்களாய், நாடோடிகளாய், ஏன் அடிமைகளாய் அலைந்து திரிகின்றோம். எம் சந்ததியுடன் தமிழ்மொழி மங்கிவிடுமோ இன்றி நிலைபெற்று வீறுநடைபோடுமோ என்பது எமது வருங்காலச் சந்ததியின் தோள் வலிமையிலே தான் தங்கியுள்ளது.

உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு என்ற நிலைப்பாடுதான் எங்கள் மூச்சு. எங்கள் தமிழ் மொழி அது இறைவன் அருளிய அருண் மொழி. சைவமும் தமிழும் உடலும் உயிரும் போன்றவை. இதில் ஒன்றில்லையேல் ஒன்றுமில்லை. புலம்பெயர்ந்த நாட்டில் வாழ்கின்றோம். எமது சிறார்களை வளர்ப்பதும் எமது பாரம்பரிய கலைகளைப் பேணிக்காப்பதும், தமிழ் மொழியைக் கற்பிப்பதும் சிறிது கடினம்தான், இருப்பினும் ஒவ்வொரு பெற்றோரின் தலையாய கடமை தமிழையும் சைவத்தையும் வளர்ப்பது ஒன்றுதான். தமிழ் எங்கள் தாய்மொழி. அது எங்கள் தனிவழி. நாடித் தமிழ்ப் பணி செய்து மடிவோம். வேதங்கள் பாடி மறை நாதங்கள் ஓதுவோம். எங்கள் தமிழ் மொழி என்றென்றும் வாழிய! வாழியவே!!

**சான்றோர் சொல்லமுதம்**

“இராமன் கிடைப்பானா” என்று கலங்கிய சீதை அவன்கிடைத்த பின்னாலும் காடு சென்று கலங்கிய சீதை, காட்டிலும் ஒருவனால் தூக்கிச் செல்லப்பட்டுக் கலங்கிய சீதை, இராமனைக் காணாமல் தினந்தினம் கலங்கிய சீதை, அவன் வந்து தன்னை மீட்டதும் அவனால் சந்தேகிக்கப்பட்டுக் கலங்கிய சீதை, சீதையின் வாழ்க்கையிலே ஒரு சுவட்டிற்கு மறுசுவடு துன்பம் என்றால், என்நிலையும் உன்நிலையும் என்ன?

– காஞ்சிப் பெரியார்

வருகின்ற விருந்தாளிக்கும் ஒரு நாகரிகத்தைப் போதித்தது இந்துமதம். சாப்பாடு நன்றாக இல்லாவிட்டாலும் “பிரமாதம்” என்று சொல்லி விட்டுப் போவதே அந்த நாகரிகம்

– கண்ணதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவயோக சுவாமிகளே! சரணம்

செ. நாகேந்திரன் - இலண்டன்

முப்புர மெரித்த சிவனுக்கு முதன் மகனே!
முக்கண்ணனே மூசிக வாகனனே!!
அப்பனு மம்மையுமே அனைத்துலகமென்று
அறியவைத்த ஆனைமுகனே அம்பிகைதநயனே
ஒப்பில்லாக்குருவே ஒற்றைக் கொம்பொடித்த
ஓம் காரரூபனே ஒழுகும் அருட்சுடரே
சுப்பிரமணியனின் சோதரனே சர்வமங்களா
சித்தி விநாயகா! உனக்கே முதற்சரணம்

அம்மைசின்னாச்சிக்கும் அம்பலவாணருக்கும்
அவதரித்து ஆங்கிலமுங்கற்று அரசபோகம் பெற்று
தம்மையுணர்ந்து இத்தரணிக்கு மணி விளக்காய்
திண்ணை போதுமென்று துயரற்ற சிந்தையராய்
மும்மையுணர்ந்து முதுபெரும் முனிவராய் பாரில்
மும்மலமறுத்த சீவன் முத்தராய் ஈழத்தில்
செம்மைக்குணத்தோடு சேர்ந்தோரின் காவலராய்
சிவனடி சேர்ந்த சுவாமிகளே சரணம்

ஆட்டுக்கும் மாட்டுக்கும் தாகந்தணித்துத் தன்னை
அணைந்த மாந்தர்க்கு அறிவைப் புகட்டி
பாட்டுக்கள் பாடிப் பரவசமூட்டித் தேவாரம்
புராணங்கள் கூட்டாய்ப் பாராயணம் பண்ணி
நாட்டுக்குரித்தான நற்றமிழ் பேசி நாதனருளிய
நான்மறை வேதத்தை நெஞ்சிற் சுமந்து
கேட்டுவருவோர்க்குக் கருத்துரையுங்கூறிக்
கண்ணியமாய் வாழ்ந்த சுவாமிகளே சரணம்

வறுமைப் பிணியரும் வளம்மிகு தனவந்தரும் வாழ்வில்
வேதனை வந்தால் வந்தாறும் நிழலாய்
மறுவற்ற துறவபூ ண்டு தன்புனிதப் பேரறிவால்
மேல்நாட்டு மக்களையும் கவர்ந்திட்ட தயாளராய்
பொறுமைக்குப் பூ மியாய் பாரிலொரு போதகராய்
பொன்னும் பொருளும் பதவிகளுந் துறந்து
மறுமைப் பிணிக்கு மருந்தினை யுரைத்த வைத்தியரே!
மேதினி புகழ் சுவாமிகளே சரணம்.

காவி காற்செருப்பு அக்குமணியற்றுத் தூயவெண்
குறுகிய வேட்டியுடன் குடிலதில் வாழ்ந்து
பாவியரும் அணுகினால் பரிந்துருகி யவர்க்கு
பலனீந்து புது வாழ்வளித்து அந்நாள்
தேவியர்க்கும் துயரற்ற மனைவளத்தைத் தன்
திருவாக்கால் இரங்கி மலரச் செய்து
தாவிச்சரியை முதல்ஞானம் வரை சென்று
தெய்வத்தில் கலந்த சுவாமிகளே சரணம்

சேராத வேற்று மதத்தாரை நாத்திகரை யன்பால்
சாந்த முடனீர்த்துத் தன் திருமொழியால்
தீராத பிணிதீர்த்துத் திருவருள் புரிந்து தினம்
துக்கந் துடைத்து மக்களைக் கவர்ந்து
பூராத மெய்ஞ்ஞானக் கல்வியினை அன்றுவரும்
பாமரரும் புரிந்து உணர வைத்து நாம்
பாராத பரம் பொருளையோகத்தாற் கண்ட
புண்ணியப் பெருமகா சுவாமிகளே சரணம்

சித்தம் புத்தியுடம்பு மனமெல்லாம் வாழ்வில்
சீரழிய என்றும் அழியாத மெய்ப்பொருளாய்
நித்தம் நிலையாய் இப்பிரபஞ்சத்தை நிறைப்பதோ
நிகரற்று சிவனும் சீவனுமே நாம் தினமோ
சத்தியம் தர்மநெறி தவறாது வாழ்ந்து உலகில்
சீவனும் சிவனும் ஒன்றாய்க் கண்டாலந்த
உத்தமனே சிவன் சிவனே சிவன் அவனுறையும்
உள்ளமே கோவிலென்ற சுவாமிகளே சரணம்

நான் என்னுமுன் ஆணவமும் கன்மம் மாயைகளும்
நெகிழாமனம் படைத்துன் ஞானத்தீயழிப்பதால்
தேன் அன்ன ஐந்தெழுத்தால் அனைத்துமடக்கி
தீயவை நீக்கி நீ வாழ்ந்திடல் நன்றேயுன்
ஊன்தனையுருக்கி வாட்டும் விரதம் வேண்டாம்
உலகுடன் நீயொத்து வாழ்ந்தால் போதும்
கான்தரும் வாழ்வு யாத்திரை தீர்த்தமேன் சிந்தையால்
கடவுளைக் காண் என்ற சுவாமிகளே சரணம்

சாதிசமயம் என்னும் சங்கடத்தைத் தள்ளி விட்டு
சற்றும் தயங்காது உடல் பொருளாவியால்
சோதிவடிவானைச் சோர்வின்றித் தியானித்து
சரணாகதியடைந்து யோகநிலை கண்டு நீ
நீதி நெறிவழுவா நேசனை யகமகிழ்ந்து
நித்தம் அவனை அகம்பிரம்மாஸ்மி மந்திரத்தால்
ஆதியும் அந்தமும் இல்லா அரிய அற்புதனை
அஞ்சாது தியானியென்ற சுவாமிகளே சரணம்

விதியை மதியினால் வென்றிடலாம் வருமந்த
வெற்றியுனக் கென்றும் சொந்தமடா
பதிவிடமே கானகமாய்க் குமுறிச் சிங்கம்
பயமற்றுத் திரிவதுபோல் மனத்தால் திரிநீ
கதியாருமில்லை யென்று அஞ்சிக்கலங்காதே
கவலையற்றுத் தியானித்தால் முன்செல் நீ
மதியுடனே யுன்னாசை யடக்கி விட்டால் அது
மங்களப் பூசை யென்ற சுவாமிகளே சரணம்

பஞ்சாட்சரமென்னும் சிவாயநம அட்சரத்தை
புரிந்து முழுமன தோடோதி வாழ் வோர்
அஞ்சற்க அணுகாது இன்னலென்றும் வாழ்வில்
அவனே நானென்று எண்ணித் தியானித்தால்
நெஞ்சிற் குடி கொண்ட ஆசையழிந்து
நிச்சயம் ஈசனருள் பொழியுமென்றும்
வெஞ்சமரில் வையகம் வெந்தழிந்த காலத்தில்
தஞ்சமவனென்ற சுவாமிகளே சரணம்

தரும நெறி தவறாதே திடமனந் தளராதே
துன்பம் வரினும் சிரத்தையுடன் கருமஞ்செய்
ஒருமனத்தோடு எதையும் ஊக்கமுடன் புரிவாய் நீ
ஒரு போதும் வாழ்வில் உண்மையை மறவாதே
பெரும்பாடு இன்றிப் பட்டம் பெறலாமோ மாந்தர்
பாடுபடப் பயந்தால் பலனுங் கிட்டிடுமோ
இருக்குமிடத்தில் நீ ஈசனைக் கண்டு கொள் அந்த
இறைவனெங்கு மென்ற சுவாமிகளே சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லம் விட்டுத் தேடிவந்த அமெரிக்க இளைஞனை
இனிய சீடராக்கி சுப்பிரமுனிய! என்றழைத்து
அல்லற்படும் அன்பர்க்கு அரிய போதனையால்
ஆறுதலளித்து அன்பைப் பொழிந்தனரால்
சொல்லற்கரிய தன் பெருமாற்றல் கருத்துக்களை
செப்ப வைத்தின்று உலகையே கவர்ந்து விட்ட
செல்லப்ப சுவாமிகளின் இனிய சீடராம் மகா
சிந்தனைச் சிவபத்தி சுவாமிகளே சரணம்

காந்தம் போல் அணைந்த சீடருடன் உறவாடி
குருவருளின்றித் திருவருளில்லை யென்று தான்
சாந்தமாய்ப் பலர் நெஞ்சிற் குடி கொண்டு
சிறந்த சீடரை யுலகெங்கும் பெற்ற அருள்
வேந்தரே வையகத்தில் தமிழும் சைவமும் வாழ எம்
வரப் பிரசாதமாய் வந்து ஞானக் கருத்தனை
ஈந்த சிவக் கொழுந்தே சுந்தரத்தமிழமுதே
ஈசுவரகடாட்ச சுவாமிகளே சரணம்

எப்பவோ முடிந்த காரியம் நாமறியோம்
ஒரு பொல்லாப்புமில்லை முழுதுமுண்மை என்று
தப்பாமல் நாலு மகா வாக்கிய முரைத்து
தேடிவரும் பத்தருக்குப் பற்பல வாக்களித்து
அப்பர் சுந்தரர் மாணிக்க வாசகர் போல்
அருந்தமிழ் வளர்த்த ஞான சம்பந்தர் போல்
ஒப்பில்லாப் பெரும் கீர்த்தனம் செப்பிய
ஓம்கார சித்தி சுவாமிகளே சரணம்

உய்ய உலகுக்கு உவந்த வார்த்தைகளாய்
உன்னதனாருட் புகுந்து உதிர்த்த முத்துக்களை
தெய்வக் களஞ்சியமாய்த் தெவிட்டாத் தேனமுதாய்
தன்னிகரற்ற தூய வேத சாரங்களை
மெய்ப்பொருள் கூறும் நற்சிந்தனைக் கீதங்களாய்
மங்களத் தமிழில் தந்து நாம் பாராயணம்
செய்து சிருஞ்சிறப்புடன் வாழ வழிவகுத்த
சிவயோகதவத்திரு சுவாமிகளே சரணம்

மதுப்பழக்கம் ஆடம்பரம் வேண்டாமென்றுரைத்து
மாண்புள்ள விவசாய வளர்ச்சிக்கும் உதவி
புதுமை விரும்பியர்க்குப் புரிய வைத்தெம்பண்பை
பாதயாத்திரைகள் பலசெய்து தன் வாழ்வில்
முதுமை வந்துற்றும் மனந்தளரா மேனியராய் வயதும்
மழலை மனத்தோடு தொண்ணூற்றிரண்டுவரை
பொதுவுடமைச் சித்தாந்தம் வாழ்வில் அனுட்டித்து
பார்புகழ வாழ்ந்த சுவாமிகளே சரணம்

அந்த நாட்களில் அவரை அணுகி அரியசைவத்தின்
அருந்தவ விளக்கங்கள் அறிய ஆவலுற்று
சிந்தனையாளராய் சிவனை வணங்கிச் சிவத்தொண்டராகி
சீமையில் பிறந்த தனவந்தர் ராமஸ்போதம் பிரபு
செந்தமிழ் கற்றும் சைவத்தைப்புரிந்தும் சிறப்புள்ளபல
சைவநூல்களை மொழிபெயர்த்து உலகறியவைக்க
கந்தசாமி என்று அவரை அன்புடன் அழைத்த
சன்மார்க்க யோக சுவாமிகளே சரணம்

மெத்திவரும் மேல்நாட்டு மோகத்திலும் அற்புதமாய்
மங்களப்பூ சை திருப்பணி பாராயணம் புரிய
பத்தியுடன் பார்தனில் கிளைகள் உருவாகியின்று
பற்றுத்தளராச்சிவ பத்தரைத் தோற்றுவிக்க
உத்தமரின் நிழலாயன்று சிவதொண்டன் நிலையத்தை
உருவாக்கி யாழ்நகரில் ஞானவிளக்கேற்றி
சித்தமுடன் சமயவிழாக்களும் நடத்தி ஊரெங்கும்
சிவபத்தி வளர்த்த சுவாமிகளே சரணம்

மனத்தால் தூய்மையும் குணத்தால் மென்மையும்
மிகைப்படக் கூறா அரும் மொழியும்
இனத்தால் மதத்தால் வெறுப்பற்ற சிந்தையராய்
இன்பமும் துன்பமும் அந்த ஒருவனே யென்று
சினத்தால் சபிக்காத சிறப்புள்ள துறவியாய்
சிற்றெறும்பும் கொல்லாத காருண்யராய் தன்
சனத்தால் பெரும்பாராட்டும் மதிப்பும் பெற்ற
சுகபோகம் வெறுத்த சுவாமிகளே சரணம்

உன்னும் உணவில் பால்பழம் சேரென்றும்
உன்வாழ்வில் பகலுறக்கம் தவிரென்றும்
எண்ணும் காமம் களவுபொய் விலத்தி நீ
என்றும் ஒழுக்கசீலமுடன் வாழென்றும்
கண்ணும் கருத்துமாய் அறங்காத்துன் பெற்றோரைக்
கும்பிட்டு வாழென்றும் சொல்லித் தான்பிறந்த
மண்ணும் நினைத்து என்றும் பெருமை கொண்ட
மாபெரும் சற்குரு சுவாமிகளே சரணம்

குருவைமதித்துக் குரவரைப் புகழ்ந்து குவலயத்தில்
கண்ணப்பர் போன்ற பத்தரைப் பாராட்டி
திருவைத் தேடாதருளை நாடிப் புனிதமுள்ள
தூய அன்பே சிவமெனத் தினம் ஓதி
கருவிலினிநாம் உதியோமென்றும் அண்டத்தில்
கடந்தவுள்ளனைக் காணுவோமென்றும் கூறி
பெருமின்பத்தில் புகுந்திட்ட மகாஅருஞ்ஞானபத்தராம்
பரஞ்சோதியான சுவாமிகளே சரணம்

அண்டசராசரம் அவன் திருமேனியே
அசைவென அனைத்தும் அவன்திரு ஆடலே
கண்டங்கவலை கடும்பிணி தொல்லைகள்
கடவுளைச் சிந்தையால் தேடுவோர்க்கில்லையே
உண்டென்று அவனிடம் சரணடைவோர்க்கு
ஊழ்வினை இன்னல் உறுத்தாதென்றுமே
குண்டென்று மன்னார்க்குப்பூ மழையாகுமே
கொடும் எறிகணைகள் மாலைகளாகுமே

ஊக்கமுடன் வாழ வைத்து உயர்குணமோதவைத்து
வாக்கினால் வரங்கள் சொரியவைத்துச் சுவாமிகளின்
நாக்கினால் நல்ல சிந்தனையும் நயக்க வைத்த
தூக்கிய திருவடியான் புகழ் மாண்புடைத்தே.

மங்களம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழிய சைவம் — வாழ்க நற்றமிழர் — வாழிய தாயகம்

# ஸ்ரீ வித்யா பீடம்

## அனைத்து இந்து மத கிரியைகள் சேவை

## சிவஸ்ரீ தியாக முருகானந்த குருக்கள்

**இந்து மதகுரு, திருமணப் பதிவு அதிகாரி – கனடா**

**நந்தன் குருக்கள்** (நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி)

**(416) 299-4957**



**(416) 299-4957**

**திருமணம், பதிவுத் திருமணம் மற்றும் அனைத்து இந்துமத கிரியைகளும் முறைப்படி நிறைவேற்றி வைக்கப்படுவதுடன் மங்கள வைபவங்களுக்குத் தேவையான மண்டப ஒழுங்குகளும் செய்து தரப்படும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CAN SCIENCE GIVE MAN HAPPINESS ?

**Siva Arumugam B. A., North York, On.**

Even though scientific discoveries and inventions had made world a much more comfortable place to live, man - the crest and jewel of creations is always lamenting and lives in a state of fear, anxiety, distress, tension and dismay and this have been the greatest concern of the Indian Prophets and thinkers from times immemorial and they, through a serious study of the complexities of human behaviour have outlined their observation and recommendations which are now available to the world as Vedantic Literature.

The very nature of man is to be happy at all times. Except for certain traces of happiness he is never happy or blissful. Misunderstanding or rather not understanding the world and its ever changing nature has led to this situation and furthermore it had also led to the ever increasing diseases in the world which causes lives prematurely. Great philosophers all round the world have at different times spot - lighted this problem and were trying to give remedies to the situation yet most of them have never solved the problem and the world over are now seriously going through the works of the Indian thinkers and saints which are available as Vedantic material.

Have you ever seriously taken note of the statement 'The whole world is a stage and we all are players enacting different roles in this Big Drama." This only means that our personalities are different but we are acting certain characteristic roles of which we are also fully aware of the "I" who is taking part and the role that is being played by the "I". If in the play the character I am portraying is supposed to stab himself, do I ever pull the dagger into my stomach? No! because I know that I and the role are two different things.

There is also a generalised prophetic statement to say the "the whole life in this world is nothing but a dream". Have you at any stage given any serious thought to this statement? While you are dreaming, you always think that what you see in the dream is all concret and in the dream you might even see going through a few years of your life span. But do you realise that all that have taken place within a few minutes only. You will not know till you are awake. When you wake up you laugh at the whole thing and say it was a dream. There is something that has caused you to wake up and that is usually a snake trying to bite you or a lion trying to pounce on you. So the action of the dream-lion has caused a change from dream state (semiconscious state) to conscious state. It is worth mentioning at this stage that man also goes through another stage called unconscious state when he is fully under deep-sleep. So man goes through the three stages of consciousness, namely: Conscious, semiconscious and deep-sleep states every day and when these are explained you will realise that they have a meaning.

We have seen that scientific discoveries even though they are meant to improve the way of living still had not been successful in trying to bring the much chased after happiness and peace to man. At this stage, what are we to infer? Scientific discoveries which are all external to man could not achieve all what man wants and it is only the internal discoveries of man, his composition and nature that could help to achieve peace and harmony. It is in this field that the work and unanimous derivations of all great saints, sages philosophers and thinkers have been summarised to become Vedantic literature of the Hindu faith. We hear from Ramayana, an Indian Epic of prehistoric times, the use of pushpaka Vimanam, an air-borne chariot used by king Ravana to take Seetha to Sri Lanka. Could this not be claimed as a crown of scientific inventions of those times? We hear from Mahabarata of the different types of deadly weapons used in the kuruksheta war but their weapons are never of the nature of global annihilation like the present day Atom and Nuclear bombs. In essence, the trend of scientific discoveries, inventions and innovations have done lot of things constructively for a better living for man still some of them has the power of destroying all the creations of the world which only goes to prove that this is the result of ill-conceived thinkings and the thought structure perpetuated through 'Ignorance' (AVIDYA) is the worst evil which requires close study. This had been the work of Indian thinkers and they have



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

exposed all these weakness of the human mind through a systematic study which when high lighted will be a boon to the world.

The general pattern of human behaviour is more emotional than rational. Man like to live by the heart than by the head. When man allows passions and emotions to override him, his decisions are also emotional and never rational which means that the decisions are not bound by any common reasoning. Still he insists and emotionally reasons out his behaviour which when analysed by an unbiased outsider turns out to be completely incorrect. Man possess that extra sixth sense of discrimination through the faculty of intellect but does not seem to utilise same nor does he ever make an effort to improve this faculty to make it subtler and the resultant effect naturally will only be emotional.

The mind of man is defined as a flow of thoughts and if this flow is not controlled by the faculty of intellect, they will run riot resulting in a stage of chaos and confusion. Can we allow a situation to erupt like this, which challenges the very existence of man. At this explosive situation the serious minded peace loving citizen are turning round to the scientists and asking whither are we bound? And no answer is coming from the depth of their heart as their conscience pricks to tell them that they have been instrumental in such explosive inventions that could destroy the whole world. While at the same time the serious minded Eastern thinker is asking the following questions to the Creator. I am called jivatama and you Paramatma. Are we both separated? Is because of separation that I think you and I are different? Am I alone because through the influence of MAYA I think I am separated from you? what is the relationship between you and me? Are we both same? If so, why should the name of jivatma and paramatma be attributed to both of us? To such pertinent questions the Lord having thought that words may not suffice replied in Silence. Even all the above questions were put in silence as they could not be expressed so effectively in any language and the answer came in Silence and that is Vedanta - a subject of universal appeal worth going through to elevate man to his highest form.

## ஒரு சில தத்துவங்கள்

திலகா தர்மராசா

வாழ்க்கையில் நாம் ஆசைப்பட்டுத் தேடும் பணம், பெருமை, எல்லாமே, நாம் இறந்து போன பின் நம்முடன் வரக்கூடியவை அல்ல. ஆனால் இவை எதுவானாலும் அது இறைவனுக்கே அர்ப்பணம் என்று நினைத்து விடும் போது அவை அழிவில்லாத் தன்மையைப் பெறுகினறன.

இரவு நேரத்துக்குத் தேவையானவற்றைப் பகலில் தேடி வைத்துக் கொள்ளவேண்டும். மழைக் காலத்திற்கு வேண்டியதை அதற்கு முந்திய, மற்றைய காலத்தில் தேடி வைத்துக் கொள்ள வேண்டும் .

முதுமைக்குத் தேவைப்படுவதை இளமையில் தேடி வைத்துக் கொள்வதே அறிவுடமை. அதே போல் மறுமைக்கு வேண்டியதை இம்மையில் தேடிக் கொள்ள வேண்டும்.

பணம் சேரச் சேரச் சாப்பாடு குறையும், தூக்கமும், ஒழுக்கமும் நிம்மதியும் குறையும். ஏன் பக்தியும் கூடக் குறையும்.

நமது பிரார்த்தனைகள் கடவுளின் தீர்ப்பை மாற்ற இயலாவிட்டாலும், நம்மையே நல்லவனாக மாற்றும் வல்லமை கொண்டவை என்பதில் ஐயமில்லை.

இறைவனது உதவி தாமதித்துக் கிடைத்தாலும், அது வலுவானது என்பதை உணர வேண்டும்.

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர் – திருக்குறள்.

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல் – திருக்குறள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவராத்திரியும் பிரதோஷ மகத்துவமும்

**சங்கரப்பிரியா**

"வார்த்தையும் அதன் அர்த்தமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட முடியாமல் கலந்து நிற்பதுபோல் ஒன்று கலந்து, இயைந்து நிற்கும்-உலகத்திற்கே ஜகத்பிதாவாகவும், ஜகன்மாதாவாகவும் நிற்கும் பார்வதி பரமேஸ்வரரை வணங்குகிறேன்" என்கிறார் காளிதாசர். இப்படி, சிவனும் சக்தியும் இரண்டறக் கலந்து நிற்கும் தத்துவமே லிங்கத் திருவுருவம். சிவ வழிபாட்டில் லிங்கத் திருவுருவமே முக்கிய இடம்பெறுகிறது. சிவலிங்கம் ஜீவனைக் குறிக்கிறது. ஆவுடையார் இதய கமலத்தைக் குறிக்கிறது.

சிவனின் அஷ்ட மூர்த்தங்களான பஞ்சபூதங்கள், (நிலம், நீர், தீ, வெளி, காற்று) சூரியன், சந்திரன், ஜீவாத்மா-இவைகளில் முதல் ஏழும் ஜடப் பொருள்கள். ஜீவாத்மா ஒன்றே சித்துப் பொருள். சித்துப் பொருளான ஜீவனில் சிவனை வணங்குவதே முக்கிய வழிபாடு. இதைக் குறிக்கும் வகையில் சிவாலயங்களில் சிவலிங்கமாக இறைவன் இருக்கிறார். சிவப்பேரொளி பிழம்பாகத் திகழ்கிறது. தீ என்றும் மேல் நோக்கியே ஒளிரும் தன்மை உள்ளது. நாம் அதைத் தலைகீழாகப் பிடித்தாலும் சிவஜோதி மேல் நோக்கித் திகழ்வதைக் குறிப்பிடும் விதத்தில் அமைந்ததே பாணம்.

லிங்கம் பதியினைக் குறிக்கிறது. அதன் எதிரிலுள்ள நந்தி பசுவைக் குறிக்கிறது. பலிபீடமோ பாசத்தைக் குறிக்கிறது. பசு பலிபீடத்தைப் பின்னே தள்ளி, இறைவன் முன் ஒருமுகமாகக் கிடந்து திளைப்பதாக அமைந்திருப்பது, -மனிதன் ஆசாபாசத்தைத் துறந்து ஒருமுகமாக இறைவனை வழிபட்டு, அவன் பேரருளுக்குப் பாத்திரமாக வேண்டும் என்பதை உணர்த்தத்தான்.

பாச-பந்தம் பொருந்தித் துன்பம் அடைந்த காரணத்தால், உயிர்-பசு (பந்தமுடையது) என்று பெயர் பெற்றது. பரமசிவன் தலைவனாய் அந்த உயிர்க் கூட்டங்களை அடிமை கொள்ளும் சிறப்பினால், பசுபதி என்றும் பெயர் பெற்றான். இதைத்தான் "பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே" என்று திருவாசகத்தில் மாணிக்கவாசகர் கூறுகிறார்.

புலன்களுக்குப் புலப்படாத பரம்பொருளை நாம் ஆசாரிய புருஷர்கள் மூலமாகவும், மூர்த்திகள் மூலமாகவும் மனத்தில் நிச்சயித்துக் கொண்ட பல வடிவங்கள் மூலமாகவும் தியானம் செய்து வழி படுகிறோம். நம் ஆலயங்களிலுள்ள மூர்த்தங்கள், லிங்கங்கள் எல்லாம் நம் பக்தியினாலும், மந்திர சக்தியினாலும், பரம்பொருளின் திவ்ய ஸ்வரூப மாகின்றன. உருவமாகவும், அருஉருவமாகவும், அருவமாகவும் படிப்படியே தியானம் செய்த பிறகு சிவோகம் (நானே சிவம்) என்ற பேதமற்ற ஞானம் நமக்கு ஏற்படுகிறது.

ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ்சோதி லிங்கமாக வெளிவந்து, லாவண்ய ரூபத்தையடைந்த புண்ணிய இரவே சிவராத்திரியாகும். விஷ்ணுவும், பிரம்மாவும் சிவபெருமானின் அடி, முடி தேட முயன்று, காண முடியாமல் இறைவனைப் பூஜித்த இரவு சிவராத்திரி, லிங்கோத்பவராக அருபத்துக்கும் ஸ்வரூபத்துக்கும் இடையேயுள்ள ஜோதிர்லிங்கமாகத் திருவுருவம் எடுத்துக் கொண்ட நன்னாளே சிவராத்திரி.

இரவில் ஐம்புலன்களும் மனத்தில் ஒடுங்க, மனம் ஜீவனில் ஒடுங்க, ஜீவன் நம் உடலில் தூங்காமல், உண்ணாமல், ஸ்வயம் பிரகாசமாகவுள்ள ஸ்வரூபத்தில் அடைக்கலமாகிறது. இப்படி எல்லா ஜீவராசிகளும் அடைக்கலமாகும். ஈசுவரனுடைய புண்ணியத் திருநாளே சிவராத்திரி. மாசி மாதத்தில் வரும் மகர சிவராத்திரி அன்று விரதமிருந்து இரவு கண்ணுறங்காமல் சிவதரிசனம் செய்வதால், பல பிறவிகளின் பாவங்கள் மன்னிக்கப்பட்டு ஈசன் அருள் கிட்டும்.

சிவபெருமானுக்கு உகந்த வேளை பிரதோஷ வேளை. தோஷம் என்றால் இரவு வருவதற்கு முற்பட்ட மாலைப்பொழுது. "பகலும் இரவும் சந்திக்கின்ற அந்த மாலைப்பொழுதில் ஆனந்தத் தாண்டவமாடி புஷ்பம்போல மலர்கின்றவரும், வேதங்களுக்குச் சிகரமாக விளங்கும் உபநிஷதங்களில் தங்கியிருப்பவரும் பிரமராம்பிகையினால் ஆலிங்கனம் செய்யப்பட்டவரும், பாம்பை ஆபரணமாகப் பூண்டவரும், எப்போதும் சர்வ குணத்துடன் விளங்குபவரும், சிவா எனப் பூண்ட அம்பிகையால் கடாக்ஷிக்கப்பட்டவருமான ஸ்ரீ சைல மல்லிகார் ஜுன மஹாலிங்கத்தை வணங்குகிறேன்." என்கிறார் ஆதிசங்கரர்.

பிரதோஷ காலம் சிவனுக்கு உகந்த காலமாக இருக்கிறது. எல்லாச் சிவாலயங்களிலும் பிரதோஷ கால பூஜை சிறப்பாக நடைபெறுகிறது. சிவபெருமான் ஆலகால விஷத்தை அருந்திய நேரந்தான் பிரதோஷ புண்ணியகாலம்.

வடவரை என்கிற மந்திரமலையை மத்தாக்கி, வாசுகியை நாண் ஆக்கி, பாற்கடலைத் தேவர்களும் அசுரர்களுமாகக் கடைந்தார்கள்-அமரத்துவம் தரும் அமிர்தம் கிடைக்கப் பாற்கடலைக் கடைந்ததினால் உண்டான விஷமும், வாசுகி பாம்பு கக்கிய விஷமும் கலந்து ஆலகால விஷமாக மாறியது. தேவர்கள் அஞ்சி நடுங்கி கயிலயங்கிரியை அடைந்து நந்திதேவரிடம் முறையிட்டார்கள். நந்திதேவர் சிவபெருமானின் அனுமதி பெற்று அவர்களை அவர் முன் அழைத்துச் சென்றார். தேவர்கள் தங்களுக்கு நேரவிருக்கும் ஆபத்தைக் கூறி அழுது தொழுது நின்றனர். உலகின் ஜீவராசிகளைக் காக்கும் பொருட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் ஆலகாலவிஷத்தை எடுத்துப் புன்சிரிப்புடன் பருகினார். விஷம் கண்டத்திற்கு வந்ததும் சிவபெருமான் சற்றே நிலை தடுமாறினார்.அனைவரும் கவலையில் துடித்தனர். பார்வதி அன்னை தனது திருக்கரத்தால் தன் கணவரின் கண்டத்தை நீவி மெல்ல அழுத்த-விஷம் உள்ளே செல்லாமல் கண்டத்திலேயே தங்கி விட்டது. லோகமாதாவின் திருக்கரம்பட்டு நஞ்சும் அமுதாகி லோகநாதனின் கணடத்தில் கருமணிபோல் தங்கிவிட்டது. விஷத்தைக் கண்டத்தில் நிறுத்திக் கொண்டதால் பரமேஸ்வரன் திருநீலகண்டர் என்று பெயர் பெற்றார்.

மேற்கொண்டு பாற்கடலைக் கடைந்ததில் கௌஸ்துபம், உச்சை சிரஸ்வம், காமதேனு, ஐராவதம், லட்சுமி என்று ஒவ்வொன்றாக வந்து - இறுதியில் அமிர்த கலசத்தை ஏந்தியபடி தன்வந்தரி பகவான் வெளிக் கிளம்பினார். அமிர்த கலசத்தை யார் பங்காக எடுத்துக் கொள்வது என்று தேவர்களுக்கும், அசுரர்களுக்கு மிடையே போட்டியும் சண்டையும் மூண்டது. மஹா விஷ்ணு மோஹினி வடிவம் கொண்டு தன் வடிவாலும், நடனத்தாலும் அசுரர்களின் கவனத்தைத் திசை திருப்பி அவர்களை மதிமயங்கச் செய்து - அமிர்தத்தைத் தேவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டார். கருணா மூர்த்தியான சிவபெருமான், பகலும் இரவும் சந்திக்கும் ரம்மியமான பிரதோஷ புண்ணிய காலத்தில், ரிஷபதேவரின் இரு கொம்புகளுக்கிடையே உயிர்கள் உய்யும் பொருட்டுத் திருநடனம் புரிந்தார். சரஸ்வதி வீணை மீட்ட, இந்திரன் புல்லாங்குழல் இசைக்க பிரம்ம தேவர் தாளமிட, இலட்சுமி தேவி இனிமையான குரலில் பாட திருமால் மிருதங்கத்தில் தாளமிசைக்க சிவபெருமான் ஆனந்தத் தாண்டவமாடினார்.

இப்படி ஆலகால விஷத்தை அருந்தி உயிர்களைக் காத்து ஆனந்தத் தாண்டவமாடியது கார்த்திகை சனிக்கிழமை பிரதோஷ சமயத்தில் என்று கூறப்படுகிறது. அது முதல் திரயோதசி திதியன்று மாலை பிரதோஷ நேரம் சகல பாபங்களையும் போக்கும் நேரமாகியது. பரமேஸ்வரனைத் தரிசிக்க எல்லாத் தெய்வங்களும், முப்பத்து முக்கோடி தேவர்களும், முனிவர்களும் பிரதோஷ காலத்தில் வந்து சேருகின்றார்கள். அதனால் பிரதோஷ காலத்தில் சிவனைத் தரிசித்தால் எல்லாத் தேவதைகளையும் தரிசித்த பலன் உண்டு.

கைலயங்கிரியின் காவல் தலைவனான நந்திதேவர் பிரதோஷ காலத்தில் சிவபெருமானுக்குச் சமமாகப் பூஜிக்கப்படுகிறார். முனிவர் சிலாதருக்கும், அவர் தர்மபத்தினி சித்திரவதி அம்மையாருக்கும் பிறந்த தவப்புதல்வன் நந்திதேவர் உலக வாழ்வில் ஆசையற்ற நந்திதேவர் ஈசனைக் குறித்து பஞ்சாக்னியில் பல ஆண்டுகள் கடுந்தவம் இயற்றி சிவபெருமானின் ஆசி பெற்றார். சிவபெருமான், நந்திதேவரின் அதிகாரம் எங்கும் நடக்கும் என்று அருள் பாலித்து, அதிகார நந்தி என்ற சிறப்புப் பெயரும் தந்தருளினார். மேலும் பல்லாண்டு காலம் அதிகார நந்தி கடுந்தவம் புரியவே பூதகணங்களின் தலைவனாகவும், சிவஞானத்தை உலகுக்குப் போதிக்கும் ஆசிரியனாகவும் கைலயங் கிரியில் காவல் தலைவனாகவும் சிவபெருமான் அதிகார நந்தியை வாழ்த்தி நிலைபெறச் செய்தார். பரமனின் வாகனமாகவும் சிறப்புப் பெற்று, நந்திதேவரின் அனுமதி பெற்றே தேவர்கள் முதல் அனைவரும் சிவதரிசனம் செய்ய வேண்டும். அதனால்தான் பிரதோஷ காலத்தில் நந்திதேவருக்கும் அறுகம்புல் மாலை, வில்வமாலை போட்டு, நெய் விளக்கு ஏற்றி, பச்சைஅரிசி வெல்லம் வைத்துப் பூஜை செய்கிறார்கள்.

பிரதோஷ தினம், மாதம் இருமுறை வளர்பிறையில் ஒன்றும், தேய்பிறையில் ஒன்றுமாக வருகின்ற திரயோதசி திதியில் அமைகிறது. பிரதோஷ தினத்தில் பகல் முழுவதும் உபவாசம் இருந்து, சிவசிந்தையுடன் சிவபுராணம், சிவ நாமாவலிகளைப் படித்து, மாலையில் சிவாலயம் சென்று பிரதோஷ வைபவத்தில் கலந்து கொண்டு நந்திக்குப் பச்சைஅரிசி வெல்லம் படைத்து நெய்த்தீபம் ஏற்றி வணங்கினால் அஷ்ட ஐஸ்வரியங்களும், சகல சௌபாக்கியங்களும் கிட்டும்.

சிவாலயத்தில் பிரதோஷ வைபவத்தில், மேளதாளங்கள் முழங்க, ஈசனுக்கு எண்ணெய்க் காப்பிட்டு, பின்பு பால், தயிர், தேன், பஞ்சாமிர்தம், சந்தனம், திருநீறு ஆகிய மங்கலப் பொருள்களால் அபிஷேகம் நடைபெறும். நைவேத்திய தீபாராதனைக் குப் பின், வெளியில் உள்ள நந்தி கேசவருக்குச் சிறப்பாக அபிஷேகங்கள் நடைபெறும். வில்வ மாலைகளாலும், அறுகம்புல் மாலைகளாலும் நந்தி கேசவர் அலங்கரிக்கப்பட்டு அர்ச்சனை, நைவேத்தியங்கள் நிறைவேறும் ஒரே நேரத்தில் ஈஸ்வரனுக்கும், அதிகார நந்திக்கும் தூபதீபாராதனை காட்டப்படும். அபிஷேகிக்கப்பட்ட பால் விநியோகிக்கப்படும். அதை அருந்தி, திருநீறணிந்து நந்தீஸ்வரருக்குப் பின்னால் சென்று, அவரின் இரு கொம்புகளிடையே சிவபெருமானை வணங்கி வலம் வருதல் வேண்டும். வெளிப்பிரகாரத்தில் உற்சவ மூர்த்தி பார்வதி தேவியுடன் திருக்கோலத்தில் எருது வாகனத்தில் அலங்காரமாக அமர்ந்து வாத்தியங்களும், வேதகோஷங்களும் முழங்கக் கோயிலை மும்முறை சுற்றி வலம் வருவார்.

சிவனடியார்களுக்கு உணவளித்த பிறகே உணவருந்திப் பிரதோஷ விரதத்தை முடித்துக் கொள்ள வேண்டும். வேதம் ஓதும் வேதியர்களுக்குத் தானம் அளிப்பது இச்சமயத்தில் சிறப்பான பலன்களைத் தரும். பதினோரு பிரதோஷங்களைத் தொடர்ந்து பூஜிப்பவர்கள் ஒரு கும்பாபிஷேகத்தைக் கண்ட பலன் பெறுவார்கள். நூற்றிருபது பிரதோஷங்களைத் தொடர்ந்து பூஜிப்பவர்களுக்கு மறுபிறவி இல்லை என்பது ஆன்றோர் வாக்கு.

நன்றி: ஞானபூமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மிருதங்க வித்துவான்
திரு. வாசு இராசலிங்கம் கௌரவிக்கப்படல்



பிரபல மெல்லிசைப் பாடகர்
திரு. தெய்வேந்திரம் கௌரவிக்கப்படல்



கனடா இந்து மாமன்றம் நிர்வாகக் குழுவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அணுத்தரும் தன்மையில் ஐயோன்"

## சித்தாந்தரத்தினம் க. கணேசலிங்கம்

தன்னை ஆட்கொண்ட திருவருளை எண்ணுந் தோறும் மணிவாசகப் பெருமானின் உள்ளம் நெகிழ்ந்து, உருகுகிறது, மெய்சிலிர்க்கிறது. கண்ணீர் பெருகுகிறது. அவர் பெற்ற அனுபவங்கள் அருட்பாடல்களாக வெளிவருகின்றன.

வெறும் வார்த்தைகளால் இறைவனின் கருணையையும், பெருமையையும் விளக்க முடிவதில்லை. ஆயினும் அவனின் தன்மையைச் சொல்லில் வடிக்க அருளாளர் பலரும் பலவாறு முனைந்துள்ளனர்.

மணிவாசகர் பெற்ற அருளனுபவம் இறைவனைப் பல்வேறு கோணத்தில் பார்க்கத் துணை செய்கிறது. எக்கோணத்தில் பார்த்தாலும் இறைத்தன்மையை எண்ணிப் பெருவியப்பே ஏற்படுகிறது. எந்தப் பொருளுடனும் இறைவனை இணைத்து ஒப்பு நோக்க முடியவில்லை. அனைத்துப் பொருள்களிலும் அணு ஒன்றே அவன் தன்மையை விளக்க அண்மைத்தாக உள்ளது. இதனை மணிவாசகரே உணர்த்துகிறார்:-

**"அணுத்தரும் தன்மையில் ஐயோன் காண்க**
**இணைப்பரும் பெருமையில் ஈசன் காண்க."**

திருவாசகத்துக்குள்ள பல சிறப்புக்களில், இன்றைய விஞ்ஞானக் கருத்துக்களைப் பிரதிபலிப்பதும் ஒன்று. அத்துடன், விஞ்ஞான நோக்கிலும் ஒரு சிறந்த நூலாக இது விளங்குகிறது. இச்சிறப்பைக் கூடுதலாகக் கொண்டது 'திருவண்டப்பகுதி'.

இவ்வுலகமும் இதனை உள்ளடக்கிய அண்டமும் குறித்த மணிவாசகரின் கருத்துக்கள் விஞ்ஞானச் சிறப்பு மிக்கவை. (இது பற்றிய விளக்கத்தை, "சித்தாந்தம்" யூன் இதழில் வெளிவந்த 'அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்' என்ற கட்டுரையில் பார்க்கவும்). உலகப் பொருள்கள் அனைத்தின் தோற்றத்திற்கும் அடிப்படையான ஒரு உள்பொருள் 'உண்டென்பது சித்தாந்தக் கொள்கை. காரணப் பொருளான இந்நுண்பொருள் மாயை எனப்படுவது. இது வேதாந்தம் கூறும் பொய்த் தோற்றமான மாயை அல்ல. விஞ்ஞானம் கூறும் மாறுதலடையும் சக்தி போன்றதே சித்தாந்தம் கூறும் மாயை. பிறப்பும் இறப்பும் இம்மாயை குறித்த நிலை மாற்றங்களே. எந்தச் சக்தியும் ஒன்றிலிருந்து இன்னொன்றாக மாறுமேயன்றி, புதிதாகத் தோன்றுவதோ, இல்பொருளாக அழிவதோ இல்லை என்பது விஞ்ஞானக் கோட்பாடு. இந்த விஞ்ஞானக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதே 'சத்காரியவாதம்' என்னும் சித்தாந்தக் கோட்பாடு.

அணு என்பது உலகப் பொருள்களுக்கு அடிப்படையான ஒன்று. எந்தப் பொருளையும் பகுத்துக் கொண்டே போனால், அது இறுதியில் அணுவாகத் திகழ்கிறது. தமிழறிஞர்கள் அணு என்பதற்கு மிகச் சிறிய நுண்பொருள் என்று பொருள் கண்டு திருவாசகத்திற்கு உரை எழுதியுள்ளனர். இது பொருத்தமானதே. ஆயினும் 'அணு' என்ற சொல்லை மணிவாசகர் எடுத்தாளும் இடங்களையும் முறையையும் நோக்கின், அதன் பொருள் இன்னும் ஆழமாக, இன்றைய விஞ்ஞானக் கருத்துக்கு இயைந்ததாக இருப்பதைக் காணலாம்.

'இல்நுழை கதிரின் துன்னணுப்புரைய சிறியவாகப் பெரியோன்' என்ற தொடருக்கு உரையாசிரியர் பலரும் ஒரே தன்மைத்தான பொருள் கண்டுள்ளனர்.

"வீட்டினுள்ளே சிறு வழியினால் நுழைகின்ற ஞாயிற்றின் கதிரிடத்து நெருக்கமாகக் காணப்படும் அணுக்களை ஒப்ப அண்டப்பகுப்புக்கள் சிறியனவாகத் தோன்றும்படி, தான் அவற்றினும் பெரியோனாக இருப்பவன்." (சு.அருளம்பலவனார், 'திருவாசக ஆராய்ச்சியாளர்')

சிவனின் வியாபகத் தன்மையை விளக்குவதாக இவ்வுரை அமைந்துள்ளது. இங்கே 'துன்னணு' என்பதற்கு நுண்பொருள் அல்லது சிறுதுகள் என்று பொருள் காணப்படுகிறது. துகள்கள் எல்லாமே ஒரே தன்மை கொண்டவையல்ல என்பதும் இங்கே கருதற்பாலது.

விஞ்ஞான உலகில் சென்ற நூற்றாண்டு வரை இருந்த பௌதிகவியல் (Physics) பண்டைய புகழ் வாய்ந்த பௌதிகவியல்' (classical physics) என்றும், இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் உண்டானது 'தற்காலப் பௌதிகவியலுக்கு வித்திட்ட பிளாங் (Planck) ஐன்ஸ்டீன் (Einstein) போன்ற விஞ்ஞானிகளின் ஆய்வினால் அணுக்கொள்கையில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. பிரிக்க முடியாதது என்று இருந்த அணு பிரிக்கக்கூடிய அணுக்கூறுகளை உள்ளடக்கியதென்பதும், அவைகூட எல்லாப் பொருள்களுக்கும் அடிப்படையான பொதுக்கூறுகள் என்பதும் இன்றைய விஞ்ஞானம் காட்டும் உண்மை. ஆகவே, எப்பொருளை எடுப்பினும், அதன் மூலப்பொருள் அணுவாகி, பின் அதனுள் இயங்கும் ஆற்றல்மிக்க ஒன்றாகி நிற்பதை அறியலாம். இதன் மூலம் இறைத்தன்மையை உணர்த்தும் மணிவாசகரின் திருவாக்கு சிந்தனைக் குரியது.

**"சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந் தொன்றாம்**
**திருப்பெருந் துறையுறை சிவனே**
**ஒன்றுநீ யல்லை அன்றியொன்றில்லை**
**யாருன்னை அறியகிற் பாரே."** (கோயிற்றிருப்பதிகம்)

தற்கால விஞ்ஞான ஆய்வினால் அணு என்பது சிறு துகள் என்ற முன்னைய கருத்து தவறானது என்ற நிலை ஏற்பட்டது. அணுவிற்குள்ளே ஒரு பெருவெளியும், நேர் மின்னணுக்கள் (Protons) பொதுமை அணுக்கள் (Neutros) கொண்ட அணுக்கருவும் (Nucleus),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைச் சுற்றி இடைவிடாது சுழலும் எதிர் மின்னணுக்களும் (Electrons) உண்டென்பது புலனாகியது. 'கதிர் இயக்க அலை வீச்சுக் கோட்பாடு' (Quantum Theory), 'சார்புக் கொள்கை' (Relativity Theory) போன்ற புதிய கொள்கைகள் எழுந்தன. இவற்றின் விளைவாக அணுவுக்குள் இருக்கும் அணுத்துகள்கள் 'இருமைத்தன்மை' (Dual Aspect) உடையன என்பதையும் அறிய முடிந்தது. துகளின் (Particle) தன்மையையும், சக்தியான மின்காந்த அலை (Electro Magnetic Wave)த் தன்மையையும் ஒரு சேரக் கொண்டவையாக இவ்வணுத்துகள்கள் உள்ளன. இந்த இருமைத் தன்மை ஒலிக்குமுண்டு. ஒரே நேரத்தில் பொருள் தன்மையையும் (சக்தியாகிய) அலைத் தன்மையையும் கொண்டது ஒளி. 'இல்நுழை கதிரின் துன்னணுப் புரைய' என்ற தொடர் இந்த இருமைத் தன்மையையும் உணர்த்துவது. சிவசக்தி தத்துவத்தை விளக்கும் சிறந்த உதாரணமாகவும் இது விளங்குகிறது.

அணுச்சக்தியும் அணுத்துகளும் முறையே அசைவுக்கும் அசைவற்ற நிலைக்கும் அடிப்படையாக அமைந்தவை. இந்த இருவேறுபட்ட நிலைகளும் ஒருசேர இருப்பதை விளக்குவது விஞ்ஞான உலகிற்குக்கூடக் கடினமானது. இந்த இருமை நிலையை ஒருசேர விளக்குவதாக அமைந்தது ஆடும் கூத்தனின் அழகிய வடிவம். பொருளையும் ஆற்றலையும் விளக்க இதை விடச் சிறந்த ஒரு வடிவத்தைக் காணமுடியாது. இதனாற்றான் கலாயோகி ஆனந்தக் குமாரசாமி 'இக்கலைவடிவம் கவிதையாகவும் விஞ்ஞானமாகவும் விளங்குகிறது' என்றார். (This is Poetry ; none the less Science". A.K. Coomarasamy, 'Dance of Shiva|)

சிவனின் திருநடன வடிவத்தை உலகறியச் செய்த பெருமை ஈழத்துக் கலாயோகி ஆனந்தக் குமாரசாமியைச் சாரும். சைவ சித்தாந்த அடிப்படையில் விளக்கப்பட்ட இவரின் 'சிவனின் திருநடனம்' (Dance of Shiva) என்ற கட்டுரை உலக அறிஞர்களால் போற்றப்படுவது. சமயம், கலை, விஞ்ஞானம் ஆகிய மூன்றின் கூட்டிணைப்பாக விளங்குவது கூத்தப்பெருமானின் திருவுருவம் என்பதும், அகில உலகிற்கும் பொதுவான இந்த வடிவத்தை அகத்தில் தோற்றமாக முதற்கண்ட அருளாளரின் கலைத்திறன் வியப்பூட்டுவது என்பதும் இவரின் கருத்து. இக்கருத்து சித்தாந்த சைவத்திற்கும் தமிழுலகிற்கும் பெருமை சேர்ப்பது.

ஆனந்தக் குமாரசாமியின் பின்வரும் கூற்று சிந்தனைக்கு விருந்தளிப்பது:

'Every part such an image as this is directly expressive, not of anymere superstition or dogma, but of evident facts,. No artists of today however great, could more exactly or more wisely create an image of that Energy which science must postulate behind all phenomena.' (A.K. Coomarasamy, The Dance of Shiva")

இத்தகைய வடிவத்தின் ஒவ்வொரு கூறும், மூடநம்பிக்கையோ, போலிக்கோட்பாடோ இல்லாத, தெளிவான உண்மைகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இன்றுள்ள எந்தக் கலைஞனாலும், அவன் எவ்வளவு திறமை வாய்ந்தவனாயினும், விஞ்ஞானம் ஆய்ந்தறிந்த இயற்கை நிகழ்வுகளின் அடிப்படையில் இயங்கும் சக்தியை அதிநுட்பமாகவும் விவேகத்துடனும் விளக்கும் இந்த வடிவத்தை உருவாக்க முடியாது. (ஆனந்தக் குமாரசுவாமி, 'சிவனின் திருநடனம்)

கலாயோகி ஆனந்தக் குமாரசாமியின் இந்தக் கருத்துக்கு விளக்கமளிப்பதாக இன்றைய விஞ்ஞானிகள் சிலரின் கருத்துக்களும் அனுபவங்களும் அமைகின்றன. ஃபரிற்யொவ் கப்ரா (Fritj of Capra) என்ற விஞ்ஞானி மேலைத்தேச விஞ்ஞானத்திலும் கீழைத்தேச மெய்ஞ் ஞானத்திலும் பெரும் ஒற்றுமையையும் இணைப்பையும் காணும் ஒரு சிறந்த பௌதிக இயல் ஆய்வாளர். அண்டத்தில் இடைவிடாது நிகழும் அணுஉலக ஆடடத்தில் சிவநடனத்தைக் கண்டவர்.

ஒரு மாலைப்பொழுதில் (1969), கடற்கரையில் அமர்ந்து அலைமோதும் அழகை அனுபவிக்கிறார். அப்பொழுது, எதிர்பாராத விதமாக அவரைச் சுற்றியுள்ள அனைத்தும் அண்டப் பெருவெளி நடனத்தில் (Cosmic Dance) திளைப்பதை உணர்கிறார். பௌதிகவியல் விஞ்ஞானியான இவருக்கு, நிலமும் நீரும் மலையும் காற்றும் எல்லாமே இடைவிடாது நடனமாடும் அணுக்களால் ஆனவை என்பது தெரிந்ததே. இந்த அணு இயக்கங்கள் அனைத்தையும் கணிதக் கோட்பாடுகள், வரைபடங்கள் (Mathematical Theories, Graphs) முதலியவற்றின் மூலமே அறிந்திருந்தார். ஆனால், அந்தப் பொழுதில் அவை நேராகத் தோற்றமளித்தது மட்டுமல்லாது, அதுவே சிவனின் திருநடனமாகவும் புலப்பட்டது. இந்த நிகழ்ச்சி அவரின் புகழ்பெற்ற THE TAO OF PHYSICS என்ற நூலை எழுதத் தூண்டியதாக அந்நூலின் முன்னுரையில் அவரே குறிப்பிட்டுள்ளார்.

இந்த விஞ்ஞானிக்குப் புலப்பட்ட காட்சி, ஆடும் சிவனை ஒருவாறு உணர வைத்தது. எப்படி உணர்ந் தாலும் இது முழு அனுபவமல்ல. ஆயினும் இறைத் தன்மையை உணர்த்த அணுவின் தன்மையே அண்மித்ததாக உள்ளது. மணிவாசகர் இதனைக் கூறும் பாங்கு இன்றைய விஞ்ஞான உலகிற்கு ஏற்றதாகவும், விஞ்ஞானச் சிறப்பு மிக்கதாகவும் மிளிர்கிறது.

**"அணுத்தரும் தன்மையில் ஐயோன் காண்க"**

பொய்யும் புழுகும் புரட்டும் தவிர்த்து
ஐயன் பதத்தை அணுகித் தொழு. – ஈஸ்வரி

கோல் கொண்டு திரிந்தாலும்
கோள் கொண்டு திரியாதே – இளங்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநெறிச் "சைவநீதி" சீர்பெற்று வாழ்க ! என்றும்
அமிழ்தெனுந் தமிழைக் கற்று அருங்கலை வளர்ப்போம் நாளும்

# the co-operators

**Insurance / Financial Services**

உங்கள் காப்புறுதித் தேவைகள் எதுவானாலும் குறைந்த செலவில்,
கூடிய பாதுகாப்புப் பெறத் தொடர்பு கொள்ளுங்கள்

**Call us for all types of insurance**

- LIFE
- RRSP
- HOME
- AUTO
- FARM
- BUSINESS
- GROUP
- TRAVEL

## Kumar Punithavel

**Sales Representative**

**Bus: (416) 609 - 8358**
**Res: (416) 499 - 7281**
**Fax: (416) 609 - 8365**

## 100 Cowdray Court, Suite 340
## Agincourt, Ontario M1S 5C8

UNIVERSITY OF JAFFNA LIBRARY
ARCHIVES
250 CA1 AR



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
187279

# SAIVA EXISTENTIAL PHILOSOPHY AND FAMILY LIFE

**Dr. K. Loganathan, Malaysia**

## World Saivism and The Renewed Interest in Family Life.

We are not Brahmanism dominated Hindus but Siddhanta instituted Saivites, or more specifically World Saivites. World Saivism is the new name for the old Hinduism the fundamentals of which are immensely distasteful to us. In calling us as Saivites and not Hindues, we imply many fundamental changes in our existential philosophy. In his paper I want to work out the philosophy of family life by pointing out its enormous importance for existence as a whole, including the religious. Most of the great thinkers who shaped Tamil thoughts were family men or at least men who understood the enormous importance of the FAMILY as an institution for the general well being and personal growth of man and woman. We can name Tolkappiyar, Thiruvalluvar, Thirumular and so forth. And the greatest of them Meykandar and his foremost student Arunandi were family men. Meykandar as a conclusion of his philosophical investigations does not recommend Brahmacaria or even Vanaprastha - wondering in the woods eating leaves, roots and fruits in the old age - but rather intense social existence of a religious kind.

**"செம்மலர் நோன் தாள் சேரல் ஒட்டா**
**அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ**
**மால் அற நேயம் மலந்தவர் வேடமும்**
**ஆலயந் தானும் அரன் எனத் தொழுமே".**

**C.B. Sutra 12**

One ought to live a life where there is always a struggle to purify ourselves from the ignorance that obstructs our Being one with SIVA; exist amicably with people treating them as friends, respecting those genuine sivajnanies pure in heart, worshipping without fail the deities in the Temples as SIVA HIMSELF IN VARIOUS PRESENTATIONS Living with people treating them as 'anbar" - people dear to oneself is possible only when we realize the truth that SIVA IS LOVE and sivatattuvam is being full of LOVE. Everyone should strive to become an embodiment of LOVE itself in order to attain the supreme illumination that is CIVAJNANAM which on its wake bestows MUKTI.

The attainment of such SIVAJNANAM is the meaning of Existence and Saiva Existential Philosophy articulates ways of living consistent with this. It also claims that this is the TRUTH on the basis of researches that are thoroughly rational. This philosophy is not articulated as an exercise in imagination but rather as a discovery of TRUTHS that actually found authentic existence through hermeneutic researches into the hidden elements that fabricate human existence as such.

## ARUL AND SIVATTUVAM

To understand the many developments of the philosophical thoughts of the Tamils, how it battled with the dry asceticism of Buddhism, Jainism and Vedanta and established the relevance of family life for the religious struggles of man, we have to return to Tolkappiyam particularly Porul Atikaram, where it all begins. The thought processes channelled by this text, unfolding also many hidden elements beneath its overt articulations constitute the history of Dravidian philosophical adventures culminating in the celebrated Civajnana Botham of Meykandar. (henceforth C.B.)

There is an amazing continuity despite many revolutionary changes, a continuity that constitutes the identity of the peculiarly Tamil as distinct from the Buddhist, Jaina and Vedanta forms of thinking. In this intense philosophic struggles that lasted for millenniums, deeper and deeper insights were gained, more of the hidden mysteries accessed and through that deeper and deeper illuminations attained.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Meykandar's C.B. is a milestone in these struggles, the finest achievement of not only the Tamil Saivites but also of man as a whole. The more recently produced World Saiva texts such as Arut Kural, Thiru Nerit Telivu and so forth continue to articulate these same insights carrying them forth further and further so that a comprehensive philosophy of Authentic Existence is made available.

One of the important notions that constitutes this identity is the notion of Divine Games or Pancakrittiyam, the view that life is constituted for us, as for ourselves by mantric powers that remain however unconscious for most of the time. Tolkappiyar mentions this in terms of the different deities that constitute the different phases of Human Existence; Appdar describes it beautifully in the words: ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதாரே? If played by the Divine Powers, who can fail to play? Kraikkal Peyar articulates the same in the words: அருளே உலகெலாம் ஆள்விப்பது. It is divine Grace that rules the whole world. In Arutkural we come to a conscious understanding of it, how Thiru Arul has worked out the immense history of mankind and continues to work ceaselessly. The Saiva Existential philosophy has this notion of ARUL as its foundation and seeks to propound a way of living so that we gain more and more of this ARUL and through that finaly SIVATTUVAM a man and woman must come together and maintain a family. The family unit becomes central not only in social existence but also religious. But why this is so? In order to answer this question we have to go back to Tolkappiyam where it all began.

## Analysis of Life in Tolkappiyam and Arutkural

Tolkappiyam divides existence into Aham - domestic - and Puram - public - with Uham - the religious considered as part of Puram. Arutkural overcomes this confusion and maintains the tripartite division of existence into Ukam, Aham and Puram giving a foundational status and importance to Ukam.

Each one of these forms of life are entered into by people all over the world and are reflective of fundamental DESIRES that exist in them. These desires are manifestations of psychotropisms - pulls that exist in the psychic interiority of all creatures in response to the PULL OF SUPREME BEING that leads towards MOKSA in the end. But this pull though felt, is considerably weakened by another, that of ANAVAM that always tend to obstruct and destroy the pull of the DIVINE. The creatures thus can always FALL and degenerate into the beastly. It appears that the DIVINE BEING in order to arrest this FALL and hence self destruction discloses Himself in the forms of SIVA and SAKTI with SIVA establishing lumenotropism that constitutes political life and SAKTI establishing charmenotropism that constitutes family life. We can view SIVA and SAKTI also as the CIVATATVAS _ BINDU and NATHAM.

A man in overall a psyche dominated by Natham and hence in need of Bindu. A woman is overall a psyche dominated by Bindu and hence in need Natham. A man thirsts for fulfilment through appropriating Bindu; a woman thirsts for fulfilment through appropriating Natham, These thirsts emerge as sexual desires and hence the institution of marriage, Through living as a family their cravings are satiated upto a point and as equilibrium attained. This is the model that is potrayed to us by SIVA in the archetype of Arthanarisvara - an Androgynous deity having the Male and Female in equal measures.

## Why family Life is Important for Religious Development?

A man and woman who have not overcome their sexual desires through ways and means consistent with fundamental moral principles, will be forever in search of such fulfilments rather than the higher. The sexual cravings are immensely powerful and unless satiated reasonably well, desires for its satiation take grotesque forms sometimes even making the person insane. Desires are hierarchical in nature, as it has been noted more recently by Abraham Maslow - unless the lower are satiated, the higher will not arise.

This knowledge has been the foundation of Saiva Family life at least from the days of Tolkappiyam if not earlier. More recently Tamil siddhas such as Pokar Karakkar Agathiyar and so forth have reaffirmed it both as physicians as well as civajnanies. CIVA is disclosing himself as Arthanariswara sung



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

eloquently in every line of Devaram-TELLS us humans that it is a NECESSITY of a FUNDAMENTAL KIND for the psychological well being of all.

## Coming to know SIVA Through Family Life.

Family life though a life where sexual desires are overcome through satiation, is also important for another reason. There is LEARNING of a fundamental kind that a man and woman effect rather unconsciously in living as a family. It is this aspect that is not understood by the Vedanties and others and because of which they extol Brahmacaria even for the unripe youths that results in psychological disasters of various kinds. When a man loves a woman and establishes a psychical fusion with her, along with quenching his thirst for sexual bliss, he causes the BINDU hidden within him to emerge to the foreground of consciousness so that BINDU too along with the pre-existing NATHAM shape his psychology. BINDU is that TATVA that makes a person soft, gentle, loving, kind and so forth. Thus through loving a woman and entering into an intimate life with her, a man causes BINDU to become more pronounced in his psychic being and through that acquire motherly qualities of Love, kindness and so forth. His masculine aggressiveness and arrrogance gives way to loving and nourisihing; from a selfish individual he becomes a Tondan-a social worker.

The woman on the other hand, develops rather in a different way. The existing BINDU dominance makes her soft, gentle, submissive and timid, a person always seeking a support system that would provide the psychic security that she badly needs. The more she lacks Natham the more submissive and non independent she becomes. When she holds a man in her heart in loving devotion and psychically fuses with him, she gets also surfacing to the foreground, the CIVA TATVANATHAM within her psychic interiority. When this process continues happily for several years, there comes a point where Natham is quite dominant within her and because of which she loses her timidity, anxiety, submissiveness and so forth and becomes just as independent and bold as a man.

Thus we can see that though they develop in different ways but are complementary to each other and at the end both become psychically alike - both have BINDU and NATHAM in equal measures so that they are in fact Archetypically arthanarisvara in effect.

But what is the relevance of this for religious life?

## The Beginnings of Genuine Religious Life

A man or a woman hungry for sexual gratifications cannot and will not enter genuine religious life which is a quest for pleasures of a different kind sivanantham. Unless the thirst for bodily pleasures are satiated and the psychical imbalances in terms of Natham and Bindu overcome this desire for SIVANANTHAM will not arise. For it involves seeking the heavenly as opposed to the earthly, the spiritual as opposed to the material. Only when the psyche become an archetype of Arthanarisvara sexually androgynous with an intimate fusion with a unity with the Male and Female elements in equal measures, that the desire for physical pleasures is neutralized. Thus now the stage is ripe for the bursting forth the higher desires, the desire for spiritual illuminations, religious excursions into the realms of the gods. And having Bindu and Natham in equal measures within their psychic interiority they are also able to understand matters that are spiritual, religious, meta-physical and so forth. They provide the preunderstanding that makes the spiritual discourses intelligble.

But is that all to Family life? No, certainly not-an important and universal institution such as this should certainly serve many more useful purposes.

## Kundalini and Family Life

As it has ben voiced by many siddhas and civajnanies, the sexual act is that act which secures Kundalini which also serves as the amirtham-that which provides the psychic energy that ensures virility, excellence of health, cheerful disposition and a desire to live. When overcome with miseries and melancholy, the desire for Death arises making some commit suicide or effect actions that are equivalent to that. Premature ascetism that Vedanta favours is a form of such a death-the person though living is



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

spiritually dead as she or he becomes totally indifferent to whatever that happens around him or her. The feelings of compassion and so forth are deliberately killed by suffocation and rationalized as Brahmavidya to subdue the guilt that arises along with it.

Meykandar in enunciating authentic existence as that founded upon the principle of LOVE, is totally against such Vendantic monstrocities. A life full of LOVE and designed to further the loving disposition requires that one to be cheerful, happy and so forth. Since Kundalini is that which underlies cheerfulness in disposition and so forth, sexual life within the framework of genuine LOVE is strongly recommended. The Siddhas, being physicians as well, recommend it also for reasons of good health -the Kundalini is the amirtham, the medicine supreme that battles with all the death bringing diseases vanquishes them and thereby ensures longevity.

At higher levels, the sexual act gets transformed into uniting with God Himself; the ordinary human love becomes BAKTI, love of God. The human sexuality becomes transformed into divine sexuality.

It is at this point that a person becomes a Saiva Ascetic in the sense that he does not anymore care for the earthly pleasures but only the heavenly. The Sannyasam in Saivism is not a life based upon INDIFFERENCE to the worldly but only indifference to the personal. He seeks universal happiness by sacrificing self happiness. And this because he lives among the Gods and loves them deeply as did our Nayanmars and Alvars.

To rise to the stature of a Nayanmar and be fit to receive the ARUL of SIVA is the aim and goal of Saiva Family Life. And this means a live of intense concern and care and not total indifference.

# சைவசித்தாந்தமும் இல்லற வாழ்க்கையும்

இக்கட்டுரையில் முனைவர் கி. லோகநாதன் அவர்கள் சைவசித்தாந்தம் ஏன் பிரம்மச்சரியத்தைப் போற்றாது இல்லற வாழ்க்கையை வற்புறுத்துகின்றது என்பதை மெய்யறிவுப் பின்னணியில் தெளிவாக்குகின்றார். பண்டைய தொல்—காப்பியரும், திருவள்ளுவரும், திருமூலரும் மேலும் இந்த நிலையை இன்னும் ஆழமாகக் கண்டு தெளிந்த மெய்கண்டாரும், அன்பு மிக்காருடன் வாழ்ந்து தொண்டுப்பணி செய்வதே சிறந்தது என்று வாழ்க்கைக்கு ஒரு விளக்கம் அளித்துள்ளனர். சிவத்துவம் அடைவதற்கே வாழ்க்கை என்பதாக வாழ்க்கையின் அடிப்படை நோக்கம் தெளிவாக்கப்பட, அதனை அடைய ஈட்டப்பட வேண்டியது இறையருளே என்றும் புலனாக, அதன்வழி எப்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்வது என்பதுவும் தெளிவாகின்றது. பஞ்ச கிருத்தியங்களால் இறைவன் அனைத்தையும் ஆட்டுவிப்பதற்கும் பற்பல ஆன்மாக்களும் சிவத்துவம் பெற்றுய்ய வேண்டும் என்ற பரங்கருணையேயாகும்.

மானிடஉள்ளத்தை ஆராய, அங்கே இயல்பாகவே பல ஆழிழுப்புக்கள்இருப்பது தெரியவருகிறது. பரசிவன் வீடுபேறு உய்ய தன்பால் எல்லா ஆன்மாக்களையும் வலிக்கும் அதேபொழுது அம்மையாகவும் அப்பனாகவும் தோன்றி இன்பவேட்கையும் ஞானவேட்கையும் தருகின்றார். இவ்வேட்கைகளே மரணத்தைக் கொண்டு வரும் அழிவு வேட்கையையும் போக்குவதாக அமைகின்றது. மேலிரு வேட்கைகளை அகத்தே பதிக்க நாதம் விந்து என்ற சிவதத்துவங்களைக் கொண்டு இறைவன் திருநடம் செய்ய, ஆன்மாக்கள் ஆண் என பெண் எனப் பிறவி எடுக்கின்றன. ஆணாகப் பிறக்கும் உயிர்களிடையே நாதம் மிக்கிருக்க, விந்து குறைந்திருக்க விந்துப்பசி உண்டு. பெண்ணாகப் பிறவி எடுக்கும் ஆன்மாக்களிடை விந்து மிகுந்திருக்க, நாதம் குறைந்திருக்க நாதப்பசி உண்டு. இந்தப் பசிகளின் காரணமாகவே ஆண்கள் பெண்களை நாடுவதும் பெண்கள் ஆண்களை நாடுவதும் காமவேட்கையின் பாற்பட்டுத் திருமணம் செய்து கொள்வதுமாம்.

இந்நிலையில் இந்த விந்துப் பசிகள் நீங்காவகையில் ஞானப்பசி தோன்றாது போம். கீழான பசிகள் போக்கப்படவேதான் மேலான பசிகள் வெளிப்படும். இல்லற வாழ்க்கை என்பது இந்த நாதவிந்துப் பசிக்களை காமந்துய்த்து அனுபவித்துப் போக்க உதவும் ஓர் அமைப்பாகும். அறமும் சமய வாழ்க்கையும் புறம்பான ஒன்றல்ல. மேலும், சிவஞானம் தெளிந்துய்ய அடிப்படையான ஒன்றும் ஆகும். இல்லற வாழ்க்கை அறம் பிழையாது தொடர இந்த நாதவிந்துப் பசிகள் குறைந்து ஒவ்வொரு ஆன்மாவும் ஆண்மையும் பெண்மையும் சமமாகக் கலந்த அர்த்தநாரீயாக எழும் என்பதாம். எப்பொழுது ஆன்மா அர்த்தநாரீயாகின்றதோ அப்பொழுது அதற்குக் காமம் இல்லாதுபோக, மெய்யான துறவும் இயல்பாகவே வந்தமைகின்றது.

நன்றி: உ. சை. பே. சைவஉலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிச்சுவடி அமைப்பில் ஆன்ம ஞான வைப்பு

இலக்கிய வித்தகர், கலாநிதி அமரர் க. செ. நடராசா

அரிச்சுவடி என்பது அரியின் சுவட்டை உடையது எனப் பொருள்படும். அரி என்பது காக்கும் இறைவனை, இறைவனின் காக்கும் பண்பைக் குறிக்கும். எனவே, அரிச்சுவடி என்ற பதம் இறைவனின் சுவட்டை உடையதாக அமைக்கப்பட்ட ஒன்று என்ற பொருளைக் காட்டி நிற்கும். அந்தச் சுவட்டின் வழியே சென்றால் இறைவனை அடையலாம் என்பது ஆன்றோர் கருத்தாகும். அரிச்சுவடி கற்றல் மறை இலக்கியங்களையும் ஆன்மஞான நூல்களையும் கற்று ஈடேற்றம் பெற வழி காணலாம் என்ற பொருள் அரிச்சுவடி என்ற பதத்தில் அடங்கியுள்ளது. அன்றியும் அரிச்சுவடி அமைப்பிலே அந்தத் தத்துவத்தைப் புகுத்தியிருப்பது ஆன்றோர் அறிவின் திறனை எடுத்துக் காட்டுவதாகும்.

உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் என வகுத்து உயிரும் மெய்யும் ஒன்று சேருமிடத்திலேயே இயக்கம் ஏற்படுகிறது என்றும் உயிர் தனித்து இயங்கினாலும் மெய் தனித்து இயங்குவதில்லை என்றும் உயிரின் முன்னேற்றம் உடலின் சேர்க்கையினால் விருத்தியாகிறது என்றும் மெய் நீங்கியவிடத்தும் உயிரின் இயக்கம் நீங்குவதில்லை என்றும் உயிரே ஆய்தம் என்ற இறைவனை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என்றும் தமிழ் மக்கள் கொண்டிருந்த ஆத்ம தத்துவத்தை அரிச்சுவடி அமைப்பிலே அடக்கி வைத்திருக்கின்றார்கள். “அகரமுதல எழுத்தெல்லாம்” என்பது எழுத்துக்கள் எல்லாவற்றுக்கும் அகரம் முன்னாக உள்ளது என்பது மட்டுமன்றி அகரமே எழுத்துக்களின் முதலாக மூலமாக உள்ளது என்பதும் பொருளாகும். ஆதிபகவன் உலகுக்கு மூலப் பொருளாயிருத்தல்போல அகரமே எழுத்துக்களின் உயிர், எல்லா எழுத்துக்களிலும் அகர ஒலி செறிந்திருக்கிறது. அகர உயிரே எழுத்துக்களுக்கு இயக்கத்தைக் கொடுக்கிறது. அந்த அகர உயிர் தோன்றியதும் ஆசை அணுகுகிறது என்ற குறிப்பைக் காட்டுவது அகரத்தை அடுத்து நிற்கும் ஆகார ஒலியாகும். ஆ! என்ற வியப்பொலி ஆசையால் ஏற்படுவது தானே! அந்த ஆசை நிலையில் உயிர் இன்பத்தை நாடுகிறது என்ற தத்துவத்தை இகர ஒலி குறித்து நிற்கும். இன்பத்தின் விருத்தி நிலையை ஈகார ஒலி காட்டும். இன்பத்தை நாடி நிற்கும் பற்றுள்ள உயிரைத் துன்பம் வந்து உறுத்துவதுமுண்டு என்ற உலகியல் உண்மையை அறிவுறுத்தி நிற்பது உகர ஒலியாகும். இ.ஈ. என்பன இன்பத்தைக் குறிக்கும் சிரிப்பொலி போல உ, ஊ என்பன நோவை அல்லது துன்பத்தைக் குறிக்கும் ஒலிகளாகும். ஊகார ஒலி மிக்க வேதனை நிலையைக் குறிப்பதாகும். ஆசையை அண்மிய நிலையிலே நின்ற உயிர் இன்பத்தை நாடி ஏகும்போது துன்பம் வந்து சேர்ந்ததும் என்ன காரணத்தால் இன்ப நிலையிலே துன்பம் வந்து சூழ்கின்றது என எண்ணத் தொடங்குகின்றது என்ற தத்துவத்தைக் குறிப்பது எகர ஒலியாகும். ஏகாரம் முதிர்ந்த விசார நிலையைக் குறித்து நிற்கும் ஒலி, எகர, ஏகார ஒலிகள் வினாக்குறிப்பை உடையன என்பது தெளிவு. அடுத்துள்ள ஐகார ஒலி அகர இகர ஒலிகளின் இணைவேயாகும். விசாரநிலையை அடைந்த உயிர் ஆசையின் அரவணைப்பை விட்டகன்றால் இன்பநிலையோடு இணைந்திருக்கலாம் என்ற தத்துவத்தை விளக்குவது ஐகார ஒலியாகும். ஒ.ஓ. என்பன தேற்றப்பொருளை உடையன. தத்துவ விசாரத்தினால் உயிருக்குத் தெளிவு பிறக்கும் நிலையைக் குறிப்பன ஒ.ஓ. என்ற ஒலிகளாகும். ஓ என்பது தெளிவு நிலையின் முதிர்வைக் குறிக்கும். தேற்றம் பெற்ற உயிர் (அ) பற்றற்ற நிலையிலே துன்பத்துடன் (உ) இணைந்துந் துயருறாதிருக்கலாம் என்ற உண்மையை விளக்க ஔகார ஒலி வகுக்கப்பட்டது. அ.உ. என்ற ஒலிகளின் சேர்க்கையே ஔ என்ற ஒலியாகும். ஐகார ஔகார எழுத்துக்கள் இன்றியே அவ்வொலிகளைப் பிறப்பிக்கத்தக்க வாய்ப்பிருந்தும் அவற்றை ஆக்கியதன் காரணம் அவை சுட்டும் தத்துவப் பொருளைக் காட்டுவதற்கே எனலாம்.

ஆசை அணைந்தால் இன்பதுன்பங்களை அனுபவித்து இழைத்த உயிர் ஆசையினின்று நீங்கினால் இன்பதுன்பங்களினாற் பாதிக்கப்படாமல் அவற்றுடன் இணைந்தும் வாழலாம் என்ற ஞானத்தைப் பெற்று இறைவனை அணுகிச் செல்லும் என்ற விளக்கத்தை ஊட்ட உயிரின் முதிர்ச்சி நிலையைக் குறிக்கும். ஔகாரத்தை அடுத்து ஆய்தம் வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்தம் இறையின் தன்மையைக் குறிக்க உயிருக்கும் மெய்யுக்கும் அப்பாற்பட்டதாக அமைக்கப்பட்டுள்ளது. அது உயிருமன்று மெய்யுமன்று. இறையின் அருவுருவான வடிவத்தைக் குறிக்க அதற்குப் புள்ளி உருவங் கொடுத்திருக்கிறார்கள். ஏறக்குறைய 2500 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட தொல்காப்பியம் என்ற ஆதித் தமிழ் இலக்கண நூலில் எழுத்துக்களின் ஒலி வடிவங் கூறிய தொல்காப்பியனார் ஆய்தம் ஒன்றினுக்கே ஒலிவடிவங் கூறாது வரி வடிவம் கூறியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆய்தம்" என்ற முப்பாற்புள்ளி என்று அவர் கூறுவதிலிருந்து அது ஒலி வடிவு காட்டி உணர்த்த முடியாத ஒன்று என்று தெரிகிறது. படைத்தல், காத்தல், மறைத்தல் ஆகிய முத்தொழில் கொண்ட ஒருபொருள் இறை என்ற உண்மையை விளக்க முப்பாற் புள்ளி உருக்கொண்ட ஓரெழுத்தாய் அதனை அமைத்திருக்கிறார்கள். அது ஆய்ந்துணர்ந்து அறியப்பட வேண்டிய ஒன்று. அதுவும் தம்முள்ளே தாம் ஆய்ந்து காணவேண்டிய ஒன்றாகும் என்ற தத்துவத்தைக் குறிக்கவே அதற்கு ஆய்தம் எனப் பெயரிட்டுள்ளனர். அது கடவுள் என்ற சொல்லை ஒக்கும். எல்லாவற்றையும் கடந்து நிற்கும் பொருள் என்றும் எல்லாவற்றிலும் உள் உறைந்து நிற்கும் பொருள் என்றுங் கருத்தமையக் கடவுள் என்ற சொல் அமைந்திருத்தல் போலவே ஆய்தம் என்ற சொல்லும் அமைந்துள்ளது. உயிருக்கும் மெய்யுக்கும் புறம் பாகவும் அவற்றிற்கு அன்னியமாகவன்றியும் உயிரின் இன்ப துன்ப அனுபவ முதிர்வில் ஞானத்தாற் காணப்படத் தக்கதாகவும் அமைந்திருப்பதே இறைத் தத்துவங் காட்டி நிற்கும் ஆய்தம் என்ற எழுத்தாகும்.

"அ" என்ற ஒன்றே மூலஉயிரைக் குறிக்கும் எழுத்தாக அமைக்கப்பட்டுள்ளது. ஏனைய உயிர் எழுத்துக்கள் எனக் கூறப்படுபவை அம்மூல உயிரின் வெவ்வேறு வளர்ச்சி நிலைகளைக் குறிப்பவையாகும். உயிர் அனைத்தும் ஒன்றன் விரிவே என்ற தத்துவம் இதனாற் பெறப்படும். உயிரின் இலக்கு இறையினை அண்டுதல் என்பதனையும் இறைபலவாகத் தோன்றினும் உண்மையில் ஒன்றே என்பதனையும் ஆய்தம் அமைக்கப்பட்டிருக்கும் இடமும் முறையும் குறிப்பாகக் காட்டுவனவாம். உயிரின் விருத்தியினைத் தமிழ் எழுத்தமைப்பில் காட்டிய முறை தமிழ் மக்கள் கொண்டிருந்த ஆன்ம ஞானக் கருத்தினை ஒட்டியதாக இருப்பதனைக் கண்டு வியப்பெய்தலாம்.

தமிழ் மெய்யெழுத்துக்களின் அமைப்பு முறையிலும் இதனையொத்த தத்துவநெறி விளங்கக் காணலாம். க், ச், ட், த், ப் என்ற ஐந்து வல்லெழுத்துக்களை அடுத்து ங், ஞ், ண், ந், ம் என்ற ஐந்து மெல்லெழுத்துக்களை முறையே சேர்த்தும் அவற்றின் பின் ய், ர், ல், வ், ழ் என்ற ஐந்து இடையெழுத்துக்களைப் புறம்பாக அமைத்துங் காட்டியிருத்தல் உலகியல் ஞானத்தை ஒட்டியதாகும். குறித்த வல்லெழுத்து ஐந்தும் ஆணினத்தைக் குறிப்பனவாகவும் அவற்றின் இனமாய மெல்லெழுத் தைந்தும் மெல்லியர் இனத்தைக் குறிப்பனவாகவும் இடையெழுத்தைந்தும் ஆணும் பெண்ணுமற்று அவ்விருபாற்கும் இடையாய அலியினத்தைக் குறிப்பனவாகவும் அமைக்கப்பட்டுள்ளன. மக்களுக் காகவே எழுத்தாகையால் உலகிலுள்ள முப்பாலின மக்களைக் குறிக்கும் பகுப்பினை மெய்யெழுத் துக்களின் அமைப்பிலே காட்டியிருக்கிறார்கள். ஆணும் பெண்ணும் இணையும் இனமாகையால் மெல்லெழுத்தைந்தையும் அவற்றின் இனமாய வல்லெழுத்தைந்தின் அயலே முறையாக அமைத்தும் அலியினம் அவற்றுடன் இணையாததாகையால் அதனைச் சுட்டும் இடையினத்தை வேறாக அமைத்தும் உலகியல் நெறி புலப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு இனத்திலும் முதலில் ஐந்தைந்து எழுத்துக்களை அடுக்கி இறுதியில் இனத்துக்கு ஒன்றாக ற், ன், ள் என்ற எழுத்துக்களை அமைத்திருக்கும் முறையும் பழந்தமிழ் மக்கள் கொண்டிருந்த தத்துவஞானக் கருத்தினைப் பஞ்ச பூதங்களின் சேர்க்கையாலாகிப் புலப்படத்தக்க ஐந்து புலன் உறுப்புக்களைக் கொண்டுள்ளன என்ற தத்துவத்தை ஒட்டி ஒவ்வொரு இனத்திலும் ஐந்து எழுத்துக்கள் வகுக்கப்பட்டுள்ளன. தெற்றெனப் புலப்படாது ஓர்ந்துணர வேண்டிய ஆறாவது அறிவாய பகுத்தறிவுக்குக் காரணமான மனம்(புத்தி) ஆண், பெண், அலியாகிய ஒவ்வொரு இனத்துக்குமுண்டு என்பதைக் குறிக்க "ற்" என்ற ஆறாவது வல்லின எழுத்தையும "ன" என்ற ஆறாவது மெல்லின எழுத்தையும் "ள" என்ற ஆறாவது இடையின எழுத்தையும் இறுதியிலே சேர்த்திருக்கிறார்கள். எனவே, ஆறாவது அறிவு ஒன்று மக்களுக்குண்டு என்பதும் அது அவர்களுக்குள்ள ஐயறிவுக்கு அப்பாற்பட்டது என்பதும் அது ஐயறிவின் வெளிபாட்டின் இறுதியிலே தோன்றுவது என்பதும் ள், ற், ன் என்ற மெய்யெழுத்துக்களின் அமைப்பிலுள்ள தத்துவப் பொருளாம். இத்தகைய மெய்கள் மீது உயிர் ஏறி ஆசையற்ற இன்பம் உபத்திரம் என்னும் விசாரம் ஆகிய நிலைகளையடைந்து ஐ எனும் ஆசையினகன்ற இன்ப இணைவு ஓ எனும் தெளிவு ஔ எனும் இன்பதுன்ப சமநிலை முறையே பெற்ற மெய்யினீங்கி ஆய்தம் எனும் தனிப்பொருளை அடையும் என்ற தத்துவம் உயிர் மெய் எழுத்துக்களின் அமைப்பிலே பொதிந்து கிடப்பதை உணரலாம். அதனாலே தான் உயிர்மெய் எழுத்துக்களின் வரிசைகளிலே ஆய்தம் இணைக்கப்படவில்லை. அன்றேல் கௌ, ஙௌ, சௌ .. என்ற எழுத்துக்களை அடுத்து கஃ ஙஃ சஃ ... என்று அமைந்திருக்க வேண்டுமல்லவா?

ந், ர், ழ், என்ற ஒலிகள் முன்னரேயிருப்பவை அவற்றை ஓரளவு ஒத்த ன், ற், ள் என்ற ஒலி பெற்ற எழுத்துக்களை அரிச்சுவடியின் இறுதியிலே சேர்த்தமைக்கு மற்றோர் காரணமுமுண்டு. ஒவ்வோர் இனத்திலும் ஆறாவது அறிவைக் குறிக்கும் ள், ற், ன் என்ற எழுத்துக்குள் அவ்வவ்வினங்களின் ஐயறிவைக் குறிக்கும் மெய்யெழுத்துக்களுக்குப் புறம்பாக அமைந்திருப்பினும் ஒலியில் ஓரளவு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒற்றுமை காட்டி நிற்றல் மக்களது ஆறாவது அறிவு அவரது ஐயறிவுக்கு முற்றும் அப்பாற்பட்டதுமன்று என்பதைக் காட்டுவதாகும். மெய்யெழுத்துக்களை முதலில் ஐந்தைந்தாக வகுத்திருப்பதற்கு மற்றோர் காரணம், மக்கள் மெய் முக்கியமாக ஐந்து பூதங்களையும் ஐந்து பொறிகளையும் ஐந்து புலன்களையும் கொண்ட சேர்க்கையே என்பதை உணர்த்துவதற்காக எனலாம். மக்கள் உடலையும் உயிரையும் அடிப்படையாகக் கொணடெழுந்ததே தமிழ் மக்கள் கொண்ட சமயத் தத்துவக் கோட்பாடாகும். தமிழ் நாட்டிலெழுந்த கோயில் அமைப்பு முறையும் அக்கொள்கையை ஒட்டியே மனித உடல் வடிவத்தில் ஆக்கப்பட்டுள்ளது. கோபுரவாயில் பாதமாகவும், கொடித்தம்பம் குறியாகவும், பலிபீடம் வயிறாகவும், மகாமண்டபம் மார்பாகவும், முகமண்டபம் முகமாகவும், ஆதிமூலம் தலையாகவும் இருவீதிகள் கரங்களாகவும் அமைந்த ஆலயத்திலே இறைவனை ஆதிமூலமாய தலைத்தானத்திருத்தல் உடல்தோறும் இறைவன் உயிராக உள்ளான் என்ற தத்துவத்தை விளக்குவதாகும். தமிழ் எழுத்தமைப்பிலும் இத்தத்துவத்தை விளக்குவதற்காகவே இறையம்சம் உற்ற உயிர் மெய்தோறுமேறி உயிர் மெய்யாய் விளங்குவதாகக் காட்டியிருக்கிறார்கள்.

தமிழ்மக்கள் கொண்டிருந்த சித்தாந்த சமயசாரத்தினை அவர்கள் வகுத்த எழுத்தமைப்பிலே புகுத்தி மறைபொருளாக வைத்திருப்பது அவர்களது சமயக்கிரியை முறைகளுக்கு இணைந்ததாகவே அமைந்திருக்கிறது. ஆதிதொட்டே தமிழர் சமுதாயத்தில் இருந்து வந்த இலிங்க அமைப்பு முருகதத்துவம், நடராசவடிவம், திருநீறு, நிறைகுடம்.... ஆகியவை ஆழந்த கருத்தினை உள்ளடக்கி விசாரத்தினாலன்றி வெளிப்படுத்தாதன போலவே தமிழ் அரிச்சுவடி அமைப்பும் அமைந்திருக்கிறது. அருவுருவான இறைவனை வடிவம் வடிவமற்றதுமான இலிங்க அமைப்பிற் காட்டியுள்ளவாறு அப்பரம் பொருளை அரிச்சுவடியிலே வடிவம் வடிவமற்றதுமான இலிங்க அமைப்பிற் காட்டியுள்ளவாறு பரம்பொருளை அரிச்சுவடியிலே வடிவம் வடிவமற்றதுமான முப் பொருளின் கூட்டான தனிப்பொருளாய்க் காட்டப் பட்டுள்ளது. அது உயிராகவும் மெய்யாகவும் வெளிப்படாது மறைபொருளாயிருக்கும் இலிங்கத்தின் ஆவுடையார் உட்புதைந்த மறுபாதியை ஒக்கும். அப்பாதியே நாம் ஆய்ந்துணர்ந்து அறிய வேண்டிய ஆய்தம் ஆய பொருளாம், புலப்படத் தோன்றும் இலிங்கத்தின் மேற்பகுதியே உயிராகவும், மெய்யாகவும் பரிணமித்திருக்கும் இறையம்சத்தைக் குறிப்பதாகும். அப்பகுதியே அரிச்சுவடியில் உயிர் எழுத்தாகவும், மெய்யெழுத்தாகவும் உயிர் மெய் எழுத்தாகவும் மலர்ந்திருக்கிறது. அது இம்மைக் குரியது. ஆய்தம் குறிக்கும் பகுதி மறுமைக்குரியது.

**சான்றோர் சொல்லமுதம்**

நீங்கள் என்று நான் குறிப்பிடுவது, உங்கள் உடம்பையோ, மனத்தையோ, புத்தியையோ அல்ல. இவற்றைக் கடந்து ஒன்று உங்களுக்குள்ளே இருக்கிறது. அதுதான் உங்களுடைய ஆத்மா. அதுதான் அழிவில்லாதது. அதுதான் உண்மையானது. அதைப் புரிந்து கொண்டு விட்டால் நீங்கள் யாவருமே அமிர்த புத்திரர்கள் ஆகிவிடுவீர்கள்

ஆத்மாவை உணர மனம், சொல், செயல் முன்றிலுந் தூய்மை வரவேண்டும். அதற்கு நல்ல ஒழுக்கம் அடிப்படையாக இருக்கவேண்டும். கோபத்தையும் பேராசையையும் கைவிட வேண்டும். அப்போது சத்யம், தர்மம், நியாயம், நேர்மை, தியானம் போன்ற நல்ல பண்புகள் உங்களை வந்தடையும்.

நம்மை வழிப்படுத்திக் கொள்ளும்போது, கோபம் நம்மை ஆட்கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அடக்கம் தெய்வீகமானது. கோபம் மிருகசுபாவத்தைக் காட்டுவது. அடுத்த பிறவியில் நன்மை கிடைப்பதற்குரிய நல்ல காரியங்களில் ஈடுபடுங்கள். பகுத்தறிவு படைத்த மனித ஜன்மம் உங்களுக்கு மறுபடியும் கிடைக்காமற் போகலாம். கிடைத்த மனிதப்பிறவியை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

*– பகவான் பாபா*

பரமாத்மாவை மறைக்கும் மாயை:– மாயை என்னும் திரையே ஈசுவரனை நமக்குத் தோன்ற வொட்டாமல் மறைத்து வைக்கின்றது. இந்தத் திரை நீங்கும் வரை பரமாத்மாவை நாம் அறியமுடியாது. உதாரணமாக ஸ்ரீஇராமர், இலட்சுமணனுக்கு மூன்றடிதூரம் முன்னால் செல்வதாகவும் இவ்விருவருக்கும் நடுவில் சீதாபிராட்டியார் போவதாகவும் வைத்துக் கொள்வோம். இதன்படி ஸ்ரீ இராமரே பரமாத்மா. இலட்சுமணனே சீவன், சீதையே மாயை. ஜானகிப்பிராட்டியார் இருவருக்கும் நடுவில் இருக்கும் வரை, ஸ்ரீஇராமரை இலட்சுமணனால் பார்க்க முடியாது. அன்னை சீதாதேவியார் கொஞ்சம் வழிவிட்டு நின்றால்தான் இலட்சுமணன் இராமரைப் பார்க்க முடியும்

*–பகவான் ஸ்ரீஇராமகிருஷ்ணர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மை கொள் சைவநீதி விளங்குக வைய மெங்கும்
செந்தமிழ் மக்கள் என்றும் சிறப்புடன் வாழ்க மாதோ!

# தமிழ் முதியோர் மன ஆறுதல் திட்டம்

## கனேடிய முது தமிழர் மன்றப் பெரியார் பலர் பங்குபற்றும் திட்டம்

PEACE of MIND

வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் புலம் பெயர்ந்த முதியோர் பலரிற்கு ஒரு மனக்கலக்கம். கனடாவில் இறக்க நேரிடும்போது கடைசிக் காலச் செலவுகள் எவ்வளவு? இதற்கு யார் பொறுப்பு? யாரிடம் ரொக்கப் பணம் உண்டு? இந்தக் கவலையை நீக்கி மன ஆறுதல் பெற நல்ல திட்டம் உண்டு.

இதுவே தமிழ் முதியோர் மன ஆறுதல் நிரந்தரக் காப்புறுதித் திட்டம். உங்கள் வயதிற்கேற்ப உத்தரவாதமுள்ள மிகவும் மலிவான கட்டணம். இக்கட்டணம் பின்னர் ஒரு சதமும் உயரமாட்டாது. உதாரணமாக, ஒரு 65 வயதுடைய ஆணுக்கு $10,000 டாலர் நலன் பெற மாதக்கட்டணம் $32 மட்டுமே!

உங்கள் வயதிற்கேற்ப உதாரணங்கள் சில:
(சாதாரண தேக சுகம் உடையோருக்கு)

**இள முதியோருக்கான $25,000 நலன் தரும் காப்புறுதி**

| உங்கள் வயது | ஆண் | பெண் |
|---|---|---|
| 50 ஆகவிருப்பின் | $32 | $27 |
| 55 ஆகவிருப்பின் | $42 | $33 |
| 60 ஆகவிருப்பின் | $54 | $43 |

**MONEY BACK GUARANTEE!**

**முதியோருக்கான $10,000 நலன் தரும் காப்புறுதி**

| உங்கள் வயது | ஆண் | பெண் |
|---|---|---|
| 65 ஆகவிருப்பின் | $32 | $26 |
| 70 ஆகவிருப்பின் | $44 | $35 |
| 75 ஆகவிருப்பின் | $63 | $50 |
| 80 ஆகவிருப்பின் | $94 | $77 |

**100% GUARANTEED LOWEST RATES!!**

இது டெலிவிஷனில் விளம்பரம் செய்யப்படும் காப்புறுதியைவிடப் பன்மடங்கு சிறந்தது. மன ஆறுதல் காப்புறுதி, விலை மலிவு மட்டுமல்ல, கட்டணம் தொடங்கிய முதல் நாளிலிருந்தே, மரணம் நேரிட்ட நேரம் முழுக் காப்புறுதி நலன் பணம் பெறலாம் என்ற உத்தரவாதமுண்டு. கனடாவின் நம்பிக்கையும் நாணயமும் நிறைந்த காப்புறுதி ஸ்தாபனங்களான **Trans America (A+Am Best Rating), Maritime Life - John Hancock (AAA Rating)** இந்த மன ஆறுதல் திட்டத்தைத் தருகின்றன. மரணம் உலகில் எங்கு ஏற்பட்டாலும் பணம் பெறலாம் என்ற உத்தரவாதமுண்டு.

இன்றே உங்கள் மன ஆறுதல் காப்புறுதித் திட்டத்தைப் பற்றிய மேலதிக விபரங்களைப் பெறத் தொடர்பு கொள்ளுங்கள்:

யோகி தம்பிராஜா F.C.A., F.C.M.A (U.K)
**(416) 412 - 4267**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Panchaksharam - NaMaSiVaYa

KUMAR PUNITHAVEL

What is Mantram:-

Mantram as explained Tholkapiyam which dates back 3000 years is "the sacred words uttered by the command of virtuous person"

'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தாமே மந்திரம் என்ப"

The world mantra is used in two senses, general and special. In the general sense, it conveys the meaning of devotional prayer composed of special words .... e.g. Vedic hymns, Thevarams etc. In a special sense a Mantra is that which is composed of certain syllables arranged in definite sequence of sounds of which the syllables are representative signs. In this usage a manthra may or may not give its meaning on its face.

Literally speaking, the word Mantra is composed of two syllables, 'Man" which means mind and 'tra" meaning to protect. Thus the word Mantra means that which will protect the person who contemplates upon it. The primordial mantra is 'AUM". The five syllable Siva Mantra 'NaMaSiVa Ya" is also known as the Panchaksharam. Mantras are many in number. Ganesha Manra, Muruga Mantra, and Vishnu Mantra to name a few. In this essay we shall see the what the Mantra NaMaSiVaYa means, learn the ways of chanting NaMaSiVaYa, and discover the variety of intonations that can be used to say NaMaSiVaYa.

## Panchaksharam in Thirumurai (the holy scriptures):-

The twelve Thirumurais are a collection of Thamil Saiva Literature. They include such works as Thevaram, Thiruvasagam, and Thirumanthiram. These works form the core of the Saiva religion. The Thirumurai is filled with praise for the Panchaksharam. For example, in the Thevaram we have the following praise:

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நல் நெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாயவே - தேவாரம்

With melted hearts and tearing eyes in tears
Who utters it, it leads to heaven
The truth proclaimed in all the Vedas
That is NaMaSiVaYa ...the Lords name. - Thevaram

The Thirumanthiram proclaims the following verse:

அஞ்செழுத்தால் ஐந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத்தால் பலயோனி படைத்தனன்
அஞ்செழுத்தால் இவ் அகல் இடம் தாங்கினன்
அஞ்செழுத்தாலே அமர்ந்து நின்றானே - திருமந்திரம்

With five syllables he did create five elements,
With five syllables he did create many lives,
With five syllables he did support the Universe,
With five syllables he did stand firm -Thirumanthiram

The Unmai Vizakam says the following:

அஞ்செழுத்தாலே ஆகமும் அண்ணல் அருமறையும்
அஞ்செழுத்தாலே ஆதிபுராணம் அனைத்தும் - அஞ்செழுத்தாலே
ஆனந்த தாண்டவமும் அப்பாலைக்கு அப்பாலாம்
மோனந்த மாமுக்தியும் - உண்மைவிளக்கம்

Five syllables from the Agamas and Vedas rare
The five from Puranas of yore
The five syllables from Shiva's dance of ecstasy
And the far off increasing calm called mukti free - Unmai Vilakam

When St. Manikavasakar appealed to Sivaperuman for divine guidance in order to sing the Sivapuranam, Sivaperuman asked Manikavasakar to compose the Sivapuranam starting with NaMaSiVaYa.

## Central Mantra of the Vedas:-

Yajur Veda is the second of the first three Vedas. The yajur Veda contains seven subdivision called kandams. Of these subdivisions the forth one has seven groups of poems called Samhithi. The Panchakshara Mantra is the fourth or the middle poem. Thus it occupies the central position in the vedas. The following verse describes the important position of the Mantra.

மும்மறையுள் நடுமறையில் முனிவில் எழகண்டத்தில்
செம்மை தரும் நடுக்கண்டத்தில் சேர்ந்த எழு சங்கிதையில்
அம்ம நடுச்சங்கிதையில் ஆதி ஈறு ஒழித்து நடுப்
பொம்மல் உற அமர் மனுவின் பொருள் ஆவான் எவன் மைந்த

**Panchakshara Mantra and Pranava Mantra:-**

'AUM" is called the Pranava Mantram (please see the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Pongal issue of Saiva Neethi). This means that AUM is the primordial sound from which all the cosmos was created. The sound 'AUM" has five segments. They being A, U, M, Vinthu (form), and Natham (sound). Each of these refers to the five syllables of the Panchaksharam. It is the custom to refer to the Panchaksharam as a Viyasti Pranavam (the manifested Pranava), and in turn it is customary to referto AUM as the Sansti Pranavam (the unmnifested Pranavam)

**Meaning of the Panchakshara Mantram:-**

St. Manavasagamkadantham (AD1255) in his book Unmai Vizakam mentions the meaning of the five syllables of the phrase NaMaSiVaYa as representing the following:

1. NA - God 'Shiva"
2. MA - God's grace 'Sakthi"
3. SI - Soul
4. VA - Triyoti - God's concealing power
5. YA - Malam

இறை சக்தி பாசம் எழில் மாயை ஆவி உறநிற்கும்
ஓங்காரத்துள்;

Meikandathevar in his book Shiva Gnanabotham mentions on the ninth Suthra to indulge unceasingly on the vision of the divine one should chant the five syllables unceasingly.

ஊனக்கண் பாசம் உணராய் பதியை
ஞானக் கண்ணில் சிந்தைநாடி
ஊராத்துனைத் தேர்த்து எனப் பாசம் ஒருவத்
தண்ணிழல் ஆம்பதி விதி எண்ணும் அஞ்சு எழுத்தே
- (சிவஞானபோதம் 9ம் சூத்திரம்)

**Panchakshara Mantram and the Image of Nadarajah:-**

In Unmai Vizakam it is mentioned that the Image of Nadarajah in Ambalam is a visual representation of this great mantram. The various sections of the body are said to represent the syllables of the word NaMaSiVaYa.

ஆடும்படி கேள்நல் அம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியிலே நகரம் - கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வா முடியப்பார் - உண்மை விளக்கம்

Listen, the dance on the Ambalam is Shiva,
The foot we seek is Na-The waist is Ma,
The great shoulders is Si-The face is Va,
And the crown is Ya.

Thus, the Unmai Vizakam concludes that the dance of Shiva is nothing but an image that is the visual interpretation of the Panchaksharam NaMaSiVaYa. The same observation was made by St. Thirumular two thousand years ago in his work The Thirumanthram.

ஆகின்ற பாதமும் மற்றவாய் நின்றிடும்
ஆகின்ற நாபியுள் அங்கே மகரமாம்
ஆகின்ற சீயிருதோள் வவ்வாய்க் கண்டபின்
ஆகின்ற வச்சுட ரவ்வியல் பாமே - திருமந்திரம்-

His feet are the syllable Na,
His navel is the syllable Ma,
His shoulders are the syllable Si,
His mouth is the syllable Va,
His cranial center is the syllable Ya. -Thirumanthiram-

Thus, when we chant the mantra it is the image of Nadarajah that comes into our minds. It is best to contemplate on the image and chant the mantra NaMaSi VaYa simultaneously to achieve complete gratification.

**Panchaksharam and Creation:-**

The creation of this universe is believed to have ben created through this mantra. St. Thirumular wrote the following as an explanation for the creation of all thing:

அஞ்செழுத் தாலைந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத் தாற்பல யோனி படைத்தனன்
அஞ்செழுத் தாலிவ் வகலிடம் தாங்கினன்
அஞ்செழுத் தாலே அமர்ந்து நின்றானே திருமந்திரம்

With five syllables he created the elements five,
With five syllables he created diverse life,
With five syllables he supported spaces vast,
With five syllables he in Jivas abided. - Thirumanthiram

It follows that this mantra was the foundation on which creation was built.

**Benefits of chanting this mantra:-**

The benefits of chanting this mantra are mentioned in the holy scriptures at various stages. In siddhiyar we read

"பின்னும், ஓசைதரும் அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க
உள்ளத்துப் புகுந்து அளிப்பான் உணம்ஓட"

'if again you contemplate on the five syllables as laid down, the lord will enter your heart and drive away all your impurities."

It is clear from this that the chanting of this mantra in



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the proper way as laid down by the scriptures makes one a better person who is capable of realizing God. When our heart is pure we remain young. It has been confirmed by science that meditaion brings countless benefits to the person who practices it. It gives peace of mind, good health and slows down the aging process. In Thirumantram we read:

ஐந்தின் பெருமையே அகலிடமாவதும்
ஐந்தின் பெருமையே ஆலயமாவதும்
ஐந்தின் பெருமையே யறவோன் வழக்கமும்
ஐந்தின் வகைசெய்ய பாலனுமாமே - திருமந்திரம்

Spaces vast arise from five syllable great,
Temples holy are the five syllables great,
Grace of the Lord is five syllables great,
Chant the five syllables great and you shall be ever young.
- Thirumanthiram

Thus, the chanting and meditating on the mantra gives the person long life and noble children.
Further explaining the mantra, Thirumular says that one can see the golden feet of the lord and the soul will achieve its ultimate goal of becoming one with Shiva.

ஐந்தின் பெருமையே அகலிடமாவதும்
ஐந்தின் பெருமையே ஆலயமாவதும்
ஐந்தின் பெருமையே யறவோன் வழக்கமும்
ஐந்தின் வகைசெய்ய பாலனுமாமே - திருமந்திரம்

You shall behold the golden feet, you shall have children noble,
In the name of that Golden feet I see the copper that is Jiva,
Will become the gold that is SHIVA, and as you behold the golden feet
You too shall his form assume, Center the mantra in your thoughts
And witness the great dance of SHIVA. Thirumanthiram

Knowing that the benefits of chanting and contemplating on this mantra is manifold, let us see how it should be chanted to obtain maximum benefit.

**How to chant the mantra:**

There are three ways this mantra could be chanted. They are Maanasam, Upaanchu, and Vaasakam. In Maanasam the chanting is done in the wind without the tip of the tongue touching the lips. In the Upaanchu method of chanting, one is required to chant in a very low tone with the tip of the tongue touching the lips so that only the person chanting the mantra can hear, this method is also know as Mantham. In Vaasakam it is chanted so that the person nearby can hear. Out of all these methods Maanasam is the one which is most preferred. In explaining the various methods of chanting, St. Thirumular says:

பொன்னான மந்திரம் புகலவும் ஒண்ணாது
பொன்னான மந்திரம் பொறிகிஞ்சு கத்தாகும்
பொன்னான மந்திரம் புகையுண்டு புரிகிற்
பொன்னான வல்லோர்க் குடம்பு பொற்பாதமே

This mantra is golden; chant it not loud,
Just say it; your body glows red.
If you take it slow, as you breath in, your body becomes gold
And in time, Shall you behold the golden feet of the Lord.

Consequentially, by chanting the mantra softly within one can benefit much more than chanting aloud. As for the number of times that you have to chant repeatedly, it must be noted that there is no limit. You may chant the mantra all the time. However, St. Arumuganavalar in his book Saiva Vina Vidai mentions that one shoul chant the Panchaksharam one hundred and eight times, fifty times, twenty-five times, or ten times.
On the other hand St. Thirumular in his book Thirumanram mentions:

சூக்குமம் எண்ணாயிரம் செபித்தாலுமேற்
சூக்கும மான வழியிடைக் காணலாஞ்
சூக்கும மான வினையைக் கெடுக்கலாஞ்
சூக்கும மான சிவனதா ளந்தமே - திருமந்திரம்

It is the subtlest mantra; Chant it eight thousand times;
You can see the subtle path; you may enjoy the bliss of Shiva;
That is the subtlest of all. - Thirumanthiram

In this verse he mentions that 'Sivaya nama" is the sukshma mantra. Chant it eight thousand times. You will have visions of the subtle path of susummna. You can destroy karma that is very subtle. You can enjoy the bliss of Shiva that is subtlest of all. As you can see the more you chant the more you gain.

Next time you hear the Panchaksharam mantra I hope you realize the virtue and value of it. Whenever you go to the temple fulfill all your duties then sit in front of Nadarajah andchant this mantram at least one hundred and eight times before you leave the timple. May the blessing of Lord Shiva be with you.

THIRUCHCHTTAMPALAM

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிவ சிவ. யோகநாதன்

## சிவ. பி. எஸ். பற்குணராசா - பிரான்ஸ்

வடநாட்டில் வங்காளம் ஒரு இராமகிருஷ்ணரைப் பெற்றெடுத்தது போல், தென்னாட்டில், வடலூர், வள்ளற்பெருமானை வளர்த்தது. இந்தச் சமரச சன்மார்க்க ஞானிகளின் தொடர்ச்சியாக, ஈழநாடு செய்த தவப்பேற்றினால், யோகநாதன் என்ற சிவயோக சுவாமிகள் தோன்றினார்.

இவ் ஆன்மீக ஞானிகள், காலத்திற்குக்காலம், தோன்றி, தங்களின் ஒழுக்க நெறி நின்று, ஆன்மீக சாதனைகள் புரிந்து, தாம்பெற்ற இன்பத்தை, பாடல்கள், சிறுகதைகள், அருள்மொழிகள், மூலம் சமய, தத்துவக் கருத்துக்களை, மானிட சமுதாயத்திற்கு, எளிமையாக எடுத்துச் சொல்லி, வாழ்வின் பயனை, முழுமை பெறச் செய்துள்ளனர். பூதஉடலோடு கூடிய காலத்தில், அவர்களின், வழிகாட்டுதல்கள் நேரடியாக அமைந் திருக்கும். பூதவுடல் அழிந்த பின்னர் அவர்களின் சிந்தனைகளே வழிகாட்டிச் செல்லும் அரிய பொக்கிஷம் ஆகும்.

சிவயோக சுவாமிகள், குறிப்பிட்ட, எல்லோரும் இப்பூமாதேவியில் பிறந்தே புனிதரானோம். எனும் அருள்மொழிக்கொப்ப, எளிய மனிதராகவே வாழ்ந்து சிவத்தியானம் செய்து, பல அரிய ஆன்மீக உண்மை களை, சிறிய வார்த்தைகளில் வெளிப்போந்தார். பல சமயத்தைச் சார்ந்தவர்களும், பல மொழி, பேசியவர் களும் கூட அவரை அணுகி, விழிப்புணர்வு பெற்றார்கள். அவரருளிய நற்சிந்தனைப்பாடல்களும், அருள் மொழிகளும், தேங்கி நிற்கும் குளம் போன்றதல்ல. ஓடிக்கொண்டிருக்கும் ஓர் ஆறு போன்றது. ஆன்மீக நாட்டமும், தாகமும் நிறைந்தவர்கள் பருகிக் கொள்ளலாம்.

குருபூசை என்பதற்கு சிவயோக சுவாமிகள், தன்னையறிதலே என்று குறிப்பிட்டுள்ளார். ஆகவே அவரது 125வது குருபூசைத் தினமாக இவ்வாண்டு அமைகின்றது. இந்நாளில் நாமும், அவர்தம் நற்சிந்தனையிலும், அருள்மொழியிலும், சில பகுதிகளை நினைவு கொள்வதன் மூலமாக நம்மை அறிந்து கொள்வோமாக.

**அருள் மொழிகள்**

1. எல்லாம் ஈசன் செயலென்று மனிதன் தன்னைக் கடவுளுக்கு ஒப்புக் கொடுத்துவிட்டால், அவனுக்கு என்ன குறை? தேவையானதெல்லாம் வரும். பறக்க நினைத்தாற் பறக்க முடியாது.

2. காசை அதிகமாக வைத்திருந்து என்ன செய்யப் போகிறீர்கள்? சீவியத்தை ஒரு நாளாவது கூட்ட முடியுமோ? உள்ளபொழுது தான தருமங்களைச் செய்யுங்கள்.

3. உங்களுக்கு ஒரு குறைவுமில்லை. உங்களை இன்னார் என்று அறியாதது தான் குறை. நாய்வாலை நீட்ட முடியாது. உலகத்தை திருத்துவதிலும் நம்மைத் திருத்துவோமாக.

4. சிறு உத்தியோகம் இருக்கும்போது பெரும் உத்தியோகத்திற்கு ஆசை. பெரும் உத்தியோகம் வந்ததும் பெரும் சம்பளத்திற்கு ஆசை. பெருஞ் சம்பளம் வந்தால் பிள்ளைகள் நல்லாய் வரவேண்டுமென்ற ஆசை. இவ்ஆசைகளுக்கு எல்லைதானுண்டோ? உலகத்தைத் தனக்குள் உண்டாக்கி வறுமைப்படுகிறான் மனிதன்.

5. கடவுளைத்தேடி, கதிர்காமத்திற்கும், சிதம்பரத்திற்கும், ஓடத் தேவையில்லை. கண்ணிற் கலந்து கடவுள் பார்க்கிறார். காதிற்கலந்து கடவுள் கேட்கிறார். பிரம்மம் எங்களுக்குள் பூரணமாய் நிறைந்திருக்கிறது.

6. ஒருவன் தன்பிள்ளைகளை வளர்ப்பதுபோல் நாங்களும் எங்கள் மனதை நன்கு பழக்க வேண்டும். மனமே எங்களுக்குக் கூடிய நண்பனும், கூடிய பகைவனும். திருவடிசேர மனம் பரிசுத்தமாயிருந்தாற் போதும்.

7. எல்லாரோடும், எல்லார் மத்தியிலும் வாழ வேண்டும். ஆனால், தன்னை மறக்கக்கூடாது. எல்லாரோடும் சமா தானமாகவும் சந்தோஷமாகவும் இருப்பதே சமயவாழ்வு.

8. இறைவன் யாவருக்கும் பொதுவாகவுளன். இறை வனைத் தனதாக்கப்படாது. பொருள் ஒன்றே. பல பெயர் களும், பல வடிவங்களும், புறத்தோற்றமாம். சிவனடி யார், எல்லாவற்றையும், சிவமெனவே பார்த்துப், பார்த்துப் பாவனை பண்ணி, பரிணமித்து உணர்ந்து கொள்வர்.

9. கோவிலைக் கட்டினதினாலென்ன? தன்னையல்லவோ அறிய வேண்டும். அறிவை அறிவால் அறிய வேண்டும் .பார்ப்பதெல்லாஞ் சிவமாகப் பார். செய்வதெல்லாஞ் சிவதொண்டாகச் செய். நானென்பதை விட்டுவிடு.

10. சிவத்தியானம் செய்வதே இந்தக்காலத்தில் இலேசான வழி.

சிவத்தியானம் செய், செய், செய்.<br>
சிவமே நாமெனல் மெய், மெய், மெய்.<br>
அவனியனைத்தும் பொய், பொய், பொய்.<br>
அதனையறிந்து உய், உய், உய்.

**சுவாமிகளே சரணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா இந்து மாமன்றம் (சர்க்கரைப் பொங்கல் கலைவிழா நிகழ்ச்சிகள் - தை 1997-)



அதிஷ்ட இலாபச் சீட்டுக் குலுக்குதல்
பிரதம விருந்தினர், கௌரவ செயலர் திரு.வே. நந்தீஸ்வரர்,
கௌரவ தனாதிகாரி திரு.சி. கனலிங்கம் ஆகியோர்



லய லாவண்யத் தென்றல்



பண்ணிசை



தீப நடனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சூடிக்கொடுத்த சுடர்க்கொடி"

திருமதி. வசந்தா நடராஜன் **B.A**

முல்லை நிலத்துத் தெய்வம் மாயோன் எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. மாயோன் அல்லது திருமாலைப் பற்றிய குறிப்புக்கள் சங்க இலக்கியங் களிலே காணப்படுகின்றன.

திருமால் மும்மூர்த்திகளில் காக்கும் கடவுளாவார். திருமாலை விஷ்ணு என்றும் போற்றி வணங்குவர். சிவலிங்கத் திருமேனியில் சிவன், பிரமா, விஷ்ணுவை அடிப்படையாகக் கொண்ட அம்சங்களைத் திருக் கோயில் கிரியை நூல்கள் விளக்குகின்றன. அவை பிரம்மபாகம் விஷ்ணுபாகம் உருத்திரபாகமெனப் போற்றப்படும்.

சிவபெருமானுக்கும், திருமாலுக்கும் வேற்றுமை காணாது சைவ சமயத்தவர் போற்றி வழிபடுவர். சைவம், சாக்தம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்பவை இந்துமதம் எனப் போற்றப்பட்டவை. இவை, பின்னர் ஒன்றிணைந்து சைவ சமயத்துள் இரண்டறக் கலந்து விளங்குகின்றன.

சிவனின் பெருமைகளை அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் போன்ற நால்வரும் பதிகங்கள் மூலம் போற்றியுள்ளனர். அவ்வாறே திருமாலின் அவதாரப் பெருமைகளை வைணவ ஆழ்வார்கள் போற்றினர். திருமாலின் அவதாரங்களுள் கண்ணன் அவதாரம் சிறப்புடையது. பெரியாழ்வாரும் சூடிக்கொடுத்த சுடர்க் கொடி எனப் போற்றப்படும் ஆண்டாளும் கண்ணன் அவதாரத்தில் மனதைப் பறிகொடுத்தவர்கள். பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகவும், ஆண்டாள் கண்ணனைக் காதலனாகவும் கண்டனர்.

ஆண்டாள் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளாவார். பெரியாழ்வார் நிலத்தை அகழ்ந்தபோது ஓர் அழகிய பெட்டியுள் அழகிய பெண் குழந்தை ஒன்று காணப்பட்டது. திகைப்புற்றவர் பின்னர் தெளிந்து "பூமித்தாய் எனக்குத் தந்த மகள்" என்று அணைத்து உச்சி மோந்தார். அன்று ஆடிமாதத்துப் பூரநட்சத்திர நாள். அந்தக் குழந்தைக்குக் கோதை எனப் பெயரிட்டு அன்புடன் வளர்த்தார். (கோ-பூமி, தா- கொடுக்கப் பட்டவள் என்பது கருத்து)

பெரியாழ்வார் வடபத்திரசாயி (கண்ணன்) பெருமானுக்கென அழகிய மாலை ஒன்றைத் தினமும் கட்டுவார். அந்த மாலையைத் தினமும் அணிந்து பார்ப்பது கோதையின் வழக்கம். ஒருநாள் இச் செயலைக் கண்ட பெரியாழ்வார் கவலையுற்று வேறுமாலை கட்டி, பெருமாளுக்குச் சமர்ப்பித்தார்.

அன்றிரவு கனவிலே தோன்றிய எம்பெருமான் 'இன்று ஏன் மணமற்றமாலை என்று கேட்டார். கோதையின் பெருமைகளை எடுத்துரைத்து 'இனி அவள் சூடிய மாலைகளையே எனக்கு அளிக்க வேண்டும்' என்று கூறி மறைந்தார். அன்று முதல் கோதை ஆண்டாள் ஆனாள். சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாகி நாச்சியார் திருமொழியைப் பாடிக்கொடுத்து ஆண்டாள் தமிழை ஆண்டாள் எனப் பெருமை பெற்றார்.

கண்ணன் மீது பக்திக்காதல் கொண்ட ஆண்டாளின் அனுபவ உணர்ச்சிப் புலப்பாடே நாச்சியார் திருமொழி. தமிழிலே காதல் இலக்கியங்கள் ஏராளம். மனிதனைக் காதலனாக்கிக் காட்டும் இலக்கியங்கள். அரசனைக் காதலனாக்கிக் காட்டும் இலக்கியங்கள் இவையெல்லாம் ஆடவனைப் பெண் காதலிக்கும் இலக்கியங்கள். ஆனால், ஆண்மையில் பெண்மை கண்டு அதையே நாயகி பாவமாகக் கொண்டு இறைவனை நாயகனாக வரிக்கும் இலக்கியங்கள் மக்கள் மனதைக் கவர்ந்தவை.

நாயக, நாயகி பாவத்திற் பாடிய பக்திக் கவிஞர்களுள் பெண்ணாக இருந்தே பெண் உணர்ச்சியைப் புலப்படுத்திய பெருமை ஆண்டாளுக்கே உரியது. நாச்சியார் திருமொழியின் ஆரம்பத்திலே ஆண்டாள் காதலின் வளர்ச்சி நிலையிலே இரந்து பாடுகின்றாள். இசைமங்கலம், சொல்மங்கலம், பொருள் மங்கலத்தோடு புதிய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தி அழகு தொனிப்பது திருமொழி என்பதைக் கற்றோர் மறுத்ததில்லை.

தன்னை ஆண்டவனுக்கே அர்ப்பணித்த பக்தையின் அதீத பக்தி உணர்வையும், அதனூடே கலந்த உலகியற் காதல் உணர்ச்சியையும் தான் ஒரு மானுடப் பெண் என்ற உணர்வின்றி வெளிப்படுத்துவது வித்தியாசமான வெளிப்பாடாகும். 'நெஞ்சை நெருப்பாக்கும் காதல் உணர்வையும் காதல் கொண்டவனுக்காக ஏங்கித் தவிக்கும் பெண்மையின் அவஸ்தைகளையும், வீறுடன், பாடியதை ஆண்டாள் பாடல்களிற் காணமுடியும்.

இறையன்பு, தஸ்யம், ஸக்யம், வாத்ஸல்யம், மதுரம் என நால்வகைப்படுமென ஸ்ரீ சைதன்ய சித்தாந்தம் கூறியுள்ளது. ஆண்டாள் கண்ணன் மீது கொண்ட அன்பு மதுரபக்தியினைக் காட்டுகின்றது.

ஆண்டாள் கண்ணன்மீது காதல் மட்டுமா கொண்டார்; கடிமணமும் செய்து பார்த்தார். 'வாரணம் (யானை) ஆயிரம் வலம் வந்தது, பூரண பொற்குடம் வந்தது; தோரணம் நாட்டினார்கள், வாழை, கமுகு தொங்கவிட்ட பந்தல், இந்திரன் முதலாய தேவர்கள் வந்தனர். நாச்சியார் கோடிப்பட்டுடுத்தி வர மாயவன் மணமாலை சூட்டினானாம். எத்தனை அற்புதமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனை, பக்திமயமான பாவனை.

கண்ணன் மீது கொண்ட காதலின் ஆழ்ந்த அனுபவமாக, எல்லைமீறிய உணர்ச்சிகளின் சொல் ஓவியமாக, வெளிப்படும்போது, மானுட உணர்ச்சியும், தெய்வீக உணர்ச்சியும் இரண்டறக் கலந்து அன்பெனும் பக்தி பிரவாகமாகின்றது. "மானுடர்க் கென்று பேச்சுப்படில் வாழ்கிலேன்" என்பதன் மூலம், ஆத்மா, பரமாத்மாவுடன் இணையத் துடிப்பதைக் காணலாம். இதனைப் பக்தி வைராக்கியம் என்பதா? என்னவென்பது?

கண்ணனை மானுடனாகப் பாவனை செய்து வரித்த ஆண்டாள் மாயவன் தன்னை மணம் செய்த நிலையை, கனவின் மூலம் கண்டதைத் தோழிக்கு உணர்த்திய போதிலும், பக்திப்பிரவாகத்திற்கு அணை போட முயல்கின்றாள்; அமைதி காணத் துடிக் கின்றாள். எனினும், ஆராத பக்தி அங்கலாய்ப்பை ஏற்படுத்துகின்றது. இச்சூழ்நிலையில் கண்ணனின் கையிலே உள்ள சங்கு நிழலாடுகின்றது. சங்கே!

**"கர்ப்பூரம் நாறுமோ, கமலப்பூ நாறுமோ,**
**திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ**
**மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்**
**விழுப்புற்றுக்கேட்கின்றேன்; சொல்; ஆழி வெண் சங்கே"**

என்று சற்று அதிகமாகவே, அன்பையும் பக்தியையும் வெளிப்படுத்துகின்றார்.

நாச்சியார் திருமொழியில் மேகத்தைத் தூதுவிடும் பகுதி சுவையானது. குயில்காள்! மயில்காள்! கருவிளைகாள்! நறுமலர்காள்!

என்றெல்லாம் கூவியழைக்கும் ஆண்டாள், "என் கோவிந்தன்" எனச் சற்று அழுத்தம் கொடுத்துப் பாடுகின்றாள். இந்த மதுர நிலையில் மலர்களும், குருகினங்களும் கண்ணனாகவே ஆண்டாளுக்குக் காட்சியளிக்கின்றன.

இவ்வாறாக ஏங்கி இரங்கிய ஆண்டாளின் உள்ளம் ஈற்றில் மனோரதமேறி, பிருந்தாவனத்தே கண்ணனைக் கண்டு நிறைவெய்தியதாகக் கூறி முடிக்கின்றார். ஆண்டாளின் இலட்சியக் காதலைப் புலப்படுத்திய நாச்சியார் திருமொழி, உள்ளக்குமுறல்களையும், உள்ளத் துடிப்பையும் கூறுவதன் மூலம் இன்ப உணர்ச்சி போலத் தென்படினும், சிற்றின்ப உணர்வு வழியே பேரின்ப விளக்கங் காட்டுகின்றது.

நாச்சியார் திருமொழி ஆண்டாள் தமிழை ஆண்ட பெருமையை விளக்குவது. தமிழால் துடிக்கும்போது ஆண்டாளின் கருத்து எம்மைக் கவர்கிறது.

நாச்சியாரின் நாவன்மை தமிழுக்கு அரணாகியது. சூடிக் கொடுத்த சுடர்க்கொடி, பாடிக்கொடுத்த மொழி நாச்சியார் திருமொழி என்பது சாலவும் பொருந்தும்.

## சான்றோர் சொல்லமுதம்

**கோவிலைச்சுற்றி வாழும் நாய்களெல்லாம் பிராமணனாக மாறுவதில்லை. மகான்களைச் சுற்றி நிற்பவர்கள் எல்லாம் நல்லவர்கள் ஆவதில்லை. சுவாமி கெங்காதரா**

**நண்பனாயினும் கூரிய கத்தி உடையவன், வளர்ப்பு மிருகமாயினும் கூரிய கொம்புடையது, மனிதனாயினும் பேராசை பிடித்தவன், இவ்வியல்புடைய மூவகையினரும் ஆபத்தானவர்கள் என அறிக.**

**–சுவாமி கெங்காதரா**

**மேடையில், கிண்டிச் சுண்டிப் பேசும் பேச்சாளன் பேச்சுத் தண்டிப் பெற்ற அறிவாகவே அமையும்.**

**– வளவன்**

**கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருடன் என்பது முதுமொழியின் கருத்து. கல்லான் (படிக்காதவன்) புல்லான் (ஆண்மையற்றவன்) ஆனாலும் உத்தமமான பெண் கணவனாகவே மதித்துக் கற்பைப் பேணுவாள் என்பதாம். – விவியன்**

**கையிலிருக்கும் உணவைச் சாப்பிடும் பொழுது உணவு குறைந்து கொண்டே போகும், ஆனால் அன்பைக் கொடுக்கும் பொழுது அன்பு வளர்ந்து கொண்டே போகும் – நிருஜா**

**ஒருவன் இறந்த பின், அவன் பெரியவன், நல்லவன், பரோபகாரி, கெட்டவன் என பல அபிப்பிராயங்கள் உண்டாகலாம். ஆனால் அவன் அன்புடையவன் என்ற வார்த்தையே மேலானது. – நாமகள்**

**கீழ்காணும் ஆறுபகுதிகள் நமது உடம்பின் ஆறு ஆதாரங்களை உணர்த்துகின்றன.**

1. கர்ப்பக்கிரகம் – மூலாதாரம்
2. அர்த்தமண்டபம் – சுவாதிஷ்டானம்
3. மகாமண்டபம் – மணிபூரகம்
4. ஸ்நானமண்டபம் – அனாகதம்
5. அலங்காரமண்டபம் – விசுத்தி
6. சபாமண்டபம் – ஆஞ்ஞை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மேன்மை கொள் "சைவநீதி" விளங்குக உலகமெங்கும்
அன்னை மொழியை நாளும் பொன்னெனப் போற்றி வாழ்க !

# KAYILASANATHAN





**P.KAYILASANATHAN,**
**B. A (CEY) L.L..B(CEY)**
**Barrister and Solicitor**

உங்கள் சகல சட்ட ஆலோசனைகளுக்கும் குறிப்பாக:—.குற்றவியல் வழக்குகள்,
குடிவரவு - அகதி விண்ணப்ப விசாரணைகள், மேன் முறையீடுகள்,
மனிதாபிமான அடிப்படை விண்ணப்பங்கள், ஸ்பொன்சர் சம்பந்தமான சகல
விடயங்களும், வீடு, வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல், விற்றல்
குடும்ப விவகாரங்கள்
(விவாகரத்து, பிள்ளைகள் பராமரிப்பு, பிள்ளைகளின் பாதுகாப்பு, சொத்துக்கள் பிரித்தல்.)
வாணிபச் சட்டங்கள் சம்பந்தமான சகல விடயங்கள்,
வாகன விபத்து - விபத்துச் சம்பந்தமான நட்டஈடு அனைத்திற்கும்
நீங்கள் நாடவேண்டிய இடம்.

## 2401 Eglinton Ave. East, Suite 3
## Scarborough. Ont. M1K 2M5

## TEL: (416) 752-9561
## FAX: (416) 752-7262

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தர் வழிச் சிறிது தூரம்

தீபாவலி மலர்த் தொடர்ச்சி - 1996

திருமதி. சிவ. சிவகுமார் - சட்ட ஆலோசகர் U.K

"நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தான் ஒரு தோண்டி - அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி"

இப்பாடல் மக்கள் சிந்தனைக்கு இடியுரை என்பது ஆன்மீக பலமுடையவர்களுக்குத் தான் தெரியும். ஓர் ஆண்டி நாலு ஆறு--பத்துமாதமாக வேண்டித்தாயின் கருப்பையிலிருந்து உடல் என்று சொல்லப்படும் தோண்டியைக் கொணர்ந்து உலகவாழ்வில் பலவா றாகக் கூத்தாடிக் கூத்தாடிக் களைத்துக் கடைசியாக அந்த உடலாகிய தோண்டியைப் போட்டுடைக்கிறான் என்கிற மாபெருந்தத்துவம் இப்பாட்டிலிருந்து பெறப்படுகிறது. இதனைக் கடுவெளிச்சித்தர் பாடினார். அவர் பாடிய இன்னொரு பாடலையும் பார்ப்போம்.

"வேத விதிப்படி நில்லு- நல்லோர்
மேவும் வழியினை வேண்டியே சொல்லு
சாத நிலைமையே சொல்லு - பொல்லாச்
சண்டாளக் கோபத்தைச் சாதித்துக் கொல்லு"

இதன் மூலம் நாம் வேதவழியில் நின்று நல்லோர் நடாத்திக் காட்டும் வழியில் சென்று உலகிற்கு சாதகமான நெறிகாட்டிக் கோபத்தைச் சாதனையால் ஒழித்துக் காண்பி எனக் கூறுகின்றார்.

"ஊரிலுள்ள மனிதர்காள் ஒரு மனதாய்க் கூடியே
தேரிலேவடத்தை விட்டு செம்பை வைத்து இழுக்கிறீர்
ஆரினாலும் அறியொணாத ஆதிசித்த நாதரை
பேதையான மனிதர் பண்ணும் பிரளிபாரும் பாருமே!

- உருவ வழிபாட்டையும் மற்றும் சமய சம்பிர தாயங்களையும் வெறுக்கும் இந்தச் சித்தர் சிவவாக்கி யராவர். இவர் சாதிபேதங்களையும், வேதசாத் திரங்களை ஓதுதலாகிய வெறும் வாய்முணுமுணுத் தலையும் தவவேடச் சின்னங்கள், சடங்குகள், யாகம், மதவாதம் முதலியவற்றையும் சாடி ஒன்றே குலம் ஒருவனே தேவன், உள்ளமே கோயில் என்று தமது நூலில் எடுத்துக் காட்டியிருக்கிறார். இவர் பாடிய பாடலில் இன்னுமொன்று:-

"இச்சகம் சனித்ததுவும் ஈசன் ஐந்து எழுத்திலே
மெச்சவும் சராசரங்கள் மேவும் ஐந்து எழுத்திலே
உச்சிதப் பல உயிர்கள் ஓங்கல் அஞ்செழுத்திலே
நிச்சய மெய்ஞ் ஞானபோதம் நிற்கும் ஐந்தெழுத்திலே"

இதனால் சிவாயநம என்று ஐந்தெழுத்தின் மகிமையை எடுத்துக் கூறுவது போற்றத்தக்கதாகும். இந்த யோகசித்தர் சிவயோகியரில் தலைசிறந்தவராவர். தாயுமானவரால் குறிப்பிடப்படும் பெருமைபெற்ற இவர் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டாகக் கருதப் படுகிறது. இவருடைய செய்யுள் நடை திருமூலரின் திருமந்திர நடையை ஒத்திருக்கின்றது. பிறசமயங் களிலும் வெறுப்பற்ற சைவர். சிவனே பரம்பொருள் என்பர். கடவுள் உயிரின் வேறானவர் என்று கூறுமிவர் கடவுளின்றி உயிரில்லை என்பர். உலகு, உயிர், கடவுள் எனப் பொருள்கள் மூன்று எனவும் சாயுச்சியம் உயிரின் குறிக்கோள் என்றும் அதனை ஞானத்தால் அடைய முடியும் என்றும் கூறுவார். கடவுள் ஆன்மாவின் உள்ளத்தில் ஞானமயமாக நிலவுகிறார். அவரை அத்தன்மையரென அனுபூதியாற் காண்பதே ஞானம் எனக் கூறுவார். தெளிந்த ஞானநிட்டை யுடையார் திருவுள்ளமதில் மலரின் மணம்போல் இறைவன் தோன்றுவான் எனக்கூறும் கருத்து மணிவாசகரின் கருத்தை ஒத்ததாகும். இறைவனே குருபரனாக வந்து தன்னைத் தெரிவிப்பன் எனக் கூறுவார். இதுபோன்ற சித்தாந்த சைவக் கொள்கைகள் இவரின் சிவவாக்கிய நூலில் காணப்படுவதால் இவரைச் சித்தாந்த சைவர் எனக் கொள்ள இடமுண்டு.

அடுத்து **இடைக்காட்டுச் சித்தரை** நோக்குவோம்.

"தாம் திமிதிமி தந்தக் கோனாரே
தீம் திமிதிமி திந்தக் கோனாரே" என்று குதித்தாடிப் பாடும் இந்தச் சித்தர் ஆனந்தக் கோனாரை, ஆட்டை, மாட்டை, குழலை, அன்னத்தை, குயிலை, மயிலைத் தன் முன்னிறுத்தி பல உலகியலுண்மைகளைப் பாடியுள்ளார். இவர் கொங்கணச் சித்தரின் சீடர். கி.பி. 15ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். மலையாளத்திலுள்ள இடைக்காடு எனும் ஊரைச் சார்ந்தவராகையால் இப் பெயர் பெற்றிருக்க வேண்டும். பொதியமலைச் சாரலில் இவர் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும் போது தவசித்தரில் ஒருவர் வந்து இவரிடம் பால் கேட்க, அவருக்குப் பால் கொடுத்து உபசரிக்கவே அவர் இவருக்கு ஞான உபதேசம் செய்துவிட்டுப் போனார். அதனால் இவர் சகல சித்திகளும் பெற்ற சித்தரானார்.

**அகப்பேய்ச் சித்தர்:-** இந்தச் சித்தர் பேயாக அலைகின்ற மனதை அகப்பேய் (மனப்பேய்) என்று பெண்ணாக உருவகப்படுத்தி, அதனை முன்னிலைப் படுத்தி அறிவுறுத்திப் பாடியதனால் இப்பெயர் பெற்றார். இவர் பாடிய

"தத்துவத் தெய்வமடி - அகப்பேய்
சதாசிவ மானதடி
மற்றுள்ள தெய்வமெல்லாம்
மாயை வடிவாமே" என்ற பாடல் சிந்தனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவூலமாகும்.

**"புல்லரிடத்திற் போய்ப் பொருள் தனக்குக் கையேந்தி**
**பல்லை மிகக் காட்டிப் பரக்க விழிக் கிறண்டி!**
**பல்லை மிகக் காட்டாமல் பரக்க விழிக்காமல்**
**புல்லரிடம் போகாமல் என் கண்ணம்மா!**
**பொருளெனக்குத் தாராயோ!** எனப்பாடும் இச்சித்தரின் பாடல்களில் அழகு, அணி, ஆத்மலயம், தமிழினிமை, நெஞ்சை உறுத்தும் உருக்கமுங் காணப் படுகின்றன. இதனைப் பாடியவர் **அழகுணிச் சித்தராவர்.**

**கொங்கணநாயனார்:-** இவர் திருமழிசை ஆழ்வார் காலத்தவர். கி.பி. ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். மருத்துவ நூல்களும், ரசவாத, யோகநூல்களும் ஆக்கியவர். இவர்காலம் திருவள் ளுவர் காலமாகவும் இருக்கலாம். திருவள்ளுவரின் மனைவி வாசுகி அம்மையார் பற்றிய கதைகளில் இவரைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. ஒருநாள் இவர் பிச்சைக்காக ஓரூர் சென்றபோது வெயிலால் களைத்து ஒரு மரநிழலில் தங்கினார். அந்தவேளை மரத்திலிருந்த கொக்கு ஒன்று இட்ட எச்சம் இவர் மீது விழுந்தது. ஆத்திரத்துடன் கொக்கைப் பார்த்தார். இவரின் தவவலிமையால் கொக்கு எரிந்து சாம்பராகி விட்டது. அதனாற் தற்பெருமை கொண்ட இவர் திருவள்ளுவரின் வீட்டிற்குச் சென்று பிச்சை கேட்டார். வாசுகி அம்மையார் தம் கணவனுக்குச் செய்யும் பணிவிடைகளைச் செய்து முடித்துவிட்டுப் பிச்சை யிட்டார். அதனாற் கோபமுற்ற இவர் வாசுகி அம்மை யாரைச் சினந்து நோக்கினார். அந்த அம்மையார் புன்சிரிப்புடன் **"கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா!"** என்றார். வழியில் நடந்த செயலை இந்த அம்மையார் அறிந்தது எப்படி என்று வியந்த அவர் அம்மையார் மிகுந்த பதிவிரதை என்பதை அறிந்து தனது தற்பெருமைக்காக வெட்கப்பட்டார். பின்பு வாசுகி அம்மையாரின் சொற்படி இவர் ஒரு வேடனிடம் சென்று தம் தவத்தைவிட தாய், தந்தையரை வழிபடுதலே சிறந்தது என்பதைக் கண்டுணர்ந்தார். பல நூல்களை ஆக்கிய இவரின் பாடலொன்றைப் பார்ப்போம்.

**"கற்புள்ள மாதர் குலம் வாழ்க நின்ற**
**கற்பையளித்தவரே வாழ்க!**
**சிற்பரனைப் போற்றிக் கும்மியடி**
**தற்பரனைப் போற்றிக் கும்மியடி**

**பீருமுகம்மது:** இவர் இஸ்லாமியப் பெரியார். இவர் கண்ணிகள் அமைத்துப் பாடிய ஞானரத்தினக் கோவை சிறந்த நூல். அரேபிய நாட்டுத் தொடர்பினால் தமிழ் நாட்டில் சித்த மருத்துவத்துறை மேலும் ஓங்கியது. இஸ்லாமிய போக்கும் தமிழ்நூல்களில் புகுந்து வளம்பெறச் செய்தது. இவரின் பாடல்களி லொன்று:-

**எப்படி யுலகில் இப்படி யுருவானோம் சிங்கி! அது**
**அப்பன் தன் நட்புக்கு ஒப்பிய தாயாலே சிங்கா!**

**மதுரை வாலை சாமி:-** மனமாகிய வீட்டைத் திறப் பதற்கும் பேரின்பமாகிய வீட்டைத் திறப்பதற்கும் வழியறியாது எல்லாம் விதியென்று விதியில் பழிகூறும் விந்தையான மனிதரை,

**"பூட்டைத் திறப்பதும் கையாலே மனப்**
**பூட்டைத் திறப்பதும் மெய்யாலே**
**வீட்டைத் திறக்க முடியாமல் விட்ட**
**விதியிது என்கிறார் ஞானப்பெண்ணே!** என்ற செய்யுளினாலே இடித்துரைக்கிறார். ஞானத்தினை ஒரு பெண்ணாக உருவகம் செய்து தம்முன்நிறுத்தி ஒன்பது ஓட்டைகள் உள்ள உடல்கூட்டுக்குள் பஞ்சேந் திரியங்களின் பகடி விளையாட்டையும் கூட்டை விட்டு உயிர் தேட வேண்டிய வீட்டையும் பல பாடல்களால் நகைச்சுவையாகப் பாடியுள்ளார்.

**சட்டை முனிசித்தர்:** பூசைவிதி முறைகள் பற்றிப் பாடல்கள் பாடியவர். வைத்தியத் துறையிலும் மிகவும் சிறந்தவர். இவரை அகத்தியர் காலத்தில் இருந்ததாகக் கூறுவர். சட்டை முனி ஆயிரத்து இருநூறு, நவரத்தின வைப்பு முதலிய நூல்களை யாத்துள்ளார்.

**கணபதிதாசர்:-** **"உன்மனம் ஒடுங்கியே உன்**
**உள்ளொளி கண்டாற் பின்னை"** - என்று பாடிய இவர் இந்த உள்ளொளித் தத்துவத்தை நெஞ்சறி விளக்கம் எனும் நூலின் மூலம் விளக்குகிறார். பலப்பல உண்மைகளைப் பாடி நாகநாதர் பாதங்களைச் சாரவழிகாட்டியுள்ளார்.

**அகஸ்தியர்:-**

**"மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டா!**
**மனமது செம்மையானால் வாயுவை யுயர்த்த வேண்டா**
**மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டா**
**மனமது செம்மையானால் மந்திரஞ் செம்மையாமே"**

எனக்கூறும் இவர் "மாடுதானானாலும் ஒரு போக்குண்டு, மனிதனுக்கோ அவ்வளவுந் தெரியாதப்பா" என்று கிண்டிச் சுரண்டிக் கூறுவது சிந்திக்கற்பாலது. அறநெறிகள் பலவற்றை ஞானப் பாமாலை மூலம் நயம்பட விளக்குகின்றார். **அகஸ்தியர்** எனும் பெயரில் சங்க காலத்திலும் மத்திய காலத்திலும், முனிவர்களாகவும் புலவர்களாகவும் மருத்துவர்களாகவும் பலர் இருந்திருக்கிறார்கள். இந்த அகத்தியர் அட்டமா சித்திகள் பெற்ற பதினெண் சித்தர்களில் ஒருவராவர்.

**உரோமரிஷி:** அட்டமா சித்திகள் பெற்றவர்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரும் ஒருவர். இவரிடம் சொரூபமுத்திக்கு அடை யாளம் என்னவென்று கேட்டால், "சுடர் போலக் காணு மடா தூலதேகம்" என்பார். யோகர் போன்ற சித்தர்கள் பலர் உரோமாபுரி வரை மருந்துச் செடிகளுக்காகச் சென்று வந்துள்ளனர். அதனால்தான் இவருக்கு உரோமாபுரி என்ற பெயர் வந்ததோ தெரியாது.

**திருமூலநாயனார்:** சிவயோகியும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவருமாகிய இவர் நந்தியின் அருள் பெற்றவராவர். அட்டமா சித்திகளில் வல்லவர். பொதியமலை அகத்தியரைக் காண விரும்பி வந்த வழியில் பல சிவத்தலங்களைத் தரிசித்தபின் திருவாவடுதுறையை அடைந்தார். அவ்வூரில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த மூலன் என்னும் இடையன் இறந்து கிடப்பதையும் பசுக்கள் துன்பத்தால் இடையனின் உடலை மோந்து கொண்டிருப்பதையும் கண்ட திருமூலர் பசுக்களின் துன்பத்தைப் போக்க, மனமிரங்கி தம் உடலை ஒருபுறம் வைத்துவிட்டு, கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தையின் மூலம் மூலனின் உடம்பில் புகுந்து பசுக்களை வீடு நோக்கி ஓட்டிச் சென்றார். அவரை மூலனின் மனைவி தன் கணவனென நினைத்துத் தொடப்போக, இவர் எட்டி நின்று என்னைத் தொடாதே என்று கூறவே, மனைவி அவ்வூர் நீதிபதிகளிடம் முறையிட்டாள். நீதிபதிகள் மூலரைப் பெரிய சிவயோகி எனக் கூறியதும் அவள் விலகிச் செல்கின்றாள். மூலர் தம் சொந்த உடம்பை விட்ட இடத்தில் தேடிப்போக அது அகப்படவில்லை. நான் சிவாகமப் பொருளைத் தமிழில் பாட வேண்டும் என்பதற்காகத் தான் இறைவன் என் உடம்பை மறைத்து விட்டார் என்பதை உணர்ந்தார். உடனே திருவாவடுதுறையில் மேற்குப் பக்கத்திலுள்ள அரச மரத்தடியில் அத்வைத யோகத்தமர்ந்து மூவாயிரம் பாடல்களைக் கொண்ட திருமந்திரத்தைப் பாடினார். இடையன் மூலனின் உடலில் புகுந்ததால் திருமூலர் என அழைக்கப்பட்டார்

**ஈசனை ஆசானாய்க் காணும் போக்கு**

"இங்கு இன்பமுடன் கயிலாசம் எய்தலாம்" எனப் பாடிய திருமூலர் **"அடியோடு மூலமதேஅகாரமாகி அவன் அவளாய் நின்றநிலை அணுவதாமே"** என அணு தத்துவம் முதல் அகண்ட தத்துவம் வரை பரிணாம வளர்ச்சியைச் சுருக்கமாகவுரைத்துப் பதம் பெறும் நிலையையும் விளக்கியுள்ளார்.

**இராமதேவர்:**

இந்தியாவில் நாகப்பட்டினத்தில் இருந்து சிவபூசா விசேடத்தால் சகல சித்திகளும் பெற்ற சித்தர் இவர். சிறந்த வைத்தியநூல் எழுதியுள்ளார். அதன் பெயர் இராமதேவர் வைத்தியம்.

**கருவூரார்:** **'ஆதியந்தம் வாலையவள் இருந்த வீடே**
**ஆச்சரியம் மெத்த மெத்த அதுதான் பாரு"**

இவ்விதமாகப் பூஜா விதிநூலைப் பாடிய இந்தச் சித்தர், ஆதிபராசக்தியை வாலைப் பெண்ணாக முன்வைத்து அவளது மாயை முதலான கூறுகளைப் பல வடிவங்களாக்கி, அவளைச் சிறுபிள்ளைக் கன்னி யாகவும், விளையாட்டு வம்பியாகவும், சித்தர்களின் மனவடக்கத்தைச் சோதிக்கும் சிவகாமி ரூபியாகவும் சித்தரித்துக் காட்டிப் பூசை செய்யும் முறைகளை விளக்கியுள்ளார். கொங்கு நாட்டைச் சேர்ந்த கருவூர் இவரது பிறப்பிடம். காலம் கி.பி. 11ம் நூற்றாண்டு. தஞ்சாவூர் இராஜராஜ சோழன் கட்டிய கலைக் கோயில் சிவலிங்கப் பிரதிட்டைக்கு இவரே அஷ்டபந்தனம் செய்தவர். ஒன்பதாவது திருமுறையைச் சார்ந்த திருவிசைப்பாப் பகுதியில் இவரது பாடல்களும் அடங்கும்.

**இராமலிங்க சுவாமிகள்:-**

**தன்னையறிந்து இன்பமுற வெண்ணிலாவே - ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே"**

அருட்பெருஞ் சோதி தனிப்பெருங்கருணை எனக் கூறிய இவரை திருவருட்பிரகாச வள்ளலார் என்றும் கூறுவார்கள். வேதாந்த - சித்தாந்த - வடமொழி - தென்மொழிகளில் மிகவும் பாண்டித்தியம் பெற்றவர். சித்துக்கள் பல புரிந்தவர். சிதம்பரத்திற்கு அருகி லுள்ள மருதூரில் கி.பி. 1823ல் பிறந்தவர். இவர் கல்வி கற்று முருகன் திருவருளைப் பரிபூரணமாகப் பெற்று ஞானமுதிர்ச்சி அடைந்தவர்.

பற்றற்றவராய் சதானந்த சகஜநிட்டை சாதனமுடையவராகப் பலபாடல்களை இயற்றினார். வடலூரில் சமய ஸ்தாபனங்கள் பல நிறுவிச் சமயப் பணி செய்து வந்தார். பின்பு வடலூரை அடுத்த கருங்குழி அருகே மேட்டுக்குப்பம் என்னும் சிற்றூரில் சித்திவளாகத் திருமாளிகையில் சிவத்தியானத்துடன் எழுந்தருளி இருந்து சிவஞானயோக முதிர்ச்சியால் தோன்றிய சோதிவடிவமான அருட்பெருஞ் சோதியைத் தரிசித்தார். பின்னர் செயற்கையுடல் இயற்கை யுடலாகத் திரிவுபடும் சின்மாத்திர சகஜ சமாதியில் இவர் அசைவற இருந்து சற்குருவைச் சந்தித்துத் தமது இந்திரியக் கதவை மூடி மௌன நிஷ்டை கூடி தம் உடலின் ஐம்பொறிகளையும் இயற்கையின் ஐம்பூதங்களோடு கலந்து மறைந்து நித்தியானந்த நிலையடைந்தார்.

வாழ்க! இராமலிங்க வள்ளலார் நாமம்.

**ஆவியொடு காயம் அழிந்தாலும் மேதினியில்**
**பாவியென்ற நாமம் படையாதே - மேவியசீர்**
**வித்தாரமும் கடம்பும் வேண்டா மடநெஞ்சே**
**செத்தாரைப் போலே திரி - பட்டினத்தார்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பகுதி

## கனடா இந்து மாமன்றம் நடாத்தும் தமிழ் மொழி – சமயம் – கவின் கலைப்பாடசாலை

### றிச்மன்ட்கில் ஆலயம்

**சங்கீதா நாகசிவகுமாரன்**

கனடாவில் உள்ள இந்து ஆலயங்களில் மிகப்பெரிய ஆலயம் இதுவாகும். இங்கே விநாயகர், முருகன், வள்ளி, தெய்வயானை, விஷ்ணு, மகாலஷ்மி, ஆண்டாள், துர்க்கை அம்மன், சிவபெருமான், பார்வதி ஆகிய தெய்வங்கள் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றார்கள்.

இங்கே விநாயகர், முருகன், விஷ்ணு ஆகிய தெய்வங்களுக்குத் திருவிழாக்கள் ஒவ்வொரு வருடமும் மிகச்சிறப்பாக நடைபெறுகின்றன. இந்துக்களாகிய நாம் ஆலயத்துக்குச் சென்று இறைவனை வழிபட்டுப் பயன்பெறுவோமாக.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

### சித்திரை வருடப்பிறப்பு

**ஜினித்தா கருணானந்தசிவம்**

சித்திரை வருடப்பிறப்பு தமிழர் சிங்களவர் ஆகிய இரு இனத்தவர்களாலும் கொண்டாடப்படும் திருநாளாகும். சித்திரை மாதம் தமிழுக்கு முதலாம் நாள் புத்தாண்டைக் கொண்டாடுவர். அன்றையதினம் எல்லோரும் புதுஆடை அணிந்து கோயிலுக்குச் சென்று புதிய ஆண்டை வரவேற்றுச் சிறப்பாகக் கொண்டாடுவர். தமிழராகிய நாம் புத்தாண்டு பிறக்கின்ற புண்ணிய காலத்திலே வீடுகளில் பூரண கும்பம் வைத்துத் தீபம் ஏற்றி இறைவனை வழிபடுவோம். புண்ணிய காலத்திலே கைவிசேடம் எல்லோருக்கும் கொடுப்பார்கள். சிறுவர்கள் புதுவருடத்திலே பட்டாசு கொழுத்தி மகிழ்வர். பலகாரங்கள் செய்து உறவினர் நண்பர்களுடன் பரிமாறி மகிழ்வர். இப்புதிய வருடத்திலே எல்லோரும் நன்மையே நடைபெற வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திப்பர்.

### பூக்கள்

**யமுனா மனோகரன்**

நாங்கள் பூமரங்களை வீட்டில் வளர்க்கிறோம்.
பூக்கள் பல நிறங்களில் உண்டு.
சில பூக்களுக்கு வாசனை உண்டு.
சுவாமிக்குப் பூக்களைச் சாத்துவார்கள்.
பூக்களால் சுவாமிக்கு மாலை கட்டுவார்கள்.
பெண்கள் விசேடதினங்களில் பூக்கள் அணிவார்கள்.
சில பூக்கள் பெரிதாகவும் சில பூக்கள் சிறிதாகவும் இருக்கும்.
பூக்களில் பல இனங்கள் உண்டு.
தாமரைப் பூக்கள் தண்ணீரிலே வளரும்.
சில பூக்கள் இரவிலே மலரும்.
வெண்தாமரைப் பூவில் சரஸ்வதி இருப்பாள்
செந்தாமரைப் பூவில் இலக்குமி இருப்பாள்.

### எங்கள் தாய் நாடு

**பிரியா. ர**

எங்கள் தாய் நாடு இலங்கை
எங்கள் தாய் மொழி தமிழ்
எங்கள் நாட்டில் பல இனத்தவர்கள்
வாழ்கிறார்கள். அவர்கள் சிங்களவர், தமிழர்,
முஸ்லீம்கள், பறங்கியர்.
இலங்கை ஒரு அழகான சிறிய தீவு.
இங்கு சிறுபான்மை இனத்தவராகிய தமிழர்
இனப்பிரச்சினை காரணமாகப் பல்வேறு நாடுகளில்
இடம்பெயர்ந்து வாழ்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாத்மாகாந்தி அடிகள்

## இந்திரா கணேசலிங்கம்

காந்தி அடிகள் இந்தியாவில் உள்ள குஜராத்து மாநிலத்தில் போர்ப் பந்தர் என்னும் கிராமத்தில் 1869ம் ஆண்டு ஒக்டோபர் 2ம் திகதி பிறந்தார். இவர் பெற்றோர் இவருக்கு மோகனதாஸ் காந்தி எனப் பெயரிட்டனர். காந்தி என்பது குடும்பப் பெயர். காந்தி பிள்ளைப் பருவம் முதல் தாய் தந்தையர் மீது பக்தி கொண்டிருந்தார். கல்வியைத் தனது ஊரில் கற்றார். கல்வியறிவு ஒழுக்கங்களில் சிறந்த அவருக்குக் காலநடைமுறைக்கு ஏற்றவாறு அவருடைய பெற்றோர் 13ம் வயதிலே அவருக்கு அன்னை கஸ்தூரிபாயைத் திருமணம் செய்து வைத்தனர்.

இவர் சட்டக்கல்வி கற்பதற்காக இங்கிலாந்துக்குச் சென்றார். இங்கிலாந்துக்குச் செல்ல முன் தாயாருக்கு "மது அருந்துவதில்லை" என்றும் "மாமிசம் புசிப்பதில்லை" என்றும் "மறுமாதரை மனதிலும் தொடேன்" என்றும் வாக்குறுதி செய்து கொடுத்திருந்தார். அதன்படி அவர் தன்வாழ்நாள் முழுவதும் ஒழுகி வந்தார். இங்கிலாந்திலே மூன்றாண்டுகள் முயன்று கற்று "பாரிஸ்டர்" பட்டம் பெற்று இந்தியாவுக்குத் திரும்பினார். சிறிதுகாலம் இந்தியாவில் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டார். ஒரு வழக்குக்காகத் தென்னாபிரிக்காவுக்குச் சென்றார். தென்னாபிரிக்காவில் வாழந்து வந்த இந்தியர்களை வெள்ளையர் அரசாங்கம் கொடுமையாகவும் தாழ்வாகவும், நடத்தியதைக் கண்டு கொதித்தார். அவற்றுக்கு விடிவு காண விழைந்தார். சத்தியாக்கிரக வழியில் நின்று அன்பை அடிப்படையாகக் கொண்டு பகைவனை நேசித்து பலாத்காரத்தில் ஈடுபடாமல் கொடுமைகளை அகற்ற முனைந்து வெற்றி கண்டார்.

அங்கிருந்து இந்தியாவுக்குத் திரும்பினார். அப்போது இந்தியா விடுதலை இழந்து தாழ்வுற்று வறுமை மிஞ்சி பாழ்பட்டு நின்றது. இந்திய சுதந்திரத்திற்காக தியாகிகள் பலர் உழைத்தனர். காந்தியடிகளும் தம்மை அவர்களுடன் இணைத்துக் கொண்டார். பலமுறை சிறை சென்றார். ஏழை மக்களின் வாழ்க்கையை உயர்த்தத் திடசங்கற்பம் பூண்டார். கதர் இயக்கம் முதலிய பல அமைப்புகளைத் தொடங்கினார். அவரது முயற்சியால் இந்தியா 1945இல் ஆகஸ்ட் 15இல் சுதந்திரம் பெற்றது.

இந்திய வரலாற்றில் இணைந்து கொண்ட காந்தி மகான் 1948 ஜனவரி 30ம் நாள் நாதுராம் விநாயகக் கோட்சே என்பவனால் பிரார்த்தனைக் கூடத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். இவ்வாறு தமக்கென வாழாது பிறருக்காக வாழும் உத்தமனாகக் காந்தியடிகளை மக்கள் எல்லோரும் மகாத்மா காந்தி என்று அழைப்பதுடன் அவர் மக்களின் மனங்களில் அழியாத இடம்பெற்றுவிட்டார்.

# கனடா நாட்டில் ஓர் இந்து மாமன்றம்

## மதுரா – தி

**"கனடா நாட்டிலோர் இந்து மாமன்றம் கருத்தைக் கவருதடி - அது**
**காட்டும் பணியும் சைவநீதியும் கலங்கரை விளக்கமடி" - அதுகலங்கரை விளக்கமடி**

உலகின் பல நாடுகளிலும் பல இந்துசமய மன்றங்கள் தோன்றி, சமயப் பணிகள் செய்து வருகின்றன. சமயம் என்பதற்குச் "சமை" பகுதியாகும். உடலை வளர்க்க உணவைச் சமைப்பது போல எல்லாம் வல்ல இறைவனை அடைவதற்கு வேண்டிய பணிகளைச் சமைப்பது அல்லது பக்குவப்படுத்துவதே சமயம் எனப் பெரியோர் கூறுவர்.

இந்தப் பெரும் பணியைக் கனடா இந்து மாமன்றம் செய்துவருவது குறித்து அகில உலகச் சைவத்தமிழர்கள் அனைவரும் பாராட்ட வேண்டும், பாராட்டியும் வருகின்றனர். கனடா இந்து மாமன்றம் சமய விசேடதின விழாக்களையும், சமயாசாரியர் விழாக்களையும் செய்தும், சைவ சமயப்பாடசாலைகளை நிறுவி, தமிழ் - சமயவகுப்புக்களையும் தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் மூலம் நடாத்தியும் வருகின்றது. மேலுஞ் சிறப்பாகச் சைவசமயம் சம்பந்தமான நல்ல கட்டுரை கவிதைகளை ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதி "சைவநீதி" என்னும் பெயரில் சிறந்த பத்திரிகை ஒன்றைச் சமயவளர்ச்சிக்காக வெளியிட்டு வருகின்றது. இம்மன்றத்தின் ஸ்தாபகரும், ஆரம்பகாலத் தலைவரும் பண்டிதர். வீ. வ. நல்லதம்பி ஆவர். சைவநீதியின் ஆசிரியரும் அவரே. சைவத் தமிழுலகம் அவரை என்றும் நினைவு கூரும். கனடா இந்து மாமன்றம் ஆற்றிவரும் பணிகள் சிறக்க மேலும் ஒத்துழைப்போம். சைவசமயத்தை வளர்ப்போம். சமயம் மாறுபவர்களைத் தடுப்போம். உலகமெங்கும் உள்ள சைவசமய நிறுவனங்களோடு இணைந்து எங்கள் தெய்வச் சமயத்தைக் காப்போம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சித்திரை வருடப்பிறப்பு

ராஜி கோபால்

சித்திரை மாதம் பிறந்தால் தமிழ் மக்களாகிய இந்துக்களுக்கு மனதில் ஒரு குதூகலம் ஏற்படுகின்றது. ஏனெனில் சித்திரை மாதம் முதலாம் திகதி தமிழர்களாகிய இந்துக்களின் புத்தாண்டு தினமாகும். கனடா பல இனமக்கள் வாழும் நாடாகும். இங்கு ஒவ்வொரு இனமக்களும் தங்கள் புத்தாண்டுகளை வெவ்வேறு காலங்களில் கொண்டாடுகிறார்கள்.

தமிழர்கள் இப்புதுவருடக் கொண்டாட்டத்தை மரபுவழியாகக் கொண்டாடி வருகின்றார்கள். புதுவருடம் பிறக்கிற நேரத்திற்கு முன்பு எல்லோரும் மருத்துநீர் வைத்து நீராடி, புத்தாடை அணிந்து கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்வார்கள். அன்று கோயில்களில் விசேட பூசைகள் நடைபெறும். புதுவருடம் தமக்கு எல்லாவகையிலும் சிறப்பாக அமைய வேண்டுமென வேண்டிக் கொள்வர். அத்துடன் தாய், தந்தையர், பெரியவர்களின் ஆசீர்வாதங்களையும் பெறுவர்.

புதுவருடப்பிறப்பன்று சுப நேரத்தின் போது "கைவிஷேடம்" கொடுத்தலும் பெற்றுக் கொள்ளுதலும் வழக்கத்தில் இருந்து வருகிறது. சில மக்கள் பெரியவர்களிடமிருந்தும், இராசியுள்ளவர்களிடமிருந்தும் கைவிஷேடம் பெறுவர். அவ்வருடம் முழுவதும் தங்கள் கையில் பணப்புழக்கம் ஏற்பட வேண்டுமென்பதே அதற்குக் காரணமாகும்.

அன்று அம்மா வீட்டில் பொங்கல் செய்வதுடன் நல்ல உணவுகள் சமைத்து எல்லோரும் உண்டு களித்து மகிழ்வதுடன் உற்றார் உறவினர் வீடுகளுக்கும் சென்று உறவாடி வருவோம். அன்றைய தினம் கலை நிகழ்ச்சிகள் விளையாட்டுப் போட்டிகள் போன்ற பல சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

தமிழர்களின் கலை, பண்பாடு பாரம்பரியம் என்பன இப்புத்தாண்டில் பிரதிபலிக்கின்றது. மக்கள் சிந்தனையில் தர்மம், நீதி உண்மை போன்ற சிறந்த செயற்பாடுகளை நிலை நிறுத்த வேண்டும். இவ்வாறு எமது புத்தாண்டை சிறப்பாகக் கொண்டாடி மகிழ்வோம்.

# நாய்

யமுனா

நாய் ஒரு நன்றியுள்ள மிருகம்
நாய்களில் பெண் நாய் குட்டி ஈனும்.
நாய் இரவு வேளைகளில் வீட்டைக் காக்கும்.
நாய் நாங்கள் கொடுக்கும் உணவுகளை உண்ணும்.
நாய் எங்கள் வீட்டின் செல்லப் பிராணியாகும்.

# அப்பா

சுரேஷ்

எனது அப்பாவின் பெயர் சுகுமார்.
எனது அப்பா சமையலில் உதவி செய்வார்.
எனது அப்பா உடுப்பு வாங்கித் தருவார்.
எனது அப்பா அன்புள்ளவர்.
எனது அப்பா காசு தருவார்.

# New Year

**N.VIMUKTHAN**

We celebrate new year in April. On that we wear new clothes and goto the temple. We make sweets and short eat and enjoy eating with relatives. Parent give their money that day for good luck. We visit relaiions and friends on that day. All the temples will be crowed with devotees. On the phone we wish our relatives a happy new year

187279

# HINDUISM

*By. Akanya Sivanandasingam*

More than 5000 years ago Hinduism, one of the world's oldest religions, began in India. Hinduism has no single founder but grew gradually from early beliefs. Today there are many different Hindu groups or sects. They may worship the same Hindu gods, but they do not all share the same religious beliefs. Nevertheless, most Hindus believe that people have a soul which does not die with them. Instead the soul moves from body to body. People who live good lives are reincarnated, or born again in a higher state. Bad deeds lead to rebirth as an animal or an insect. It is possible to escape from the need to be born again by improving with each life. This is called reaching the state of Moksha. Hindus are born into their rank in society. Rules restrict how people of different castes may mix and marry. Today there are about 660 million Hindus in the world. They live mainly in and India and East Africa



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலெழுத்துக் கவிதை

தில்லை. பிரணவன்

1. அமுத மொழியும் அநாதி மொழியும் எங்கள் தமிழ்மொழியே
ஆதிச் சமயம் அன்புச் சிவனும் அணைந்த இந்துமதம்
இந்த இரண்டும் எமது இருகண் என்றுங் காப்போமே
ஈந்த சிவனை இணைந்த சக்தியை என்றுந் தொழுவோமே

2. உலகங் காக்கு முத்தமன் தந்த சமயம் சைவமதம்
ஊழிக் காலம் வரையும் போற்றி உவந்தே வளர்ப்போமே
எங்கள் தமிழும் எங்கள் சைவமும் என்றும் வாழ்ந்திடவே
ஏழை யாக வாழ்ந்திட் டாலும் என்றும் போற்றுவமே

3. ஐயந் திரிபு அற்ற அறிவை அளிக்குஞ் சைவந்தான்
ஒய்யா ரமாக உயர்ந்த நெறியில் உய்க்கும் இந்துமதம்
ஓயா துலகை நாளுங் காக்கும் உண்மைச் சமயமதே
ஔவை தன்னைப் பாட வைத்ததும் அந்தத் தமிழ்த்தெய்வம்

4. கல்லுங் கனியும் பாடல் கொண்ட நமது சைவநெறி
செல்லும் போதும் துணையாய் வருமே சிவனார் சிவமயமே
தில்லைக் கூத்தன் திருமால் பிரமன் தேவ ரவன்றானே
நல்லோ னவனை நாங்கள் நண்ணி நற்கதி சேர்வோமே!

5. பற்றுக் கொண்டே பாடி யாடின் பரமன் பதம்பெறலாம்
முற்றும் பெற்ற முதல்வன் பாதம் முன்னித் தொழுதுநின்றே
வற்றா அன்பும் பற்றுங் கொண்டால் வலிய வருவானே
மற்றோர் தெய்வம் பிறிது முண்டோ மகிழ்வாய்ப் போற்றுதுமே

6. அன்னை தமிழே அப்பா சைவம் அன்பா லணுகுங்கள்
உன்னை உணரத் தகுதி பெற்றது உந்த இரண்டுந்தான்
பின்னைப் பிறவி யறுக்க வல்லது பேணில் என்றென்றும்
முன்னை வினையின் முடிச்சு விழ்ப்பதும் முடிவில் லாதவனே

7. தமிழைப் போற்று சைவம் போற்று தருமந் தலைகாக்கும்
அமிழ்துந் தமிழே அன்புஞ் சிவமே சைவஞ் சாருங்கள்
ஊழி முதல்வன் ஒருவன் சிவனே உணர்ந்து கொள்ளுங்கள்
வாழ்வுச் சமயஞ் சைவந் தானே வழியைத் துணைக்கொள்க!

8. சைவம் சமயந் தெய்வம் சிவனார் உய்ய வழிதருவார்
ஐவர் குரவர் அறிவுத் தொண்ட ராயோர் தனைச்சார்க
பொய்வந் துழலும் சமயந் தன்னில் போய்ச்சென் றுழலாதே
தெய்வச் சமயம் சைவநீதி சிவனை வணங்கிடுவாய்

# பாட்டி காட்டிய பாதை

கேதுஷா. ர

வீட்டின் ஓர் அறை சாமி அறை. அங்கே ஒரு பெரிய விநாயகர் படம். எனது பாட்டி நாளாந்தம் ஒரு மணி நேரம் படத்தின் முன் இருந்து வழிபாடு செய்வார். என்னையும் கூடவே வைத்துக் கொள்வார். நைவேத்தியமாக ஒவ்வொருநாளும் ஒரு இனிப்பைப் படத்தின் முன்பே வைப்பார். மெல்ல மெல்ல என்னையும் பாட வைத்தார். இறுதியிலே இனிப்பையும் தருவார். இனிப்புக்காகச் சென்று பழக்கப்பட்ட கால்கள் இன்று ஏதோ ஒரு சக்தியினால் கவரப்பட்டு அதே இடத்தை நாடுகின்றன. சில நிமிடங்கள் அப்பரம்பொருளோடு செலவாகின்றன. பாட்டி வென்று விட்டாள்.

# வார இறுதிச் சமய வகுப்புக்கள்

லோகஜ்ஸ்வரியன். இ

நான் ஒரு சைவனாவது எப்போது?

பூவும் பொட்டும் நீற்றுப்பூச்சும் அடையாளமாகி விடலாம். ஆனால் சமய அறிவு வேண்டாமா? வீடும் ஆலயமும் இதை நிறைவேற்றுமா? இல்லை, வார இறுதிச் சமய வகுப்புகளே எமக்கு உதவுகின்றன. சமயம் மோட்டார் வாகனத்தின் ஸ்ரியரிங் போன்றது. சரியான பாதையில் இட்டுச் செல்வது அதுவே. அது பிழைத்தால் முட்டி மோதி அழிவே ஏற்படும். எனவே வாழ்க்கை என்னும் எமது நீண்ட வழிப்பாதையை வழிநடத்தச் சமயம் அவசியம். அனுபவமும் அறிவும் நிறைந்த எமது சயம ஆசிரியர்கள் ஊனக்கண்ணைத் திறந்து உண்மைப் பொருளை உணர்த்தும் எமது சமயத்தை எமக்குச் சொல்லித் தருகிறார்கள்.

# சூரியன்

பிரன்னா

சூரியன் காலையில் உதிக்கும்.
சூரியன் உதிக்கும் திசை கிழக்கு.
சூரியன் வெளிச்சம் கொடுக்கும்.
சூரியன் மாலையில் மறையும்.
சூரியன் மறையும் திசை மேற்கு.
சூரியன் மறையும் பொழுது அழகாய் இருக்கும்.
சூரியன் இல்லாவிட்டால், எப்பொழுதும் இருளாய் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநள்ளாறு வரலாற்றுச் சிறப்பு

திருமதி. சரசலக்குமி கார்த்திகேசு - அளவையூர்

**"உயர்ந்தவனுக்கொடு திரிந்துலக மெல்லாம்
பயந்தவன் நினைப்பரிய பண்பனிடமென்பார்
வியந்தமரர் மெச்சமலர் மல்கு பொழிலெங்கும்
நயந்தரும் வேதவொலி யார் திருநள்ளாறே"
திருஞானசம்பந்தர்-**

அழகு கொலுவிருக்கும் திருக்கோயில்கள் மலிந்த திருநாடு தமிழ்நாடு. அவற்றுள் சிவத்திருத்தலங்களோ எண்ணிறந்தவை. இதனுள் சிலவற்றைத் தேர்ந்து சிவமுத்திரையிட்டுத் தமிழுலகம் உய்யுமாறு சமயாசாரியர்களால் போற்றியருளச் செய்யப் பெற்றவையே மிகச் சிறந்தவையாகும். அத்தலங்களுள் அதி அற்புதங்கள் நிகழ்த்திய தலங்கள் மிகச் சிறந்தவையாகும். அற்புதங்கள் நிகழ்ந்த அருஞ்சிறப புடைய அத்தலங்களுள் சைவசமயத்தின் பெருமையைப் பாண்டி நாட்டின் தலைநகரிலே அனல் வாதத்தால் நிலை நிறுத்திய "பச்சைப் பதிகம்" எனப்படும் "போக மார்த்த பூண் முலையாள்" என்னும் திருப்பதிகம் பெற்ற திருநள்ளாற்றுத் தலம் முதன்மைச் சிறப்புடையது.

திருநள்ளாறு என்னும் இத்திருத்தலம் திருவருட் டிறத்தால் மிகவும் புகழ்பெற்று விளங்கும் திருத் தலமாகும். இத்திருத்தலம் காவிரியின் தென்கரையில் அமைந்து விளங்கும் தலங்களில் ஒன்றாகும். இத்தலத்தின் வடக்கே நூலாறும் வாஞ்சி ஆறும் தெற்கே அரிசிலாறும் அதிலிருந்து பிரியும் கால்வாய்களும் இருக்கின்றன. வடக்கிலும் தெற்கிலும் ஆறுகள் ஓட அவற்றின் நடுவே அமைந்துள்ள காரணத்தால் 'நள் + ஆறு' நள்ளாறு என்னும் பெயர் பெற்றுச் சிறப்புக் குறித்த அடைமொழியோடு 'திருநள்ளாறு' என வழங்கப் பெற்றது.

ஆறுகளின் நடுவே அமைந்து விளங்கும் இவ்வற்புதத்தலம் காரைக்காலிலிருந்து மூன்று மைல் தொலைவில் அமைந்துள்ளது.

**தலஅமைப்பு:** திருநள்ளாறு இயற்கை வளத்தால் சூழப்பெற்ற கவின் பெருஞ்சிறப்புடையது. நாற்புறமும் விளைவயல்களும் ஆறுகளும், குளங்களும் வாய்க்கால் களும் அமைந்து தலத்தின் இயற்கை வனப்பையும் அதன் சிறப்பையும் பெருக்குகின்றன. இப்பதியில் நடுநாயகமாக விளங்குவது திருக்கோயில். இத்தலத் தைச் சோலைகள் சூழ்ந்துள்ளன என்பதை 'பொழில் முயங்கிய நள்ளாறே' என ஞானசம்பந்தர் போற்றியருளினார்.

**'ஏடுமலி கொன்றையர விந்துவிள வன்னி
மாடவல செஞ்சடைய மைந்தனிட மென்பர்
கோடுமலி ஞாழல் குர வேறுசுர புன்னை
நாடுமலி வாசமது வீசிய நள்ளாறே"**

என்னும் பாடலால் இறைவனோடு இணைந்த சோலை வளத்தைச் சிறப்பித்துப் பாடுகின்றார். இத்தலத்திலுள்ள தீர்த்தங்களும் விசேடமானவை. இத்தலத்தில் திக்குப் பாலர்கள் எட்டுப்பேர்களாலும் அமைக்கப் பெற்ற எட்டுத் தீர்த்தங்கள் உள்ளன. சந்நிதிக்கு எதிரே பரம தீர்த்தமும், அம்மன் சந்நிதிக்கு எதிரே வாணி தீர்த்தமும், அகத்தியர் தீர்த்தமும், வடமேற்கில் நளதீர்த்தமும், அதற்கு அருகில் நளகூபமும் உள்ளன.

இத்திருத்தலம் ஆதியில் தருப்பைக் காடாக இருந்தமையாலும் இறைவன் அதன் அடியில் எழுந்தருளியமையாலும் தருப்பைகளே இத்தலத்துப் புனித மரமாகும்.

ஆதியில் பிரமன், திருமால், இந்திரன் அட்டதிக்குப் பாலகர்கள் முதலிய தேவர்களும் அகத்தியர், புலத்தியர் முதலிய முனிவர்களும் அருச்சுனன், நளன், கலிங்கன் வருடராகன் முதலிய மன்னர்களும், அன்னப்பறவையும் இத்தலத்தில் இறைவனைப் பூசித்துப் பேறு பெற்றனர்.

நின்றசீர் நெடுமாறன் என்னும் பாண்டிய மன்னன் மதுரையம்பதியைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டை ஆட்சி செய்த காலத்தில் அந்நாட்டு மக்கள் சமண சமயத்தைத் தழுவியிருந்தனர். "குடிமக்கள் எவ்வழி அவ்வழிகோன்" என்பதற்கிணங்க மன்னனும் சமண சமயத்தைத் தழுவினான்.

ஆனால், மன்னனின் தேவி மங்கையற்கரசியும் அமைச்சர் குலச்சிறையாரும் சைவர்களாகவே இருந்தனர். சமணர்கள் பல வன்செயலினால் சைவ சமயத்தவரைக் கொடுமைப்படுத்தினர். பாண்டிமா தேவியும், அமைச்சரும் தாங்கள் சைவநெறியில் இருப்பது மன்னருக்குத் தெரியாவண்ணம் நடந்து கொண்டனர். அந்நிலையில் சீர்காழிப்பிள்ளையாகிய திருஞானசம்பந்தரின் செயற்கரிய செயல்களையும்..அவர் திருமறைக்காட்டில் இருப்பதையும் கேள்வியுற்று திருஞானசம்பந்த சுவாமிகளை அழைத்து வந்தனர்.

திருஞானசம்பந்தரின் வருகையை அறிந்த சமணர்கள் அஞ்சி நடுங்கினர். அவர்களது அச்சம் பொறாமையாக உருவெடுத்து வஞ்சனைக்கும் சூழ்ச்சிக்கும் வித்திட்டது. சமணர்கள் அரசனின் ஆதரவை வஞ்சகமாகப் பெற்று திருஞானசம்பந்தர் தம் அடியார்களுடன் இருந்த மடத் திற்குத் தீயிட்டனர். அதனை அறிந்த ஞானசம்பந்தர், அரசு திருந்தினால் நாடு திருந்தும் எனத் திருவுளம் கொண்டு பாண்டிய மன்னனைத் திருத்த வேண்டி

**"செய்யனே திருவாலவாய் மேனிய
ஐயனேயஞ்ச லென்றருள் செய்யனைப்
பொய்ய ராமமணர் கொளுவுஞ்சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே"**

எனப் பாடி இறைவன் திருவருளை வேண்டினார். அந்நிலையில் பாண்டியனை வெப்பு நோய் பற்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னன் துடித்தான். அதைக் கண்ட சமணர்களும் சிவனடியார்களும் மன்னனின் வெப்புநோயைப் போக்குபவர் சமயமே உண்மைச் சமயம் என முடிவு செய்து மன்னனின் நோயைப் போக்க முற்பட்டனர்.

திருஞானசம்பந்த சுவாமிகள் மன்னனின் வலப் பக்கத்தில் இருந்து "மந்திரமாவது நீறு" என்னும் திருநீற்றுப்பதிகத்தைப் பாடித் திருநீற்றைப்பூச வலதுபக்க நோய் நீங்கியது. சமணர்கள் தம் ஆருக மந்திரத்தைச் சொல்லி மயிற்பீலியால் இடது பக்கத்தை வருடினர். நோய் முன்னிலும் மிகுந்து மன்னனை வாட்டியது. மன்னரும், அமைச்சரும் அது கண்டு ஞானசம்பந்தரே இடதுபக்க நோயைப் போக்க வேண்டும் என வேண்டினார். ஞானசம்பந்தர் மன்னன் விருப்பப்படி திருநீற்றைத் தமது திருக்கரத்தில் எடுத்து திருநீற்றுப் பதிகத்தை ஓதிப் பூசிய பொழுது மன்னனின் வெப்பு நோய் மட்டுமன்றி அவனின் கூனல் நோயும் நீங்கப் பெற்று எழுந்தான்.

சமணர்கள் தோற்றுப் போயினர். பின்பும் சம்பந்தரை வாதுக்கழைத்துத் தத்தம் மந்திரங்களை ஏட்டில் எழுதித் தீயில் இடுவது என்றும், யாருடைய ஓலை தீயில் எரியுறாது இருக்கின்றதோ அவர் மந்திரமும், சமயமும், கடவுளும் உயர்ந்தவை என்பதை ஏற்றுக் கொள்வது என முடிவு செய்தனர். அவ்வாறே தீயை வளர்த்து சமணர்கள் மந்திரத்தை எழுதித் தீயிலிட அது கருகிச் சாம்பலாயிற்று. திருஞானசம்பந்தசுவாமிகள் திருவருள் காட்டிய வழியிலே முன்பு பல தலங்களிலே பாடிய திருமுறை ஏடுகளைப் பிரித்து "போகமார்த்த பூண்முலையாள்" என்னும் இத்தலத்துப் பதிகத்தை எடுத்துத் தீயிலிட்டார். அந்த ஏடு எரியாது பச்சையாக இருந்தது. சைவசமயமே உண்மையானதென்றும், சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்பதையும் நிலை நிறுத்தியது. இவ்வாறு சைவசமயத்தைக் காத்த பெருமையாகிய "பச்சைப் பதிகத்தை" ப் பெற்ற தலம் திருநள்ளாறு எனப் பெயர் பெற்றது.

**திருக்கோயில்:-**

இத்திருக்கோயிலைச் சுற்றிலும் அகழி அமைந்திருக்க வேண்டும். நள்ளீசரர் சந்நிதியிலும் கோயிலின் மேற்குப் புறத்திலும் அகழிதூர்த்து நிலப்பரப்பாகக் காணப் படுகின்றது. அகழியின் உட்புறத்தில் நாற்புறமும் உயர்ந்த மதில்கள் உள்ளன.

இத்திருக்கோயிலில் இடையனார் கோயில் கற்பக விநாயகர், நள்ளீஸ்வரர், திருக்காளத்திநாதர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், விநாயகர் அம்பிகை தர்ப்பாரண்ய சிவலிங்கம், நந்தி, சுபபிரமணியர், வள்ளி தெய்வயானை, பைரவர், சனீஸ்வரன் கோயில்கள் அமைந்திருக்கின்றன.

சனீஸ்வர பகவான் சிறந்த தெய்வமாக வணங்கப்படுகிறார். இப்பெருமான் சந்நிதி மிகவும் விசேடமானது. பெரும்மகிமை வாய்ந்தது. எப்போதும் மக்கள் கூட்டமும் வழிபாடுகளும் தலதீபங்களும் நிகழ்ந்த வண்ணம் இருக்கும். இத்தலத்திற்கு மிகவும் பெருமை சேர்ப்பது சனீஸ்வர பகவானின் திருவருட்பெருக்கே. இப்பெருமான் இத்தலத்தில் அனுக்கிரக மூர்த்தியாகத் திகழ்கின்றார். இவர் நவக்கிரகங்களில் ஒருவர். இவரால் இத்தலத்திற்குச் சனீஸ்வர க்ஷேத்திரம் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு.

மன்னன் முதல் முனிவர் வரையிலான மக்கள் அனைவரும், இராமன், கண்ணன், இந்திரன் முதலிய தேவர்களும் இவருடைய ஆணையின் வண்ணம் இன்ப துன்பங்களை அனுபவித்தனர்; அனுபவிக்கின்றனர். எனவே, தான் மக்கள் அனைவரும் சனிபகவானுடைய கோபத்தைத் தடுக்கவும் கருணையைப் பெறவும் மிகுந்த பக்தியுடன் வழிபாடுகளும், அபிடேக ஆராதனைகளும் இப்பெருமானுக்குச் செய்து வருகின்றனர். சனிபக வானுக்கு 'மந்தன்' 'சனைச்சரன்' என்னும் பெயர்கள் உண்டு. யமன் தன்னுடைய இரண்டாம் தாயின் மீது கொண்ட கோபத்தால் சனியை அடித்தான் அதனால் சனியின் கால் நொண்டியாயிற்று. தட்சயாகத்தில் சனி ஒரு கண்ணையிழந்தார். இது சனிபகவானின் வரலாறு. சனிபகவான் நான்கு திருக்கரங்களுடையவர். வலக் கரங்களில் வரதான முத்திரையும் பாம்பும் கொண்டவர். இடக்கரங்களில் வில்லும் சூலமும் தரித்தவர். இவருக்கு வாகனம் காகம்.

இப்பெருமானின் தேவி ஜியேஷ்டாதேவி சனிபக வானுக்கு எள், சமித்து, வன்னி, கருநீலமலர் கசப்புச் சுவை ஏற்புடையன. இவருக்கு நண்பர்கள் புதன், குரு, சுக்கிரன் ஆகியோர், பகைவர்கள் சூரியன், சந்திரன், செவ்வாய் ஆகியோர் நவக்கிரகங்களில் ஒருவரான சனிபகவான் ஜாதகருக்கு ஆயுள்காரகனாகத் திகழ்பவர்.

இத்திருத்தலம் சிவத்தலமாயினும் சனிபகவான் அனுக்கிரக மூர்த்தியாக விளங்குவதால் சனீஸ்வரத் தலமாகவும் விளங்குகின்றது. இத்தலத்தில் சனி பகவானுக்கே முக்கியத்துவம். கோபுரவாயிலின் வடபால் அமைந்துள்ள சனிபகவான் திருச்சந்நிதியில் எப்போதும் மக்கள் கூட்டம்தான். மகர, கும்ப ராசிகளுக்குச் சனிபகவான் அதிபதியாதலினால் சந்நிதி முன்னால் மகர, கும்பராசிகளின் உருவங்கள் உள்ளன. சனி பகவானுக்குத் தங்கத்தாலான காக வாகனம் உள்ளது. இச்சந்நிதியில் நெய்த்தீபவழிபாடு விசேடம். இத் திருநள்ளாறு தலத்தில் இறைவனைப் பூசித்து வழிபட்டுப் பேறு பெற்றவர் பலர். இந்நள்ளாற்றீசுவரப் பெருமானை,

**சுந்தரமூர்த்தி சுவாமிகள்**

மங்கை பங்கனை மாசிலாமணியை
வான நாடனை யேனமோடன்னம்
எங்கு நாடியுங் காண்பரியானை
யேழை யேற்கெளிவந்த பிரானை
அங்க நான்மறையானிறை கின்ற
வந்த ணாளரடியது போற்றும்
தங்கள் கோனை நள்ளாறனை யமுதை
நாயினேன் மறந் தென்னினைக்கேனே

எனப் போற்றிப் பாடிப் பரவுகின்றார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை ஆசிரியர்கள் கௌரவிக்கப்படல்

# பகவத் கீதை

சிவஶ்ரீ. சுவாமிநாத சோமேஸ்வரன் குருக்கள்

பகவத்கீதை இந்து மதத்திற்குரிய நூல்களுள் ஒன்று. கிறிஸ்தவர்களுக்குரியது பைபிள். இஸ்லாமியர் களுக்குரியது குர்ஆன். அம்மாதிரி இந்துக் களுக்குரிய நூல்களில் ஒன்று பகவத்கீதை. பரந்த எண்ணத்துடன் எண்ணிப்பார்த்து ஏற்றுக் கொள்ள வேண்டியது இது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உலக மக்களின் நன்மைக்காகத் திருவாய் மலர்ந்த அறிவுரையே பகவத்கீதையாகும். பகவத்கீதை என்பது என்ன? பகவத் என்பது இறைவனையும் கீதை என்பது பாடலையும் குறிக்கும். தெய்வப்பாடல் என்பது இதன் பொருளாகும். கீதையை உபதேசம் செய்தது கீதோபதேசம் ஆகும்.

இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களின் சாரத்தைக் கொண்டவை உப நிடதங்கள். வேதாந்தம் என்று அவை சொல்லப் படும். வேதங்களின் முடியாக — முடிவாக விளங்கும் உபநிடதங்கள் போன்றதே பகவத்கீதை. எனவே, இதுவும் உபநிடதம் எனப்படுகிறது. எல்லா உபநிடதங்களிலும் உள்ள சாரம் கீதையில் இருக்கின்றது. கீதையைப் படித்தால் உபநிடதக் கருத்துக்களை எல்லாம் அறிந்து கொள்ளலாம்.

பாரதப்போர் நடைபெற்ற காலத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவானால் போர்க்களத்தில் வைத்து அருச்சுனனுக்கு ஏற்பட்ட மனக்கிலேசங்கள்— சந்தேகங்களைத் தெளிவுபடுத்த உபதேசிக்கப்பட்டது இந்தக் கீதோபதேசம். இதனால் அருச்சுனன் தெளி வடைந்து தொடர்ந்து போரிட்டு வெற்றி யீட்டியதாகப் பாரதக்கதை கூறுகிறது. மனித வாழ்க்கைக்கு நல்வழி காட்டுகின்ற உயர்ந்த சிறந்த ஆன்மீக கருத்துக்களைக் கூறும் நூல் பகவத் கீதை.

நல்லவர்களைக் காப்பதற்கும் கெட்டவர்களைக் களைந்து ஒடுக்குவதற்கும் தர்மத்தை நிலை நாட்டுவதற்கும் யுகங்கள் தோறும் நான் அவதரிக்கின்றேன் என ஸ்ரீகிருஷ்ண பகவான் கீதையிலே கூறுகின்றார். இந்த உலகின் அனைத்தும் 'தானே' என்பதைக் கூறுகின்றார். இதையே திருநாவுக்கரசு சுவாமிகள் தம்முடைய திருமுறையில் அப்பன்நீ அம்மைநீ அய்யனும்நீ அன்புடைய மாமனும் மாமியும்நீ — என்று தொடங்கும் தேவாரத்தில் பாடியுள்ளார்.

இறைவனை வழிபடுவதற்கு உண்மையான அன்பே வேண்டும். உள்ளன்பு இல்லாமல் எவ்வளவு செய்தாலும் இறைவன் அதை ஏற்கமாட்டார் என்பதைத் திருநாவுக்கரசு சுவாமிகள் சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்—— என்ற பதிகத்தில் பாடுகின்றார். இதையே ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதையில் கூறுகின்றார், "யார் எனக்கு இலை, மலர், கனி அல்லது நீரைப் பக்தியோடு படைக் கிறார்களோ அந்தத் தூயஅன்பை ஏற்றுக் கொள்கிறேன்'' என்று.

உண்மையான ஆன்மீக நோக்கமுடைய தெய்வபக்தியாளன் எதையும் இறைவன் செயலாகவே கொள்கிறான் அவனுக்கு வரும் நன்மை தீமை அனைத்தும் இறைவன் திருவுளப்படி நடப்பதாகக் கொள்கிறான். அதனால் ஒரு செயல் நன்று மறுசெயல் தீது என்று எடுத்துக் கொள்வதில்லை. தர்மம், அதர்மம் இரண்டையும் இறைவன் செயல் என்றே கொள்கிறான். இதனை மாணிக்கவாசக சுவாமிகள் நன்றே செய்வாய் பிழை செய்யாய் என்னும் தொடரால் நமக்கு உணர்த்துகின்றார்.

இறைவனைச் சரணடைய வேண்டுமென்பதைச் சைவசமயம் கூறுகின்றது. வேதாந்தக் கருத்தும் இதுவே. முழுமையான சரணாகதியைப் பகவான் இறுதியாகக் கீதையிலே உணர்த்தி முத்திக்கு வழிகாட்டுகின்றார். தர்மங்களையெல்லாம் அறவே தியாகம் செய்துவிட்டு என்னையே சரணடைக. பாவங்கள் அனைத்திலுமிருந்து உன்னை நான் விடுவிப்பேன் என்கிறார் ஸ்ரீ கிருஷ்ண பகவான்.

ஒவ்வொரு இந்துவும் பகவத் கீதையைப் படிக்க வேண்டும். எனவே, ஆன்மீக கருத்துக் களையும் உணர்வுகளையும் வளர்த்து இறைவனை அடைவதற்குரிய மார்க்கங்களைப் பின்பற்று வோமாக.

'பரித்ராணாய ஸாதூனாம் விநாஷய துஷ்க்ருதாம்
தர்மஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே'

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி

---

தமிழன் இல்லாத நாடில்லை. ஆனாலும்
தமிழனுக் கென்றொரு நாடில்லை!

சைவத்தின் மேலொரு சமயமில்லை
சைவத்திற் கிணையான சமயமுமில்லை
சிவத்தமிழன்

வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல. –திருக்குறள்

அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும் –திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லத்தில் இறைவனைக் காணலாம்

சாமி. அப்பாத்துரை

**அ**ண்மையில் தமிழ்க்கடை ஒன்றிற்குச் சென்றிருந்தபோது விக்னம் தீர்க்கும் விநாயகப் பெருமான் திருவுருவம் தாங்கிய கலண்டர் ஒன்று தரும்படி கேட்டேன். அந்தக் கடை உரிமையாளர் தந்த பதில் ஒரு பேரிடியாக இருந்தது. நாங்கள் சுவாமிப்படம் தாங்கிய கலண்டர்களை மக்கள் சிலரின் வேண்டுகோளுக்கிணங்கத் தயாரிப்பதை நிறுத்தி விட்டோம். வதிவிடங்களில் வருடாவருடம் சுவாமிப்படங்கள் தாங்கிய கலண்டர்களை வைக்க இடம் இல்லை. அந்தப் படங்களைக் குப்பை கூளங்களுடன் எறியவும் மனம் வருவதில்லை. இந்நிலையில் சுவாமிப்படங்கள் இல்லாத கலண்டர்களைத் தயாரித்துத் தாருங்கள் என்றார் களாம். அவர்கள் கருத்தில் ஒரு நடைமுறைச்சிக்கல் தெட்டத் தெளிவாகத் தென்படுகிறது.

வீடுகளில் இருந்து வசித்துப் பழக்கப்பட்டவர்கள் நம்மவர்கள். வீடுகளின் தாய் அறையெனப் பெரிய அறை அமைத்து அதில் சுவாமிப் படங்களும், நெற்களஞ்சியமும் சேர்ந்து திருமகள் கடாட்சம் பெற்ற வீடு என நாட்டின் நிதிநிலையமாக அவ்வறை திகழ்ந்து வருகிறது. ஏனைய அறைகள் பரிமா ணத்தில் சற்றுச் சிறியனவாகவே அமைகின்றன.

கனடாவில் உயர்மாடிக் கட்டடங்களில் எம்மவர்களில் மிகப் பெரும்பான்மையானோர் வசிக்கிறார்கள். அவர்களுக்குக் கிடைக்கும் அறைகளோ ஓரிரண்டு. அதில் சுவாமிப்படத்தை வைத்துப் பெண்கள் தூங்க முடியாதநிலை. இந்நிலையில் சுவாமிக்கென அறை ஒதுக்கும் வாய்ப்பு இல்லை.

சிறிய சுவருடனான அலுமாரி **(closet)** யில் மேல்தட்டில் பாவனைக்குத் தேவையற்ற ரைஸ்குக்கர், வானொலிப்பெட்டிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. கீழ்த்தட்டில் பழைய உடுப்புகள் காணப்படுகின்றன. நடுத்தட்டில் சுவாமிப்படங்கள் இருத்தப் பட்டிருக்கின்றன. அந்த அலுமாரி மூடப்பட்டிருக்கும். அது எத்திசையை நோக்கி அமைக்கப்பட்டிருக்கிறது. அக்கினி தேசத்தை தினமும் தரிசனம் தரும் குசினி எங்கிருக்கிறது. கழிவு நீர்அறை எங்கிருக்கும் என்றெல்லாம் நாம் சிந்தித்தே பார்க்க முடிவதில்லை. அந்தச் சாத்திரங்களின் விஞ்ஞானரீதியில் அமைந்த மெய்ஞ்ஞான விளக்கங்கள் தெரியாமையால் அவற்றை வெறும் சம்பிரதாயங்களாகக் கருதிக் கொள்கிறோம். அவை காலம் கடந்த கனடாவிற்கு ஒவ்வாத சம்பிரதாயங்களாகக் கருதிக் கொள்கிறோம்.

ஐம்பொன் இட்டு அத்திவாரம் போட்டு, திசைபார்த்து, அளவு பரிமாணத்துடன் கட்டப்படும் வீடுகளில் திருமகள், கலைமகள் உட்பட பல தெய்வீக கடாட்சம் கிடைக்கும். குடும்ப வாழ்வில் சீரும் சிறப்பும் கிடைக்கும். கணவன் மனைவி ஒரு வண்டிலின் இரு சக்கரம் போல உழைப்பார்கள். வாழ்க்கை என்ற பாதை கரடு முரடானதாக அமையும். சிறார்கள் செம்மையுற வளர்வார்கள். அவ்வாறான தத்துவங் களை அறியாமை வேறு. அதனைக் கடைப்பிடிக்க முடியாமை வேறு என்பதை உணர்த்துவது பொருத்த மற்றதாகும்.

இல்லம் இல்லறத்தின் ஆணிவேர். இல்லாள் இல்லத்தரசி என்ற கோட்பாடுகள் தளரவிடக்கூடாது. இல்லறத்தின் மூலம் இறைவனைக் காணலாம். இல்லறம் அர்த்தமுள்ளதாக அமைய வேண்டும். அதற்குக் கால, இடமாற்றம் முட்டுக்கட்டையாக இருக்க முடியாது. அண்டங்கள் அனைத்திற்கும் அதிபதியான ஆதிசிவன் எங்கும் எதிலும் இருக்கிறார். பிரபஞ்சத்தின் அணுவிலும் இருக்கும் அவரைக்காண இந்தக் கனடா ஒரு விதிவிலக்காக இருக்க முடியாது.

சிறியபீடம் ஒன்றை அமைத்து அங்கு விநாயகன், திருமகளுடன் வேண்டிய தெய்வங்களை இருத்தி வீட்டின் பொருத்தமான இடத்தில் வைத்து வழிபடுவது சாலச்சிறந்தது. சிறிய வேலை பெரிய பலனைத் தருகிறது.

சுவாமி அறையில் தினமும் காலை எழுந்து விளக்கேற்றித் திருநீறு பூசி வழிபடும் பழக்கத்தை இயன்றளவு செய்து வரவேண்டும். அது சாத்தியமற்ற தாயின் மாலையில் சந்தியாவந்தனம் செய்வது சிறந்தது. சூரியன் உதிக்கும் நேரம், அஸ்தமிக்கும் நேரம், உடல் உளரீதியில் சிறிய தாக்கங்களைப் பெறக்கூடியவை. அந்நேரங்களில் தியானத்தில் இரண்டையும் இணைத்துப் பார்ப்பது ஆத்மீகத்துடன் உலகியல் வாழ்விலும் அமைதியைத் தரும்.

சுவாமி கும்பிடத் தூய்மையாக இருக்க வேண்டுமே! மாமிச உணவை உண்டு விடுகிறோம். பிள்ளை பிறந்த துடக்கு வேறு. மரணச்சடங்குகளுக்குச் சென்று வருகிறோம் எனப் பல இடைஞ்சல்கள் ஏற்படுவது சகஜம். மாமிசம் புசிப்பவர்கள் குடும்பத்தில் தினமும் ஒருவர் அதனைத் தவிர்த்துக் கொண்டு இருப்பது பெரிய கடினமான விடயமல்ல. இன்று புசியாது இருப்பவர் நாளை புசிக்கலாம். நாளை புசிப்பவர் இன்று புசியாது இருக்கலாம்.

வீட்டில் ஒளிபிறக்க வேண்டும். அதில் அறியாமை,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போட்டி, பொறாமை போன்ற தீயசக்திகள் எரிந்து விடுகின்றன. ஒளியில் சக்தி பிறக்கிறது. சக்தியே எம்மை இயக்குகிறது. திருவருள் மிக்க சக்தி இனியவாழ்வைத் தரவல்லது.

சுவாமி அறையில் நிட்சயமாக நீர்வைக்க ஒரு பாத்திரம். விளக்கு ஒன்று தீபம் ஏற்றி வைப்பதற்கு வேண்டும். அத்துடன் விபூதி இருத்தல் வேண்டும். அதனை முறையாகப் பூசும் பழக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும். ஆதிசிவனுக்கும் கண்ணபிரானுக்கும் உழவருக்கும் உறுதுணையாக இருக்கும் மாடுகள் செல்வங்களாகும். அவை வீடுபேறு தரவல்லன. இன்று பகவான் சத்தியசாயிபாபா விபூதி தந்து எம்மைத் தூய்மைப் படுத்துகிறார். அன்று விபூதியைப் பூசி நாயன்மார்கள் நோய்கள் தீர்த்தார்கள். இன்று பகவான் சாயிபாபா விபூதியைப் பூசிப் பலரின் வியாதியைக் குணப்படுத்துகிறார். அவ்விபூதி பிறப்பில் வந்த சைவமக்களுக்கு மட்டுமன்றி ஆத்மாக்கள் அனைத்திற்கும் தூய்மைப் படுத்தும் சாதனம் என்பதைப் பலரும் உணர்கிறார்கள். அதனை நம்சிறாரும் உணர வைக்க வேண்டும். இன்றும் கனடாவில் ரெயில் வண்டிகளில் இளம் தமிழ்ச் செல்விகள் விபூதியை அழகாகப்பூசிப் பிரயாணம் செய்வதைப் பார்க்கும்போது ஒருபுறம் மகிழ்ச்சியாகவே இருக்கிறது. மறுபுறம் வாரத்தில் ஒருநாள்கூட விளக்கு ஏற்றப்படாத வதிவிடங்களைப் பார்க்கும்போது கவலையாகவும் இருக்கிறது.

வீட்டில் வாரத்திற்கு ஒருமுறை அல்லது மாதத்திற்கு ஒருமுறை கூட்டுப் பிரார்த்தனை வைப்பது புலம்பெயர்ந்த எமக்கு மிக அவசியம். எமது ஊரில் நாம் தினமும் ஆலயங்களுக்குச் செல்வதுபோல இங்கு செல்வது நடைமுறைக்குச் சாத்தியமற்றது. வீடு ஒரு சிறிய ஆலயமாக அமைய வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டிருக்கிறது. வீட்டில் தெய்வீக செயற்பாடுகள் அதிகரிக்க வேண்டி இருக்கிறது. மாதத்தில் வரும் புண்ணியதின மொன்றில் அல்லது மாதத்தில் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் நண்பர், உறவினர், உற்றார் உடன் தமிழோடு இசைபாடி இறைவனை வழிபட வேண்டும்.

அதில் அனைவரும் பங்கு கொள்ள முயல வேண்டும். பஜனை நீண்டநேரமாக இருப்பின் சிறார்களுக்கு ஈடுபாடு குறைய ஆரம்பித்து விடும். அதனால் ஒருமணிநேரத்துக்குள் வழிபாட்டை முடித்து விடலாம். சிறார்களை முன்னின்று பங்கு பற்ற, நடத்த வைப்பதன் மூலம் அவர்கள் இதயதரையில் தெய்வீக வித்தை விதைத்து விடலாம். அதனை அல்லும் பகலும் அயராது உழைத்து விருட்சமாக்கி விடலாம். அதுவே நாம் கனடாவந்த முதற் சந்ததியினர் அடுத்த சந்ததிக்கு வழங்கும் பெருஞ் சொத்தாகும்.

கூடிய வீட்டுவழிபாட்டிற்கு நாம் வாழும் சூழலும் ஒரு காரணியாக இருக்கிறது. நாம் கிராமப்புறப் பண்பாட்டுக் குட்டையில் ஊறித் திளைத்தவர்கள். திடீரென மாபெரும் நகர வாழ்வு எனும் சமுத்திரத்தில் தள்ளப்பட்டிருக்கிறோம். காலத்தின் அருமையை நன்கு உணர்கிறோம். வேலைப்பளுவைத் தூக்க முடியாமல் சுமக்கிறோம். கணவன் மனைவிக்கிடையே இருந்த நெருங்கிய உறவு சற்று இளகியதாகி விட்டது. சிறார்கள், தம் இச்சைப்படி நடக்க முனைகிறார்கள். உரிமைகள் பல கேட்கிறார்கள். அதில் அவர்கள் முழுக் கனேடியர்களாகி விடுகிறர்கள். கடமைகள் செய்வதில் அவர்கள் தயங்குகிறார்கள். அது 'அப்பா அம்மா வேலை' எனக் கூறித் தமிழராகி விடுகிறார்கள். ஒழுக்கம் என்பது செல்லாக்காசு ஆகிவிடுமோ என்ற ஏக்கம் ஒருபுறம் உள்ளத்தை உறுத்துகிறது. எறும்பு போல் சேகரித்த உடமைகள் நாட்டில் சின்னாபின்ன மாகிவிட்ட கவலை மறுபுறம். இத்தகைய நிலைமை களால் உள அழுத்தம் அதிகமாகி விடுகிறது. பலருக்கு இதனால் மிகவும் கவலையாக இருக்கிறது.

குடிக்கக் குழாயத் தண்ணீர், மூன்று வேளை உண்ண அறுசுவை உணவு, வசிக்கத் தரமான இடம், உல்லாசமாகத் திரிய வாகன வசதிகள் எனப்பல இருந்தும் மனநிம்மதி அற்ற சீவியம் என்று கவலை கொள்வோர் பலர். சிலர் குடும்பப் பிரிவால் வாடுகிறார்கள். மற்றும் சிலர் குடும்பங்கள் ஒரு குழம்பிய குட்டைபோல உள்ளன.

இந்நிலையில் குடும்பம் சிறப்புற இல்லத்தில் சமய வழிபாடுகள், சமய விதிமுறைகள் அனுஷ்டிக்கப்பட வேண்டும். வீட்டு வழிபாட்டின் அவசியத்தை உணர்ந்து செயற்பட வேண்டும். வீட்டில் சமய மணம் கமழ வேண்டும்.

அவ்வாறு அமையும்போது புதியசக்தி ஒன்று பிறக்கும். வீட்டில் அமைதி பிறக்கும். இல்லத்தில் உள்ளொளி பிறக்கும். இனிய வாழ்வு அமையும். இம்மையிலும் மறுமையிலும் நற்பயன் கிட்டும். கிடைத்தற்கரிய மனநிம்மதி கிட்டும். இல்லத்தில் இறைவனைக் கண்டு தரிசிக்கவும் முடியும்.

---

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை — திருக்குறள்

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து — திருக்குறள்.

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல் - திருக்குறள்

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும் — திருக்குறள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா இந்து மாமன்றம் (சர்க்கரைப் பொங்கல் கலைவிழா நிகழ்ச்சிகள் - தை 1997-)



நாட்டிய நடனம்



சமய குரவர்களை இன்று சந்தித்தால்!.... கலகலப்பு தீசன்



பண்ணிசை



சபையினரில் ஒரு பகுதி

(நிகழ்ச்சிக்குரிய ஏனைய படங்கள் அடுத்த மலரில் இடம் பெறும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழிய சைவநீதி ! VALIA SAIVA NEETHI

# JOHN M. GUOBA

## BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC



**All Legal Matters Specializing in**

- **IMMIGRATION**
  **(Including Refugee Claims, Sponsorships & Appeals)**
- **CRIMINAL LAW**
- **REAL ESTATE**
- **FAMILY LAW**
- **MOTOR TRAFFIC ACT**

## LEGAL AID ACCEPTED

குடிவரவு – குற்றவியல் – குடும்பவியல் – மோட்டார் வாகனங்கள் தொடர்பான வழக்குகள்
மேன்முறையீடுகள் – வீடுகள், வர்த்தக நிலையங்கள் வாங்குதல் – விற்றல்
ஆகியவற்றில் அனுபவம் நிறைந்த சிரேஷ்ட சட்ட வல்லுநர்.

**TEL: (416) 923 - 7002**
**FAX: (416) 923 - 7590**

**1, St. Clair Avenue East, Suite #802**
**Toronto, Ontario M4T 2V7**

**சட்ட உதவியாளர்கள்**

**கனக. மனோகரன் – சட்டத்தரணி (416) 531 – 1650**
**தம்பையா. ஸ்ரீபதி – சட்டத்தரணி (416) 492 – 8543**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைகள் நீங்கித் தன்னுயர்வு பெறுவோம்

திருமதி. வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்)

மனிதனின் ஆத்மீக வளர்ச்சிக்கும் ஆத்மீக விளக்கத்துக்கும் ஞானத்தைப் பெறுங்கல்வியை மட்டும் பெற்றால் போதாது. சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை அகிம்சை ஆகிய பஞ்சசீலங்களையும் நம்முள்ளே வளர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றை வளர்த்து ஆத்மீக ஒளிவீசச் செய்வது சுலபமான விடயமல்ல. வேதங்களையும் உபநிடதங்களையும் ஆகமங்களையும் புராணங்களையும் கரைத்துக் குடித்துவிட்டால் மகரிஷி, பிரம்மரிஷிப் பட்டங்கள் கிடைத்துவிடுமா? மந்திரங்களை ஓதவும், மனதை ஒடுக்கித் தியான முறைகளைக் கற்று யோகநிலையில் ஆழ்ந்து விட்டால் ஆத்மீக ஒளி வீசிவிடுமா?

அறிவாகிய ஞானத்தைப் பெறமுயற்சிக்கும்போதே வெளி எதிரிகளை நாம் முறியடித்து விடுகிறோம். இதற்கு ஏற்படக் கூடிய தடைகளை முயற்சி எடுத்து விலக்கி விடலாம். சரியான ஞானாசிரியனை, ஏற்ற நூல்களை, வசதியான இடத்தையெல்லாம் தெரிவு செய்து புலன்களை ஒன்று கூட்டி அறிவைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் எமக்கு உள்ளேயிருந்து எம்மை நித்தம் விரட்டிக் கொண்டு திரியும் பகைவர்களை முறியடித்தல் முற்றும் துறந்த முனிவர்களாலேயே முடியாது போகும்போது நம்மால் முடியுமா? உட்பகை வெல்லுவதற்கு அழியாது. அது உயர்ந்து வரும் ஒரு மனிதனுக்குக் கேட்டை விளைவிப்பது என நாம் நமது அன்றாட உலகியல் வாழ்வில் அறிந்து கொண்டிருக்கிறோம். அதுபோலவே எமது ஆன்மீக வாழ்விலும் பல எதிரிகள் இருப்பதாக நமது பண்டைய நூல்கள் கூறுகின்றன. பகவத்கீதையும் இதையே பன்னிப் பன்னிக் கூறுகின்றது. இன்றைய ஆன்மீக வாதிகளும் இதையே சொல்லிவருகின்றார்கள்.

பகவான் ஸ்ரீசத்யசாயிபாபா அவர்கள் காமம் குரோதம், லோபம், மோகம், மதம், மாத்சரியம் என்பவை பற்றித் தமது அருளுரைகளில் விண்டு விண்டு உரைக்கின்றார். இத்தீய சக்திகளை அடக்குவதற்கு (Ceiling of Desire) ஆசைகளை மட்டுப்படுத்த வேண்டும் என்கிறார். இவை ஒவ்வொன்றையும் தனித்தனி பார்ப்போம்.

காமம் பக்தியைச் சிதைக்கிறது. பேராசை எல்லாச் செயற்பாடுகளுக்கும் நஞ்சை ஊட்டுகிறது. கோபம் கல்வியறிவைச் சிதைக்கிறது. எனவே ஆசைகளை மட்டுப்படுத்துவதும், அத்தியாவசியத் தேவைகளை மட்டும் பூர்த்தியாக்குவதும் மக்களின் தீய குணங்களை அடக்க ஓரளவு உதவும் என்கிறார்.

**காமம்:** பொருள்களைச் சேர்க்கும் ஆசை. பொருள், பண்டம், வீடுவாசல், கார், ரீ.வி. தத்தம் தகைமைகள், பதவி, புகழ் போன்றவற்றில் தமது ஆசைகளை மேலும் மேலும் வளர்த்துக் கொள்ளல். இதற்குத் திட்டம் தீட்டுதலிலும் செயற்படுத்தலிலும் காலம் விரயமாகிறது. ஆசைகள் தொடர்ந்து போக அவற்றை நிறைவேற்ற அதர்ம வழிகளையும் கடைப்பிடிக்க வேண்டிவரும். இவை பாவம் செய்யத் தூண்டும்.

**குரோதம்:** கோபம். இதுவும் பலவிதமாகத் தொழிற்படும். சில கோபங்கள் மனத்தாங்கலாகத் தொடங்கிச் சிறுசிறு மனஸ்தாபங்கள் கூடி முழுக் கோபமாக மாறிவிடும். சில கோபங்கள் திடீரென ஆத்திரமாக வெடிக்கும். ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு. உடலைப் பொறுத்தவரை இரத்தச் சுற்று ஓட்டம் அதிகரித்து மூளை கொதிக்கிறது. இருதயத்தைத் தாக்குகிறது. ஆத்திரம் கண்ணை மறைக்கும். பெற்ற கல்வியையும் அறிவையும் மறக்க வைக்கும். யாருக்கும் தீங்கு இழைக்கவோ அல்லது யாரையும் அழிப்பதற்கோ காரணமாகும்.

**லோபம்:** பேராசை அல்லது லோபித்தனம் தான் சேர்த்த பொருளில் ஒரு சிறு துளியையாவது பிறர் அனுபவிக்கக் கூடாது என்பதில் கண்ணாயிருத்தல். பிறரது கடுந்துன்பத்தைக் கண்டு ஒரு சிறு பொருளை ஒரு நிமிடத்திற்குத் தன்னிலும் உபயோகிக்கக் கொடுக்கமாட்டார்கள். உபயோகித் தால் தேய்ந்துவிடும் என நினைப்பர். நல்ல நூல்களை வாசித்தாலுங்கூட, அதனைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளமாட்டார். அறிவையும் தானம் செய்யார்.

**மோஹம்:** மோஹித்தல். மனிதர் சிலர் தமக்கே உரியவர்கள் என அத்த உரிமை பாராட்டுவதோடு பிறரது தொடர்பு அவர்களுக்கு ஏற்படாது கவனித்துக் கொள்வர். அவர்களுக்குப் பிரீதியான செயல்களைச் செய்தும் அவர்களுக்காக உழைத்தும் அவர்கள் மீது மோஹமும் மையலும் வைத்திருப்பர். இது, "சிலம்பில்" கோவலனைச் சித்திரிக்கும்போது "விடுதல் அறியா விருப்பினனாகி" எனக் கூறப்பட்டுள்ளது.

**மதம்:** அகம்பாவத்தோடு கூடிய தற்பெருமை, மதம் எனும் சொல் வெவ்வேறு பொருள்களையுடையது. சமயம், கோட்பாடு கொள்கை என்பன ஒரு அர்த்தம். மதயானை எனும் கருத்தில் அகம்பாவம் வீறி நிற்கும் நிலைதான் இந்த மதம். நான், நான் எனும் ஆணவம் தொனிக்கும் நிலை. இது கல்வித் தகைமையால்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புகழால், பலத்தால், செல்வத்தால், தன்னை மீறிய ஒருவரும் இவ்வுலகிலேயே இல்லை என்பன போன்றது. இந்த இறுமாப்பினால் மதிக்கத் தக்க வர்கள், பெரியவர்கள், அறிஞர் என்போரை அலட்சியம் செய்தல்; அவர் தம் மனம் புண்படத்தக்க செயல் ஆற்றுதல்; பிறர் உணர்வுகளை மதிக்காமை; ஆகிய குற்றங்களை இழைத்தல்; போன்றன நிகழும். மதம் என்பது ஆணவத்தின் உச்சநிலை என்கிறார் பகவான்.

**மாத்சரியம்:** பொறாமை, அழுக்காறு, என்பனவே மாத்சரியம் எனப்படும். இன்னொருவன் மகிழ்ச்சி யாகவும் திருப்தியாகவும் வாழ்கிறான் என்பதைக் கண்டு மனம் பொறாது துன்பப்படுதல். தனக்கு இல்லாதது பிறருக்கு இருக்கிறதே என ஏங்குதல் ஒன்று. ஆனால், அதையிட்டு எரிச்சலடைதல் வேறு. பிறர் வாழ்வு கண்டு பொறார். தாம் பலபெற்று நன்றாக வாழ்ந்தாலுங்கூட பிறனொருவன் அப்படி வாழ்கிறானே என மனதினுள் புகைந்து, எரிந்து, அவனுக்குத் துன்பம் வரக்கூடிய செயல்களைச் செய்வித்தல். அவதூறுகளைப் பரப்புதல் போன்ற செயல்களுக்கு இது இட்டுச் செல்லும்.

இவையே அதீத ஆசை பற்றி எழக்கூடிய அறுவகை எதிரிகள். இவை மனிதனின் உள்ளத்தில் ஆத்மீக ஒளி ஏற்றி உலகம் முழுவதையும் நேசிக்கும் மனப்பான்மைக்கு இட்டுச் செல்லத் தடையாக இருக்கும். இவற்றோடு வேறும் சில எதிரிகள் உண்டு.

**தம்ப:** நாம் இதனைத் தம்பட்டம் அடித்தல் எனக் கூறுவோம். யாகங்களையும் பெரிய திருவிழாக் களையும் உலகத்தின் கைதட்டலைப் பெறுவதற்காக, தர்மம் செய்வதாகக் காட்டி டாம்பீகமாகச் செலவு செய்து தனது செல்வ நிலையையும் வள்ளல் தன்மையையும் நிரூபிக்க முயலுதல்.

**தர்ப:** தான் பணக்காரனாக மகிழ்ச்சியுடன் வாழ்வதாகக் கர்வமடைதல். தலை நிமிர்ந்து நடத்தல், தம்மை எல்லோரும் மதித்து வணங்க வேண்டும் என எதிர்பார்த்தல்.

**ஈஷியா:** தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதற்கு முழுமாறாகத் தனக்கு வரும் துன்பங்களும் நோய்களும் மற்றவர்களுக்கும் வந்து அவர்களும் கவலையடைய வேண்டுமென ஆசைப்படுதல்.

**அசூயை:** தன் மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப் பிழையாக வேண்டும் என விரும்புவது போல மற்றவர்களுக்குக் கெடுதி செய்வதே நோக்கமாக வாழ்தல். அதனால் தான் எவ்வளவு நட்டம், துன்பம் அடைந்தாலும் பரவாயில்லை. அவன் வாழக்கூடாது என நினைத்துப் பல தீமையான காரியங்களைப் புரிதல்.

முற்றுந் துறந்த முனிவர்களைக் கூட ஆட்டி வைக்கும். இந்த எதிரிகளை நாம் அறிவோம். மகரிஷி விசுவாமித்திர முனிவர்கூட இத்தகைய எதிரிகளோடு போராடியிருக்கிறார். இவர் ஒரு அரசன். தமோ குணம், ரஜோகுணம், சத்வகுணம் எனப்படும் மூன்று குணங்களில் ராஜவம்சத்தைச் சேர்ந்தவராகை யால் ரஜோகுணத்தையுடையவராயிருந்தார். பிரம்ம மகரிஷி பட்டம் பெறவேண்டுமாயின் சத்வகுணத்தை யடைந்தே தீரவேண்டும்.

முனிவர் அரச பதவியையும் ஆசைகளையும் துறந்து கடுந்தவமியற்றி ஞானம் பெற்றார். ஆயினும் அவரது கோபத்தை அவரால் அடக்க முடிவதில்லை. ஞான ஒளிவீச வெளியே வருவார். அவர் எதிரில் ஏதாவது வந்துவிடும். உடனே அவருக்குக் கர்வமோ, கோபமோ, பொறாமையோ வந்துவிடும். 'பிடிசாபம்' என்பார். உடனே அவரது உயர்தவ வலிமை அழிந்துவிடும். பிரம்மரிஷியான வசிட்டர், தன்னைப் பிரம்மரிஷியாக ஏற்றுக் கொள்கிறார் இல்லையே என்பதும் அவரது மனத்தாங்கல். மீண்டும் கடுந்தவமியற்றுவார், மீண்டும் மீண்டும் இத்தகைய சோதனைகளுக்குள்ளாவார். பல கதைகளை நீங்களே அறிவீர்கள். கடைசித் தடவையாகக் கடுந்தவ மியற்றி ஞானஒளி பெற்றதும் வசிட்டரிடம் சென்றார். அன்றும் அவரால் வசிட்டரின் வணக்கத்தைப் பெற முடியவில்லை. (பிரம்மரிஷிகள் ஒருவரையொருவர் காணும்போது வணங்கிக் கொள்வார்கள். மற்றவர் வணங்கும்போது அவர் பிரம்மரிஷி அந்தஸ்தை அடையாதவராயின் அவர் கையையுயர்த்தி ஆசீர்வாதம் செய்வார்) கோபம் கொண்ட அவர் வசிட்டரின் தலை சுக்குநூறாகட்டும் எனச் சபிக்க எண்ணினார். ரஜோ குணம் பொங்கிப் பெருகிறது. ஆனால், திடீரென அவருள் ஒரு மாற்றம். இது காறும் செய்த தவத்தின் பயனாய் நல்லெண்ணங்கள் எழுந்தன.

"நான் ஏன் இவ்வளவு கோபப்பட வேண்டும். கோபம் பாவத்துக்கு வழிகாட்டியல்லவா, அது புத்தியைத் தடுமாற வைக்கின்றதே. கோபம், பொறாமை, தீங்கு இழைக்கும் தீய எண்ணங்கள் இன்னமும் என் மனதில் இருக்கின்றனவே. கடுந்தவமியற்றியும் என்ன பயன்?. உண்மையான தவம் மெனில் பிறருக்குத் தீங்கு விளைக்கும் எண்ணமும் தோன்றக் கூடாதே. இவ்வளவு காலமும் பாடுபட்டுச் சேமித்த தவ ஆற்றல் அனைத்தும் வீணாகிவிட்டதே எப்படி? இப்படி அற்பமானவனாகி விட்டேன். என்னிடமுள்ள அதே ஆத்மா தான் எல்லா உயிர்களிடமும் இருக்கின்றது" என நினைந்து வருந்தி மீண்டும் காடுபோகப் புறப்பட்டார். அவர் முகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அற்புதம் நிகழ்ந்ததும் ஞான ஒளி வீசிற்று. உடனே வசிட்டர் "முனிவரே நில்லுங்கள் நான் உங்களை வணங்க வேண்டாமா எனத் தடுத்து வணங்கினார்". இருவரும் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவினர்.

"சத்திரிய இரத்தத்தின் பிறவிக்குணம் இதுவரை உங்களிடம் ஒட்டிக் கொண்டிருந்தது. இப்போதுதான் சுத்த சத்வகுணத்தின் ஒளி பிரகாசிக்கின்றது. இனி நீங்கள் உண்மையான பிரம்ம ஞானியே தான்" எனப் புகழ்ந்தார். இன்று ஓம் பூர் புவஸ் வஹ எனும் உலகம் புகழும் மகாமந்திரமான காயத்ரி மந்திரத்தை உலகுக்கு அளித்தவரும் இந்த விசுவாமித்திர முனிவரே.

ஆன்மீக விளக்கம் பெறுவதற்குத் தடையாக இருக்கின்ற உள்ளார்ந்த பகைகளைக் கண்டோம். இந்த மாயவலைகளுள் சிக்கித் திணறுகின்ற மனிதனால், மாசு நீக்கி நல்ல ஞானம் பெற்று முழுமனிதனாக வாழும் முயற்சி உள்ளத்தில் தோன்றவே தோன்றாது. இப்பகைவரை அழிக்கும் முயற்சியையே எல்லா மதங்களும் செய்கின்றன. எனவே ஒரு பூரண மனிதன் ஆக வேண்டுமாகில் எந்த மதக் கட்டுப்பாடுகளுள்ளும் சிக்கித் தவிக்க விரும்பாத ஒருவனால் இந்த ஆசைகளை மட்டுப்படுத்தல் எனும் கொள்கையுடன் தன் ஆத்மாவின் இருளைப் போக்க முடியும். பிறர் நலம் போற்றும் பேராண்மை தோன்றும். உள்ளம் மாசு நீங்கி, சுயம்பிரகாசமாகும். எதுவரினும் அகமும் புறமும் சாந்தம் நிலவும்.

## சான்றோர் சொல்லமுதம்

"நெஞ்சகமே கோயில்
நினைவே சுகந்தம்
அன்பே மஞ்சனநீர்
பூசனை கொள்ள வாராய் பராபரமே – தாயுமானவர்

இறை வழிபாட்டில் ஏற்புடைய வழிபாடு ஆத்மார்த்தமாக மனதினால் செய்யும் வழிபாடு ஆகும். நமது தூய்மையான நெஞ்சம்தான் இறைவனின் ஆலயமென்றும், நமது நினைவில் கருவாகி, செயலில் உருவாகும் நல்ல எண்ணங்களே சுகந்தம் என்றும் அனைத்து உயிர்களிடத்தும் நாம் கொள்ளும் அன்பே மஞ்சனநீர் என்றும் கூறி, இத்தகைய முறையில் இறைவா! உன்னை வணங்கும் பூசையை ஏற்றுக் கொள்ளவாராய் என்று தாயுமானவர் அழைக்கிறார் இறைவனை.

**ஈசுவரதரிசனம்:** ஆசைகளாகிய பெருங்காற்றினால் சித்தமாகிய ஆகாசம் அலைக்கழிக்கப்படும் வரையில், ஈசுவரனாகிய ஒளியை அங்கு காண்பது துர்லபமாகும். ஈசுவரனுடன் ஐக்கியமாகிச் சாந்தமாக இருக்கும் மனத்தில் தான் அந்தத் திவ்விய தரிசனம் தோன்றும். **பகவான் இராமகிருஷ்ணர்**

அசுவமேத யாகப் பலன்: கஜபூசை, சுமங்கலி பூசை, சாது பூசை செய்பவனும், படிப்புக்கு உதவி செய்பவனும், அநாதைப் பிரேதத்தை எவர் உதவியுமின்றித் தானே செலவு செய்து அடக்கம் செய்பவனும் அசுவமேதயாகப் பலனை அடைகிறான். – ***கீதாசாரியன்***

ஆசைகளுக்கும் புற உலகிற்கும் நேரடியான தொடர்பு எதுவுமில்லை.
" யோகராதோவா – யோகரா தோவா
சங்கா தோவோ – சங்க விகீனஹ
என்று சங்கரர் கூறி இருக்கின்றார். யோகசாதனையின் மூலம் எந்த நிலையிலும் நீங்கள் உங்களை உணரலாம். உங்கள் மன நிலையைப் பொறுத்து நீங்கள் ஒட்டியும் ஒட்டாமலும் வாழமுடியும். அதை நீங்கள் தனிமையிலும் அடையலாம், உறவிலும் அடையலாம், இடம் முக்கியம் அல்ல. உங்கள் மனநிலை தான் முக்கியம், கடையில் உட்கார்ந்து பணத்தை எண்ணுபவன் கோயிலுக்குப் போகமுடியவில்லையே என்று நினைக்கலாம். ஆனால் அவன் கோயிலில் உட்கார்ந்து வீட்டைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பவனைவிட உயர்ந்த பக்திமான் ஆவான். இடம் எப்படி யானாலும் மனம் தூய்மையுடன் இருக்குமானால், அதுவே உயர்வானதாகும். மனப்பக்குவம் அடைந்தவர்களால் எந்தச் சூழ்நிலையிலும் அதை அடையமுடியும். – ***ஸ்ரீமதி. சுநந்தா***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இசை

திருமதி. கணேசலிங்கம் இராஜேஸ்வரி

மனித சமுதாயத்திற்கு இறைவனாற் கொடுக்கப்பட்ட அரும்பெருஞ் செல்வங்களில் ஒன்றான இசை பண்டிதர், பாமரர், வயோதிபர், குழந்தைகள் சகலரையும் ஆட்கொள் ளக்கூடிய சக்தியைக் கொண்டது. ஒருவனுடைய ஒழுக்கத்தைப் பண்படுத்தும் சக்தி இசைக்குண்டு. வாடிய பயிரைத் துரித வளர்ச்சியடையச் செய்யும் சக்தியும் அழுது அடம்பிடித்த பிள்ளையைத் தூங்க வைக்கும் சக்தியும் இசைக்குண்டு. ஒரு நாட்டின் இசையின் மூலம் அந்நாட்டின் மொழி, இலக்கியம், கல்விமுறை, இறைபக்தி, மனோபக்குவம் என்பனவற்றை அறிந்து கொள்ளலாம்.

தென்னிந்தியத் திருநாட்டில் உதயமாகிய எமது தமிழ் இசையின் மகத்துவத்தை வாா்த்தைகளினால் வர்ணிக்க முடியாது. அத்தகைய சிறப்புத்தன்மை வாய்ந்த தமிழ் இசையை இரு பிரிவுகளாகப் பிரித்து அதன் சிறப்பம்சங்களை அறிந்து கொள்ள முடியும்.

1. சாஸ்த்திரிய சங்கீதம் 2. மெல்லிசை.

சாஸ்திரிய சங்கீதத்தை 1. வாத்திய இசை 2. வாய்ப்பாட்டு (Vocal) எனப் பிரிக்கலாம். தமிழ் இசையில் சுருதி, லயம் மிகவும் இன்றியமையாதனவாகும். இவற்றை வாத்தியங் களிலிருந்தே பெறுகின்றோம். ஒரு இசைக் கச்சேரிக்கு வாத்தியங்கள் பக்கபலமாக இருப்பதால் இவற்றைப் "பக்கவாத்தியங்கள்" என அழைக்கின்றோம். சுருதிக்காக, சுருதிப்பெட்டி, தம்புரா போன்ற வாத்தியங்களை உபயோகிக்கிறோம். 3 விதமாகச் சுருதி வைத்துப் பாடலாம். (4, 4½, 5, 5½) தந்திவாத்தியங்களாக வயலின், வீணை, புல்லாங்குழல் கருதப்படுகின்றன. இவை தனி இசைக் கச்சேரி செய்யும் வாத்தியங்களாகவும் கருதப்படுகின்றன. தாள வாத்தியங்களாக மிருதங்கம், கெஞ்சிரா பயன்படுத் தப்படுகின்றன. இவை தமிழ் இசைக்கு இனிமையையும் கவர்ச்சியையும் கொடுப்பதுடன் இசைக்குப் பக்கபலமாகவும் விளங்குகின்றன.

வாய்ப்பாட்டிற்கு இனிய சாரீரவசதியும், இயற்கை ஞானமும் இன்றியமையாதது. தமிழ் மொழியில் எண்ணி லடங்கா இசைப்பாடல்களுண்டு. இவற்றை "உருப்படிகள்" என அழைப்பர். பல ஆயிரக்கணக்கான உருப்படி மூலம் ராகங்களுக்கு ஜீவன் அளித்து, அவற்றின் சொரூபம் அழியாது, உலகிற்கு அளித்தவர்கள் மும்மூர்த்திகள் எனச் சங்கீத உலகில் புகழப்படும் போற்றப்படும் தியாகராஜ சுவாமிகள் 1767-1847, முத்துச்சுவாமி தீஷிசிதர் 1776-1835, சியாமா சாஸ்திரிகள் 1772-1827

சங்கீத சாஸ்திர வரம்பை இலட்சியத்துறையிற் கண்டவர்கள் இம்மூவர்களே. தமிழ் இசையில் மிகவும் முக்கியமான அம்சம் நாதமாகும். நாதமானது செயற்கை நாதம்(ஆகதநாதம்) இயற்கைநாதம்(அநாகதநாதம்) என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இயற்கைநாதம் ஆத்மீகத் தொடர்பும் கவர்ச்சியுமுடையது. சுரத்தைத் தொடங்கு வதற்கு ஆதாரமான நாதமே **சுருதி** எனப்படும். தமிழ் இசையில் **சுருதியை மாதா** எனவும் **லயத்தைப் பிதா** எனவும் அழைப்பர்.

தமிழ் இசையில் ஆதாரமாக ஏழுஸ்வரங்களுண்டு. சுரங்கள் இசைக்கு முதன்மையான அம்சமாக இருப்பினும் அவை சுருதியுடன் இணைந்தாலே இனிமையைக் கொடுக்கும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஸ | - | To | ப | - | Sol |
| ரி | - | Re | த | - | La |
| க | - | Mi | நி | - | Sl |
| ம | - | Fa | | | |

ஸ்தாயி என்பது ஏழுஸ்வரங்கள் நிற்குமிடத்தைக் குறிக்கும். ஸ்தாயி 3 வகைப்படும். 1.மந்திரஸ்தாயி 2. மத்தியஸ்தாயி 3. தாரஸ்தாயி

| மந்திரஸ்தாயி | மத்தியஸ்தாயி | தாரஸ்தாயி |
|---|---|---|
| ஸரிகமபதநி | ஸரிகமபதநி | ஸரிகமபதநி |

இராகமானது ஸ்வரசஞ்சாரங்களினால் அழகு செய்யப் பட்டுக் கேட்பவர்கள் உள்ளத்தில் இன்பம் ஊட்டும் இசைவடிவமாக உள்ளது. ராகங்கள் சனக ராகங்கள் (தாய் ராகம்) ஜன்னிய ராகங்கள் (சேய் ராகங்கள்) என இருவகைப்படும்.

தாய் ராகங்கள் (ஜனகராகங்கள்) 72 மேளகர்த்தாக்கள் உள்ளன. ஒரு சனக ராகத்திலிருந்து 483 கன்னிய ராகங்கள் உதிக்கலாமெனக் கருதப்படுகிறது. ஆகையால் கன்னிய ராகங்களின் எண்ணிக்கை 483x72 = 34, 776 க்கு மேற்படலாம்.

ஜன்னிய ராகங்கள், சுரங்களைக் கொண்டு சம்பூரணராகம் ஷாடவராகம், ஔடவராகம் என வகுக்கப்பட்டுள்ளது. இதைவிட, சம்பூரண, ஔடவ, ஷடாவ, பேதத்தால் ஒரு தாய் ராகத்திலிருந்து உற்பத்தியாகக் கூடிய ராகங்கள் 484. ஜன்னிய ராகங்கள் உபாங்க, பாஷாங்க ராகங்களெனவும் இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இனிமைக்காக அந்நிய ஸ்வரங்கள் கலக்கப்பட்டுள்ள ராகம் பாஷாங்க ராகம் எனப்படும். பதநிஸா (பைரவி சதுஸ்ருதிதைவதம்)

தற்காலத்தில் மக்களாற் பெரிதும் கவரப்பட்டுள்ள இசை மெல்லிசையாகும். திரைப்படங்கள், வானொலி, தொலைக் காட்சி ஆகியன இவற்றின் வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளன. மெல்லிசைக்கு இசையமைப்பதிற் தற்காலத்தில் ரஹ்மான், இளையராஜா போன்றவர்கள் முன்னணியில் இடம் வகிக்கின்றனர். ஜேசுதாஸ், மனோ, சித்ரா போன்றவர்கள் மெல்லிசைப்பாடல்களில் பிரபல்யமடைந்து காணப்படுகின்றனர். மெல்லிசைப் பாடல்களுக்குப் பக்கவாத் தியங்களாக மேற்கத்திய வாத்தியங்கள் பாவிக்கப் படுகின்றன.

இத்தகைய சிறப்புத்தன்மை வாய்ந்த தமிழ் இசையில் பாண்டித்தியம் அடைவதற்கு இயற்கை ஞானமும் விடாமுயற்சியும் பொறுமையும் அத்தியாவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்பும் சிவமும் ஒன்றே - அன்னையும் பிதாவும் நன்றே"

# ஸ்ரீ கௌரி மங்கள சேவை

## அனைத்து இந்துமத கிரியைகளுக்கும்.

கனேடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு

## சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் (ஐயாமணி)

(புங்குடுதீவு – 10)

**(416) 266 - 3333**

**(416) 2 6 6 - 3 3 3 3**



**(416) 2 6 6 - 3 3 3 3**

அனைத்து இந்துமத கிரியைகளுக்கும், திருமணம், மற்றும் மங்களகரமான
வைபவங்களுக்கும் வேண்டிய எல்லாத் தேவைகளுக்கும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள். இத்துடன் குறைந்த வாடகையில் ஸ்காபுரோ,
ரொறன்ரோ ஆகிய இடங்களில் 200 பேர் முதல்600 பேர் வரை
இருக்கக்கூடிய கார் தரிப்பு வசதியுடன் கூடிய அழகான மண்டபங்கள்
பெற்றுக் கொள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உள்ளத்தில் ஒன்றவிடு"

வீ. வ. நம்பி

1) நீரருந்தி மெய்சிலிர்க்க வந்த பெற்றம் நின்றுடலை நிலைக்கல்லில் நெடிது ராய்ந்து
வீரமுடன் வீழ்ந்தெழுந்து வீம்பு மூச்சு வேகமுடன் வெளியாக வெடிவால் தூக்கி
கோரவுருக் கொண்டினத்தைக் கொம்பாற் குத்தி, கோலமுடன் குதித்தோடிக் கொள்ளல் போல
ஓரவுணா வுறுமக்கள் உள்ளம் பொங்கி உலகமெலாம் தங்களுக்குள் ஒடுங்கு மென்பர்

2) நல்லாவின் பசும்பாலே நல்ல மருந்து நாடுழவர் தருஞ்சோறே நல்ல வுணவு
வல்லவரின் வழிகாட்டல் வாழும் வழியே வாக்குண்டாம் ஔவை(யின்) வல்ல வாக்கு
தொல்லுலகில் நல்லோரைத் தொழுது நிற்றல் துணையாகும் புணையாகும் தூய வாழ்வில்
எல்லோரு முல்லாச மாக வாழ ஒற்றுமைதான் உலகத்தின் உயிராம் நாடி

3) பற்றற்றான் பற்றினைநாம் பற்றி நின்று பண்புமன்பும் பெருக்குற்றுப் பாய வாழ்ந்து
உற்றாரை உவப்போடு உளத்தே கொண்டு ஊரவரை உலகத்தை உணர்ந்து காத்து
கற்றாரைக் காமுற்று கால மெல்லாம் கண்ணாகக் காவலராய்க் கருத்தில் கொண்டு
பெற்றோரைப் பேரன்பால் பேணிக் காத்துப் பேருலகிற் கடவுளடி பேணிப் போற்று

4) தந்தைசொல் மந்திரமா யெண்ணிக் கொண்டும் தாயன்பைத் தலைமீது சுமந்தும் போற்றி
சிந்தைக்குள் சிவனருளைச் சேரச் செய்தும் சீர்பெருகு சிவதொண்ட னாகி நிற்பாய்
முந்தையோர் கண்டமுறை யாவு மோர்ந்து முறையாக முற்றுமுழு மனித னாகி
எந்தையார் திருநாமம் என்றும் வாழ்த்தின் இவ்வுலக வாழ்வதுவும் இன்ப மாமே.

5) உன்னையே உணர்ந்திட்டு உரமே யிட்டு ஊரவரை உன்வழியே ஈர்த்துக் கொண்டு
தன்னையே தானுணர்தல் தானே தானாய் தாரணியில் நாம்வாழ நாடும் வாழும்
என்னாலே யாருக்கு என்ன சுகமே? யென்றெண்ணு எதிர்காலம் புதிரே யாகும்
முன்னாலே செய்தவவை பின்னே காண்பாய் மூதுரைகேள் முற்பகலே பிற்பக லுமாகும்.

6) தெய்வத்தைத் திரைபோட்டு மறைக்க லாமோ திசையெங்கும் தேவனுளன் தேர்வாய் ஓர்வாய்!
செய்வதனைச் சிந்தித்துச் செய்து கொள்க! சிந்தனையின் தெளிவாலே சிறப்பைக் காண்பாய்
எய்தவனே யிங்கிருக்க அம்பை நோதல் இதுவன்றோ மடமையின் மடமைத் தன்மை
கொய்தபழம் கொம்பேறா கொஞ்சந் தேர்க! கும்பிட்டுக் கூத்தாடு குறைகள் தீரும்.

7) இன்றுவரும் நாளைவரும் இறப்புக் கண்டீர் பிறப்பிறப்பு இவ்வுலகில் இயல்பு அன்றோ
சென்றுவரும் பொழுதெந்த விடத்தில் தானும் சாவுவரும் செய்திவரும் செகத்தி லுண்மை
என்றுவருங் கூற்றென்று எம்மால் கூற வியலாது இதையோர்ந்து எம்மைக் காத்து
பொன்றுமுடல் பொய்யாகு முயிரே எஞ்சும் போயிறைவன் பதஞ்சேரப் போற்றி வாழ்க!

8) எல்லாமே கடந்தபொருள் கடவு ளாவர் இவர்யார்க்கு மொப்பில்லா ஒருவ ராவர்
சொல்லாலே சொல்வதற்கும் முடியா தன்றோ சுகவாரி யருளாழி சொரூபி யான
வல்லாள னவனன்றி யாரு மில்லை வானவர்க்கு மேலான வள்ளல் மற்றும்
நில்லாத வுலகத்தை நிலவச் செய்யும் நித்தியனு மநித்தியனு மான நல்லோன்.

9) எண்ணுதற்கு மெட்டாத இறைவன் றன்னை இடர்நீக்கி எமையாளு மீசன் தன்னை
விண்ணகத்தும் மண்ணகத்தும் விளங்குந் தூய விற்பனனை வேதியனை வேதம் நான்கும்
பண்ணகத்தும் பாடியவர் பக்கம் யாவும் பரலோக பாதனவன் பரமன் மேலாம்
அண்ணலவன் திருத்தாளை அருச்சிப் பார்க்கு அனைத்துப்பே றளித்தென்று மாட்கொள் வானே

10) மாலயனும் காண்பதற்குக் கீழும் மேலு மடிமுடியே காட்டாத அன்புச் சோதி
பாலுமமு தாகிநிற்கும் பார்பதி யாளைப் பாகமதாய் பகிர்ந்துள்ள பரமன் பாதம்
நாளுநினை நன்குதொழு நயந்துபாடு நற்கருப்பஞ் சாற்றிலுயர் நலமே கிட்டும்
மேலுமுயர் வாழ்வுதரும் மேலுஞ் ஞானப் பேறுவரும் மெய்மையாம் பொருளைக் காண்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. பாலில்படு நெய்போல்வன் பாரோர் காணா ரானாலும் பக்குவத்தார் பரவத் தோன்றும்
மேலான தெய்வங்காண் மேலுங் கீழும் மேவிநிற்கு மாளவன்காண் அன்னை தந்தை
போலினிய போனகன்காண் பொற்பு மிக்க கோனவன்காண் புனிதன்காண் போற்றுந் தொண்டர்
சீலனவன் சென்னிமதி சூடி நிற்கும் செஞ்சடையன் சேவடிகள் சிரமேற் கொள்வோம்.

12. நல்லனவே நீநினைந்து நயந்து பேசி நாடோறுந் தொண்டாற்றி நத்திக் கொண்டு
எல்லவரு மினிதாற்ற இயையச் செய்து இலட்சியத்தைக் கைக்கொள்ளின் எல்லாம் வெற்றி
சொல்லாலே வழிசெய்து சுருதி பேணி சோர்வின்றிச் சிவபூசை செய்து போற்றி
வல்லாளன் புகழ்பாடி வாழ்ந்து வந்தால் வானுலகில் சேரவழி வந்தே சேரும்

13. அவனன்றி ஓரணுவு மசைய மாட்டா அஃதொன்றே இவ்வுலகின் அரிய வுண்மை
சிவமின்றிச் சக்தியிலை சக்தி யின்றிச் சிவமில்லை சிந்திப்பாய் சிவமே யன்பு
தவமின்றி யருளில்லை அருளில் லாத தவமில்லை தெய்வந்தான் தானே தானாய்ச்
சிவணித்துச் சீர்பெற்றுச் சிந்த னையாற் றெளிந்தபேர்க்குச் சீரொளியாய்ச் சிவமே தோன்றும்

**வேறு**

14. நானென்னு மகங்காரந் தனைப்போக்கி நாடோறும் நம்பன் பாதம்
நீநாளும் நெஞ்சிருத்தி நிறைவாகி நிலையுற்றால் நிரயம் போகாய்
வானாளும் பயன்தானாய் வந்துசேரும் வானோரும் வாழ்த்துச் சொல்வர்
தேனான திருப்பாதந் தித்திக்கும் திசைகாட்டுந் தேவன் காண்பாய்

15. நானென்றுந் தானென்றும் நாமென்றுந் தாமென்றும் நறும்பி நின்று
ஊனுண்டு உயிரோம்பி உலைகின்ற மானுடமே உணரு வாயே
மானென்றும் மயிலென்றும் குயிலென்றும் மதன்விட்ட பாணத் தாலே
ஏனின்று உலைகின்றாய் என்?இதனால் பயனுண்டு இயம்பு வாயே

16. பாடுபட்டுப் பணந்தேடிப் புதைப்போரும் பலகாலம் வாழ்வ தில்லை
நாடுவிட்டு நாடோடி நலமுற்றோர் நிலையாக நிற்ப தில்லை
காடுவெட்டி நாடாக்கி கற்பனையி லரசாண்ட காவ லோரும்
வீடுகட்டி வியனூஞ்ச லாடினோரும் ஈங்கில்லை வாழ்ந்தார் யாரே?

17. நானிலமோர் மேடையே நாமதனில் நடிகர்தான் நம்பிக் கொள்க
கானல்நீர் போன்றதுதான் கவின்கோலம் காட்சிக்கோர் மாட்சி யில்லை
ஊனுடலை உவந்தோம்பி உலகத்தே வாழ்வதிலே உயர்ச்சி யுண்டோ?
வானுலகில் வாரமுடன் வாழ்ந்திடலாம் வழிகண்டு பிடித்து வாழ்க!

18. எண்ணிக்கொள் நண்ணிச்சேர் எந்நாளு மிதயத்தில் இறையை எண்ணு
விண்ணுக்கும் மண்ணுக்கும் வேறாகா வினைத்திட்பன் விடைவல் லானே
கண்ணுக்குள் ஒளியாவன் கருத்திற்கு மணியாவன் காலந் தோறும்
எண்ணற்ற உயிரினத்தின் ஏரகனாய் எருதேறி இருப்பான் ஏத்து

19. மூவர்க்கும் முதலாய மூர்த்தியாகி முப்பத்துமுக் கோடி தேவர்
யாவர்க்கும் மேலாகி மூவுலகி னைந்தொழில்கள் யாவு மாற்றும்
காவலனாய்க் காரணனாய் கைம்மாறு கருதாத கடவுள் தானாய்
ஓவாதே உள்ளுருகி நிற்போர்க்கு ஓயாதே ஒளிர்வான் ஓர்வாய்

20. அன்னானை யெந்நாளு மகத்திலெண்ணி அவனருளே கண்ணாய்க் கொண்டு
சின்னாள்வாழ் சிற்றறிவின் சின்னமாய சிறியோனமக் காக்க வேண்டின்
பின்னாளில் வருகின்ற பேறுணராப் பெட்பறியாப் பிறவி போக்க
என்னாளு மின்னருளை வேண்டிநின்று என்புருகு இறையைக் காண்பாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. கோலோச்சி வாழ்பவர்க்கும் கோள்கொண்டு திரிபவர்க்குங் கோபந் தாபம்
மேலோங்க பொய்சூது மதுமாது மொத்துண்டு மயங்கு வோர்க்கும்
சீலங்கள் தெரியாது செத்தித்து சிறப்பற்ற சிந்தை யற்ற
மாலுற்றார் மயக்கழித்து மனமாற்றம் செய்திடுவான் மன்பேர் தேவன்

22. நன்றுணர மாட்டாத நாய்களையும் பேய்களையும் நாணப் பண்ணி
நின்றுணரும் நிலைகூட்டி நிர்மலராய் வகைசெய்து நிலவ வேண்டி
பொன்றவருங் காலத்தும் பொன்றாத காலத்தும் போற்றிக் காத்து
நன்றிசெயுந் தேவனைநாம் நாடோறும் பணிந்தேத்தி நலமே காண்போம்

23. தேவதேவன் மகாதேவன் திசையெட்டும் கடந்துநிற்கும் தேசு மிக்க
யாவருக்கும் மேலான நந்தாத யோகசீல ஞானத் தெய்வம்
பாவலரும் புகலரிய பரஞ்சோதி! பார்பதியை வாம பாகம்
ஆவலுறக் கொண்டிருக்கு மண்ணலவன் பதமேத்தின் அமர ராவோம்

24. கைதொழுவா ரனைவருக்கும் கற்றாவின் மனம்போலக் கனிப வர்க்கும்
சைவநெறி சார்ந்திடுவோ ரனைவருக்கும் சஞ்சலந்தீர்த் தருளி நாளும்
நைவதனை நீக்கிநலம் நாட்டுகின்ற நலமேவுந் தெய்வந் தூய
சைவமறை சிறப்பிக்கும் சிவனாரோ சரித்திரத்தி னப்பாற் பட்டோன்

25. உன்தவறை நீயுணர உனக்குணர்த்தி உறுபயனை அடையச் செய்து
மன்பதமே மகிழ்வோடு மாணிக்க வாசகருக் களித்த மேலோன்
தன்பாதந் திருத்தில்லை தனிலாடித் தவப்பேறு அளிக்குந் தெய்வம்
என்பாலே யருள்நோக்கங் கொண்டதெனில் என்பேறு இமயப் பேறே

26. தென்தில்லை நடமாடுந் தேசிகனைத் திசையெங்குந் தோன்றி நிற்கும்
மன்பரனை மக்களுக்காய் மழபாடி மன்னியுள மங்கை பங்கன்
என்பரனை எல்லோரும் இன்புறவே எழுந்தருளும் எந்தை தன்னை
அன்பரனை அன்றிநமக் கார்தெய்வம் அவனன்றி யாரு மில்லை

28. முற்பட்ட சமயத்தே முதற்சமய மெனமுன்னோர் மொழிந்து நிற்கும்
சொற்பெற்ற சைவமதம் சரித்திரத்தி னாரம்ப சமய மன்றோ
கற்பட்டுச் சிலைமீது பொறிபட்டு காசினியில் காணப் பெற்று
நற்பட்டாய் நானிலத்தோர் நயந்துடுத்த நற்சமயம் நனிதே வாழி!

29. இறைபதமே சேர்வதற்கு ஏற்றவழி காட்டுவதே சமய மாகும்
நிறைவெள்ளம் சிற்றாறு பலவாய்ப்பின் நீள்நதியாய்க் கடலை நாடும்
முறைமுறையாய் வழிச்செல்லும் முற்போக்கால் மூதறிஞர் அறிவின் முன்னால்
துறைபோன தூயவழி தானெனவே தோற்றியதே சைவ நீதி

30. சமயங்க ளத்தனையும் சமநோக்கில் கொண்டுவக்கும் சமயம் சைவம்
இமயம்போல் மற்றவையும் மலையாக இணைக்கின்ற இலக்கோ டொன்றி
நமதுவழி நல்லவற்றில் நனிநன்று எனக்கண்டு நாடிக் கொண்டு
எமதுபண்பே இதுவென்று இந்துமத நெறிநின்று என்றும் வாழ்வோம்

31. நாம்தமிழர் நாமிந்து நாடறிந்த மக்களென நன்றி யோடு
ஆம்பொழுது ஆதிசிவன் அடிபரவி அல்லுமெல்லு மறமே செய்வோம்
சாம்பொழுது சமயந்தான் சார்ந்துதுணை யாகவரும் சாரும் முத்தி
போம்பொழுதும் வரும்பொழுதும் துணையாகும் தெய்வமன்றி வேறு யாவர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. எப்போதோ முடிந்ததுகாண் பொல்லாப்பு ஏதுமில்லை என்று சொன்னார்
முப்போது முணர்ந்தமுனி யோகரன்று முக்காலு முண்மை யாகும்
நப்பாசை கொண்டுலகில் நலியவேண்டாம் நாம்வாழ வழியைத் தேடு
அப்போது கைகூடும் அவன்வந்தே அணமிப்பான் அவனைக் காண்பாய்

33. உள்ளத்தை உத்தமன்பால் ஒன்றவிடு உந்தமக்குக் குறையே யில்லை
வெள்ளத்தை அணைபோட்டுத் தடுப்பதரி தென்றென்று வியனூல் சொல்லும்
தெள்ளத்தெளிந் தோர்க்குசீவன் சிவனென்பர் தவத்தோர் தேர்க
கள்ளப்புல னைந்துகாளா மணிவிளக்காய் காண்பாரே கருது வோர்கள்

34. கருத்தோடு அருத்தமுறக் காட்சியொடு மாட்சியுற்று கடவுட் பேணித்
திருத்தமுடன், வாழ்ந்திட்டு தீதற்ற நெறிநின்று தீர்வு கண்ட
பெருத்தமனப் பெட்புடையாய் பிறர்போற்றுந் தகவுடைய பெரியோ ராகி
வருத்தமுடன் கடல்தாண்டி வந்தடைந்தாய் வருங்கால மென்ன வாகும்!

35. உன்கடமை பெரிதரிது உன்வாழ்வை உறுதிசெய்து உலகில் வாழும்
மன்கடமை தனையோர்ந்து மக்களையும் வழிப்படுத்தி மனதை யாற்றி
தன்கடமை தானுணர்ந்து தருமனெறி தழைத்துநிற்கத் தக்க வாய்தல்
நன்கடனே யென்றெண்ணி நலஞ்செய்து நாடுவக்க நன்றே செய்க

36. என்கடமை பணிசெய்து கிடப்பதாகு மென்றெண்ணி இதயத் துய்த்து
தன்கடனோ அடியேனைத் தாங்குதலே யெனவேண்டித் தவமே யாற்றி
அன்புடனே அவனருளைத் தேடியோடி அணுகுற்று அருளைப் பெற்று
இன்புடனே எந்நாளும் உன்கடமை செய்வதிலே இயைந்து நிற்பாய்

37. பக்தியொடு பண்பாடல் பரமனடி யார்கடமை பன்னிப் பாடு
சக்தியொடு சிவநாமம் சந்நிதிக ளெங்கெங்கும் சார்ந்து பாடு
முக்தியது பெறவேண்டி முதிரன்பால் முன்னவனை முறையாய்ப் பாடு
சித்தியது பெற்றிடுவாய் சிவனாரைச் சேர்ந்திடுவாய் சிரத்தை யாலே

38. மனவழுக்கைப் போக்கிமும் மலம்போக்கி மனவாக்குக் காயந் தன்னால்
அனைத்தறமு மாற்றிவந்து அடிமுடியை அகக்கண்ணால் காண நேரின்
வனத்தகத்து வேட்டுருவில் வந்துசுகம் கேட்டிடுவன் வருக! வென்றே
நினைப்பதனைக் கொடுத்தாண்டு நில்லாது மறைந்திடுவன் நிமலன் அன்றே

39. கண்ணாலே காண்பதற்கு மரியானைக் காதலித்துக் கசிந்து நின்றால்
விண்ணாலே வந்திறங்கி வீறுநடை போட்டுநின்று விளங்க நிற்பான்
எண்ணாதோர்க் கெட்டாத எம்மிறையை இதயம்பண் பாடி நோற்றால்
நண்ணாத நரகருக்கும் நற்கருணை நல்கிநிதம் நண்ணி நிற்பான்

40. உள்ளொன்று வைத்ததன்மேல் புறமொன்று உரைக்கின்ற உணர்வே யற்ற
கள்ளமனக் கபடரினை கன்னெஞ்சக் காலரினை கண்ணால் பேசும்
குள்ளநரிக் கூட்டத்தார் குதர்க்கமுடன் நகைப்புடனே நக்கிப் பேசும்
முள்ளருமே முழுமனித ராகிவிட்டால் முரண்பாடு காட்டா னெந்தை

41. தன்மனையை விட்டொழிந்து பிறர்மனையின் விருந்தாளி யாகி நிற்கும்
மன்மதரை மதம்பேணா மாந்தரினை மகுடியூதும் மாக்கள் தன்னை
கன்மவினைக் காவலரை கருவறுக்கும் கயவரினை கற்புப் பேணாப்
புன்மயரை பொய்க்கரியே புகல்பவரைப் புடம்போட்டு வைக்கும் நீதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. நல்லவர்க்கும் நலமற்ற தீயோர்க்கும் நலமாய்ந்து தகுதிக் கேற்ப
எல்லோர்க்கும் இன்னருளை ஈந்துநிற்கும் எம்மிறைவன் இறைமை யாளன்
அல்லவரை வழிப்படுத்தி நல்லவரைத் தன்னடிக்கீ ழமர்த்து மண்ணல்
சொல்லியதே சைவநீதி! சுகவாரி! யவனின்மேற் றெய்வ மில்லை

**வேறு**

43. வையகத்திற் பிறப்பதற்கு முன்செய்த வினைதானே வழியாய் நிற்கும்
வானுலகம் செல்வதற்கு வழிதவறி வழுக்கிவிட்டோம் வருத்தப் பட்டோம்
பையவரு கிருந்தபடி யடியரெலாம் போய்விட்டார் பரம னென்னை
பதம்பாட வைத்தாரே யென்றுதுதி பாடிநின்றார் மணிவா சகனார்
ஐயனவன் சோதனைமேற் சோதனையே அடியவருள் வித்தி யாசம்
அதுவும்தான் காரணத்தோ டமைந்தவொன்று அன்பாலே அறிய லாமே
பையரவை மாலையாய்ப் பூண்டவனைப் பக்குவமா யுணர்ந்து போற்றிப்
பரமனது தத்துவத்தை பதியருளா லறிந்தென்றும் பக்கல் நிற்போம்

44. உண்ணாம லுறங்காம லொருவருக்குந் தெரியாமல் உன்னி லொன்றி
ஊராட்சி மூவுலகும் உஞற்றுவன் உயிர்காப்போன் ஒருவன் றானே
மண்ணுலகு முதலாய மூவுலகும் முறையாக வன்று மென்றும்
மாதாவாய்ப் பிதாவாகி மன்னியன புரிந்திட்டு மாட்சி செய்தே
எண்ணியவை எண்ணியவா றிலங்கநின்று எல்லாமே காத்துப் போற்றி
எவ்வுயிர்க்கும் சமநீதி தானுய்த்து நிலைப்பேறு எளிதே யாற்றி
நண்ணாமல் நண்ணிநடுத் தீர்வதனை நாட்டுபவன் நமது தெய்வம்
நாமவனை நாடியணைந் தவனருளை நனிபெற்று நன்றே வாழ்வோம்

45. கடந்தபொருள் கடவுள்தான் ஏதேதைக் கடந்தானோ கேட்டுப் பாரேன்
காலத்தை ஞாலத்தைக் கருத்ததனைக் கருவிகர ணமுத லனைத்தும்
சடப்பொருளைச் சரப்பொருளை காற்றுநீரை சார்ந்துசாரா மலுந்தா னேயாய்
சாதனைகள் சோதனைகள் சம்பவமு மசம்பவமுஞ் சகல வெல்லாம்
திடப்பொருளைத் திரவத்தைத் திரட்டியது வெல்லாமே தெரியப் பெற்ற
தடப்பொருளைத் தாண்டிநின்று தனிப்பொருளாய்த் தவமாகித் தண்மை தாங்கி
இடப்பொருளாய் இல்பொருளாய் எங்குமென்றும் எதற்கும் மேலாய்
எங்கெல்லாம் நிறைந்திட்டு ஏழுலகும் கடந்தபொருள் கடவு ளாவர்

46. நாடோறும் நினைந்தழுது நமசிவாய நாமமேத்தி நாயன் மார்கள்
நமக்குவழி காட்டிவைத்தார் நாம்வாழ அவர்பாதை நன்று தானே
தேடிநின்று திருத்தலங்கள் வழிபட்டுத் திசைகடந்தார் திருவே யுற்றார்
தாடியுடன் காவியுடை தரித்திட்டுத் தவமுனிவர் தஞ்ச முற்றார்
கூடிநின்று பிரார்தனையைக் கொலுவமைத்துக் கும்பிட்டார் கொள்கை யாளர்
கோலமிட்டுக் குறியிட்டு குணம்பேசி நலம்பாடிக் கூத்து மாடி
வாடிநின்று வரம்வேண்டி யருள்பெற்று வழிகண்ட முனிவர் பல்லோர்
வாரமுட னவர்சென்ற வழிப்பாதை வழிச்சென்று வணங்கி வாழ்வோம்.

47. இருபோதி லொருபோ தாயினும்நீ இறையோனை இரங்கிப் போற்றி
ஈர்விழியும் புனல்சிந்த இசைபாடித் தொழுதிட்டா லெல்லாங் கிட்டும்
உருவேறுந் திருவேறும் உயர்போத முருவாகும் உண்மை கண்டு
ஊருனது வழிசாரும் உலகமொளி மயமாகும் உறுதி சேரும்
பெருங்காயப் பிறவியறும் பித்தமற முத்திவரும் பிஞ்ஞகன் பாதம்
பேரின்ப மாகிவரப் பிறவியறும் மறலியினால் மான மோங்கும்
அருளாளன் ஆழியிலே அமிழ்தமுட னானசித்தி அனைத்துங் கிட்டும்
ஆனந்தம் பொங்கிவரும் ஆசையே அற்றுவிடும் அவனைக் காண்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. பட்டங்கள் போடுவதில் பயனென்ன அவையாவும் வாழ்வின் வீண்தம்
பட்டங்க ளெனவோரு பகவானின் அருளையே பரிசாய்க் கொள்ளு
எட்டப்பன் கூட்டமாய் இருக்காதே இங்குமங்கு மங்கு மிங்கும்
ஏதொன்றும் வஞ்சனைகள் இயம்பாது என்றுமிறை தன்னை யெண்ணு
துட்டனென மாறாதே தூர்த்தனெனப் போகாதே தொண்ட னாகு
தாய்மதத்தை மாற்றாதே தம்பியையு மணைத்துக்கொள் தர்மம் வெல்லும்
பெட்டிக்கண் பாம்பாகக் கொட்டாவி கொட்டாதே பேதம் போக்கிப்
பீடையில் பெருவாழ்வு பெற்றினிது பெரியோனைப் போற்றி வாழ்க.

49. தடுமாற்றங் கொள்ளாதே யிறுமாப்புக் கொள்ளாதே தயவு காட்டு
தாயத்தை நேசித்துத் தவத்தோரைப் போற்றிடுக தருமங் காத்துக்
கொடுங்கோலைக் கைவிட்டுச் செங்கோலை ஓச்சிடுக கோபம் போக்கு
கோலத்தை மாற்றாதெப் போதுபோல இப்போது மிருத்தல் நன்று
வெடுக்கெனப் பேசாதே மிடுக்கொன்றுங் கொள்ளாதே வேட்கை வேண்டு
வேதனையின் விளிம்பதிலும் சாதனையே விரும்பிச்செய் வீம்பு காட்டாய்
உடுக்கையே தளர்ந்தவன்கை போலுதவி செய்திட்டே உவந்து வாழ்க
ஊர்நடுவண் பழமரமா யுன்வாழ்வு உறுதுணையாய் இருத்தல் வேண்டும்.

வேறு

50. தொட்டதனைக் கைவிட்டு விட்டதனைக் கைப்பிடிக்கும் நாடு காணே!
பட்டதனை யெண்ணாது பரம்பொருளை நண்ணாது பருவம் பாரா
திட்டமுடன் வாழ்ந்திட்டு இருபோதும் இன்னற்பட் டிங்கு வாழும்
கட்டழகுக் காதலரே கருதிடுவீர் கலாச்சாரங் கருகிப் போச்சே.

51. கல்லானா லுங்கணவன் புல்லானா லும்புருடன் கருத்தில் கண்டு
நல்லோராய் வாழ்ந்துவந்த நந்தமிழின் நெறிநின்று நம்மைக் காத்துத்
தொல்லுலகில் நிலைத்திட்ட தூயபுகழ் தமிழ்ச்சாதிப் புகழே யாகும்
வல்லாளன் வகுத்திட்ட சைவநெறி வழிக்கொண்டு வாழ்ந்து நிற்போம்.

52. கண்கண்ட அழகென்ன கடவுளைநாம் காண்பதுவே கடைசி மட்டும்
பண்பட்ட உள்ளமதே பரஞ்சோதி பதஞ்சாரும் பாதை மாறிப்
புண்பட்ட மனத்தோரைப் பார்த்திட்டாய் புலம்பேர்ந்தாய் புனித னாகு
மண்பட்டு மறையாது மாநிலத்தில் மணம்வீசி மன்னி வாழ்க

53. பெண்ணுக்கு நாற்குணமே யழகாகும் பேருலகில் பிறிதொன் றில்லை
கண்ணுக்குள் மணிதானே காட்சிதரும் கற்புமிக்க காரிகை யாளே
விண்ணுக்கும் மண்ணுக்கும் விருந்தாளி வீரத்தாய் வேட்பு வாழ்வில்
அண்ணற்கு மருமருந்தும் அருள்கூட்டும் அணங்காவள் அறிந்து போற்று

54. இணைந்திருவ ராற்றுகின்ற இல்லறமே நல்லறமா மிங்கு மங்கும்
இணைந்திடுமே யறவாழ்வு அன்புவாழ்வு அமரவாழ்வு மிதுவே யாகும்
துணைவனெனத் துணைவியெனத் தூரியவாழ்வு துதைந்திலங்கும் துறவு மோங்கும்
இணைந்தவிரு மனமன்றோ ஒருமனதாய் இறையோனை ஏத்திப் போற்றும்

55. எனவேதான் நல்லவளை வீட்டிற்கு வையென்று எங்குஞ் சொல்வர்
மனமேதான் மகிழ்வுதரும் மாட்சியுடன் மங்கலமாம் பேற்றைத் தந்தே
இனவுணர்வு இறையுணர்வு இன்னயாவு மினிதாக்கி இறுதி யாக
முனைவனடி சேர்வதற்கும் முத்திம்பே றடைவதற்கும் மூல மாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. பெரும்பெருமான் பித்தனுக்குப் பித்தனாகப் பிறங்குமதிப் பிறையைச் சூடி
வரும்பெருமான் வாயார மனமார வானவர்க்கும் வரமே யீந்த
அரும்பெருமான் அண்மித்தும் சேய்த்துமாக ஆதிநடு வாகி யாவுந்
தரும்பெருமான் தன்னைநீ தவறாது தொழுதுநிற்பின் தருவான் முத்தி

57. அன்புமவன் சிவனுமவன் அனைத்துமாக நிற்குமவன் தானே தானாய்
முன்புமவன் பின்புமவன் முழுமுதலாய் மூலமென முன்னி நிற்கும்
இன்புமவன் இறையுமவன் இன்றுமன்று மென்றுமெலாம் இயைந்து என்றும்
மன்புருவ மத்தியிலே மறைந்துநிற்கும் மாணிக்கம் மகேசன் தானே

58. நின்றுருகும் நினைவாளர் நெஞ்சினுள்ளும் புறத்துமாக நிற்கும் மேலோன்
அன்றலரும் நறும்போதாய் அணிமணியாய் ஆவலுள அடியார்க் கெல்லாம்
துன்றுபரம் பொருளாகித் துணைநிற்கும் தூயோனைத் துதிப்பாய் நெஞ்சே
நன்றுபல நமைச்சேரும் நால்வருடன் ஐவரென நாடே போற்றும்

59. தீதொழித்து நன்றுசெயத் திருவோங்கும் மருள்நீங்கித் திறமை யோங்கும்
பேதமையே பிற்போகப் பிணிமூப்பும் பின்னடையும் பிறப்பு மாழும்
வேதனையின் விளிம்பதனில் வந்துள்ள அன்பாளர் வாட்டம் நீக்கிச்
சாதனைகள் செய்பவனே சதாசிவமாம் சன்மார்க்கச் சைவ மேலோன்

60. உள்ளொன்றும் புறமொன்றும் பேசிநிற்கு முனைநீயே உணர வேண்டும்
பள்ளத்தில் வீழ்ந்தாலும் பக்குவமாய்க் கரையேறும் பான்மை வேண்டும்
முள்ளுக்குள் நாண்மலராய் முறுக்கவிழ்ந்து வாழ்வதிலோர் மேன்மை யில்லை
வள்ளலடி சேர்கின்ற வாண்மலராய் மலர்வதற்கு வழியைத் தேடு

61. உன்மனதைச் சீர்ப்படுத்தி உவந்திறையைத் தொழுதுவரின் உண்மை தோன்றும்
கன்மனதை உருக்குதற்கும் கடவுளைநீ காண்பதற்கும் கருத்தைக் கொண்டு
நன்மனதால் யாசிநிதம் நாடோறும் நாமமதை நயந்து போற்று
முன்னவனே முன்வருவான் முத்தமிழால் பாடிநிற்பின் முத்தி சேர்வாய்

62. முயன்றாலு மெட்டாது கிட்டாது முடவனுக்குக் கொம்புத் தேனே
அயர்ந்தாலுங் கிட்டாது அவன்பாத மனுதினமு மணுகி டாது
நயந்தாலும் நனிதருகில் நின்றாலு நல்லடியார் தொண்ட ராகி
வியந்தாலும் விடைப்பாகன் வாசலிடை விரைந்தாலும் விண்ணே சேர்வாய்

63. சமயத்தை வளர்த்துக்கொள் சந்ததியில் சன்மார்க்கம் சிறக்க வேண்டு
இமயந்தான் இறங்கிடினும் இந்துக்கள் கீழிறங்கார் இந்து வாழ்வில்
அமயமதற் கேற்றபடி அறிவிலாத வருமுண்டு அதனால் சொன்னேன்
நமசிவாய மந்திரத்தின் நற்பயனை அறியாதார் அறியா தாரே

## வேறு

**பொது**

65. தனக்கெனவே வாழாத தகமையா லுயர்சைவத் தம்பி! தங்காய்!
தாரணியிற் தலமோங்கத் தவமோங்கத் தற்பரனைத் தலையால் போற்றி
எனக்குயிரா யுள்ளவனே! எம்மிறைவா! எஞ்சிவனே! இனியுன் தஞ்சம்
ஏனென்னை யுன்னடியில் சேர்ப்பதற்கு எண்ணவிலை எப்போ? என்றோ?
உனக்கென்ன குறையப்பா உன்றலையில் நிறைமதியம் உண்டு தானே!
ஊர்விட்டு ஊர்வந்த உள்ளங்கள் உயர்வடைய வாழ வைப்பாய்!
எனக்கென்ன பாடிவிட்டேன் உள்ளத்தி லொன்றவிடு எண்ணிப் பாரேன்
ஏனப்பா மானுடமே! இறைவனைநீ எண்ணாமல் இருப்ப தென்னோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழிய ! சைவநீதி, வளமுறு தமிழும் வாழி !

# DR. RAJ SIVENDRA & ASSOCIATES


## FAMILY DENTISTRY

## டாக்டர். ராஜ் சிவேந்திரா

குடும்ப பல் வைத்தியர்

பல் வைத்திய சேவைகளும் கிளிப் போடுதலும்.

**Including Speciality Services**
**In**
**Orthodontics**
**Oral Surgery**
**Periodontics &**
**Pediatric Dentistry**



### GENERAL DENTISTRY

Dr. Raj Sivendra
Dr. Vince Fava
Dr. George Kaseros
Dr. Rob Givelas
Dr. Rob Pacione
Dr. Kim Le
Dr. Joyce Lun
Dr. David Campbell
Dr. Joseph Bencak

### SPECIALITY SERVICES

Dr. Nick Katsikeris
Oral Surgeon
Dr. David Gainey
Periodontist
Dr. David Shearer
Orthodonist
Dr. Rob Pasch
Orthodontics /GP
Dr. Shelina Dhanji
Pediatric Dentisry

### DENTURE THERAPISTS

Sam Spataro
Sal Spataro

### PARKWAY MALL DENTAL OFFICE

Parkway Mall, beside K - mart
85 Ellesmere Road, Unit 61
Scarborough, Ontario
(416) 441-2565
Open Mall Hours

### PICKERING TOWN CENTRE DENTAL OFFICE

Upper Level, South K - mart Corridor
Near Info. Centre
Pickering, Ontario
(905) 837-2322
Open Mall Hours

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஐயப்பன்

சாவையம்பதி. சைவமணி இ. சுப்பிரமணியம்

**"ஓம்"** பூரணா புஸ்கலை ஆகிய இருவருக்குப் பதியும், சிவகுமாரனும், தமது பத்துக் கைளில் தண்டம், கத்தி, சூலம், சங்கம், சக்கரம், வில், அம்பு, குலிசம் ஆகிய ஆயுதங்களுடன் அபய, வரதங்களையுடையவனும், அநேக இரத்தினங்களினால் இழைக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்தவனும், வீரன் முதலிய பரிவாரங்களால் வணங்கப்பட்ட பாதாம்புஜத்தையுடையவனும், சர்வமங்களங்களையும் அருள்பவனுமான போற்றத் தகுந்த சாஸ்தாவைத் தியானிக்கின்றேன்.

இத்தியானம், சிதம்பர ரகசியத்தில் "குஹ்யரத்ன சிந்தாமணி" என்னும் சிறந்த தோத்திரத்தில் ஸ்ரீ பரமேஸ்வரனால் பார்பதிதேவிக்கு உபதேசிக்கப்பட்டதாக "ஸ்ரீமகா சாஸ்தாத்ரி சதி" அமைந்திருக்கிறது. இது ஸ்ரீ ஹரிகர புத்திர மூலமந்திர எழுத்துக்களின் வரிசையில் அமைந்து ஸ்ரீலலிதா திரிசதியைப் போல சிறந்து விளங்குகின்றது. மேற்கண்ட திரிசுதியில் ஸ்ரீ மகா சாஸ்தா "கல்யாண வரதராக" த் தியானிக்கப்படுகிறார்.

## ஆரம்பகாலச் சைவம்

ஆதியில் இந்துநதிக் கரை நாகரிகமே சிறந்து விளங்கியது. ஹரப்பா, மொகஞ்சதாரோ அகழ்வாராய்வில் சிவனது உருவங்களும், இடபத்தின் சின்னங்களுமே காணப்பட்டன. இந்து நதியையண்டிய மக்கள் இந்துக்கள் ஆயினர். சிவவழிபாடே ஆரம்பத்தில் இருந்தது. அதனால் சிவசமயமே மேன்மை பெற்றிருந்தது. காலப்போக்கில் ஆரியர் படையெடுப்பின் பிறகு சுப, அசுப கருமங்கள் தெய்வ சம்பந்தமான கிரியைகளும், பல தெய்வ வழிபாட்டுமுறைகளும் விருப்புக் கொள்ளும் முறையில் ஆர்வமடையச் செய்தனர். ஆன்மார்த்த கிரியைகளினால் உண்மையாகவே பலன் குறைவு என்பதை இன்னும் மக்கள் உணராமல் இருப்பது விந்தையே.

சைவசமய அடிப்படை வழிபாட்டு முறைகள் உருவம், அருவுருவம், அருவம் என்பன. ஆரம்பத்தில் உருவத் திருமேனிகளை வழிபட்டபின் அவயவங்கள் அற்ற அருவுருவமான சிவலிங்க வழிபாடே முன்னையதிலும் சிறந்தது. இவ்வனுபவ முதிர்வினால் மனதிலே இறைவனை இருத்தி மானச வழிபாடான, ஆழ் நிலைத்தியான யோகவழிபாடே மிக உன்னதமானது என்பதை நாம் அறிந்தும் உணராமல் இருக்கிறோம். எம்மக்கள் பல தெய்வங்களை வழிபட்டனர். சுயவிருப்பத்தின் பேரில் பல சிறு தெய்வங்களைத் தங்கள் குல தெய்வங்களாக வழிபட்டனர். அவற்றில் உன்னதமான கொற்றவை, ஐயனார் போன்றவற்றினை ஊர் எல்லைப் புறங்களில் அமைத்து வழிபட்டனர்.

## ஐயனார் வழிபாடு

காவல் தெய்வமான ஐயனாருக்குக் கோயில்கள் இன்றி எல்லைப் புறங்களில், வெளியான பகுதியில் பிரம்மாண்டமான, கம்பீரமுள்ள உருவங்களைத் தமிழகத்தில் இன்றுங் காணலாம். கிராம மக்கள் ஐயனாரைக் கும்பிடும் முறையும், சடங்குகளின் போது ஐயனார் முன்பு வழிபடும் முறையும் அமைதியானதொரு காட்சியாகும். கள்ளங்கபடமற்ற கிராமப்புறமக்களின் ஆடம்பரமற்ற ஆன்மீக வாழ்வு அமைதியானதாம்.

கிராமத்துக்குக் கிராமம் நடைபெறும் ஐயனார் வழிபாடுகளும், அதன் முறைகளும் மாறுபட்டிருக்கும். ஆனால், கிராமத்தவர்களின் பக்தி உணர்வுகளும் ஆர்வமும் எல்லாவிடங்களிலும் ஒரேமாதிரிப் பொங்கித் ததும்பும்.

ஐயனாருக்குப் படைத்தல் என்றுதான் கிராமமக்கள் கூறுகிறார்கள். நகர்ப் புறங்களில் சமர்ப்பித்தல், காணிக்கை என்றே சொல்வார்கள். உண்மையிலே படையல் என்பதில் தான் பக்திபூர்வமான சத்திய உணர்வுகள் இருப்பதாகத் தோன்றுகிறது. வழிபாடு கிராம மக்களின் இதய பூர்வமானதும் நாகரிகப் போர்வை யற்றதுமாகும்.

ஐயனார் வழிபாடு தொன்மையான தென்பதற்குச் சான்றாகச் சங்க இலக்கியங்களில் வரும் சாத்தன் என்ற பெயருடைய தெய்வம் ஐயனாரே என்று கருத இடமுண்டு. புகழ்பெற்ற ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியில் சாத்தனுக்கு நெல்லும் மாமிசமும் படைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

காளிதேவியின் மைந்தன் என்று சாத்தானை வர்ணித்துள்ள கவிகளும் உண்டு. குலோத்துங்கன் காலத்திலேயே ஐயனார் வழிபாடு இருந்திருக்கின்றது என்பதற்கு ஏழாம் நூற்றாண்டில் நாயுடன் காணப்படும் ஐயனாரைப் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன.

விஞ்ஞானமும், நாகரிகமும் ஓங்கி விட்டபோதிலும் மக்களின் நீண்டகாலப் பழக்கங்களும், பண்பாடு, வழிபாடுகளும் இன்னும் வழிவழியாக மாறாமல் தொடர்ந்து வருவதன் மூலம் கிராமப் புறங்களில் ஆன்மீகம் வேர்விட்டு நிலைத்து நிற்கிறது.

நெஞ்சம் நிறைந்த நம்பிக்கையுடனும், உற்சாகம் நிறைந்த மனநிறைவோடும், கிராமத்து மக்கள் அனைவரும் ஒன்றாகக் கூடிக் காவல் தெய்வத்திற்குக் கொண்டாடும் ஆன்மீகத் திருவிழாவே ஐயனார் வழிபாடாகக் காலங்காலமாக நிகழ்ந்து வருகின்றது.

## சங்கரநாராயணனின் மகன்

ஓம் கடவுள் பரிபூரணப் பொருள். காணும் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமும் பூரணமானது. பூரணமான இறைவனிடம் இருந்தே வந்துள்ளது. அனைத்து உலகங்களும் தன்னிடம் இருந்தே வெளிப்பட்டும் பரிபூரணமான கடவுள் குறைவின்றிப் பூரணமாகவேயிருக்கிறார். இந்தப் பரிபூரணமான பரமாத்மா ஒன்றே சிவமாகவும், நாராயணனாகவும் உள்ளது. சிவன் ஆலமரத்தின் கீழோ, பனிமலை உச்சி மீதோ வீற்றிருக்கின்றார். உடலெல்லாம் விபூதிப் பூச்சு, புலித்தோலாடையை இடுப்பில் கட்டி, யானைத்தோலைப் போர்த்தியிருப்பர். அவரது சொரூபம், அலங்காரம், வசிப்பிடம் எதைப் பார்த்தாலும் ஞானிகளுக்கு உரியதாயிருக்கிறது. பரமசத்தியத்தையே போதிக்கிறார். தெட்சணா மூர்த்தியான குருவடிவில் வீற்றிருப்பவரும் அவரே. ஆத்ம தியானத்தில் ஆழ்ந்திருக்கிற அவரது சந்நிதி ஒரே சாந்தமாக விருக்கிறது. சிவனது உபதேசம், ஞானியின் தொழில், இவரது தோற்றம், உலகம் என்னும் மாயையான பற்றினை விடுத்து வழிபாடு, தியானம் மூலம் பரம்பொருளையடைதலே பிறிவியின் பயன் என்பதாம்.

ஆசார சீலரான முனிவர்களைப் போலச் சிவனுக்கு எப்போது பார்த்தாலும் நீராடுவதில் ஆர்வம். அதனாலே சிவன் அபிஷேகப் பிரியனாவர். சிவனின் அழகு மனத்தை அடங்கச் செய்யும் அற்புத சக்தி வாய்ந்தது.

நாராயணனாக விருக்கும்போது உலகைக் காத்துக் கொள்கிறார். அதனால் அரசனைப் போல ஆடைஆபரணாதிகள், பீதாம்பரம் கௌத்துவம், வனமாலை, கிரீடம், குண்டலங்கள் தரித்து மகாலட்சுமியை மார்பிலே வைத்துக் கொண்டு, இராசாதிராசனாக விருக்கிறார். ஸ்ரீமகாவிஷ்ணு. ஸ்ரீமந் நாராயணனின் அழகோ மனத்தை மோகிக்கச் செய்து, ஆனந்தக் கூத்தாடச் செய்வது. மகாவிஷ்ணுவின் திவ்விய அழகில் இருந்து வைத்த கண்ணை வாங்க முடியாமல் இருக்கிறது. ஸ்ரீ ராமனாகவும், கிருஷ்ணபரமாத்மாவாகவும் அவதரித்த போதும் இந்த ஜகன் மோகன் சௌந்தர்யம் அவரைவிட்டு நீங்காமலே யிருக்கிறது.

இத்தன்மைய சிவனும், நாராயணனுஞ் சேர்ந்து தாருகா வனத்து முனிவர்களினதும், பத்தினிகளினதும் அகங்காரத்தையடக்கச் சென்றனர். சிவன் பிட்சாடனராகிப் பேரழகனாகவும், இயற்கையிலே பேரழகு வாய்ந்த திருமால் அழகு மிக்க மோகினியாகவும் வடிவெடுத்துச் சென்றனர். முனிபத்தினிகள் பிட்சாடனரைக் கண்டதும் மனமயங்கியோடினர். இளம் முனிவர்கள்ஆம், சிறிது வயதானவர்கள் கூட மோகினியைக் கண்டு மயக்கமுற்றுப் பின் சென்றனர். முதிர்ந்த முனிவர்கள் உண்மையை உணராது யாகஞ்செய்து முயலகன் என்னும் குறட்பூதம், அக்கினி பாம்பு முதலியவற்றைக் கொல்லும் படி ஏவினர். சிவன் அவற்றினையடக்கிய பின் தான் ஏற்றுக் கொண்டார். முனிவர்கள் செருக்கொழிந்து இறைவனை அடிபணிந்தனர் என்பது புராணக்கதை.

அலங்கார ரூபனான திருமால் மோகினி என்றவோர் அழகான உருவம் கொள்ளும்போது எவ்வளவு அழகாகவிருந்து எல்லோர் உள்ளங்களையும் மூழ்கடிக்கச் செய்திருப்பார். பரம ஞானியாக, தபோதனராய் விளங்கிய பரமேஸ்வரனுடைய மனதைக் கூட மயக்கிவிட்டது.

மோகினியாக வந்த நாராயணனின் காருண்ய உள்ளமும், சங்கரனாரின் சாந்த ஞானமும் ஒன்று சேர்ந்தவுடன் ஒரு சோதி தோன்றியது. இந்தச் சோதியே ஐயப்பனாக உருக்கொண்டு சங்கரநாராயணனின் மகனானார். இவரே ஹரிகர புத்திரன் என்றும் ஐயனார் என்றும் சாஸ்தாவென்றும் கருதப்பட்டது.

ஐயன் என்பது ஆர்ய என்பதன் திரிபு. மதிப்புக்குரியது என்பது அதன் பொருள். உலகத்தோடு ஒட்டி நோக்கின் மதிப்புக்கான இருவரின் குழந்தையெனவே மேன்மையானவராம்.

ஐயனார் காவல் புரிந்து தீயசக்திகளில் இருந்து நம்மைக் காத்துக் கொள்கிறார். இதனைவிட மேலாக நாராயணனிடம் இருந்து நல்வாழ்க்கையையே நிர்வகிக்கும் சக்தியையும், இறைவனிடமிருந்து விமோசனம் தருகிற ஞானத்தையளிக்கும் சக்தியையும் பெற்றிருக்கிறார்.

## ஐயப்பனின் தோற்றங்கள்

ஞானத்துப் புழையில் கொஞ்சும் பாலகனாக, ஆரியங்காவில் இல்லறம் பூண்டு, ஆண்டுதோறும் கல்யாணக் காட்சிதரும் சாஸ்தாவாக, அச்சன் கோவிலில் பூர்ணாவும், புஸ்கலையோடும் சேவைபுரிய, தியானத்தில் இருக்கும் வானப் பிரஸ்த சாஸ்தாவாக, எரிமேலியில் வில், அம்பு, கொண்டு வேட்டைப் பிரியனாக, சபரிமலையில் துறவுக் கோலம் பூண்டு, ஞானமுத்திரை காட்டி, பத்மாசனத்தில் அமர்ந்து யோக நிட்டையில் இருக்கும் ஐயப்பனாக, காந்த மலையில், மகரநாளன்று மட்டும் சோதிவடிவாகக் காட்சியளித்துத் திருவருள் புரிகிறார்.

## புராணங்களில் ஐயப்பன்

பிரமாண்டபுராணத்தில் உள்ள "பூதநாத உபாக்யானம்" என்ற பகுதியும், தமிழ்க் கந்தபுராணத்தில் உள்ள "மகா சாத்தப்படலம்" என்ற பகுதியும் ஐயப்பனின் தோற்றத்தையும் ஏற்றத்தையும் கூறுகின்றன.

சூரபத்மன் வானுலகைக் கைப்பற்றி வானவர் பலரைச் சிறையில் அடைத்தான். இந்திரனின் மகன் சயந்தனும் சிறைப்பட்டான். அப்போது தப்பியோடி வந்த தேவர் தலைவன் இந்திரன், தமிழ் நாட்டில் சீர்காழியில் ஒளிந்து வாழ்ந்து வந்தான். தப்பிய தேவர்களில் சிலர் இந்திரன் சீர்காழியில் இருப்பதையறிந்து அங்கு வந்தார்கள். அவனிடம் சூரபத்மனின் கொடுமைகளைச் சிவனிடம் தெரிவிப்பதற்காகத் தாங்கள் கயிலைக்குச் செல்லத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிட்டதாகக் கூறினார்கள். இந்திரனே தங்களுக்குத் தலைமை தாங்கி வரவேண்டும் எனவும் விண்ணப் பித்தார்கள். இந்திரனும் உடன்பட்டான்.

"என்னைத் தனியாகச் சீர்காழியில் விட்டு நீங்கள் செல்லாதீர்கள்" என்று பயந்த நிலையில் இந்திராணி பகர்ந்தாள். "நான் கைலைக்குச் சென்று திரும்பும் வரையில், நீ தனியாகவிருந்தாலும் கவலையும் பயமும் கொள்ள வேண்டாம். தனியாக இருக்கும் உன்னைக் கருணை மிகுந்த சாஸ்தா நிச்சயம் காப்பாற்றுவார்" என்றான் இந்திரன். சாஸ்தாவா காப்பார்? யார் அவர்? என்று வினவினாள் இந்திராணி.

பாற்கடலைக் கடைந்து அமுதம் பெற்றபோது திருமால் மோகினி வடிவங்கொண்டார். அவருடன் சேர்ந்து முக்கட் பிரம்மன் அளிக்கத் தோன்றியவரே சாஸ்தா. தனிமையில் இருக்கும் உன்னையும் நிச்சயம் அவர் காப்பாற்றுவார். என்று ஐயப்பன் தோன்றிய வரலாற்றை வானவர் தலைவனான இந்திரன் கூறியதாகக் கச்சியப்பர் அருளிய கந்தபுராணத்தின் மூலமும் அறியலாம்.

இந்திராணி பயந்தபடி தனிமையில் இருப்பதையறிந்து சூரபத்மனின் தங்கை அசமுகி அங்கு வந்தாள். அவள் தனது தமையன் சூரபத்மனுக்கேற்றவள் என்று இந்திராணியின் கையைப் பிடித்து இழுத்துச் சென்றாள். அப்போது

**"பையரா அமளியானும் பரம் பொருள் முதலும் நல்கும்**
**ஐயனே! ஓலம்! விண்ணோர்க்கு ஆதியே! ஓலம்!**
**கையனே ஓலம்! எங்கள் கடவுளே ஓலம்! மெய்யர்**
**மெய்யனே! ஓலம். தொல்சீர் வீரனே! ஓலம்! ஓலம்!**

என்று சாஸ்தாவைப் பயபக்தியுடன் அழைத்து இந்திராணி ஓலமிட்டாள். உடனே அங்கு ஐயப்பனின் படைத்தலைவரான வீரமாகாளர் ஓங்கிய வாளுடன் தோன்றினார். அவர் கூறிய அறிவுரைகளையும் அசமுகி கேளாமல் இந்திராணியை இழுத்துச் செல்ல முயன்றாள். அபயம் வேண்டிய அபலைப் பெண்ணை இழுத்த அசமுகியின் கையை வீரமாகாளர் வெட்டினார். அசமுகி அழுது குழறியபடி சூரபத்மனிடம் ஓடினாள். இவ்வாறு ஐயப்பன் அருளால் இந்திராணி காப்பாற்றப்பட்டாள் என்று கந்தபுராணத்தில் காணலாம்.

இறைவனைச் சார்ந்து வாழ்பவர்களால் மட்டுமே இந்த மயக்கத்தைத் துண்டித்து விலக்க முடியும் என்பது தான் இவ்வரலாறுகளின் உட்பொருளாகும். இந்திராணியைக் காத்தது போலவே அவர் மக்களைக் காப்பதால் சாஸ்தா என்று பெயர் பெற்றார்.

சாஸ்தா என்ற சொல்லை அப்படியே தமிழாக்கி 'சாத்தன்' எனவும் வழங்கினர். அதனால் சாத்தனூர், சாத்தன் குளம் போன்ற ஊர்ப் பெயர்களும் இந்தியாவில் எழுந்தன.

திருநாவுக்கரசு நாயனார் தமது தேவாரத்தில் "'பார்த்தனுக்கருளும் வைத்தார். பாம்பு அரைஆட சாத்தனை மகனாக வைத்தார்" என்று அந்தப் பெயரைக் குறிப்பிடுகிறார்.

### திருக்கல்யாணம்

ஆலயங்களில் ஸ்ரீ மீனாட்சி கல்யாணம் சிவன் கோயில்களிலும் ஸ்ரீவள்ளி கல்யாணம் முருகன் கோயில்களிலும் நடைபெறுகின்றது. இதேபோன்று கேரளாவில் ஆரியங்காவு, தகழி போன்ற சில ஆலயங்களில் சாஸ்தா கல்யாணம் நடத்தப்படுகிறது. சபரிமலையில் நித்திய பிரம்மச்சாரியாகத் தவக்கோலம் பூண்டு காட்சி தரும் ஐயப்பனுக்கு எப்படி நடத்துவது எப்படிப் பொருந்தும்? ஐயப்பனது அவதாரத்தில் எந்தக் கால கட்டத்தில் நடந்தன? ஆதாரம் உண்டா? என்றும் கேட்கலாம்.

முதலில் புராண வரலாறுகளின் அடிப்படையில் சபரிமலையில் நித்ய பிரம்மசாரியாக யோக நித்திரையில் அமர்ந்திருக்கும் பகவானுக்கு ஐயப்பனாக, மணிகண்டனாக அவதரித்த காலத்தில் தான் திருமணம் கிடையாது. ஆனால் ஹரிகர சுதனாக அவதரித்துக் கைலையில் காந்தகிரியில் கொலுவிருக்கிறார். சாஸ்தாவுக்குப் பூரணா, புஸ்கலா என்ற இரு தேவியரும் சத்யன் என்னும் செல்வப் புதல்வனும் உள்ளனர் என்பது கர்ண பரம்பரைக் கதை.

காஞ்சி காமாட்சியம்மன் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஐயனார் பூர்ணா, புஸ்கலா சமேதராகவே காட்சி தருகின்றார். கிராமங்களிலும் கல்யாணக் கோலத்தினைக் கண்டு களிக்கலாம்.

### புஸ்கலா கல்யாணம்

புளிஞன் என்ற அரசன் நேபாள நாட்டை ஆட்சி செய்து வந்தான். அவனது மகள் இளவரசி புஸ்கலை. அவள் மிகுந்த சிவபக்தி மிகுந்தவள். தன் பெண்ணைக் காளிதேவிக்கு நரபலியாகக் கொடுத்தால் தான் மூப்பின்றி நீண்டகாலம் வாழலாம் என்று மந்திரீகனின் கூற்றை நம்பினான். ஆதலால் அவன் தன் மகள் என்றும் பாராமல் புஸ்கலையைப் பலியிட அழைத்துச் சென்றான்.

சிவபக்தியில் சிறந்த புஸ்கலையைச் சிவபெருமான் கைவிட விரும்பவில்லை. அவர் புஸ்கலையைக் காத்தருளும்படி ஐயப்பனை அனுப்பினார். பேரழகனாகத் தோன்றினார் ஐயப்பன்.

பலியிடும் நோக்கத்துடன் தன் மகளை அழைத்துச் சென்று கொண்டிருந்த புளிஞன் ஐயப்பனிடம் இனந்தெரியாத ஈடுபாடு கொண்டான். அவரே தனக்கு மருமகனாக வரவேண்டும் என்றும் வேண்டினான். மகளைப் பலியிடும் எண்ணமும் அவனிடமிருந்து விலகியது. அரசன் விரும்பியபடியே அவன் மகள் புஸ்கலையை ஐயப்பன் மணந்து கொண்டார்.

### பூர்ணா கல்யாணம்

கொச்சி இராச்சியத்தை ஆண்டு வந்த பிஞ்சகன் என்னும் மன்னன் ஒரு சமயம் வேட்டையாடும் நிமித்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனம் சென்றிருந்தபோது, அந்தி சாய்ந்து இருள் சூழ்ந்திட, திரும்பிச் செல்லும் வழி தெரியாது தவித்து நின்றான். அது சமயம் வனத்தில் திரியும் பூத, பிசாசு கணங்கள் மன்னனைத் துன்புறுத்தத் தொடங்க, மன்னன் நடுங்கி பூத நாதனைத் தியானித்தான். அபயக்குரல் கேட்டு அடியார் குறைதீர்க்க விரைந்து வரும் ஹரிகரசுதன் மன்னனைப் பூத கணங்களிடமிருந்து விடுவித்துக் காத்து அருளினான். மனம் மகிழ்ந்த அரசன் ஆதி ரூபவதியான தன் குமாரி பூரணாவை மனைவியாக ஏற்றுக் கொள்ளுமாறு ஐயனை வேண்டினான். ஐயனும் இசைவுடன் பூரணையை கடி மணம் புரிந்து கொண்டார்.

புஷ்கலையை மணந்த ஐயன் பிறகு பூரணாவையும் மணந்து கொண்டதை அறிந்து சினந்த புளிஞன், "மனிதர்களாய்ப் பிறந்து பிரம்மச்சாரியாக இருக்கக் கடவது" என்று சபித்தான். அதையே ஒரு வரமாக ஏற்றுக் கொண்டு பகவான் மணிகண்டனாக அவதரித்து சபரிமலையில் பிரம்மச்சர்ய விரதம் பூண்டிருப்பதாகவும் கதைகளில் கூறப்படுகிறது.

பிரமாண்ட புராணத்தின்படி உபேந்திரனுடைய தங்கை பூர்ணா என்றும் அவளை சாஸ்தா சித்திரா பௌர்ணமியன்று திருமணம் புரிந்து கொண்டார் என்றும் கூறுகிறார்கள். (இப்படிப் பல சம்பவங்கள் உண்டு)

## பகவானுடைய திருக்கல்யாணம் என்பதென்ன?

பரமாத்மாவும் ஜீவாத்மாவும் இணைவதே இறைவனது திருக்கல்யாணமாகும். பரமான்மாவான பகவானிடம் ஜீவான்மாக்கள் ஆகிய நாம் இரண்டறக் கலக்கும் ஆனந்த நிலையே.

சாஸ்தாவின் இருபுறமும் கொலுவிருக்கும் தேவியர்களில் புஸ்கலை ஞானமார்க்கம், பூரணா பக்திமார்க்கம் ஆகும்.

நம் உடலில் விளங்கும் இடை, பிங்கலை, சுழுமுனை நாடிகளில் சாஸ்தா விளங்கி இருநாடிகளும் அதை அலங்கரிக்கின்றன. சங்கரனும், நாராயணனும் தங்களது அம்சங்களின் ஒரு பகுதியை ஒருங்கிணைத்து ஹரி ஹரசுதன் அவதரித்தார். ஹரி ஹரனது தேவியராம் துர்க்கையும் இலட்சுமியும் தங்கள் அம்சங்களை முறையே புஸ்கலை, பூரணாவாக வெளிப்படுத்தி இறைவனை அலங்கரிக்கின்றனர்.

சாஸ்தாவை மும்மூர்த்திகளின் அம்சம் என்றும் கூறுவர். சிவபிரான் சாஸ்தா அவதரித்தவுடன் "குழந்தாய், நானும், விஷ்ணுவும் பிரம்மனும் உன் உருவாய் அவதரித்திருக்கின்றோம்" என்று பாராட்டியதாக ஸ்காந்தபுராண கோடிருத்திர சம்கிதை மூலம் அறியலாம்.

## "சில்ப ரத்தினம்" என்னும் நூலின்படி சாஸ்தா

இவர் அழகிய பரந்த கூந்தல் நிறைந்த சிரத்தினர். குண்டலங்கள் ஒளிரும் காதுடையவர். ஒரு கையில் வில்லும், மற்றொரு கையில் அம்பும் வைத்திருப்பவர். நீலப்பட்டுத் தரித்து புதிய நீருண்ட மேகம் போன்ற மேனியராய் பிரபை என்ற தேவியையும் "சத்யகன்" என்ற பிள்ளையையும் பக்கத்தமர்த்திய கோலத்துடன் சிம்மாசனத்தில் வீற்றிருப்பார். பிரபை என்னுந் தேவி சிவந்த பூக்களால் அலங்கரிக்கப்பட்டவள். மிக அழகுள்ளவள். இளமையானவள். சிவந்த கண்கள், வீணை ஏந்திய கையினள். சத்யகனோ, நீலமேக வர்ணமேனி, மங்கள ரூபன், மஞ்சள் நிற அணிகளை யுடையவன். நாணேற்றிய வில்லை ஏந்தியவன் என்று வர்ணிக்கப்படுகிறது.

பிரபாபதியைக் காந்தர்வ விவாகஞ் செய்திருக்கலாம். இவையெல்லாம் வெவ்வேறு சம்பவங்கள். ஆரம்பத்தில் கூறிய துதிப்படி பூரணா, புஸ்கலையே இரு தேவியராம். லலிதா நாமாவளியில் பூரணா என்பது எங்கும் வியாபித்து இருப்பவள் என்றும், புஸ்கரா என்பது "எங்கும் நிறைவாகி இருப்பவள்" என்றும் பொருளாம். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய், காந்தமலைச் சோதியாய் பகவான் எல்லா இடத்திலும் பூரணமாகவும் புஸ்களமாகவும் விளங்குகின்றான் என்றுங் கொள்ளலாம். இப்படிப் பல்வேறு தத்துவங்கள் சாஸ்தா கல்யாணத்தில் அடங்கியுள்ளன.

சுவாமியே சரணம் ஐயப்பா
**பூரணா புஸ்கலா காந்தனே! சரணமய்யப்பா!**

### சான்றோர் சொல்லமுதம்

**இறந்த காலம் செல்லுபடியாகாத காசோலை போன்றது. எதிர்காலம் சத்தியக்கடதாசி போன்றது. நிகழ்காலம் தான் பெறுமதி வாய்ந்தது. ஆகவே அதனை நாங்கள் பயனுள்ளதாக்க வேண்டும்.**

**நாம் நன்மை செய்தால் பலனாக நன்மையே பெறுவோம். "வினை விதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான்'**

**பயனற்ற உலக சிந்தனைகளில் மனதை அலையவிடாது மனதை ஒரு நிலைப்படுத்திக் கடவுளைத் தியானிக்க வேண்டும்.**

சஞ்சாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழிய நீதி

# VJS AUTO SALES

தரமான பாவித்த கார்கள்

நியாயமான விலை

உத்தரவாதம் (Warranty)

கடன் ஒழுங்குகள்



Trade வசதிகள்




**Call: 416-292-9291**

**4181 Sheppard Ave. East (at Midland)**
**Scarborough, On**

# Auto Sales

**BUYING - SELLING AND TRADING USED CARS**



**Call:**
**Nada**

**(416) 953-9462**

**4181 SHEPPARD AVE. EAST**
**(Midland / Sheppard)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா இந்து மாமன்றம் - சைவநீதி தரும்,
# கலாபீடம்.

ஐந்தெழுத்து மந்திரங்காண் ஆதிசிவ மந்திரம்
சிந்தனைக்குச் சிறப்பளிக்கும் சிவாயநம மந்திரம்
நந்தமக்கு அருள்தூல நமசிவாய மந்திரம்
இந்துமன்றக் கலாபீடம் எடுத்துரைக்கக் காண்மினே!

சைவநீதி சைவநெறித் தத்துவார்த்த விழுமியம்
கைவரவே மன்றுள்வெளி காட்டுமின்பக் கருத்தினை
தெய்வத்திரு மேலவர்கள் தேடிவைத்த தரவினை
உய்யும்வழி காண்பதற்கு உய்த்துணர்ந்து உள்குவோம்

அம்மையப் பனாகிநிற்கும் அருங்கருத்தை அறிகுவீர்
செம்மையே சிவலோக மாழும்வழி தேருவோம்
இம்மையில் பிறந்தபயன் எய்திடவே எண்ணுவோம்
நம்மையே நாமறியக் கலாபீடம் நாடுவீர்!

அறுசமய தத்துவங்கள் அநுபூதி வாக்குகள்
பெறுமவற்றுள் மேலான பேறுபெறும் பெற்றிகள்
உறுபொருளை நாமறிந்து உய்திபெற வேண்டிய
திறவுகோலே கலாபீடம் தேடிவந்து உய்மினே!

நூற்பொருளை நன்குகற்ற நுண்ணறிவா - ஆய் வாளரே
தாற்பரியத் தத்துவத்தைத் தந்துதவ வேண்டுதும்
பாற்குடத்தைப் பயன்படுத்திப் பல்லோருமே பாங்குற
வார்த்துநிற்கும் கலாபீடம் வந்துவாங்கி வாழ்கவே! - நம்பி

Q.1 Kindly explain the real meaning of LINGAM and how people came to regard it as a phallic wymbol? Who initiated this worship?

Ans: The Lingam along with YONI are geometrical or visual representations of the fundamental SIVA TATVAS of NATHAM and BINDU. They are universal and are present everywhere manifesting themselves at various levels - the physical, biological, psychological, depth psyhological and so forth. They are also known as SIVAM and SAKTI and always operate in union at all these levels. Only at the biological level they manifest themselves as the sexual organs of the male and female. But they exist also at the psychological and spiritual levels, Please read the articles on Agamic psychology in Saiva Ulakam: 8, 9 and 10. Also read the current article on Tantric Psychology being serialised.

Since the historical beginnings of the worship of LINGAM is unknown, we cannot be sure who initiated it. A few millenniums ago it was widely prevalent all over the civilized world.

The LINGAM and YONY as SIVA TATVAS exist everywhere and in every mind. It has erupted into consciousness in several parts of the world. In China they are termed Yin and Yang. In the Analytic Psychology of C.C. Jung they are known as Animus and Anima. BAUM TEST, recently developed, provides empirical evidences for their reality.

Q.2: In the icons of Siva Nadarajah, SIVA is known to trample over the baby-like dwarf, called muyalakan. What is the real meaning of this act?

Ans: What SIVA tramples over by his firm right foot

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

is not a baby but muyalakan, the dwarf shaped demon. The Dance of Siva is a dance of BLISS, a dance of victory over the evils. The muyalakan is the presence of anava malam in our psychic interiority that has been there from beginningless times. It is to liberate the psyches from the hold of ANAVAM that SIVA dances the dance of pancakritiyas on account of which there is this universe and we have an existence. Though they are universal and powerful activities, they are in the nature of PLAY for SIVA for they are done effortlessly by Him and also done out of supreme Grace. It also symbolises the fact that should we conquer the dwarf, the saytan in us, we too can dance the DANCE of BLISS.

Q.3: Can a Saivite be regarded as an iconoclast?

Ans: An iconoclast is a person who is against image worship in religious practices. In this sense certainly a Saivite is NOT an iconoclast. On the contrary he insists on the relevance and utility of image worship. However Saivism also recommends the raising of one self to higher levels where images are not necessary and the worship itself becomes jnanapucey-deep meditative reflections that are supremely illuminating.

கேள்வி: சிவபெருமான் முழுமுதற் கடவுளாக படைப்பான், காப்பான், அழிப்பான் எனப்படுகின்றான். ஆனால், எதைப் படைக்கின்றான், காக்கின்றான், அழிக்கின்றான்? ஒரு விளக்கம் தேவை.

பதில்: பொருள் என்று எது இருக்கின்றதோ அதை யெல்லாம் சிவபெருமானே படைத்துக் காத்து அழிக்கின்றான். இவை அனைத்தும் பொருட்பிரபஞ்சம் சொற்பிரபஞ்சம், மந்திரப்பிரபஞ்சம் என்றவாறு பலவகைப்படும். இராமலிங்க வள்ளலார், பெரிய புராணத்தில் வரும் "உலகெலாம்" என்ற சொல்லிற்கு உரையெழுதும் போது, இந்தப் பிரபஞ்சங்களை எல்லாம் எஞ்சாவகை மிக விரிவாக விளக்கி இருக்கின்றார். ஐம்புல நுகர்ச்சிக்கு ஆவதும், கருத்துப் பொருளாகிச் சொற்களால் உணர்த்தப்படுவதுவும், மேலும் இவற்றிற்கெல்லாம் மேலாக மறையாக நிற்கும் மந்திர சொரூபங்களும் பிறவுமே "பொருள்" எனப்படுவதாகும். பிரபஞ்ச ஓட்டத்தை நிறுத்தும் இவற்றைத்தான் இறைவன் படைத்தழித்துக் காத்து ஞானம் புகட்டுகின்றான்.

கேள்வி: சிவபெருமான் புலித்தோல் உடுத்தியும் காணப்படுகின்றார். அதன்மேல் அமர்ந்திருப்பாராயும் காணப்படுகின்றார். இதன் பொருள் என்ன?

பதில்: புராணமொழியில் இறைவனது திருவிளையாடல்கள் உணர்த்தப்படும்பொழுது, வாகனங்களாக அரிமா, வரிப்புலி, யானை, மயில், சேவல், அன்னம் போன்றவை அமைவதுண்டு. உண்மையில் இவற்றின் தற்சொரூபம் மந்திரங்களேயாகும். அழிக்கும் வகையில் யாங்கே ஒரு திருவிளையாடலோ ஆங்கே அரிமா புலி போன்ற கடுஞ்சின விலங்குகள் வடிவத்து யந்திரங்கள் தொழிற்படவேதான் அவை மெய்யாகின்றன. சங்கார காரணனாகிய சிவபெருமான், தோன்றி நிற்கின்ற அனைத்தையும் அழிக்க வல்லவன் அவனே, அதனால், அவனே முழுமுதற் கடவுள் என்பதைப் புராணவடிவில் உணர்த்துவதே அவன் புலித்தோலை உடுத்தியிருப்பது காட்டும். அதன்மேல் அமர்ந் திருப்பது, உலகத்து பஞ்சகிருத்தியங்கட்கு முதல்வன் தானே எனினும் அவனது தற்சொரூபமாவது அனைத் தையும் கடந்த தற்பரநிலை என்பதை உணர்த்தும்.

Q.1. What enables some people get into trance?

Ans: Getting into trance is the most primitive and elementary form of religious experience. When a person dances to an appropriate form of music, we can see a transfiguration of the person whereby he is possessed by a spirit. These 'Spirits" are nothing but archetypes-primordial murthams that exist in everyone of us. They are actually mantric configurations underlying all the processes in the world. The religious types of music and dance breaks the resistance we have for the archetypes to show themselves up. Those who are moved easily by such music, become thereby easy grounds for the emergence of the archetypes from the Depths or the unconscious.

Q.2. What is the meaning and significance of taking kavady during Thaipusam festivals?

Ans: The kavady signifies the burden we carry with us all along. During Thaipusam and other festivals similar to this, we unburden ourselves by carrying kavady and doing abiseham of some sort. The 'burden" we carry is the feelings of guilt that we acquire knowingly or unknowingly in our social existence.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

We are moralistic and when we do something evil, knowingly or unknowingly, a feeling of guilt is implanted in us and which throws us into mental depression and so forth. Only in the presence of God we can unburden all these guilts, It is best done in the presence of God as Murukan for only Murukan can give us that illumination, clarity of understanding that can purify us, wash away all our sins. 'Thiru Murukan" is the inner sun that on arising can burn off all the burdens. In Tamil 'Muruku" means brilliance.

**Thanks Saiva Ulagam**

**இந்துமதம்:-** "இந்துமதம்"என்னும்பெயர், அதன் மேம்பட்ட உன்னதமான கொள்கையை அடிப்படையாகக் கொண்டு வந்ததாகும். இந்து அல்லது ஹிந்து எனும் சொல்லை ஹிம் + து எனப் பிரிக்கலாம். ஹிம் + ஹிம்சையில் (இம்சை) து: துக்கிக்கிறவன். ஓர் உயிர் எக்காரணத்திற்காகவாவது வருந்துவதாக இருந்தால் அதற்காகத் தானும் வருந்தி அவ்வுயிருக்கு வந்த துன்பம் தனக்கு வந்ததாகக் கருதி அதனை நீக்க எவனொருவன் பணிபுரிகின்றானோ அவனே, இந்து ஆவான். அப்பண்பு நலங்கொண்ட மக்களைக் கொண்ட மதமே இந்துமதமாகும்.

இந்துமதம் என்பதன் உட்பொருளே அதன் அளப்பரிய பரிணாமத்தை நமக்குப் பக்குவமாக உணர்த்துகின்றது. இந்த உலகினிலே பகலும் இரவும் போல இருளும் ஒளியும் போல இன்பமும் துன்பமும் கலந்தே நிற்கின்றன. துன்பத்தை நீக்கி இன்பத்தைக் காண இந்துமதம் மக்களுக்குக் கலங்கரை விளக்கமாக இருக்கின்றது. இந்துமதம் என்பதற்குச் 'சனாதன தர்மம்' எனப் பொருள் கூறுவாருமுளர். சனாதன தர்மம் என்றால் "அழிவில்லாத அறம்" என்பது பொருள். இது மட்டுமல்ல, இதற்குத் திருநெறி, அருள்நெறி, தவநெறி, மெய்நெறி, சன்மார்க்கம் என்ற பெயர்களைச் சூட்டி அழைப்பதும் இயல்பே. நமது கண்களால் காணப்பெறும் உலகத்தையும் அனுமானத்தால் அறியப்படும் ஆன்மாவையும் எல்லாவற்றிற்கும் மேலாம் இறைவனையும் இனிதே காண்பிக்கும் ஞானஒளி இந்து சமயம். மனிதனுடைய உடல்நலத்திற்கும் உள்ளத்தின் நலத்திற்கும் உதவும் அமுதம் இந்து மதம். மனிதர்கள் அன்புடன் அளவளாவி வாழ் வதற்குரிய வழிகளை வகுக்கும் ஒழுக்கபீடம் இந்துமதம். மக்களுடைய இகபர வாழ்விற்குரிய நலன்களை அருளும் கற்பகதரு இந்துமதம்.

இந்துமதம் காலத்தால் மிகவும் முந்தியது. அது ஒருகாலத்தில் உலகெலாம் பரவியிருந்தது என்பதனை இக்கால நவீன புதைபொருள் ஆராய்ச்சி மூலம் அறிகின்றோம்.

பிறமதங்கள் கூறும் கொள்கைகள் பல இந்துமதத்தில் அநாதியாகவே இடம்பெற்றுள்ளன. அன்னை மதம் இந்துமதமாகும்.

இந்துமதத்தின் அறநெறி, இல்லறத்தாரும் துறவறத்தாரும் முத்தி பெறலாம் எனக் கூறுகின்றது. உலகவாழ்வையும் மதவாழ்வையும் இணைத்து மேற்செல்ல, உய்கதி பெற வழிகாட்டுகின்றது. வயது பேதமின்றி நல்வினை, தீவினைகளுக்கேற்ப, தக்கவாறு மறுபிறப்பு உண்டு என்பதை வலியுறுத்தி மக்களின் இன்ப-துன்ப வாழ்வுக்குக் காரணம் அவர்களின் வினைப்பயனே என்ற அரும்பெருங்கருத்தை எளிய முறையில் எடுத்தியம்புகின்றது. விஞ்ஞானத்தால் காணமுடியாத - உணரமுடியாத மெய்ப்பொருள்களை மெய்ஞ்ஞானத்தால் நன்கு எடுத்தியம்புகின்றது.

இந்துமதத்திற்கு, வேதம், ஆகமம், இதிகாசம், புராணம், சாத்திரம், தோத்திரம் எனப் பல நூல்கள் இருக்கின்றன. வேதம் என்பதற்கு "அறிவுநூல்" என்பது பொருள். தெய்வீகமான கருத்துக்களைத் தன்னுள் அடக்கி மறைத்து வைத்திருப்பதால் வேதம், மறை எனப்பட்டது. ஆசாரியனிடம் கேட்டுத் தெளிய வேண்டிய நூல் இது. ஆதலால் சுருதி எனவுங் கூறுவர். இதனை, இருக், யஜர், சாமம், அதர்வணம் என நான்காக வகுத்துள்ளனர்.

**ஆகமம்:-** ஆ + கமம்: ஆ- ஆன்மாக்களின், கமம் - பாசங்களை நீக்கஞ்செய்து முத்திப்பேற்றை அருளுவது என்பது பொருள்.

**திருமுறை:** என்பதற்குத் தம்மை அடைந்தவர்களைச் சிவமே ஆக்குகின்ற முறை எனப் பொருள் கொள்ளலாம்.

**சாத்திரங்கள்:** பதினான்கு. இப்பதினான்கும் இந்து மதத்தின் அரிய பெரிய உண்மைகளை மிகநுணுக்கமாகக் கூறுகின்றன. இதில் தலைசிறந்த நூல் சிவஞான போதமாகும்.

**இதிகாசம்:** மதம் கூறும் அறநெறிகளை இலகுவாக உணரச் செய்வன இதிகாசங்களாகும். ஐதீகத்தை நிருபணம் செய்யும் வரலாறே இதிகாசம்.

**தேவாரம்:** தெய்வத்திற்குரிய பாமாலை. தே + ஆரம். தெய்வம் - மாலை.

**சிவலிங்கம்**

அருவத்தையும் உருவத்தையும் உணர்த்துவது சிவலிங்கம்.

**"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாம் நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்."** எனக் குறிப்பிடுகின்றார் சேக்கிழார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவலிங்கம் என்னுஞ் சொற்றொடர் தெரிவித்தல் என்னும் பொருளைக் கொண்ட "லிக்" என்பதிலிருந்து வந்ததாகவும் ஒவ்வொரு பொருளும் சிவபெருமானிட மிருந்து தோன்றுவதையும், பின்னால் அவை அவரிடம் ஐக்கியமாவதையும் சிவலிங்கம் காட்டுவதாகவும் சிலர் சொல்வர். சிவலிங்கத்தின் உள்ளமைப்பும் வெளி யமைப்பும் "ஓம்" என்னும் பிரணவ மந்திரத்தைக் குறிப்பதாகத் திருமூலர்,

**இலிங்க நற்பீடம் இசையும் ஓங்காரம்**
**இலிங்க நற்கண்டம் நிறையும் அகாரம்**
**இலிங்க துள்வட்டம் நிறையும் உகாரம்**
**இலிங்க மகாரம் நிறைவிந்து நாதமே"** எனத் தெரிவிக்கின்றார். மேலும், ஓம் என்னும் பிரணவ மந்திரத்திலுள்ள அ.உ.ம. என்னும் மூன்று எழுத்துக் களோடு வரிவடிவாகிய விந்துவும் ஒலிவடிவாகிய நாதமும் சேர்ந்து ஐந்தாகின்றன எனப் பஞ்சாட்சர விளக்கம் கூறுகின்றது.

**"ஓங்காரமாம் ஐந்தெழுத்தால் புவனத்தை உண்டு பண்ணி"** எனக் கூறுகின்றார்-தாயுமானார்.

சிவலிங்கத்தின் அடிப்பாகம் படைக்குந் தெய்வ மாகிய பிரமனுக்கு உரியது என்றும் இரண்டாம் பாகம் அதாவது நடுப்பாகம் எட்டுப்பகுதிகளைக் கொண்ட தாய் இவ்வகையில் எட்டுச் சக்திகளையும் மேலும் ஒருசக்தியாகிய ஒன்பதாம் சக்தியையும் சேர்த்து நவசக்தியாய்த் திருமாலாகிய காக்குந் தெய்வத்திற்கு உரியது என்றும் மேலுச்சிப்பாகம் பெருங்கருணைப் பேராளராகிய சிவபெருமானுக்கு உரியது என்றும் காட்டப்பெறுகிறது.

**பிறசிவலிங்கங்கள்:** கோயிலின் கோபுரம், கோயில் கொடி, கோயிலின் கருவறை ஆகியவையும் சிவலிங்கங்களாக வழிபடத்தக்கன.

**திருவைந்தெழுத்து:** ஐந்தெழுத்து இறைவனுடைய திருநாமம் ஆகும்.இத்திருவைந்தெழுத்து அப்பெரு மானுடைய திருவுருவாகவும் விளங்குகிறது என ஞான நூல் கூறும்.

**"ஆடும்படிக் கேணல் லம்பலத்தானையனே**
**நாடுந் திருவடியி லேநகரம் - கூடும்**
**மகர முதரம் வளர்தோள் சிகரம்**
**பகருமுகம் வாமுடியப் பார்"**

**"சேர்க்குந் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்**
**ஆர்க்கும் யகர மபயகரம் - பார்க்கிலிறைக்கு**
**தங்கு மகரமது தான்."** என வரும் உண்மை விளக்கத் திருப்பாடல்கள் இறைவனுடைய திரு மேனியில் திருவைந்தெழுத்து அமைந்திருக்குமாற்றை விளக்குகின்றது.

திருவைந்தெழுத்து ஓதுபவர்தம் பக்குவத்திற்கேற்ப ஐந்துவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. ஸ்தூல பஞ்சாட்சரம் - **நமசிவாய**
2. சூக்கும பஞ்சாட்சரம் - **சிவாயநம**
3. காரண பஞ்சாட்சரம் - **சிவாயசிவ**
4. மகாகாரண பஞ்சாட்சரம் - **சிவ**
5. மகாமனு - **சி**

இந்தவகையில் முன்னைய இரண்டுமே திருமுறைகளிலும் ஞானநூல்களிலும் மிகுதியாகப் பேசப்பட்டுள்ளன. பின்னய மூன்றும் மிகவும் பக்குவம் பெற்றவர்கள். குருவருள்வழி நின்று உணர்ந்து அனுபவிக்கத் தக்கனவாகும். முன்னையதான ஸ்தூல பஞ்சாட்சரம் இம்மை இன்பம் பெறவேண்டுவார் ஓதத்தக்கது என்றும் சூக்குமபஞ்சாட்சரம் வீடுபேறு வேண்டுவார் ஒதத்தக்கது என்றும் ஞானநூல்கள் வரையறை செய்கின்றன.

திருவைந்தெழுத்து ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளைக் குறித்து நிற்பதாகும்.

**சிகரம் சிவத்தையும்**
**வகரம் அருளையும்**
**யகரம் உயிரையும்**
**நகரம் மறைப்பையும் (திரோத மலம்)**
**மகரம் ஆணவமலத்தையும் குறிக்கும்.** எனவே, இத்திருவைந்தெழுத்தில் உயிர் (ய) இடையில் நிற்கின்றது. ஒருமருங்கில் சிவமும், பிறிதொரு மருங்கில் மலமும் நிற்க இவ்வுயிர், தான் சார்ந்ததன் வசப்பட்டு நிற்குந் தன்மை அறியப்பட வேண்டியதாகும்.

**"ஊன நடனம் ஒருபால் ஒருபாலாம்**
**ஞான நடந் தானடுவே நாடு"** எனவரும் திருவருட்பயன் இவ்வுண்மையை அறிவுறுத்தி உயிர் சார வேண்டிய பொருள் எது என்பதையும் குறிப்பாக அறிவுறுத்து கின்றது. குருவருள் வழிநின்று இவ்வுண்மையை உணர்ந்து ஓதுவார் தாம் ஓதயதன் பயனாகச் சிவமாந் தன்மையை அடைவர். திருவைந்தெழுத்தை வாயால் ஒலித்தலினும் மனத்தால் உன்னுதலே தக்கதாகும்.

**"சிவசிவ என்றே தெளிகிலர் ஊமர்**
**சிவசிவ வாயுவுந் தேர்ந்துள் அடங்கச்**
**சிவசிவ வாய தெளிவினுள்ளார்கள்**
**சிவசிவ வாகுந் திருவருளாமே"** என வருந் திருமந்திரம் இவ்வுண்மையை விளக்குகின்றது.

**விபூதி:** விபூதி அணிபவரைப் பரிசுத்தமாக்கியும், பாவங்களிலிருந்து விலக்கியும் சர்வஉபத்திரவங்களை நசித்தும் சௌபாக்கியத்தைக் கொடுத்தும் சம்பத்துக் களை அளித்தும் பூதம், பிசாசு, இராட்சதகண தோஷங்களை நீக்கியும் மக்களைக் காப்பாற்றுகின்றது.

**திரிபுண்டர (முக்குறி) தாரணம்:** பிரம்மா, விஷ்ணு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திரன் இவர்களையும் இவர்களின் தொழிலாகிய படைத்தல், காத்தல், அழித்தலாகிய முத்தொழிலையும் வெளிப்படுத்துதலே திரிபுண்டரதாரணமாகும். அது முறையே 32-16-8 இடங்களில் தரிப்பது உத்தமம்-மத்திமம்-அதமபக்ஷமாகும் என ஸ்காந்தம் கூறுகிறது. தரிக்குமிடங்கள்: நெற்றி, கழுத்து, கைகள், மார்பு, தொப்புள், குறி, குதம், பிருஷ்டங்கள், பாதங்கள், முழங்கால்கள், விலாப்பக்கங்கள், ஆக, பதினாறு இடங்களில் தரிக்க வேண்டும். இதனால் அந்த அந்தப்பாவங்கள் அகலுகின்றன.

விபூதியைத் தூளிதமாக அணிபவனே உருத்திரன். அவனின் ஒவ்வொரு உரோமக்கால்களும் லிங்கமாக, அந்தச் சரீரமே லிங்காகாரமாகின்றது எனச் சிவதர்மம் கூறுகிறது.

விபூதியை வைக்கும் பாத்திரத்தில் விபூதியுடன் தாழம்பூ, சண்பகம், பாடலி, துளசி, மல்லிகை கதிர்ப்பச்சை, இவைகளைக் கலந்து பரிமள விபூதியாக அணிவதால் சகலசுகங்களும் உண்டாகும் எனச் சிவசம்ஹிதை கூறுகின்றது.

**"முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு**
**சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு**
**பக்தி தருவது நீறு பரவ வினியது நீறு**
**சித்தி தருவது நீறு திருவாலவாயான் திருநீறே"** -
ஞானசம்பந்தர்

விபூதி என்பது மேலான ஐஸ்வரியமாம்.

## வினாவும் விடையும்:

**இறைவழிபாட்டில் ஏற்புடைய வழிபாடு யாது?**
இறைவழிபாட்டில் ஏற்புடைய வழிபாடு ஆத்மார்த்தமாக மனதினால் செய்யும் வழிபாடே ஆகும்.

**அத்தகைய சிறந்த வழிபாட்டிற்குத் தேவையான அம்சங்கள் யாவை?**
நமது தூய்மையான நெஞ்சம் இதுவே ஆலயம். நமது நினைவில் கருவாகி, செயலில் உருவாகும் நல்ல எண்ணங்களே சுகந்தம், அனைத்து உயிர்களிடத்தும் நாம் கொள்ளும் அன்பே மஞ்சனநீர் இத்தகைய முறையில் இறைவா! உன்னை வணங்கும் பூசையை ஏற்றுக்கொள்ள வாராய்! என அழைத்து வணங்கும் அன்பே.

**கும்பாபிடேகமாவது யாது?** கும்பாபிடேகம், கும்பதீர்த்தத்தில் இறைவனை ஆவாஹனம் செய்து யாகம் மூலம் நடத்தி மந்திர சக்தியை உருவேற்றி, அந்தக் கும்பதீர்த்தத்தை இறை பிம்பத்தில் அபிடேகஞ் செய்வதே.

**பக்தி எனக் கூறுவது யாது?**
ஒரேமனத்துடன் கடவுளிடம் செலுத்தும் அன்பே பக்தி. இந்தப் பக்திக்கு பணிவன்பே வித்து.

**பக்தியை ஏன் வளர்க்க முடியாது?**
நம்மைச் சூழ்ந்திருக்கும் மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை உயிராகிய பசுவை மயக்கி, இறைவனாகிய பதியில் அன்பைச் செலுத்தாமல் சிற்றின்ப வழியில் தள்ளுகின்றன. பக்குவ ஆன்மாக்களால் வளர்க்க முடியும்.

**மாயை ஆவது யாது?**
உலக இன்பங்களில் உயிரை ஈடுபடுத்துவது மாயை. மண், பெண், பொன் என்னும் பொருள்களில் உண்டாகும் ஆசையால் மனம் புலன்கள் வழிச் சென்று சிற்றின்பத்தை நாடுகின்றது. மேற்சொன்ன மூவாசைகளிலும் பெண்ணாசையே மிகவுங் கொடியது என்பதைத் திருமுறைகள் கூறியிருக்கின்றன. மாயை உயிருக்கு மயக்கத்தை ஊட்டுவது.

**மாயை உயிருக்கு நல்லதைச் செய்யமாட்டாதா?**
மாயை உயிரை உலக இன்பங்களில் ஈடுபடுத்துந் தன்மை உடையதாயினும் சிற்றின்ப வாழ்வு நிலையற்றதென்பதை நமக்கு உணர்விக்கும். நிலையான இன்பம் கொடுக்கும் இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்பதனையும் ஒருவகையில் நமக்குப் புகுத்துகின்றது.

**கன்மமாவது யாது? அதை விளக்குங்கள்.**
கன்மம் இந்து சமயத்தின் ஒரு பிரதான கோட்பாடு. நாம் செய்யும் நல்வினை, தீவினைகளின் பயனை நாமே அனுபவித்து ஆக வேண்டும் என்பதே இதன் கருத்து. **"As you sow, so will you reap"** என்றார் யேசுக்கிறிஸ்துநாதர். இந்தக் கன்மதத்துவத்தின் மூலமே உலகில் காணப்படும் பற்பலமர்மங்களுக்கும் மனிதருக்குள் நிலவும் வேறுபாடான நிலைகளுக்கும் விளக்கம் அளிக்கக் கூடியதாயிருக்கின்றது. நம்மைப் பற்றித் தொடரும் இருவினைப் பாவபுண்ணியங்களை அழிப்பதற்கோ மாற்றுவதற்கோ இறைவன் ஒருவனுக்கே முடியும். **'எடுப்பானும் என்தலைமேல் அயன்தீட்டும் எழுத்தனைத்தும் கெடுப்பானும்"** என்பது பெரியார் வாக்கு.

**ஆணவமாவது யாது? எப்படித் தடுக்கலாம்?**
மும்மலங்களில் கொடியது ஆணவமே. ஆன்மாவின் அறிவு முழுவதையும் மறைத்து அதனை இறைவனைக் காணவொட்டாமல் தடுத்து நிற்பது. மறைப்பை நீக்கி அறிவை ஊட்டவல்லது இறைவனின் திருவருளே. இதற்குப் பணிவன்பு வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவனடியார்கள் இறைவனிடத்தில் தங்கள் அன்பை எப்படி வளர்த்தார்கள்?**
சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நிலைகளையும் பயன்படுத்தி வளர்த்தார்கள்.

**சரியை ஆவது யாது? விளக்கந் தருக:**
சரியை அல்லது தாசமார்க்கம் இறைவனைத் தலைவனாகவும் நம்மை அவனது அடிமையாகவும் பாவித்து ஒழுகும் நிலை. இந்நிலையைக் கடைப் பிடித்து இறைவனுக்குத் தொண்டு செய்து திருவருளைப் பெற்றவர் நாவுக்கரசர்.

**ஏனைய நிலைகள் பற்றிக் கூறுங்கள்:**
கிரியை அல்லது சற்புத்திர மார்க்கத்தை அனுசரித்து இறைவனை அடைந்தவர் ஞானசம்பந்தர்.
யோகம் அல்லது சகமார்க்கத்தைக் கடைப்பிடித்து தம்பிரான் தோழன் என அழைக்கப்பட்டவர் சுந்தரர். இவர் போன்கேட்கப் பொன்னும் பெண்கேட்கப் பெண்ணும் கண்கேட்கக் கண்ணும் இறைவன் கொடுத்தார்.
**ஞானம் அல்லது சன்மார்க்கம்:** இந்நெறியைக் கடைப்பிடித்தவர் மாணிக்கவாசகர். இவருக்கு இறைவனே ஞானாசாரியராக குருந்தமரநிழலிலே தங்கியிருந்து ஞான உபதேசம் செய்தார்.

**சேக்கிழார் பாடிய பெரியபுராணத்திற்கு அடியெடுத்துக் கொடுத்தவர் யார்?**
சிவபெருமான்.
உலகூஎல்லாழ் உலகெல்லாம் என்றே வரவேண்டும். இங்கு உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் என்பது எப்படிப் பொருந்தும்:- இஃது இறைவன் திருவாக்கு எல்லாம் என்பது 'எலாம்' என வரலாம். இது இலக் கணத்தில் 'இடைக்குறை' எனப்படும். இவ்வாறு இடைக்குறை அமைய வந்ததன் உட்பொருள், 'உயிர்கள் குறைபாடுடையன'. ஆணவமலத்தால் கட்டுண்டு கிடப்பன என்பதே. அக்குறை, என்பதை உணர்த்தவே உலகெலாம் என இடைக்குறையாக அமைந்தது எனலாம். உலகம் என்பது ஆகுபெயராய் உலகத்து உயிர்களைக் குறித்து நிற்கிறது. எண்ணிலாத உலகங்கள் உள்ளன' என்பதைக் குறிக்கவே 'உலகெலாம்' என்ற தொடர் அமைந்தது.

**புராணமாவது யாது?**
புராணம் என்பதற்குப் பழமை என்பதே பொருள். பழமைக்கும் பழமையாய்ப் புதுமைக்கும் புதுமையாய் வேதநுட்பங்களையும் அவற்றை மனத்தில் பதிப்பதற்குரிய உபாயங்களையும் அதியற்புதமான கதைகள் மூலம் எடுத்து விளங்க வைப்பதே புராணமாகும். உண்மை நிகழ்ச்சி, மக்கள் தமது கொள்கைகளை வலியுறுத்தல், நுண்பொருளைப் பருப்பொருளாக விளக்குதல் மூன்றும் கொண்டே புராணங்கள் எழுதப்பட்டன. வேதம், ஆகமம் கற்றோருக்கே விளங்கும். புராணம் கற்றோர் மற்றோர் யாவரும் தெரிந்துணரக்கூடியன.

**கும்பாபிடேகம் எத்தனைவகை? அவை ஏன் செய்யப்பெறுகின்றன?**
கும்பாபிடேகம் நான்குவகைப்படும் அவை (1) ஆவர்த்தம் (2) அனுவர்த்தம் (3) புனஸ்வர்த்தம் (4) அந்தரிதம் என்பவை.
**ஆவர்த்தம்**:தெய்வமூர்த்தங்களையும் தேவாலயத் தையும் புதிதாக நிர்மாணித்தல்
**அனுவர்த்தம்:**- தேவாலயமோ, தெய்வமூர்த்தங்களோ வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டால் அவற்றை மறுபடி அமைப்பது.
**புனஸ்வர்த்தம்:-** தேவாலயம் ஜீர்ணமாகி அஸ்டபந்தன மருந்துசாத்தி, ஜீர்ணமானதை மீண்டும் புதுப்பிப்பது.
**அந்தரிதம்:-** கள்வரால் அபகரிக்கப்பட்ட மூர்த்திகளை மீண்டும் பிரதிஷ்டை செய்தல்

**விரதங்கள் என்றால் என்ன? இவற்றுள் சிவவிரதங்கள் யாவை?**
நியமத்துடன் சங்கல்பம் செய்துகொண்டு அனுட்டிக்கும் கருமம் என்பது பொருள். விரிவாகச் சொல்வதானால் நமது மனம் பொறிகளின்வழியே போகாது நிறுத்தற்பொருட்டு உணவை விடுத்தேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதலாகும்.

**சிவ விரதங்கள்**:- சோவவாரவிரம், திருவாதிரை விரதம், உமாமகேஸ்வர விரதம், சிவராத்திரி விரதம், கேதாரேசுவரர் விரதம், கல்யாணசுந்தரர் விரதம், சூலவிரதம், இடப விரதம், பிரதோஷவிரதம், திருவெம்பாவை முதலியவைகளாகும்.

**மனிதன் ஏன் இறைவனை வழிபடவேண்டும்?**
இவவுலக வாழ்வில் உண்டாகும் இடர்ப்பாடுகளைக் களையவும், பாவங்களை நீக்கவும், மாசற்றவனாக வாழவும் இறைவழிபாடு வேண்டும்.
**பாதை மாறிப்போகும் பேதையர் யார்?**
பழம் பெருஞ் சிறபபு மிக்க உண்மைச் சமயத்தை, - சமய நெறிகளை மண்ணுக்காகவும், பொன்னுக் காகவும், பெண்ணுக்காகவும், ஆணுக்காகவும் கைவிட்டு ஏமாளிகளாகி இலக்குத் தெரியாது இன்னொரு மதத்தைச் சார்ந்து செல்பவர்களே பாதைமாறிப் போகும் பேதையராவர்.
**ஆக்கம்:- நம்பி** - தொடரும் அடுத்த இதழில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா இந்து மாமன்ற வெளியீடான
"சைவநீதி" சஞ்சிகை
சைவத்தையும் அமுதத் தமிழ் மொழியையும் போற்றி
வளர்க்க வேண்டும் என மன – மொழி – மெய்யினால்
வாழ்த்துகின்றோம்.
வாழ்க ! வளர்க !! சிவநெறி



A.K. INTERNATIONAL CO. LTD

4 WADE AVENUE, TORONTO, ONTARIO. M6H 4H3

TEL: (416) 536-2220 FAX: (416) 536 - 4520

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயம் அவசியமா?

சித்தாந்த வித்தகர் முரு. பழ. இரத்தினம் செட்டியார், தமிழ் நாடு

இந்தத் தலைப்புப் பொதுவானது; எந்தச் சமயத்தையும் சார்ந்ததன்று. இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும்போது முதலில் மனிதன் எப்படி இருக்கிறான்? எனப் பார்க்க வேண்டும். மனிதன் உடம்பாக மட்டும் இருக்கவில்லை; அவனுக்கு மனமும் அறிவும் உண்டு. உடம்பு, மனம், அறிவு ஆகிய மூன்றுஞ் சேரப் பெற்றவனே மனிதன்.

பசி, உணவு உண்டதும் தீர்ந்து விடுகிறது. இதனால் உடல் தேவை நிறைவடைகிறது. ஆனால், மனம் என்ன செய்கிறது? அந்த உணவையே விதம் விதமாகச் சமைத்துச் சுவைத்து உண்ண விரும்பு கிறது. இது மனத் தேவை. உடலுக்காக நாம் செலவிடுவது முப்பது (30%) விழுக்காடு. ஆனால், மனத்திற்காக நாம் செலவிடுவது எழுபது (70%) விழுக்காடாகும். ஒரு பூனைக்குட்டி அமெரிக்கா செல்ல விரும்புவதில்லை. காரணம் அதற்கு மனவ ளர்ச்சி குறைவு. மனிதன் உலகம் எங்கும் சென்று பார்க்க விரும்புகின்றான். அழகான ஆடைகளையும் அணிகலன்களையும் பயன்படுத்துகிறான். கலை, இலக்கியம் இவையனைத்தையும் அறிந்து சுவைக் கிறான், இவை மனத் தேவையாகும்.

உலகம் எப்படி இருக்கிறது? சந்திர மண்டலம் எவ்வாறு இருக்கும்? அங்கே உயிர் இருக்கிறதா? நம் உடலில் உள்ள உறுப்புக்கள் எவ்வாறு வேலை செய்கின்றன? அவற்றையெல்லாம் ஆராய விரும்புவது அறிவுத் தேவையாகும். இவற்றைவிட "நாம் யார்?" என ஆராய்வது மிகப் பெரிய அறிவுத் தேவையாகும்.

நாம் யார்? எதற்காகப் பிறந்தோம்? நாம் இறந்தவுடன் வேறு வாழ்வு இருக்கிறதா? ஏன் இறப்பு வருகிறது? நமக்கு மேலே வேறொரு பொருள் உண்டா? இப்படிப்பட்ட ஆராய்ச்சியைத் தொடங்கும் போதுதான் சமயம் நுழைகிறது. மனிதனும் விலங்கு போலப் பிறந்து, உணவு உண்டு, இன விருத்தி செய்து இறந்து போவானானால், அவனுக்கும் விலங் கிற்கும் வேற்றுமை இல்லை. மனிதனுக்கு விலங்கிற்கு மேலான ஒரு நிலை தேவைப்படுகிறது.

சில செயல்களில் விலங்குகள் மனிதனைவிட உயர்ந்தவையாக இருக்கின்றன.

ஒரு காக்கை பொதுவாக மக்கள் உணவிடும் போது "கா-கா" எனக் கரைந்து தன் இனத்தை அழைத்துக் கலந்து உண்கிறது. ஆனால், ஒரு வடையைத் திருடி உண்ணும்போது அது கரைவதில்லை. அமைதியாக மரத்தின் கிளை மீதிருந்து உண்கிறது. திருட்டுச் சொத்தைத் தருமம் செய்யக்கூடாது என்னும் எண்ணம் அதற்கு இருப்பது போலத் தோன்றுகிறது.

ஒரு பசு கருவுற்றிருக்கும்போது காளை அதனை நோக்குவது இல்லை. யானைகளிடையே ஓர் அதிசய மான பழக்கம் உண்டு. பெண் யானை பிரசவிக்கும் போது அதனைச் சுற்றி வேறு பெண் யானைகள் மட்டுமே நிற்கும். ஆண் யானை தூரத்திற்குச் சென்றுவிடும்.

விலங்குகளும் பறவைகளும் சில குணங்களில் மிகவும் உயர்ந்து இருந்தாலும், தமக்கு மேலே ஒரு பரம்பொருள் உண்டு என்று அவற்றுக்குத் தோன்றுவதில்லை. இவ்வுணர்வு மனிதனுக்கு மட்டுமே தோன்றுகிறது. ஒரு குழந்தை எதைப் பார்த்தாலும், "இது என்ன?" "அது என்ன?" என்று கேள்வி கேட்டுக் கொண்டேயிருக்கும். ஆனால் ஒரு கோவிலுக்கு அழைத்துச் சென்று, "சுவாமி காப்பாற்றுவார், கும்பிடு" என்று சொன்னால், உடனே கும்பிடத் தொடங்கிவிடும். அதிகம் கேள்விகள் கேட்காது. இதிலிருந்து கடவுள் உணர்ச்சி மனிதப் பிறப்பிற்கு இயல்பாக உண்டு என்பது தெரியவரும்.

தனக்கு மேல் பரம்பொருள் ஒன்று உண்டு என்றுணர்ந்து, வழிபாடு செய்வதுதான் மனிதனுக்குரிய சிறப்பொழுக்கமாகும். இவ்வழிபாடு இல்லையென்றால் மனிதனுக்கும் விலங்குக்கும் வேற்றுமை இல்லாது போய்விடும்.

சிவஞான சித்தியாரில்,

**"மானிடப் பிறவி தானும் வகுத்தது மனம்,**
**வாக்குக்காயம்**
**ஆனிடத்து ஐந்துமாடும் அரன்பணிக்காக அன்றோ?"**
எனச் சொல்லப்பெற்றுள்ளது.

மானிடப்பிறவி எடுத்ததே இறைவழிபாட்டிற்காகத்தான் என்பது இதன் கருத்தாகும்.

"மனித சமுதாயத்தை வறுமைப் பிணி இல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்த்தினால் போதும். கடவுள் வழிபாடு தேவையில்லை" எனச் சிலர் சொல்லுகின்றனர். இது கேட்பதற்கு இனிமையாகத்தான் இருக்கின்றது. நடைமுறைப்படுத்தும் பொழுதுதான் கடவுள் உணர்ச்சி எவ்வளவு அவசியம் என்பது புலனாகிறது.

சமுதாயப் பணிகளில் ஈடுபடுவோர் நல்லொழுக்கம் வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும். இல்லையேல், பதவி வெறியும் அதிகார வெறியும் அவர்களை ஆட்கொண்டுவிடும். அவர்கள் மக்களை அடக்கி ஆளவே நினைப்பார்கள். அவர்களை எதிர்த்துப் புரட்சி செய்பவர்களும் அப்போது தோன்றுவார்கள். எனவே சமுதாயத்தில், குழப்பம் நிலவுமேயன்றி அமைதி நிலவாது. சமுதாயம் நன்னிலையில் இருக்க வேண்டுமேயானால் பாவ, புண்ணிய உணர்ச்சி உள்ளவர்களே தலைவர்களாக வர வேண்டும். சமய உணர்ச்சி உள்ளவர்களுக்குத் தான் பாவபுண்ணிய உணர்ச்சி தோன்றும். தமக்கு மேலே ஒரு தெய்வீக சக்தி இருந்து கண்காணிக்கிறது என எண்ணும் எண்ணம் இருந்தால்தான் தலைவர்கள் பாவத்திற்கு அஞ்சிச் சமுதாயத்தைச் செம்மையாக நடத்திச் செல்வார்கள். சமய உணர்ச்சி இல்லாத தலைவர்களை யார் திருத்துவது? சூழ்ச்சியும் திறனும் உடையவர்களாக இருந்தால் அவர்களை யாரும் திருத்த முடியாது, திருந்தவும் மாட்டார்கள்.

பெரிய பாவங்களைச் செய்வதற்குச் சிலர் பயப்படுவதற்குக் காரணம் என்ன? கடவுள் உணர்ச்சி அவர்களுக்கு இயல்பாக இருப்பதே காரணம் ஆகும்.

சமயம் மனிதனின் ஒழுக்கத்தை உயர்த்துகிறது. எல்லா மதங்களும் ஒழுக்கத்தைப் போதிக்கின்றன. மதம் சாராப் பள்ளிக்கூடங்களில் "Moral Teaching" அதாவது 'ஒழுக்கக் கல்வி' போதிக்கப்படுவதுண்டு. வெறும் ஒழுக்கத்தை மட்டும் போதித்தால் சோதனை வரும்பொழுது மனிதன் அதனைக் கைவிட்டு விடுவான். தனக்கு மேல் உயர்ந்த சக்தி ஒன்று உண்டு என்னும் எண்ணம் இருந்தால்தான் சோதனையைத் தாங்கும் வலிமை வரும். தனக்கு மேல் ஒரு சக்தி இல்லையென்று நினைத்தால் மனிதன் நெருக்கடி நிலையில் தாறுமாறாகச் செயல்படத் தொடங்கி விடுவான். தன் செயலுக்கு ஏதேனும் ஒரு போலிச் சமாதானத்தைக் கூறி நியாயப்படுத்த முயல்வான். இறை நம்பிக்கை இல்லாத ஒழுக்கக் கல்வி நிலைக்காது.

சட்டம் போட்டு ஒழுக்கத்தைக் காப்பாற்ற முடியாது. சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு மனிதன் தப்ப முயல்வதை நாம் அன்றாடம் காண்கின்றோம். இறை உணர்ச்சி இருந்தால் தனிமையிலும் தவறு செய்ய மனிதன் தயங்குவான். இதனாலேயே "கடவுள் இல்லாத ஒழுக்கம் கண்ணில்லாத குதிரையில் முடவன் செய்கின்ற சவாரி" என அறிஞர்கள் கூறுகின்றனர்.

மனிதன் நல்லவனாக வாழ வேண்டுமென்றால் சமயம் வேண்டும். "உன் மனைவியை நேசி" அவளிடம் உண்மையாக நடந்து கொள்'. போன்ற அன்பு உணர்வுகளைச் சமயந்தான் போதிக்கும். சட்டம் போதிக்காது. "மனைவியைப் பிடிக்காவிட்டால் விவாகரத்து செய்து கொள்", என்று தான் சட்டம் சொல்லும். அமெரிக்காவில் விவாகரத்து அதிகம் நடப்பதற்குக் காரணம் ஆழமான சமய உணர்ச்சி இல்லாமையே என அந்நாட்டுச் சமூக அறிஞர்கள் இப்போதும் சொல்லுகின்றனர்.

போதைப்பொருள் பழக்கத்தையும் குடிப்பழக்கத்தையும் நீக்குவதற்குச் சமயம் பெரிதும் துணை செய்யும். கொலை, களவு முதலியன எப்போதும் நடைபெறுகின்றன. சமய உணர்ச்சி இல்லையென்றால் அவை இன்னும் அதிகமாக நடைபெறத் தொடங்கும்; மனிதன் கொடிய விலங்குகளை விட மோசமாகி விடுவான்.

சிலர், "நாங்கள் திருக்குறள் நெறியில் வாழ்கிறோம், சமய உணர்ச்சி தேவையில்லை", எனச் சொல்கின்றனர். வள்ளுவர், "அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை", எனக் கூறுகிறார். ஒழுக்கத்தை மட்டும் அவர் போதிப்பவராய் இருந்தால் அருளைப்பற்றியும் அவ்வுலகத்தைப் பற்றியும் அவர் பேசியிருக்க வேண்டியதில்லையே?

**"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது."**

என்பது வள்ளுவர் வாக்கு. இறைவனை அடைந்தாலன்றி மனிதன் மனக்கவலையை மாற்றிக் கொள்ள முடியாதென இந்தக் குறள் தெளிவாகச் சொல்லுகிறது. திருக்குறளில் இம்மை, மறுமை, அம்மை ஆகிய மூன்றும் பேசப்பட்டுள்ளன. "இன்சொல் இம்மையும் மறுமையும் இன்பம் தரும்", என அவர் சொல்லுகிறார். "மற்று, ஈண்டு, வாரா நெறியென" அம்மையைப் பற்றி அவர் பேசுகிறார்.

திருக்குறளில் கோயில் பற்றிய சிந்தனை இல்லையெனச் சிலர் சொல்கிறார்கள். "சிறப்பொடு பூசனை செல்லாது" என்னும் குறளில் திருவிழாக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய சிறப்புப் பூசைகளையும் நாடோறும் நடக்கும் நித்திய பூசைகளையும் அவர் பேசியிருக்கிறார். எனவே திருக்குறள் நல்ல ஒரு சமய நூல் என அறிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் நாட்டுச் சமயங்கள் மட்டுமல்லாமல் வேற்று நாட்டுச் சமயங்களும் அன்பையும் ஒழுக்கத்தையும் வலியுறுத்திப் பேசுகின்றன.

"உன் சிநேகிதன் வாழ வேண்டும் எனப் பிரார்த்திப்பதில் சிறப்பில்லை; உன் பகைவன் வாழ வேண்டும் எனப் பிரார்த்தி" என்று "பைபிளில்" சொல்லியிருக்கின்றது.

சைவம், வைணவம், சாக்தம், பௌத்தம், கிறிஸ்தவம் முதலிய எல்லாச் சமயங்களும் கருணை இருந்தால் தான் மனிதன் மனிதனாக வாழ்வான் எனக் கூறுகின்றன.

ஞானசம்பந்தர் சமணர்களை எதிர்த்துப் பாடும்போது கூட, "ஆழ்க தீயது" எனத்தான் சொல்லுகின்றார். "தீமை ஒழியட்டும்" என்று சொன்னாரே அன்றித் தீயவர்கள் ஒழியட்டும் எனச் சொல்லவில்லை. தீயவர்களை மன்னிப்பதுதான் உண்மையான சமயமாகும்.

வான்மீகி இராமாயணத்தில் மன்னிப்புப் பற்றிச் சீதை சொன்ன ஒரு செய்தியை இங்கே சொல்லுகின்றேன். இராமர், "இராவணன் இறந்து விட்டான்" என்னும் செய்தியை அனுமார் வாயிலாகச் சீதைக்குச் சொல்லி அனுப்புகிறார். அனுமார் சென்று செய்தியைச் சொல்லிவிட்டு, "இந்த அரக்கிகள் எல்லாரும் உன்னைக் கொடுமைப்படுத்தி இருக்கிறார்கள் அவர்களை இப்பொழுது கொல்ல அனுமதி தரவேண்டும்" எனச் சீதையைக் கேட்கிறார். அதற்குச் சீதாப்பிராட்டியார் ஒரு கதை மூலம் விடையளிக்கிறார்.

"ஒரு காடு; அங்கே ஒரு வேடன்; அவனை ஒரு புலி துரத்தியது. அவன் பயந்து ஒரு மரத்தில் ஏறினான். அங்கே ஒரு கரடி இருந்தது. அதனைக் கண்டு அவன் கலங்கினான். அப்பொழுது கரடி அவனைப் பார்த்து, பயப்படாதே, நாமிருவரும் ஒற்றுமையாகச் செயல்படுவோம்", எனக் கூறியது. வேடன் "சரி" என்றான். இருவரும் மரத்தில் தங்கியிருந்தார்கள். சிறிது நேரத்தில் வேடனுக்குத் தூக்கம் வந்தது. கரடி அவனைப் பாதுகாப்பாகப் பிடித்துக் கொள்ள வேடன் அதன் மடியில் படுத்துத் தூங்கினான். அப்பொழுது புலி கரடியைப் பார்த்து "வேடனைக் கீழே தள்ளிவிடு; நான் சாப்பிட்டதும் போய்விடுகிறேன்; நீ தப்பலாம்" என்றது. அதற்குக் கரடி "நான் துரோகம் செய்ய முடியாது" எனச் சொல்லி மறுத்துவிட்டது. சிறிது நேரம் சென்றதும் வேடன் விழித்துக் கொண்டான். கரடி அவன் மடியில் படுத்துக் கொண்டு தூங்கியது. புலி இப்பொழுது மனிதனிடம் கரடியிடம் கூறியது போலக் கூறியது. "இதுதான் சரியான திட்டம்" என அந்த வேடன் எண்ணிக் கரடியை உருட்டிவிட்டான். ஆனால் கரடி மரக்கிளையைப் பிடித்துக் கொண்டு மறுபடியும் ஏறிவிட்டது. வேடன் பயந்தான். அதற்குக் கரடி, "நீ துரோகம் செய்துவிட்டாய். இருந்தாலும் உன்னை மன்னிக்கிறேன்" என்றது. "தனக்குத் துரோகம் செய்த மனிதனை ஒரு கரடி மன்னித்திருக்கும் பொழுது, நீ ஏன் மன்னிக்கக் கூடாது" எனச் சீதாப்பிராட்டியார் அனுமாரிடம் வினவினார்.

மன்னிப்பு எவ்வளவு பெரிய தத்துவம் என்பதை இந்தக் கதை மூலம் இராமாயணத்தில் உணர்த்தி இருக்கிறார்கள். ஆனால், இப்பொழுதோ மனிதன் தனக்கொருவன் துரோகம் செய்தால் அவனைத் தீர்த்துக் கட்டிவிடுகிறேன் என்றுதான் சொல்லுகிறான். மன்னிக்கின்ற உயரிய குணம் சமய நம்பிக்கை உள்ளவர்களுக்குத்தான் உண்டாகும்.

"சமயத்தின் பெயரால் எத்தனையோ போர்களும் ஊழல்களும், ஏமாற்றுதல்களும் நடக்கின்றனவே?" என வினவலாம். எந்த ஒரு சமயமும் "எதிரியை அடித்துக் கொல்" என்று சொல்லவில்லை. "உன் எதிரியாக இருந்தாலும் அவனை வாழவிடு" என்றுதான் சொல்கிறது. அன்பு, அருள், பொறுமை ஆகியவற்றையே சமயங்கள் போதிக்கின்றன. வன்முறைகளைப் பற்றியும் சில இடங்களில் அவை பேசியுள்ளன. கூர்ந்து ஆராய்ந்தால் அன்பே சமயத்தின் அடிப்படை என்பது புலப்படும். தவறாகப் பொருள் செய்வது நம் குற்றமேயன்றிச் சமய நூல்களின் குற்றம் அன்று. அப்படியானால் போர் ஏன் நடக்கின்றது? எனச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சமயப் போர்வையில் அரசியலும், பொருளாதாரமும், அதிகார வெறியும் புகுந்து விளையாடுவதே போர் நடப்பதற்குக் காரணமாகும்.

விஞ்ஞான நூற்களோ, பொருளாதார நூற்களோ, பூகோள நூற்களோ ஒழுக்க நெறியைப் போதிப்பதில்லை. போதிக்க வேண்டிய அவசியமும் அவற்றுக்கில்லை. ஒழுக்கத்தை மட்டும் போதிக்கும் நூல்கள் சமய நூல்களில் இருந்தே அவற்றைக் கடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கி இருக்கின்றன. பொருளும், விஞ்ஞானமும், அதிகாரமும் சமய உணர்ச்சி இல்லாவிட்டால் கேட்டையே விளைவிக்கும். நாத்திகர்களும் சமய ஒழுக்கங்களையே கடவுளை மட்டும் நீக்கிவிட்டுப் போதிக்கின்றனர். அவர்களும் சோதனை நேரும் பொழுது, "மனச்சாட்சியே துணை" என்கின்றனர். அது மற்றொரு வகையில் கடவுளை ஒப்புக் கொள்வதே ஆகும். கடவுள் இருக்கிறார் எனச் சொல்வதே மூட நம்பிக்கை என வைத்துக் கொண்டால்கூட அந்த நம்பிக்கைதான் ஒழுக்கத்தை நிலை நிறுத்தத் துணை செய்யும்.

தனிப்பட்ட மனிதன் தோல்வி அடையும்பொழுது அவன் ஆறுதல் பெறக் கடவுள் நம்பிக்கை அவசியமாகும். அந்த நம்பிக்கை இல்லாவிட்டால் தோல்வி கண்ட மனிதன் விலங்காக மாறி எதனையும் செய்யத் துணிந்து விடுவான்.

ஆன்ம முன்னேற்றம், மனித வாழ்க்கையில் இன்றியமையாத ஒன்றாகும். பரம சமாதி நிலையில் இறைவனோடு ஒன்றிப் பேரின்பத்தை அனுபவிப்பது தான் மனித வாழ்வின் கடைசிக் குறிக்கோளாகும். இறந்து போகின்ற மனிதன், எல்லை இல்லாத ஓர் இன்ப வாழ்க்கை தனக்குப் பின்னே உண்டு என்பதை அறிந்து கொள்வதுதான் உண்மையான அறிவாகும். ஒழுக்க நெறி சமயத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. சமயம் இல்லாமல் உலகில் அமைதியை உண்டாக்குவதற்காக எந்த ஒரு புதிய தத்துவத்தைச் சொன்னாலும், அஃது இறுதியில் சமயத்தில்தான் போய் முடியும். தனிப்பட்ட மனிதன் அமைதி பெற்றால் தான் சமுதாயமும் அமைதி பெறும். சமயம் வேண்டாமெனச் சொல்பவர்களும், அமைதி பற்றிப் பேசும்பொழுது, அன்பு, அருள், அடக்கம், உண்மை முதலிய சமய தத்துவங்களைத்தாம் எடுத்துச் சொல்கிறார்கள். சமயத்தின் பெயரால் நடக்கும் ஊழல்களைக் கண்டிப்பதில் தவறில்லை. ஆனால், அதற்காகச் சமயமே வேண்டாமெனச் சொல்வது முழுத் தவறாகும்.

**நன்றி: திருமுறை மாநாடு**

## சான்றோர் சொல்லமுதம்

மனிதப்பிறவி கிடைப்பது மிகவும் அரிது. ஆனால் அந்த அருமையை மக்கள் உணர்வதில்லை. தங்களுடைய உலக வாழ்க்கை சம்பந்தமான சௌகரியங்களைத் தேடுவதிலும், அவை கிடைக்காவிட்டால் படும் வேதனையிலுமே பொழுதைக் கழித்து வருகிறார்கள். இறைவனை நெருங்கி வழிபட சிரவணம், கீர்த்தனம் போன்ற வழிகளைப் பின்பற்றத் தவறி விடுகிறார்கள்.

இறைவனை அடைய மிகச் சிறந்த வழி நாம ஸ்பரணையே ஆகும். அத்துடன் அவன் வெவ்வேறு பண்புகளையும் பெற்றாக வேண்டும். இதில் முதலாவது அனபேக்ஷையாகும். உடல், பொருள் ஆகியவற்றின் மீது வைக்கும் பற்றுக்களைத் துறக்கப் பழகுவதுதான் அது. இதற்காகச் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் பிரதிபலனை எதிர்பார்க்காமல் இறைவனுக்கே அர்ப்பணிக்கப் பழகிக் கொள்ளவேண்டும். அடுத்தது அந்தர சுத்தி. சாதாரண குடத்திலுங்கூடத் தூய்மையான தண்ணீர் வைக்கப்படலாம். அதைப்போல சாதாரண குடும்ப வாழ்க்கையை நடத்துபவர்களும் மனத்தில் தூய எண்ணங்களை வளர்த்துக் காப்பாற்றிக் கொண்டால் இறைவனை அணுகமுடியும்.

மூன்றாவது சேவைசெய்யும் மன உறுதி. இறைவனை எப்போதும் எண்ணியவாறு மக்களிடம் மகேசனைக் கண்டு அவர்களுக்கு உதவிசெய்வதையே வாழ்க்கையில் கடமையாக மேற்கொள்ளவேண்டும். வெற்றியினால் கர்வமோ, தோல்வியினால் மனத்தளர்ச்சியோ அடையாமல் முழுமையாகச் சேவை மனப்பான்மையுடன் இதில் ஈடுபடவேண்டும்.

நான்காவதாக தன்னுடைய செயல்களையே வெளியில் நின்று சாட்சியாக இருந்து கவனிப்பது. விருப்பு, வெறுப்பின்றி இப்படி ஈடுபடும்போது பிறரிடம் கோபம், பொறாமை, வெறுப்பு ஆகியவை இன்றி அனைவரையும் நேசிக்க முடியும். அத்தகைய உணர்வு கொண்டவர்கள் என்னை நெருங்கியவர்களாவர்கள் என்று கீதையில் பகவான் கிருஷ்ணர் கூறி இருக்கிறார்.

ஐந்தாவது: நான் என்ற அகந்தையைக் கைவிடுவது. சர்வமும் இறைவன் கொடுத்தது என்று எண்ணி, எதுவுமே தனக்குரியதல்ல என்று பற்றுக்களைத் துறந்து ஈடுபடாமல் இறைவனை நெருங்குவது சுலபம் ஆகிவிடும். இறைவனை வெளியே தேடவேண்டாம். அவர் நமக்குள்ளேயே இருக்கிறார். இதை உணர்ந்து விட்டால் அவருக்குப் பிடித்த நல்லனவற்றையே நினைப்போம். அதையே செய்யமுற்படுவோம். இதற்குரிய மனப்பக்குவத்தை நாம் பெறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THIRUGNANASAMPANTHAR

## ANNASOUNDARY

The Saiva religion can boast of sixty -four Saints who have done much to promote the gospel of the religion of love (the Saiva religion) throughout history. The Saint Thirugnanasampanthar, spent his life teaching the masses about the all encompassing love of God. He was born in Sirkazi, a village in the Tanjavur district of Tamilnadu. His parents were ardent devotees of Lord Shiva. He was born after a long period of penance. Upon his birth he was named Sampanthar. When he achieved enlightenment his name was changed to Thirugnanasampanthar. The 'Thirugnana" literally mcans enlightened Saint.

When Sampanthar was three years old his father took him to a Shiva temple that was in the village. Sampanthar's father was taking his ceremonial bath in the temple pond (கேணி) while the young Sampanthar watched him from the steps of the pond. At one point, Sampanthar lost sight of his father and began to cry. He looked up at the temple tower (கோபுரம்) and called out 'Amma, Appa!". Upon hearing his call Lord Shiva and his consort Umadeviar appeared before him. On Lord Shiva's request Umadeviar fed Sampanthar with divine milk. After finishing his bath Sampanthar's father found him with milk dripping from his mouth.

Believing that the child had accepted milk from strangers he wanted to punish Sampanthar. As he lifted his hand to strike the child, Sampanthar looked up at the temple tower. He then pointed to the image of Lord Shiva and began to sing the wonderful Thevaram 'THODUDIA SEVIAN" (தோடுடைய செவியன்). Sampanthar's father immediately realized that his son had been fed by no other than the Lord Shiva. Overcome with emotion he picked up his son and carried him into the temple. The news of the miracle spread like wildfire, and people began to crowd into the temple.

This was the beginning of the spiritual life of this divine child.

Sampanthar's youth was spent being carried from temple to temple on his father's shoulders. At the temple 'Thirukkolaka" he sang the Thevaram "MADEL VALLI" (மடையில் வாளை). While he was singing a pair of gold cymbals inscribed with the Panchamanthra 'NaMaSiVaYa" (நமசிவாய) miraculously appeared in his hands. Lord Shiva the compassionate could not bear to see his loving devotee's hands hurt (by clapping in tune)!!! When Sampanthar decided to visit Thirunelvayal Aranthurai, Lord Shiva appeared to the devotees of the temple (in a dream) and alerted them to the fact that Sampanthar would be visiting them in a few days. Lord Shiva asked the devotees to give a gift of a pearl palanquin (பல்லக்கு) and pearl umbrella to show their appreciation. Upon his arrival Sampanthar was delighted with the gifts. He gave voice to his gratefulness by singing the Thevaram 'ENDAIESAN EMPERUMAN" (எநதை ஈசன் எம்பெருமான;). His many songs and doings cleared the doubts of grown up scholars and priests.

Once, when he was visiting the Thiruppa chilachiranamam temple, he was sought out by King Kollimazavan. The King's daughter was suffering from an incurable disease. The Saint saw the suffering of the child and felt pity for her. He prayed and sang the Thevaram 'THUNNIVALAR THINGAL" (துணிவளர் திங்கள்). The song bescched Lord Shiva to have mercy on the child. As a result of Sampanthar's song the child was cured. A similar situation occurred when the Saint was visitingKongunadu in winter. The people of this land were suffering from a particular type of fever. He sang the Thevaram 'AVVINAIKKIVVINAI" (அவ்வினைக இவ்வினை). The fever disappeared and the people were gratefull. There are many miracles that occurred in Sampanthar's life. The miracles that he performed and the miracles that were performed for him by Lord Shiva are many. It is impossible to relate them all within the scope of this essay. However, there is one story that is worth mentioning. It occurred during the Saint's visit to the city of Madurai (capital of the Pandian Kingdom) the seat of Thamil learning. During this period the Pandian Kingdom was being ruled by Koon Pandian. He was called Koon because of him being hunchbacked. The king had recently given into the pressure of the influentioal jain priests and converted to Jainism. However, his wife the Queen Mangayatkarasi and the Prime Minister Kulachirai were still devout followers of the Saiva religion. They had heard about the divine child and the miracles that he performed. As such they were eager to see him. They dispatched some learned scholars of the court to go to Sampanthar and ask him to save the Saiva religion in Madurai. Sampanthar readily agreed in spite of the protests of Appar (another saint of his time). Sampanthar reminded Appar, that as long as he has the protection of Lord Shiva, no harm can befall him. Upon Sampanthar's arrival, the Jain priests convinced the King to try to set fire to the Saint's camp. Upon failing to do this they decided to set fire to the camp of his devotees. The devotees were terrified, and they went to Sampanthar and asked his help. In response Sampanthar sang a Thevaram expressing his desire that the fire should direct itself at the King who had caused it. The King who was resting in his palace felt a mildly burning sensation. He called



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the palace doctors to try and stop the pain. By now the King felt as though he was being burned alive. The Queen and the Minister advised the King to send for the Saint. He was received with honor and respect. The Saint cured the King completely by singing the Thevaram 'MANTHIRAMAVATHU NEERU" (மந்திரமாவது நீறு). The King, realizing his mistake fell at the feet of Sampanthar. However, all this had not convinced the Jain priests. They were worried that they were losing their influence over the King. As a result they challenged Sampanthar to a 'ANAL VADAM" (அனல்வாதம்). This was a test of the scriptures by fire. The Jain priests wrote their doctrine on a palm leaf and threw it into the holy sacrificial fire ...it was reduced to ashes in moments. Sampanthar then wrote the Thevaram 'POGAMARNTHA POONMULAI" (போகமார்த்த பூண்முலை) and offered it to the flames...it did not burn. The priests still did not believe him. They wanted to have another contest. This time it was 'PUNAL VADAM" (புனல்வாதம்). In this contest the scriptures are tested against the water currents of the Vaikai River. The Thevaram that used by Sampanthar was 'VAAZHA ANDANA" (வாழ்க அந்தணர்). Not only did the Thevaram pass the test, it also cured the hunch-backed King. The Thevaram contains a line 'VENDANUM ONGUGA" (வேந்தனும் ஓங்குக). This literally means let the King prosper. The moment these words were spoken the King's back straightened out and he was no longer a hunch-back. The victory for Saivam was complete. Together with the King, a large number of people returned to their original Saiva religion

The Saint then went to many temples and sang many Thevarams praising the Lord Shiva. It was at one of these temples that a rich merchant saw him, After hearing the Saint, the merchant wanted to give his daughter Poompavani in marriage. However, disaster struck! Poopavai died of snake bite. The merchant was distraught at hearing this news. He made the necessary arrangements for her cremation. After cremating his daughter he gathered his daughter's ashes in a pot and went to see Sampanthar. He related the story of Poompavai to Sampanthar and asked him to revive his daughter.

Sampanthar sang the Thevaram 'MATTITTA PUNNAI" (மட்டிட்ட புன்னை) to Kapileswarer in mylapoor Temple. The moment he finished singing the girl revived and came to life. The merchant (Sivanesar) entreated the Saint to marry the girl. However, Sampanthar felt that because he had given the girl life the relationship between them was that of father and daughter.

Upon returning to his home he was asked to marry the daughter of Nambiandar Nambi of Nallur. After many objections, Sampanthar finally consented to the marriage. Upon conclusion of the marriage ceremonics Sampanthar took his wife and the rest of the wedding party to the Shivan Temple. There, he sang the Thevaram 'KALLP PERUMANAM" (கல்லும் பெரிமணம்). The Thevaram asked Lord Shiva for liberation from the earthly duties and responsibilities. As the last note ended, a great white light (Jyothi) appeared. Before merging into the light (Shiva Jyothi) Sampanthar sang the Thevaram 'KATHALAKIK KASINTHU" (காதலாகிக் கசநிது). This Thevaram eventually became known as the Panchachara pathikam... the sacred mantra of the Veda 'NaMaSiVaYa" Sampanthar finished singing and he merged into the white light, he was followed by all those present. When everyone had entered the light, the remaining void echoed with the sound of the sacred mantra 'NaMaSiVaYa".

The life of St. Thirugnanasampanthar is well chronicled in the book Periya Puranam by Sckilar. Sampanthar, who lived in India around 700A.D. Has indeed left a lasting legacy. His songs are sung to this day in the temples, Throughout his life he helped relieve the suffering of others. These Thevarams that did so much good then can do the same for us now. By singing these Thevarams we too can enjoy the blessings of Lord Shiva. The following are the first and the last Thevarams sung by Sampanthar. You can recite them when you pray to God.

'THODUDAYA SEVIAN VIDAI YERI YOHR
THOOVEN MATHI SOODI
KAADUDAYA SUDALAIP PODI POOSI YEN
ULLANG KAVAR KALVAN
YEDUDAYA MALARAN MUNI NAAT PANINTH
THETHA ARUL SEITHA
PEEDUDAYA PIRAMAPURA MAEVIYA PEMMAN
YIVAN ANDREH'

தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடி பூசியென்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்
பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமா புரமேவிய
பொம்மானிவ னன்றே

'KAADHALAAGIK KASINTHU KANNEER MALKI
ODUVAAR THAMAI NANNERIKKU UYAPPADHU
VEDHAM NAANGINUM MEYPPORUL AAVADHU
NAADHAN NAAMAM NAMACHIVAAYAVE'

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன் நெறிக்குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச் சிவாயவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழிய சைவம் — வாழ்க நற்றமிழர் — வாழிய தாயகம்

# அபிராமி கேற்றறிங்

**Take out & Catering**

சகல உணவுகளையும் வாரத்தில் 7 நாட்களும்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
எந்தவித கொண்டாட்டங்களுக்கும்

**Weddings Birthdays Parties**
**Special Events**
**COMPLETE SERVICE & DELIVERY**

உணவுடன் மண்டப ஒழுங்குகள் ஒவ்வொரு
சேவையையும் அந்தந் துறையில் கைதேர்ந்த
நிபுணத்துவம் பெற்றவர்களால் தரப்படுகிறது

**மணம், சுவை கொண்ட அறுசுவை உணவுகளை**
**நிபுணத்துவத்துடன் தயார் செய்து**
**விநியோகிப்பவர்கள்**

மணமகள் அலங்காரம்
மணமக்களின் சோடனை வாடகை
புகைப்பட ஒழுங்குகள் **(PHOTO)**
வீடியோ ஒழுங்குகள் **(VIDEO)**

# ABBIRAMI CATERING

**16 BIMBROK ROAD, UNIT #10, A1K 4T7**
**SCARBOROUGH, ONT**
**(416) 266-5372 (416) 757-1091**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலந்தரும் நாட்டு வைத்தியம்

வெதமாத்தயா

**பெரும்பாட்டுக்கு:**
அத்திப்பட்டை ஒரு பங்கு. கடுக்காய்ப்பூ காற்பங்கு சேர்த்து பசுவின்பால் விட்டரைத்துக் காலை மாலை சாப்பிட்டு வந்தால் பெண்களின் பெரும்பாடு, இரத்தக்கடுப்பு, சீதக்கடுப்பு, மேகம் முதலிய நோய்கள் நீங்கும்.

**வாய்ப்புண்ணுக்கு:**
சூரியஉதயத்தின் முன் அகத்திக்கொழுந்து ஒருபிடி எடுத்து மென்று தின்றுவந்தால் சூடு தணிந்து வாய்ப்புண், வாய்ரணம் நீங்கும்.

**சூட்டுக்குத் தைலம் தயாரித்தல்:**
அகத்திக்கீரைச்சாறும் நல்லெண்ணெயும் சமமாய்க் கலந்து கூட்டி அடுப்பில் வைத்து வெந்தயத்தைப் பாலில் அரைத்துப் போட்டுப் பதமாகக் காய்ச்சி இறக்கித் தலையில் இளஞ்சூட்டில் தப்பி முழுகினால் சூடுதணிந்து தேகம் குளிர்ச்சியாக இருக்கும்.

**இரத்தக் கொதிப்பிற்கு:**
படபடப்பு உண்டாகும் அறிகுறி தென்பட்டால் குப்பைமேனி இலைகளைக் கொஞ்சம் எடுத்து சிறிது கசக்கி உருண்டை போலாக்கி கக்கங்களில் அரைமணித்தியாலம் (30 நிமிடம்) வரை வைத்திருந்தால் இரத்தக் கொதிப்புக் குறையும்.

**வயிற்றுப்பூச்சிக்கு:-**
வேப்பிலைக் கொழுந்தைப் பறித்து விழுதாக அரைத்து அரிசித்தவிடு அல்லது சர்க்கரை சேர்த்து சுண்டைக்காய் அளவு தினமும் காலையில் மூன்று நாட்கள் வரை சாப்பிட்டால் பூச்சிகள் மடிந்துவிடும்.

**காலில் ஆணி காணப்பட்டால்:**
இரண்டு மஞ்சள்துண்டு, ஒரு துண்டு வசம்பு, கற்பூரக்கட்டி 10 கிராம், பச்சை மருதாணி இலை சிறிது இவற்றை அரைத்து, பாதங்களில் கால் ஆணி உள்ள இடத்தில் கட்டிவிட்டால் கால் ஆணி குணப்படும்.

**சிறுநீர் சம்பந்தமான நோய் நீங்க:**
சிறுநீர் இறங்கும்போது தாங்க முடியாத எரிவினால் அவதிப்படுவோர் கீழ்காய்நெல்லி இலையில் 10 கிராம், சீனக்கற்கண்டு 10 கிராம் சேர்த்து நன்றாக அரைத்து நெல்லிக்காய் அளவு காலை-மாலை சாப்பிட இரண்டு நாட்களில் நல்ல சுகத்தைக் காணலாம். தொடர்ந்து 48 நாட்கள் சாப்பிட்டால் மூத்திர சம்பந்தமான நோய்கள் நீங்கும்.

**காமாலை குணமாக:** எல்லாவித காமாலை நோய்க்கும் கீழ்காய்நெல்லி, பொன்னாங்காணி, மூக்கறைச்சி, வில்வங்காய் சமஅளவு எடுத்து அம்மியில் அரைத்து நெல்லிக்காய் அளவில் எடுத்துத் தினமும் வெறும் வயிற்றில் நீராகாரத்துடன் ஏழுநாட்கள் சாப்பிட்டு வந்தால் காமாலை நோய் நீங்கும்.

**துளசிச் செடி:**
இது குழந்தைகளுக்கு மிகவும் உகந்தது. துளசி இலைகளை எடுத்து, பாலின் ஆவியில் அவித்து வெந்தபின் அதன் சாறைப் பிழிந்து எடுத்து அதனுடன் அந்தந்த வயதுக்கு அளவான கோரோசனையையும் சேர்த்துப் பருக்கி வந்தால் சளியுடன் சம்பந்தப்பட்ட நோய்கள் வயிற்றுப்பூச்சிகள், இளம்பிள்ளைவாதநோய் போன்றவை இல்லாமல் போகும். அத்துடன் ஆரோக்கியத்தையுந் தரும்.

**வயது வந்தோருக்கு:** இதயத்துடிப்பு ஒரு சீராக இல்லாமல் விட்டு விட்டு அடிப்பவருக்கும் கருந்துளசி இலையும் மருதம்பட்டையும் அவித்துக் கசாயமானதும் ஒரு மேசைக்கரண்டி கசாயத்துக்கு ஒரு தேக்கரண்டி தேன் கலந்து பருகி வந்தால் உடனே குணம் காணலாம். இதயத்துடிப்போடு நெஞ்சில் இறுக்கத்துக்கும் இது உகந்தது. தலைக்கனம், தலையிடி, மூக்கால் நீர் வடிதல் (சிந்தல்) காய்ச்சல், உடல் உழைவு முதலியவற்றுக்கு ஒருதுண்டு இஞ்சி, ஒரு பிடி துளசி இலை இரண்டையும் சேர்த்து அவித்து குடித்து வந்தால் (மூன்றுவேளை இரண்டு தேக்கரண்டி வீதம் பருக வேண்டும்) பூரண சுகம் காணலாம்.

**ஒழுங்கற்ற மாதவிடாய், வயிற்றுக்குத்து** முதலியன வற்றுக்கு வெண் துளசிச்சாற்றை வெறுவயிற்றில் பருகி வந்தால் எல்லாவிதமான சூதக வியாதியும் குணமடையும்.

தலையில் அதிகம் பேனும் சொடுகும் உள்ளவர்கள் துளசி இலைச்சாற்றுடன் எலுமிச்சம் பழச்சாற்றையும் கலந்து தலையில் பிரட்டி முழுகி வந்தால் இரண்டும் இல்லாது ஒளிந்து போகும்.

**தலைவலியால் தொல்லைப்படுபவர்கள்** சுக்கு, மஞ்சள், கருஞ்சீரகம், சாம்பிராணி இந்த நான்கையும் துளசிச் சாற்றில் அரைத்துத் தலைவலியுள்ள இடத்தில் தடவி வந்தால் சுகம் காணலாம். பல்வலிக்குத் துளசிஇலை கற்பூரம் இரண்டையும் அரைத்துப் பல்வலியுள்ள இடத்தில் வைத்தால் சிறிது நேரத்தில் வலி இல்லாமல் போய் விடும்.

**அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்**
**பெரும்பயன் இல்லாத சொல்** - திருக்குறள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரண்டு இலக்கினங்களிலும் பிறந்த ஒவ்வொருவரினதும் (இருபாலாரினதும்) பலன்கள்

தொகுப்பு: நம்பி

1 **மேடஇலக்கினம்:-** அரசமதிப்பு, வெகுசனமதிப்பு, தைரியவான், அடிமையுள்ளவன், கடுங்கோபி, சாமர்த்தியசாலி, மோகி, மெலிந்த தேகம், அடக்க முடையவன், தனவான், புத்திசாலி, சஞ்சாரி, பொறுமை, அறிவு, அழகு, மனோபயம் இவைகள் உடையவன். உபய களத்திரம், ஆயுதம், நெருப்பு, மரம், கல், சுவரிலிருந்து விழுதல் முதலியனவற்றால் விரயமுள்ள சரீரம். சகோதரரில் மூத்தவர், அற்பபுத்திரர், 4-5-7-10-20-22-25-28 வயதுகளில் நெருப்பு, சுரம், நீர், சிரங்கு, வைசூரி பீடையுண்டு. சுபக்கிரக பார்வையுண்டானால் நூறுவயது வரை இருப்பர். இந்த இலக்கினத்திற்கு சூரியன், வியாழன் சுபர்கள் யோககாரகர்கள்.

2.**இடபம்:-** நல்ல தேகம், களத்திர தோஷம், சுயகாரியவான், உண்மையாளன், பிறர் பொருளைக் கிரகிக்க வல்லவன், கபடி, ஆண்வசியன், வஸ்திரா பரண விருப்பன், குணதோஷம் அறிபவன், அடிமை யாளன் பிற்கால புத்திர பாக்கியவான், 5-13-16-19-20-27 இந்த வயதுகளில் கழுத்து வியாதி, சுரம், கசம், சிரங்கு இவைகளால் பீடையுண்டு. இந்த இலக்கினத்தைச் சுபக்கிரகங்கள் பார்த்தால் 77 வயது வரை இருப்பர். சூரியனும் புதனும் சனியும் நல்லவர் கள். சனி ராசயோகக்காரன். சுக்கிரன் ஆட்சியாளன்.

3. **மிதுனம்:-** சுபகாரியவான், வயிற்று நோயுள்ளவன், இனிமையான வார்த்தையுடையவன், சொற்சோர்வு படா தவன், கபடி, புணர்வுப் பிரியன், மனைவி சொற் கேட்பவன், ரோக களத்திரமுடையவன், கணக்கன், கூச்சப்படுபவன், மூத்திர ரோகி, கீர்த்தியாளன், வழக்கறிஞன். 2-3-4-5-8-9-10-18-25-28 இந்த வயது களில் நெருப்பு, ஆயுதம், சுரம், கண்ணோய் இவற்றால் பீடையுண்டு. இந்த இலக்கினத்தைச் சுபக்கிரகம் பார்த்தால் 65 வயது வரை சுகமாக இருப்பர். சுக்கிரன் ஒருவனே சுபர். வியாழன், சனி தரும யோககாரகர். இவர்கள் தனிப்பட்ட ஸ்தானங்களில் பலத்துடனிருப் பின் யோக பலனுண்டு.

4. **கடகம்:-** தனவான், களத்திர சுகமற்றவன், அவமான களத்திரமுடையவன், கெட்டித்தனமுள்ள வன், குரு விசுவாசி, அற்ப புத்திரருடையவர், சதா துக்கப்படுபவர், பிதாவுக்கு அடங்காதவன். 5-8-14-16-20-25-40 இந்த வயதுகளில் சுரத்தால் பீடை, சுபக்கிரகங்கள் பார்க்கில் 90 வயதுவரை இருப்பர். வியாழனும், செவ்வாயும் சுபர்கள். செவ்வாய்-வியாழன் யோகர்கள். இவை இரண்டும் கூடியிருந் தால் பிரபல யோகம் உண்டு.

5. **சிங்கம்:-** மிடுக்கான பேச்சு, நல்ல உருசி உணவு, திடவான், பசியுடையவன், பாவகர்மி, மாதுர், பிதுர் துவேஷி, கோபி, தைரியவான், தனவான், பக்தியுள்ளவன், சகலகலாவல்லவன், சனவசியன், கபடி, கண், சிரசு, முகம் இவைகளில் ரோகி, வேலையில் விருப்பமுடையவன். 5-10-27-30 வயதுகளில் சுரத்தினால் பீடை, இந்த இலக்கினத்தைச் சுபக்கிரகங்கள் பார்த்தால் 80 வயதுவரை இருப்பர். சூரியன், செவ்வாய் சுபர்கள். செவ்வாய், சுக்கிரன் யோககாரர்கள். செவ்வாயும் சுக்கிரனும் கூடியிருப்பின் அதிக யோகம்.

6.**கன்னி:-** தருமவான், ஆசாரமுடையவன், பின்னி ரக்கக்காரன், நல்லொழுக்கமுள்ளவர், சுயகாரியகாரன், மனவஞ்சகன், பிறரால், தொழில், தனம் பெறுபவர், சனப்பிரியன், நன்மை, தீமை இரண்டுஞ் செய்பவன், பிற்காலத்தில் அதிகம் நிதி தேடுவான். 5-8-9-10-18-19 இந்த வயதுகளில், நெருப்பு, பேதி, சுரம், வைசூரி, இவைகளால் பீடை. சுபக்கிரக பார்வை உண்டானால் 77 வயதுக்குக் குறையாமல் இருப்பார். இந்த இலக்கினத்திற்குச் சுக்கிரனும் புதனும் யோககாரகர். இவர்கள் இருவரும் கூடியிருந்தால் பிரபல யோகம் உண்டு.

7.**துலாம்:-** இராசபூஜிதன், நல்ல புத்தி, நல்ல குணவான், பொறுமை, வல்லமை, அறிவு, புகழ், இவைகளை உடையவர். சம்பத்துக்காரன், மன்மத சுகி, பரிமளப்பிரியன், தனவான், இரக்கவாளி, அபிமானி, வெகுசனப் பிரியன், சுகவான், மனோபீதி யுடையவன், 7-9-10-12-19-28- இந்த வயதுகளில் அக்கினிபேதி, சத்துரு, வைசூரி, சலம் இவைகளால் பீடை. இந்த இலக்கினத்தைச் சுபக்கிரகங்கள் பார்த்தால் 85 வயதுவரை வாழ்ந்திருப்பார். இந்த இலக்கினத்திற்கு சனி, புதன், சுக்கிரன் சுபர்கள். சந்திரனும் புதனும் யோககாரகர்கள். இவர்கள் இருவரும் கூடியிருந்தால் அதிக யோகம்.

8. **விருச்சிகம்:-** புத்திமான், தனவான், வெகுமானி, வஞ்சகன், இனிமையாகக் கதைப்பவன், பந்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவேஷி, எடுத்த கருமத்தை முடிப்பவன், அளவற்ற விஷப்பிரியன், மனையாளிடத்தில் அதிக பிரியமுள் ளவன், 4-5-10-12-18-40 இந்த வயதுகளில் கண்ட தோஷம், சுரம், அக்கினி, சன்னி இவைகளாற் பீடை. இந்த இலக்கினத்தைச் சுபக்கிரகங்கள் பார்த்தால் 90 வயது வரை இருப்பர். சூரியன், சந்திரன், வியாழன் சுபர்கள், சூரியனும் சந்திரனும் யோககாரர்கள். இவர்கள் இருவரும் கூடியிருந்தால் பிரபல யோகமாகும்.

9. **தனு:-** சத்தியவான், நல்ல குணசாலி, அபிமானி, நல்ல பேச்சாளன், சுகவான், தனவான், போகவான், மித்திரன் வித்தையுடையவன், தேசசஞ்சாரி, உத்தி யோக விசுவாசி. 3-4-5-12-15-18-32-40-47 இந்த வயது களில் கண்ணோயாலும் உட்டண ரோகத்தாலும் பீடை யுண்டு. இலக்கினத்தைச் சுபக்கிரகங்கள் பார்த்தால் 77 வயதுவரை இருப்பர். சூரியனும் செவ்வாயும் சுபர்கள். சூரியனும் புதனும் யோக காரர்கள். இவர்கள் கூடியிருந்தால் அதிக யோகம் உண்டு.

10. **மகரம்**:- துராசை உடையவன், திடமான புத்தி சாலி, சுயகாரியகாரன், தந்திரமுள்ளவன், கோபி, வாய்ச்சாலகன், அபிமானி, பரிமளப்பிரியன், மனைவி யிடத்தில் பிரியமுள்ளவன். 3-4-5-7-8-10-12-32-37 இந்த வயதுகளில் சலம், சுரம், விடம் இவைகளால் பீடை இந்த இலக்கினத்தைச் சுபக்கிரகம் பார்த்தால் 67 வயதுவரை இருப்பர். செவ்வாய், புதன், சுக்கிரன் சுபர்கள். சுக்கிரன் மட்டும் யோககாரகன். சுக்கிரனும் புதனும் கூடியிருந்தால் இராஜயோகம்.

11. **கும்பம்**:- நண்பர்களைப் பாதிப்பவன், பெண் களுக்குப் பிரியமுள்ளவன், அகன்ற வயிறுடையவன், சுகவான், திடசித்தமுள்ளவன், தரித்திரமுள்ளவன், தன்னைத் தான் புகழ்ந்து பேசுபவன், குள்ளன், சிவந்த கண்களையுடையவன், உடன் செய்நன்றி மறப்பவன், அற்ப கல்வியுடையவன், பித்த சாரமுடையவன். 9-10-11-20-30-32. இந்த வயதுகளில் சுரம், மிகுந்த சன்னி, வாதசுரம், பித்தசுரம் இவைகளால் பீடை, இந்த இலக்கினத்தைச் சுபர்கள் பார்த்தால் 80 வயது வரை இருப்பார். சுக்கிரன், சனி, புதன் சுபர்கள். சுக்கிரன் மட்டும் யோககாரகன், சுக்கிரன், செவ்வாய் கூடியிருந்தால் பிரபல யோகமுண்டு.

12. **மீனம்**:- ஞானி, பிராமணன், பெரியோரிடத்தில் பக்தி விசுவாசமுடையவன், சத்தியவான், ரூபமும் சௌகாரியமும் திரவியமும் உடையவன். பரிமளப் பிரியன், வெகுசெலவாளி, இரக்கமுள்ளவன், முன்சாக் கிரதையாளன். குளிர்ச்சியான கண்களும் கள்ள ரோகமுமுடையவன். 3-4-7-12-20-28 இந்த வயதுகளில் இருமல், சுரம், உட்டண ரோகம், இவற்றால் பீடை, இந்த இலக்கினத்தைச் சுபக்கிரகம் பார்ப்பின் 100 வயதுவரை இருப்பர். சந்திரன், செவ்வாய் சுபர்கள், செவ்வாயும் வியாழனும் யோககாரர்கள் - செவ்வாயும் வியாழனும் கூடியிருந்தால் பிரபல யோகம் உண்டு.

**ஜோதிடம்:**

வானசாத்திரத்தின் அடிப்படையிலான முழுமையான ஒரு அறிவியல் (Science) பிரபஞ்சத்தின் தத்துவமான வானசாத்திரத்தினை உண்மைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டதே இதுவென்று அறிவாளர் கூறுவர். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இந்தச் சோதிட சாத்திரம் இன்று விஞ்ஞானக் கண்டுபிடிப் பாளர்களினாலே உண்மையானதென்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. பிரபஞ்சத்தில் கோடிக் கணக்கான நட்சத்திரங்கள், கிரகங்கள், உபக் கிரகங்கள் மற்றும் பூமியும் ஈர்ப்புச் சக்தியின் அடிப்படையிலே தத்தமக்குரியதான இடங்களிலே அமைந்திருக்கின்றன. நட்சத்திரங்கள், சூரியனைத் தவிர்ந்த மற்றவைகள் தமக்குரிய பாதைகளில் சுற்றிவருகின்றன.

சூரியன் நிலையாக நிற்க, மற்றக் கிரகங்கள், உபக்கிரகங்கள், பூமி யாவும் சூரியனை மையமாகக் கொண்டு சுற்றி வருகின்றன. இப்படிச் சுற்றி வருகின்றபோது உண்டாகும் விந்தைதான் சோதிட சாஸ்திரம். நட்சத்திரங்கள் பல இருப்பினும் 27 நட்சத்திரங்களின் ஊடேதான் மேற்சொன்ன கிரகங்களின் பாதை அமைந்துள்ளது. ஜோடியாக் என்ற இந்த நட்சத்திர மண்டலம் 12 இராசிகளாகப் பிரிக்கப்படுகின்றது. சூரியன் நிலையாக உள்ள தாயினும் அதற்கும் பாதை உண்டு. அதனை "எக்லிப்டிக்" (Ecliptic) என்று சொல்லப்படும். எக்லிப்டிக் என்பதும் ஜோடியாக் என்பதும் ஒரே அளவில் பிரிக்கக் கூடியது. அதனாலேதான் சூரியனின் சஞ்சாரத்தை அடிப்படையாகக் கொண்டு இராசிகள் அமைக்கப்படுகின்றன. மேடம், இடபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனு, மகரம், கும்பம், மீனம் வரையிலுமான 12 இராசிகள் 12 மாதங்களாக்கப் பெற்று ஒவ்வொரு மாதத்திற்கும் 30 டிகிரிகள் (பாகை) என்று நட்சத்திர மண்டலம் 360 டிகிரிகள் கொண்டதாகும். ஒவ்வொரு இராசிக்கும் ஒரு கால அளவுண்டு. சூரியன் ஒரு குறிப்பிட்ட கால அளவில் (பிரமாணம்) ஒரு இராசியில் தங்குகின்றார். சராசரியாகச் சூரியன் ஒரு இராசியில் தங்கும் காலம் 30 நாட்களாகும். ஆனால், பூமியோ 360 டிகிரியையும் ஒரு நாளில் சுற்றி வருகின்றது. (அதாவது 24 மணித்தியாலம்) எனவே பூமியில் வாழும் நமக்கும் பூமியின் சஞ்சாரம் அமைவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்சாட்சத்திற்கு (Latitude) ஏற்றபடி இடத்திற்கு இடம் இராசியின் கால அளவு வேறுபடும். காலையில் சூரியன் ஓர் இராசியில் உதயமானால் மாலைக்குள் 6 இராசிகள் கடந்து மறுநாள் காலை உதயமாவதற்குள் 12 இராசிகள் முடிந்துவிடும். இந்த அமைப்பின்படி தான் ஒரு குழந்தை பிறந்த நேரத்தைக் கொண்டு பிறந்த இலக்கினம் எதுவெனக் கண்டு மற்றைய கிரகங்கள் அந்தச் சமயத்தில் நட்சத்திர மண்டலத்தில் எத்தனையாவது பாகையில் உள்ளதென்பதை அறிந்து அதன் பிரகாரம் இராசிக் கட்டத்தில் இலக்கினம் ஏனைய கிரகநிலைகளைக் குறிப்பிட்டு அதன்மூலம் பிறந்த குழந்தையின் வருங்காலம் என்ன? எப்படி என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இந்த மாதிரி வானசாத்திர அடிப்படையில் பிரிக்கப்படும் இராசிகள் 12 ஆகும். முதல் இராசி மேடம் எனப்படும். நட்சத்திர மண்டலத்தில் 0பாகை முதல் 30 பாகை வரை இருக்கும். ஜோடியாக் எனப்படும் நட்சத்திர மண்டலத்தில் உள்ள நட்சத்திரங்களில் 27. 2¼ நட்சத்திரம் இந்த இராசியில் அடங்கும். அதாவது அச்சுவினி 4 மாதம் பரணி 4ம் பாதம் காாத்திகை1ம் பாதம் மொத்தம் 9 பாதமாகும். ஒன்பது பாதத்தையும் சூரியன் சராசரியாக 30 நாட்களில் சஞ்சாரம் செய்து முடிக்கிறான். எனவே, 12 இராசிகளில் 108 பாதங்களையும் சூரியன் 360 நாட்களில் சஞ்சாரஞ் செய்து முடிப்பான்.

**இராசிகள்: மூன்று வகைப்படும்.**

1. சர இராசி: மேடம், கடகம், துலாம், மகரம் ஆகியன. இவை நகருந் தன்மையுடையவை. இவை முதற்தரமானவை -வலிமையுடையவை.

2. ஸ்திர இராசிகள்: இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் இவை இரண்டாவது இடமானவை.

3. உபய இராசிகள்:- மிதுனம், கன்னி, தனுசு, மீனம்.. இவை வலிமை குறைந்த இராசிகள்.

கிரகங்கள் ஒன்பது:-

அவை 1. சூரியன். 2. சந்திரன். 3. செவ்வாய் 4. புதன் 5. குரு 6. சுக்கிரன் 7. சனி 8. இராகு, 9. கேது. இவற்றில் முதல் 7 கிரகங்களுக்கு ஆட்சி வீடுகள், வடிவங்கள் உண்டு. இவை இடமிருந்து வலமாக இராசிச் சக்கரத்தில் சஞ்சாரம் செய்யும்.

வடிவமற்ற நிழற் கிராகங்களாகிய இராகு, கேது, என்பவை எப்போதும் எதிர் எதிராக இராசிச் சக்கரத்தில் வலமிருந்து இடமாகச் சஞ்சாரம் செய்யும். இவையே சூரிய, சந்திர கிரணங்களை ஏற்படுத்துவனவாகும். இனி 9 கிரகங்களைப் பற்றியும் தனித்தனி ஆராய்வோம்.

தொடரும் அடுத்த இதழில்

**சான்றோர் சொல்லமுதம்**

***தோன்றா நாணம்:- மனைவி கருவுற்றால், அவள் கருவுற்றிருப்பதை மாமியார் அறிந்துதான் மகனுக்குச் சொல்வாளேதவிர மனைவியே சொல்வதில்லை. இதுவே திருமணத்திற்குப் பின் வரும் தோன்றா நாணம். - கண்ணதாசன்***

***நாம் அடைகின்ற மகிழ்ச்சியும் உண்மையானதல்ல. துயரமும் உண்மையானதல்ல.***

***- சுவாமி விவேகானந்தர்***

***ஐவகைத் தாய்மார்கள்:- தன்னை ஈன்றவள், தன்முத்த சகோதரரின் மனைவி, ஆசிரியரின் மனைவி, அரசனின் மனைவி, தன் மனைவியைப் பெற்றவள் (மாமி) ஆகிய இவ்வைவரும் தாய்மார்கள் ஆவார்கள்.***

***யார் எந்நேரமும் மகிழ்ச்சியோடும், அன்புடனும் இருக்கிறானோ அவன் தனது வசதிகளை பிறருக்காகத் தியாகம் செய்யத் தயங்கமாட்டான்.***

***உற்றார், உறவினர் உதவ மறுத்தாலும் கடவுள் மறுக்கமாட்டார். ஆகவே கடவுளிடத்தில் உங்களை ஒப்படையுங்கள்.***

***தன்னைத் திருத்திக்கொள்ள நினைப்பவனுக்கு, பிறரின் குறைகளை விமர்சிக்க நேரமிருக்காது.***

***கடவுள் எங்களுக்குக் கொடுத்த ஒவ்வொரு நிமிடத்தையும் பயனுடையதாகச் செலவிடவேண்டும்.***

- நாமகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சக்தி ஓம்
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெங்கும்

# அம்பாள் நிலையம்

## பிரமஸ்ரீ சுவாமிநாத சோமேஸ்வரன் குருக்கள்

இந்துமதக் குரு, சோதிடர், கனேடிய திருமணப்பதிவு அதிகாரி - கனடா

இந்துமதக் கிரியைகளை ஆகம விதி முறைகளுக் கமையச் செய்து கொள்ளவும்

சோதிடம் சம்பந்தமான ஆலோசனை களுக்கும்



திருமணம், திருமணப்பதிவு, மண்டப ஒழுங்குடன் ற்றும் அனைத்துத் தேவைகளுக்கும் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியது

**1624 BLOOR STREET, UNIT #96, MISSISSAUGA, L4X 2S2**

**TEL: (905) 629 - 2050 CAR: (416) 562-1738**

**FAX: (905) 629-4428**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் அகழ்வும் ஆய்வும்......

52 Kingsley Road
London S.W 19 - 8HF
3-12-96

பண்டிதர் V. V. நம்பி அவர்கட்கு

அன்பார்ந்த வணக்கம்.

சைவநீதி தீபாவலி மலர் போனகிழமை கிடைத்தது. பெரிய சந்தோஷமாக இருக்கிறது. நாகநாதசிவம் குருக்களது சஞ்சிகை எங்கள் செயலாளர் முருகானந்தன் அவர்கள் மூலம் அனுப்பியுள்ளேன். முருகானந்தன் ஒரு கிழமை மலரை வைத்து வாசித்த பின் குருக்களிடம் சேர்ப்பார்.

சிவயோக சுவாமிகள் படம், அடியேனது கடிதம், நற்சிந்தனைத் தொகுப்பு எல்லாம் நல்ல முறையில் மலரில் பிரசுரம் செய்தது மிகவும் நன்றி. இது பற்றி முருகானந்தனும் தனது பாராட்டுக்களை எழுதுவதாகச் சொன்னார். பாராட்டுடன் சந்தாப்பணத்தையும் அனுப்பும்படி கேட்டுக் கொண்டேன்.

சைவநீதி தரமாக அச்சிட்டுப் பயனுள்ள கட்டுரைகளுடன் வெளிவருவது சகல தமிழ் மக்களுக்கும் பயனுடையது. பெருமைக்கும் உரியது. தங்களுக்கும், மலர்க் குழுவினர்களுக்கும் மற்றும் நிர்வாக உறுப்பினர்களுக்கும் எங்கள் பாராட்டைத் தெரிவிக்கின்றோம். தீபாவலி மலரில் மாணவர் கட்டுரைகளுடன் கலை நிகழ்ச்சிப் படங்கள் வந்தது சந்தோஷம்.

சைவநீதி பல இடங்களிலும் பலர் கைகளிலும் சேர வேண்டும். சைவநீதி சஞ்சிகை வெளியிடுவது பெரிய வேலை. இந்தக் கடுமையான வேலையிலும் நல்ல அருமையான 100 கவிதைகளை ஆக்கித் தந்திருக்கிறீர்கள். அருமையான கருத்துக்கள். தங்கள் ஆற்றலையும், அறிவையும் போற்றாமல் இருக்க முடியாது.

என்னைக் கவர்ந்த சில வரிகளை உங்களுக்கு எழுத ஆசைப்படுகிறேன்..

"பிறந்த நாள் விழாவெடுக்க பெரிய செலவு செய்கிறீர்.
அமைதியற்ற சூழ்நிலையில் அதுவும் இதுவும் வேண்டுமா?
மோகமுற்றுத் தமிழ்சமயம் முதன்மை காண முற்படு
வயிறு வளர்த்திட மானம் கெடாதே
கனடா நாட்டைக் கனவிலும் மறக்கொணாது
ஊணடா தந்த நாட்டை உயிரென எண்ணி உய்வோம்.
பெற்றிடு தாயின் மேலாம் பிறந்த நம் ஈழ நாடே.
சீரிய சிறப்பும் வேண்டும் சிந்தனை பெருக வேண்டும்
நேரிய பாதை கண்டே நிமிர் நடை போட வேண்டும்
பாரிய உலகந் தன்னில் பண்பினை வளரச் செய்வீர்
நானெனு மகந்தை போக்கி நல்லதை யாற்ற வேண்டும்
தேனினு மினிய பேச்சால் திசையினைத் திருப்ப வேண்டும்
ஊனினை விட்டே நல்ல மரக்கறி யுண்ண வேண்டும்
நீநினைப் பவற்றை மீண்டும்நினைத்துமே யாற்ற வேண்டும்

இயலாத உடல் நிலையிலும் ஊண் உறக்கமின்றி மலரை ஆக்குவதற்கு செயல்படுகிறதாக உங்கள் தலைவர் எழுதியதை வாசித்தேன். தங்கள் உடல் ஆரோக்கியம் பாதிக்காமல் செயல்பட வேண்டும். இறைவனை தங்களுக்கு நல்ல சுகத்தை அருளும்படி பிரார்த்திக்கின்றேன்.

சிவயோகசுவாமிகள் 125வது ஜெயந்தி விழா மே 29இல் சிவ தொண்டன் நிலையத்தினர் ஏற்பாடு செய்கின்றனர்.

மாணவர் மத்தியில் நற்சிந்தனைப்பாடல்கள், சிவபுராணம், பிள்ளையார் அகவல், சுவாமிகள் பற்றிய கட்டுரைகள் பேச்சுப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

சிவயோகசுவாமிகள் காட்டிய வழி பிரசுரம் செய்யும்போது சுவாமிகளின் சிறுபடம் கட்டுரையுடன் வந்தால் நல்லது.

தங்கள் அன்பார்ந்த
மு. ஆறுமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸ்
23-02-97

எல்லாம் வல்ல இறைவன் திருவருள் துணைநிற்ப,
பேரன்பிற்கும், மதிப்புக்குமுரிய பண்டிதர் நல்லதம்பி அவர்கட்கு,
பணிவான வணக்கம்.

தங்களின் பொங்கல் மலர் கிடைக்கப் பெற்றேன். மிக்க நன்றி. மலர்கள் யாவும், சிறப்பாக அமைந்து வருகின்றன. பாராட்டுக்கள், மேலும் சிறப்புற இறையருளை வேண்டுகின்றேன்.

சுருக்கமான விடயம் ஒன்று சிவயோக சுவாமிகள் பற்றி இணைத்துள்ளேன். அதை நீங்கள் மலரில் சேர்ப்பது நன்றிக் கடனாகவும் நாம் அவருக்குச் செலுத்தும் அஞ்சலியாகவும் அமையும் என்று கருதுகின்றேன்.

சுவாமி சிவநந்தியடிகளாரும் தொலைபேசி வழி கதைத்தபோது, தங்களைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தார். தொடர்புகளும், செயல்பாடுகளும் நன்றே அமைவதாகுக. இங்கும் பல பணிகள். யாவும் சிவன் செயல். எல்லோரும், எல்லாமும் சிறப்புற வேண்டி வாழ்த்தி இத்துடன் நிறைவு செய்து, தங்கள் பதில் பார்த்தபின் தொடருகின்றேன்.

அன்பே சிவம்.

இவ்வண்ணம்
பணிவன்புடன்
பி. எஸ். பற்குணராசா

---

Dr. K. Loganathan
World Saiva Council
Malaysia

உயர்திரு வீ. வ. நம்பி அவர்களுக்கு வணக்கங்களும் வாழ்த்துக்களும்.

நிற்க, தாங்கள் அனுப்பிய தீபாவலி மலர் கிடைக்கப் பெற்றேன். சுவாமி பிரமானந்தாவிற்கு உரியதும் கிடைத்தது. அதனை அவருக்கு அனுப்பியுள்ளேன். பல சிரமங்களுக்கிடையே சைவநீதியை இவ்வளவு சிறப்பாகக் கொண்டு நீங்களும், மலர்க்குழுவினரும் செய்யும் சேவைக்கு எனது பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆழமாகவும் முறையாகவும் சிந்திக்க மறந்துவிட்ட தமிழ் இனத்திற்கு இத்தகைய இதழ்கள் பல தேவைப்படுகின்றன. ஆகவே தொடர்ந்து தங்கள் இதழ் வெளிவர அந்த நடராசப்பெருமான் அருள்பாலிப்பாராக.

கி. லோகநாதன்

---

கொழும்பு -14
11-2-1997

சைவம் - தமிழ் வளர்க்கும் சைவநீதி
ஆசிரியப் பெரியீர்! வணக்கம்.

செயற்கரிய செய்து சிவனருள் பெற்ற நாயன்மார்களின் அன்பு வாழ்வின் உயர் நலத்தினை யாவரும் எளிதில் அறிந்து பயன் பெறும் வண்ணம் சைவசமயத்தின் உயர்தனிச் செந் நெறியினைக் கட்டுரைகள் வாயிலாகவும், கவிதைகள் வாயிலாகவும் தந்து, அன்பு வாழ்வு ஒன்றே மக்கள் நலம் பேணவும் இன்ப அன்பு நிலவி உலகுமேன்மை எய்தவும் கூடும் என்னும் கருத்தை வலியுறுத்திச் சொல்வது மகிழ்வைத் தருகிறது. சிவம் பெருக்கும் இவ்வுயர்பணி நாளுஞ் சிறந்தோங்கவும் அப்பணியைச் சிறப்பாகச் சைவநீதி மூலம் நல்ல முறையில் தொகுத்தளிக்கும் உங்கள் சேவை சிறக்கவும் சைவநீதி என்றும் பொலிவுடன் வெளிவரவும் வாழ்த்துகின்றேன்.

வாழ்க நுஞ்சேவை - வளர்க சிவப்பணி கனடாவில்
சிவ! சிவ!!

அன்பு
சிவ. மாணிக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Markham
Ontario
20-02-97

கௌரவ தலைவர்.
கனடா இந்து மாமன்றம்

அன்புடையீர்!
வணக்கம்.

"சைவநீதி" தைப்பொங்கல் மலர் கிடைக்கப் பெற்றோம். நன்றி. "பொங்கல்" தேர்ந்தெடுத்த திறமான தேன் கலந்து சமைத்த சாதம் இனிப்பாக இருக்கிறது.

அன்றொருநாள், கோவில் வாசலில் தீபாவலி மலரை "லிங்கம்" தந்தருளினார்.

இம்முறை, எம்வீட்டு வாசலைத் தேடிவந்து, தைப்பொங்கல் மலரைத் தந்தருளினார் "நந்தி". எளிமையான, உண்மையான சிக்கனத்தில் கண்ணும் கருத்துமான, பெரும்சேவை-பாராட்டுக்கள். முன்னொருமுறை, கனடா இந்துமாமன்றம் சரியான கைகளில் அகப்பட்டிருக்கிறது என்றேன். இப்போ அதைமாற்றி, "இறுக்கமான" கைகளில் மாட்டிக் கொண்டது என்று கூறத் தோன்றுகின்றது.

தீபாவலி மலரில், பண்டித -வித்துவான் "நம்பி" ஐயா, விநாயகரை வந்தித்து வடித்த கவிதை, "பலசரக்குச் சதகம்" 30வது கவிதை அடியேனை மிகவும் கவர்ந்து விட்டது.

குறிப்பாக பின்வரும் அடிகள்

**"கெஞ்சிவந்து இடம்பிடித்துக் கிறுக்குக்காட்டும்**
**கீழான மனிதரினைக்காணுந் தோறும்**
**வெஞ்சினமேநெஞ்சதனில் விரைந்து தோன்றும்**
**வீம்புபல பேசி நின்று குட்டை குழப்பும்**
**வஞ்சகரைத் துச்சமென மதித்து மேலும்**
**வீறாப்புப் பேசாது பார்த்துக் கொள்வீர்"**

நந்தி மகனின் ஞானக்கண்ணிலிருந்து உதிர்ந்த, "ஞானஒளியின்" (Inspiration/Intuition) தாக்கத்தாற்றான் இந்த வரிகள் வடிக்கப்பெற்றது என்று எண்ணத் தோன்றுகின்றது. மேலும், பண்டிதர் ஐயாவின் அனுபவமும் பேசியிருக்கலாம் தானே.

ஒரு தாழ்மையான ஆலோசனை. மன்றத்திற்கு உள்ள சிரமம் அறியாமலில்லை. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதிய "பாலபாடம்", "சைவவினாவிடை" முதலிய புத்தகங்களை, மறுபதிப்புச் செய்து, இங்குள்ள சைவச்சிறார்களுக்கு விநியோகித்தால், பயன்தருமல்லவா?

சைவவினாவிடையில் கூறப்பட்டிருக்கும் சைவஅனுட்டான முறைகள், தற்காலத்தில் அதுவும் இங்கு கனடாவில், ஒவ்வாது என்ற "முணுமுணு" ப்பும், காதில் விழாமல் இல்லை. ஆயினும் அவைகளை அறிந்திருப்பதாவது பயன்தரும் தானே?

"வந்ததைச் சொல்லுதல், வெந்ததைத் தின்னுதல்" என்பார்கள். வந்ததைச் சொல்லிவிட்டேன். தப்பு, தவறு இருந்தால் இந்து மாமன்றம் மன்னிக்கும்தானே.

"ஆரம்பித்த புனிதப் பணி, பெரும் பணியாகத் தொடரட்டும்"
ஓம் அரஹர நமசிவாய
ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!! ஓம்.

நன்றி. வணக்கம்.

இப்படிக்கு
சைவநீதி விரும்பி
சி. சேனாதிராசா

---

லண்டன்
21-01-97

தங்களின் சைவநீதி சஞ்சிகையைக் கண்ணுற்றபோது மிகவும் ஆனந்தமடைந்தேன். அழகாகவும் நல்ல விடயங்களைத் தாங்கியதாகவும் இருந்தது. எனவே நானும் இரண்டு ஆக்கங்களை அனுப்பி வைக்கின்றேன். இவை வேறு எங்கும் இன்னும் பிரசுரிக்கப்படவில்லை. கனடாவில் பல சாயி பக்தர்கள், யோக சுவாமி பக்தர்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். எனவே தான் இரண்டு கவிதைகளையும் அனுப்புகின்றேன். யோகசுவாமிகளே சரணம் என்ற கவிதைத் தொகுப்பு, பலரும் இங்கு படித்துப் பாராட்டியுள்ளனர்.

செ. நாகேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவத்திரு சிவநந்தி அடிகளார்
**Chief Executive: W.S.C. (H.Q)**
**London**
**24-10-96**

சிவத்திரு பண்டிதர் V. V. நல்லதம்மி அவர்கள்
ஆசிரியர் "சைவநீதி" கனடா
பேரன்புடையீர்!

வணக்கம். ஓம் நமசிவாய. சிவ நலமே மலர்க. சமயத்துறையில் பணிபுரிந்து, சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கச் சேவை ஆற்றும் உங்களுடன் தொடர்பு கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

எமது பேரவையின் 5வது உலக சைவமாநாடு சென்ற மாதம் தென் ஆபிரிக்கா, டர்பன் நகரில் சிறப்பாக நடைபெற்றது. இது பற்றிய சில செய்திகளை இணைத்துள்ளோம். அடுத்த 6வது உலக சைவ மாநாடு தமிழகத்தில் 1997ல் பிற்பகுதியில் நடைபெறும். கனடாவிலும் ஒரு மாநாடு நடைபெற்றால் மிக நன்று. மற்றும் சைவஉலகம் சிறக்க உங்களது "சைவநீதி" தொடர்பு வேண்டி நிற்கின்றோம்.

நன்றி. பதில் தருக.

அன்பே சிவம்
சிவ சிவ

தவத்திரு சிவநந்தி அடிகளார்
**Chief Executive: W.S.C. (H.Q)**
**London**
**4 - 2 - 97**

கனடா இந்து மாமன்றம் "சைவநீதி" ஆசிரியர்
சிவத்திரு பண்டிதர் V. V. நல்லதம்மி அவர்கட்கு

வணக்கம். ஓம் நமசிவாய. சிவ நலமே மலர்க. தேனாய் இனிக்கும் "சைவநீதி பொங்கல் மலருக்கு" நன்றி. "மேன்மை கொள் 'சைவநீதி' விளங்குக உலகமெல்லாம்" என்ற அருள் வாக்கைச் சிரமேற் கொண்டு சைவத்தமிழ் முரசு கொட்டும் உங்களையும், கனடா இந்து மாமன்ற உறுப்பினர்களையும் தமிழ் கூறும் சைவ உலகத்தின் சார்பில் உளமார வாழ்த்துகின்றோம். மேலும் வளர்க! வெல்க!

எமது பேரவையின் ஏற்பாட்டில், அடுத்த "உலக சைவ மாநாடு" தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் டிசெம்பர் 26முதல் 28வரை நடைபெறவுள்ளது. இது பற்றிய எல்லா விபரங்களையும் பின்னர் உங்களுக்கு அறியத் தருவோம். மேலும், உலக சமய அரங்கில் காலத்தாலும், கருத்து வளத்தாலும் மூத்த எமது "சைவநீதி" இன்று "உலகமதம்" என்ற நிலைக்கு உயர்ந்து நிற்பது போற்றிப் பேணுதற்குரியது; கட்டிக் காக்கப்பட வேண்டியது, எமது சீரிய சிவப்பணி. நீங்கள் கேட்டுக் கொண்டபடி சித்திரைப் புத்தாண்டு சைவநீதி மலருக்கான கட்டுரையை அனுப்பி வைப்போம். எல்லோருக்கும் நமது வாழ்த்துக்கள். ஓம் நமசிவாய.

அன்பே சிவம்
சிவ சிவ

கொழும்பு
8-2-97

பேரன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய அருமைத் தம்பி வீ. வ. நம்பி அவர்களுக்கு,

தாங்கள் அனுப்பிய சைவநீதி பொங்கல் மலர் கிடைத்தது. மட்டற்ற மகிழ்ச்சி. புலம் பெயர்ந்து வெள்ளையன் நாட்டில் தஞ்சம் புகுந்த நம்மக்களின் நல்வாழ்வுக்காக நமது உயிரினும் மேம்பட்ட சைவநீதியையும் உடம்பு போன்ற தமிழையும் தாங்கள் வளர்ப்பதற்கு மேற்கொண்ட இந்தப் பணியைப் போற்றுகின்றேன். இறைவன் தோன்றாத் துணையாக நின்று தங்களுக்குச் சகல உதவிகளையும் நல்குவான். முன்னவனே முன் நின்றால் முடியாதது ஒன்றில்லை. ஆகவே தாங்கள் ஆரம்பித்தது சைவநீதி. சைவநீதியே இறைவன் தானே. அது சிறப்புற அவன்தானே நிற்பான், நிற்க. சைவ நீதியில் வரும் கட்டுரைகளும், சிறப்பாக அமைந்திருக்கின்றன, போற்றுதற்குரியது.

ஞானசம்பந்தர் வாக்கால் தங்களை வாழ்த்துவதல்லால் பிறிதறியேன்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணில் நல்லஃதொறுங் கழுமல வளநகர்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

வணக்கம்
சி. சரவணமுத்து அடிகளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Recreation, Parks and Culture Department

CITY OF SCARBOROUGH

150 Borough Drive
Scarborough, Ontario
Canada. M1P 4N7
Tel: (416) 396 - 5230
Refer to: A. Y. Semeniuk

15 January 1997

Dear Mr. Nantheeswarar:
Canada Hindu Maamantram

Please accept my sincere thank you for the kind invitation to attend last Saturday,s Pongal Cultural Program.

From beginning to end, the evening was most enjoyable and it provided an excellent learning experience about the rich and beautiful traditions of the Tamil culture. I extend my congratulations to you, to the organizing committee and to all the participants and performers on a very successful event, It takes a great deal of time and effort to arrange such an evening and everyone involved should feel a sense of pride and satisfaction about the results. Congratulations, as well, on the release of your next cultural publication.

I wish also to express my appreciation to your wife and daughter for their patience in answering my many questions and for graciously explaining the various aspects of the program. They helped me to understand very well the speeches and performances.

Your tradition of presenting flowers to your gusts is a wonderful one and I was honoured to receives the lovely floral 'necklace" which I am still enjoying.

Thank you again for an entertaining and enlightening evening. It was a special privilege to participate in the presentation of the awards to the children at the conclusion of the performances.

I wish you and your organization all the vest best in your future endeavours.

Yours sincerely,

Alexandra Y. Semeniuk
Director
Arts & Heritage Services

---

## Recreation, Parks and Culture Department

CITY OF SCARBOROUGH

150 Borough Drive
Scarborough, Ontario
Canada. M1P 4N7
Tel: (416) 396 - 5142
Refer to: S. EWING

14 January 1997

Dear Mr. Nantheeswarar:
Canada Hindu Maamantram

I would like to thank you and everyone else in Canada Hindu Maamantram for organizing a wonderful event on Saturday, January 11, 1997 at Sir John A. Macdonald C.I.

To be included in your Pongal Festival Celebration was a great honour and privilege. After attending your program and reading through your publications, I feel that I now have a better understanding of your culture and heritage. The garland that was presented to me is still quite lovely and fragrant. As well, I found everyone so friendly and helpful with translations.

The work that you and your organization is doing in the community is most beneficial. It was very exciting to see the results of your teaching with the young people.

Please pass on my congratulations to everyone in your organization for all the work that is being done in Scarborough. Thank you again for your hospitality.

Sincerely,

Sheila Ewing
Supervisor, Arts Services

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WORLD SAIVA COUNCIL

## LONDON (U.K.) HEADQUARTERS

சிவாய நம:

SWAMI SIVA NANDHI ADIKALAAR
CHAIRMAN AND CHIEF EXECUTIVE
WORLD SAIVA COUNCIL
C/O London Meikandaar Aadheenam
72 King Edward Road
London EI7 6HZ
UNITED KINGDOM

FAX: (0) 1268 561805
PHONE: (0) 181 - 531- 6435

Extablished In
Madras: 29-2-92

இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்
உலக சைவப் பேரவை
CENTRAL EXECUTIVE
தலைமைச் செயலகம்
From: தவத்திரு சிவநந்தி அடிகளார்
Chief Executive: W.S.C. (H.Q)
C/O London Meikandaar
Aadheenam
72 King Edward Road
London EI7 6HZ
UNITED KINGDOM

## W.S.C. 6th WORLD SAIVA CONFERENCE
## TAMIL UNIVERSITY, THANJAVUR, 26 TO 28 DECEMBER 1997

**Suggested THEME:** **SAIVISM AS A UNIVERSAL FAITH - THE PRESENT STATE, FUTURE TRENDS, & THE WAY FORWARD**

கருப்பொருள்:
உலகசமய அரங்கில் சைவம்: இன்றைய நிலையும், எதிர்காலத் திட்டங்களும்.

மேற்போந்த கருப்பொருள் ஆய்வு சம்பந்தமான

# உலக சைவப் பேரவையின்
# ஆறாவது மாநாடு

இடம்: தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு

காலம்:– 1997 டிசம்பர் 26 தொடக்கம் 28ஆம் திகதி வரை

அழைப்பு:–
உலகெங்கும் வாழும் சைவப் பெருமக்களே !
தமிழும் சைவமும் வளர்த்த தஞ்சையில் நடைபெறவிருக்கும் மேற்படி மாநாட்டில் பங்கு பற்றிப் பயன் பெறும் வண்ணம் உங்களை அன்பாக அழைக்கின்றோம்.
சிவ சிவ

உலக சைவப் பேரவையினர்

THEN NAADUDAYA SIVANEH POTRI
YEN NAATAVARKUM IRAYVAA POTRI

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மை கொள் "சைவநீதி" விளங்குக உலகமெல்லாம்
அன்னை மொழியை நாளும் பொன்னெனப் போற்றி வாழ்க!

# டாக்டர். குமாரசாமி கிருபானந்தன்

பிரசவ வைத்தியர் மற்றும் மகளிர் நோய்ப் பிரிவு சத்திர சிகிச்சை நிபுணர்

பெண்கள் மருத்துவம் சம்பந்தமான பிரச்சினைகளைத் தமிழில் உரையாடித் தகுந்த ஆலோசனைகள் மற்றும்சிகிச்சைகள் பெறலாம்

***Full time practice in Obstetrics and Gynaecology at the Finch - Midland Medical Centre***

**SPECIAL INTERESTS INCLUDE:**

- **Obstetrical problems**
- **General Gynaecology**
- **Colposcopy**

**Appointments by referral**

***Scarborough General Hospital*** *ஸ்காபரோ பிரதம வைத்தியசாலையிலும் இவரது சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்*

# DR. COOMAR KIRUPA

**F.R.C.S. (Ceylon) MRCOG (UJ)**

**Obstetrician & Gynaecologist**

# FINCH - MIDLAND MEDICAL CENTRE

**4190 FINCH AVENUE EAST, SUIT 316**

**SCARBOROUGH, ONTARIO M1S 4T7**

**TEL: (416) 609 - 1199**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மை கொள் சைவநீதி விளங்குக வைய மெங்கும்

# விஸ்னாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

சிங்கப்பூர், சைனா, இலங்கை, அமெரிக்கா, ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குழந்தைகள், ஆண், பெண் பிள்ளைகளுக்கான ஆடைகள், **Readymade** ஆடைகள் **Coat Suits, Denim** யாவும் மலிவு விலையில்........

சுவாமிப்படங்கள் – சொருபங்கள்
குழந்தைப் படங்கள் – **Baby Set - Toys**
அலங்காரப் பொருட்கள்
வாசனைத்திரவியங்கள்
பலரக அழகான கடிகார வகைகள்
**Party Decorations**
**Saree Blouses**
**22K** தங்க நகைகள் ஒடருக்குச் செய்து தரப்படும்
நிறைகுடம் செட் – கோயில் பட்டு
**Steamer**, இட்லிச் சட்டி, அப்பச் சட்டி,
அலுமினியப் பாத்திரங்கள் – முறுக்குரல்
இடியப்ப உரல், இடியப்பத் தட்டு

**FAX SERVICE**
தலைநகை செட், தலைப்பாகை விற்பனைக்கும் வாடகைக்கும் உண்டு.
சனி, ஞாயிறு தினங்களில் பரதநாட்டிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன. பரத நாட்டியத்திற்கான சலங்கை, தலைமுடி வகைகள் விற்பனைக்குண்டு.

பகவத்கீதை, இராமாயணம், திருக்குறள், திருத்தொண்டர் புராணம், அர்த்தமுள்ள இந்து மதம், **DICTIONARY** போன்ற புத்தகங்கள் மலிவு விலையில் பெறலாம்.

தங்க நகைகளை எம்மிடம் ஓடருக்குப் பெற்றுக் கொள்ளலாம்

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பற்றிக் ஆடைகள்,
இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரெடிமேட் ஆடைகள்,
24 மணிநேர கனடிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபன
வானொலிப் பெட்டிகள் விற்பனைக்குண்டு

# VISNAAS TEXTILES

**1185 VICTORIA PARK AVENUE (AT St. Clair)**
**TEL: (416) 285-0934 FAX: (416) 285-5827**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிக் கலசம்

இன்று சைவத்தமிழரின் ஈஸ்வர புதுவருடத் திருநாள், எங்கள் வாழ்த்தும் வணக்கமும் உரித்தாகுக. இந்த நன்னாளிலே நன்றி கூறி மேலும் உதவி கோரி இதோ! நன்றிக் கலசம் உங்கள் முன்னிலையில் வந்து நிற்கின்றது. நன்றியை நவிலக் கேட்போமா? ஆம்.

1. 'சைவநீதி' சஞ்சிகையைப் பாராட்டிப் பேரறிஞர்களும் அன்பர்களும் ஆதரவாளர்கள் பலரும் கடிதங்கள் எழுதியுள்ளார்கள். உவகையுடன் ஏற்று அவர்கள் எல்லோருக்கும்;

2. சித்திரைப் புதுவருட மலருக்கு மிகவுந் தரமான ஆக்கங்களைத் தாமதமின்றித் தந்துதவிய கட்டுரை – கவிதையாளர்களுக்கும், மாணவர் பகுதியைச் சிறப்பித்த மாணவ மணிகளுக்கும், மன்றத்தின் ஆசிரியர்களுக்கும்

3. சைவநீதி மலரின் செலவினங்களைச்சரி செய்வதற்கு உதவியளித்துவரும் பதவிவழி உத்தியோகத்தர்களுக்கும், வர்த்தகப் பிரமுகர்களுக்கும், குருமார்களுக்கும்

4. மிகக்குறுகிய காலத்திலே வடிவமைப்புச் செய்து உற்சாகப் படுத்திய அன்பருக்கும், சங்கர் அச்சகத்தினருக்கும்;

5. சைவநீதி வெளியீட்டிற்கும் சமயவிழாக்களுக்கும் உதவியும், ஒத்துழைப்புந் தரும் அனைவருக்கும்;

6. சைவநீதி சிறந்து விளங்கி உலகிற்குப் பயன் தரவேண்டுமென்ற பெருநோக்கில் மிகுந்த ஒத்துழைப்பு நல்கிவரும் கனடா இந்து மாமன்றத்தின் தலைவர் – செயலாளர்– பொருளாளர் மற்றும் நிருவாக உறுப்பினர்களுக்கும்

7. சேவைக்கு மதிப்பளித்து பல்வேறு வகையில் உதவியளித்து வரும் ஸ்காபுரோ நகரசபையினருக்கும்;

8. சைவநீதியை வாங்கி வாசித்து மகிழும் வாசகர்களுக்கும், வாசகவட்ட ஆய்வினருக்கும்

9. அன்பான ஆதரவை நல்கும் "கலசம்", "சைவ உலகம்" சஞ்சிகையாளருக்கும், லண்டன், இலங்கை, கனடா சிவதொண்டன் நிலையத்தினருக்கும். யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினருக்கும், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சபையினருக்கும், மற்றும் சைவ ஸ்தாபனத் தொண்டர்களுக்கும், கனடா பத்திரிகையாளர்களுக்கும் மன்ற வளர்ச்சி விரும்பும் அனைவருக்கும் எம் நன்றி உரித்தாகுக.

" நவில்தொறும் நூல்நயம் போலும் பயில் தொறும்
பண்புடை யாளர் தொடர்பு"– திருக்குறள்.

வணக்கம்

187279

1997

சைவநீதி
கனடா இந்து மாமன்றம்

தமிழ் இளமை மாறாத கன்னிப் பெண். எனவே,
பிழையின்றி எழுதுக; பிழையின்றிப் பேசுக – நம்பி

"சைவநீதியை" வாங்கி ஆதரியுங்கள்!
உடனடியாகவும் தொடர்ந்தும் ஆதரியுங்கள்
சைவம் வளரச் சைவ நீதியே தேவை.

**Let us save Saiva Neethi!**
**Give meaningful support!**
**for Saivism to prosper**
**we need Saiva Neethi!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணங்கள்
உங்கள்
நினைவில்......
வண்ணங்கள்
எங்கள்
வடிவில்.....


SHANKAR PRINT
(Printing Division Of Baba Publications Inc.)

60 Barbados Blvd. #6
Scarborough, On.
Tel: (416) 269-1994
(416) 264-2715
Fax. (416) 269-2135

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பன்னிரு திருமுறை ஆசிரியர்கள்



ARCHIVES
ARCHIVES A
UNIVERSITY OF JAFFNA LIBRARY
UNIVERSITY OF JAFFNA LIBRARY SRI LANKA
University of Jaffna
187279
Library

1. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருமாளிகைத் தேவர், சேந்தனார் (திருநாங்கூர்), கருவூர்த் தேவர்

2. பூந்துருத்திநம்பி காட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தமநம்பி, சேதிராயர், திருமூலர்.

3. திருவாலவாயுடையார் (சிவன்), மீனாட்சி அம்மை (சக்தி), காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள், நக்கீரதேவர், கல்லாட தேவர்

4. கபிலதேவர், பரணதேவர், இளம்பெருமான் அடிகள், அதிராவடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BOBBY CONVENIENCE

உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, கனடிய உணவுப் பொருள்களுக்கும், உடன் மர க்கறி, பாலுணவுப் பொருள்கள் மற்றும் அன்றாடத் தேவைகள் அனைத்திற்கும் நாடுங்கள்

**ALL KINDS OF GROCERIES, FRESH VEGETABLES, VIDEO, AUDIO AND CD SALES & RENTALS**

**VIDEO RENTAL & PRODUCTION**

தமிழ், மலையாள, சிங்கள,ஹிந்தி வங்காளத் திரைப்படங்கள் தரமான வீடியோப் பிரதிகளை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

**VIDEO TRANSFER**
**ANY SYSTEM TO ANY SYSTEM**

**EXPRESS MONEY TRANSFER**

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு நம்பிக்கையாகவும் மிகத் துரிதமாகவும் பணம் அனுப்பி வைக்கப்படும்

**3430 FINCH AVE. EAST , UNIT 5**
**SCARBOROUGH, ONTARIO**
**(Finch & Warden Entrance from behind)**
**TEL. / FAX: (416) 492 5211**

# ராஜாராம் உணவுச் சேவை



**இந்திய, இலங்கை உணவு வகைகள்**

உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

சாதமா, நெய்ச் சாதமா, **Pillau** சாதமா, புரியாணியா, புளிச்சாதமா, தயிர்ச்சாதமா, இடியப்பமா எதுவானாலும் வகை செய்வேம்

கனடா இந்து மாமன்றத்தினர் தமிழ் சைவசமய கலாச்சாரப் பண்பாட்டினை வளர்க்கும் நோக்கமாக வெளியிடும் – "சைவநீதி "– சஞ்சிகை புதிய மறுமலர்ச்சியை மேலும் ஏற்படுத்தட்டும். சமயத்திற்கும் நாட்டிற்கும் நற்றமிழர்க்கும் நம்மொழிக்கும் நற்பணி புரியட்டும். எங்கள் உள்ளங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

வாழிய ! வளர்க ! சைவ நீதி

# RAJAH RAM CATERERS

**589 Middlefield Road, #20, Scarborough, Ontario, M1V 4Y6**
**TEL: (416) 299-5200, 439-4256**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசை தொறும் சைவநீதி தேசுற்று வாழ்க! மேலும்
தீந்தமிழ் உலகமெங்கும் திருப்பொலிவுடனே வாழ்க!!
வாழிய! வையகம்

# Dr. A. Shan Shanmugavadivel

இருபது ஆண்டுகளுக்கு மேல் பல் வைத்தியசிகிச்சையில் அனுபவம் பெற்ற
உங்கள் நம்பிக்கைக்குரிய

# டாக்டர். அ. சண்முகவடிவேல்

குடும்ப பல் வைத்தியர்

## பல்வைத்திய சேவைகளும் கிளிப்போடுத்லும்

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில்

சப்வேயிலிருந்து நடந்துவரின்
**Mid Scarborough Community Centre Exit** ஐ எடுக்கவும்




**2466 Eglinton Avenue East, Unit 7**
**Scarborough, Ont. M1K 5J8**
Near Kennedy Subway

**Tel: (416) 266-5161**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VIVEKA PRINTERS